# சாங்கோபாங்கசுவாமிகள்

## LIFE OF FATHER
# JACOME GONCALVES

நல்லூர், சுவாமி. ஞானப்பிரகாசர்

யாக்கோமே கொன்சால்வெஸ்

எனும்

# சாங்கோபாங்கசுவாமிகள்

895
GNA

நல்லூர், சுவாமி. ஞானப்பிரகாசர்
அதி வண. எஸ். ஜீ. பெரேரு சுவாமியார்
ஆங்கிலத்திற் செய்த நூலிலிருந்து இசைத்தெழுதியது

யாழ்ப்பாணம்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை
1942

005684

*Imprimatur:*

J. EMILIANUS PILLAI, O. M. I.
*Vicar General*

Jaffna,
26-5-1942.

# முன்னுரை

இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் உள்ள கத்தோலிக்கு கிறீஸ்தவர்கள், காலை மாலையிலும் திவ்விய பூசை வேளைகளிலும் திருநாட்காலங்களிலும் சொல்லிவரும் அழகான செபங்களைத் தமிழில் எழுதித் தந்தவர் யார்? ஞாயிறு கடன்திருநாட்களில் வாசிக்கும் சுவிசேஷ விருத்தியுரையை இயற்றினவர் யார்? கல்லும் கரைந்துருகப் பண்ணும் என்று சொல்லத்தக்க பசாம் என்னும் வியாகுல பிரசங்கங்களையும், எந்தப்பாஷையிலேயாவது இல்லாத இரக்கமும் உருக்கமும் செறிந்த பிழைதீர்க்கிற மந்திரத்தையும் உண்டாக்கினவர் யார்? ஆலயங்களிலே பாடப்படுகிற சிந்துப்பிரார்த்தனையைத் தந்தவர் யார்? பழங்காலக் கிறீஸ்தவர்கள் வைத்துப்பாடிவந்த கீர்த்தனங்களைக் கோத்தவர் யார்? தற்கால ஞான உபதேசத்துக்கு அடிப்படையான சின்ன உத்தரம் பெரிய உத்தரங்களை எழுதியவர் யார்? நம்முடைய வண. இப்போலித்து சுவாமியார் காலம்வரையும் இருநூறு வருஷங்களாய் வழங்கிவந்த கத்தோலிக்குத் தமிழ் உரைநூல்களுள் ஏறக்குறைய எல்லாவற்றையும் ஆக்கினவர் யார்? இலங்கையின் அப்போஸ்தலராகிய யோசேவாஸ் முனிவருக்குப்பின் இந்தத்தீவின் தேவதாழ்ச்சி உத்தியானத்தைச் சீர்ப்படுத்தி, அதிலே வேதப்பயிர் நன்றாகச் செழித்தோங்க வைத்துப்போனவர் யார்? அவரே சாங்கோபாங்க சுவாமிகள் என்றும், இலங்கையின் நூதன நட்சத்திரம் என்றும் அக்காலத்தார் புகழ்ந்து ஏத்திய யாக்கோமே கொன்சால்வெஸ் எனும் மாதவ முனிவர்.

சாங்கோபாங்க சுவாமிகள் இலங்கையில் முப்பத்தேழு வருஷங்களாய் வாழ்ந்திருந்து வேதபோதகஞ்செய்து, திருச்சபையை நிலைநாட்டி, 1742-ம் வருஷம் ஆடி மாசம் 17-ந் திகதி அமலபதம் அடைந்தார். அவருடைய கல்லறை சிலாபமேற்றிராசனத்தைச் சேர்ந்த போளவத்தையில் இன்றைக்கும் இருக்கிறது. அவருடைய திருமரணத்தின் இரண்டாம் நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடும்படியாகச் சிலாப மேற்றிராணியாரான மகாவந். எட்மன் பீரிஸ் ஆண்டவர் வேண்டிய ஆயத்தங்களையெல்லாம் செய்துவருகின்ற இத்தருணத்தில், சாங்கோபாங்க சுவாமிகளுடைய திருவூழியத்தினால் நன்மை அடைந்திருக்கிற இலங்கைக் கத்தோலிக்கர் அனைவரும் அவரது சீவியசரித்திரத்தையும் அவர் செய்த திருத்தொண்டின் விசேஷத்தையும் அறிந்துகொள்ளும்பொருட்டு வரையப்படுகிற இந் நூல், காலி மேற்றிராசனத்து விக்கார் ஜெனறலாகிய அதிவண. எஸ். ஜீ. பெறேறா சுவாமியார் ஆங்கிலத்தில் இயற்றிய சரித்திரத்தைத் தமிழில் இசைத்தெழுதியதாகும்.

சாங்கோபாங்க சுவாமிகளின் காலமே இலங்கைத் திருச்சபை அதிகபாடுகளைப்பட்டு அதிக வெற்றிகளையும் அடைந்தகாலம். அந்த நாட்களின் வரலாறு கத்தோலிக்கரும் அல்லாதோருமாகிய சகலருக்கும் மிகச் சுவைதரத்தக்கது.

**நல்லூர், சுவாமி. ஞானப்பிரகாசர்**

# உள்ளுறை


| அதிகாரம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | இளம்பிராயமும் தியானசம்பிரதாய மடத்திற் சேருதலும் ... ... | 1 |
| 2. | இலங்கைக்குப் போகத் தேவ அழைத்தல் ... | 9 |
| 3. | வேதகல்வி நூல்களை இயற்றலும் ஒல்லாந்த நெருக்கிடையுள் வேலையும் ... ... | 20 |
| 4. | வேதப்பரப்புதல் வேலையிற் சித்தி ... | 28 |
| 5. | ஓர் பிரசித்த தர்க்கம் ... ... | 40 |
| 6. | இராச சமுகத்திற் தர்க்கம் ... ... | 46 |
| 7. | ஒல்லாந்தரால் வந்த நெருக்கிடை ... | 55 |
| 8. | கொலைக்குத் தப்பியமையும் குருமார் தலைவரானமையும் | 66 |
| 9. | தென்பாகங்களில் இரட்டித்த வேலைகளும் எதிரிடைகளும் ... ... | 72 |
| 10. | மறுபடியும் தலைமை வகித்தலும் மனந்திரும்புதல்கள் மிகுத்தலும் ... ... | 85 |
| 11. | சாங்கோபாங்க சுவாமிகளின் சமாதான முயற்சிகள் | 99 |
| 12. | கடைசி நோயும் திரு மரணமும் ... ... | 107 |
| 13. | அனுபந்தம் ... ... ... | 122 |




சாங்கோபாங்கசுவாமிகள்
(கோவையிலுள்ள ஒரு படத்தின்படி)

# யாக்கோமே கொன்சால்வெஸ்
எனும்
# சாங்கோபாங்கசுவாமிகள்

## முதலாம் அதிகாரம்

### இளம்பிராயமும் தியானசம்பிரதாய மடத்திற் சேருதலும்

சாங்கோபாங்க சுவாமிகள் என்று இலங்கையில் புகழ்நாமம் புனையப்பெற்ற பேர்போன வேதபோதகரின் இயற்பெயர் யாக்கோமே கொன்சால்வெஸ். இவர் ஒரு கொங்கணப் பிராமணர்; போர்த்துக்கேயர் கோவைமாநகரத்தைத் தலைப் பட்டணமாகக்கொண்டு ஆண்டுவந்த இந்தியாவின் மேற்குப்பகுதியிலே உள்ள திவாரி எனும் பிரிவில் உதித்தவர். இவர் தந்தையார் பெயர் தோமாஸ் கொன்சால்வெஸ். தாயார் பெயர் மரியானு அபீரு. கொன்சால்வெஸ், அபீரு எனும் பட்டப்பெயர்கள் இரு வேறு குடும்பத்தைச் சேர்ந்தவைகள் என்று இதை வாசிப்போர் அறியத்தகும். போர்த்துக்கேயர் கோவைநாட்டை வெற்றி கொண்ட ஆதிநாட்களிலேயே திவாரியிலிருந்த பிராமணர் எல்லாரும் திருச்சபையில் சேர்ந்து, 1543-ம் ஆண்டு தேவமாதாவின் ஆரோபணத் திருநாளன்று, கூட்டமாய் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் அவ்வேளை சூடிய கிறிஸ்த பெயரோடு, ஒவ்வொரு குடும்பத்தாரும், தங்கள் தங்களுக்குத் தலைதொட்ட ஒவ்வொரு போர்த்துக்கேயருடைய பட்டப் பெயரையும், ஐரோப்பிய முறைப்படி, தரித்துக்கொள்வோரானார்கள். இப்படியே கோவையைச் சேர்ந்த பிறநாடுகளில்மட்டுமல்ல, நம் இலங்கையிலும், அந்நாட்களில், நடந்தது. அதனாலேதான், இன்றைக்கும் தென் இலங்கையிலே பெறேறு, சில்வா முதலிய குடும்பப் பெயருள்ளவர்களையும், வடஇலங்கையில் மாதோட்ட மன்னார் பகுதிகளிலே, குருஸ், கூஞ முதலிய குலநாமமுள்ளவர்களையும் காண்கின்றோம். இரு குடும்பங்

கள் விவாகத்தாற் கலந்துகொள்ளும்போது, தகப்பனின் குடும்பப்பெயரே தனயர்களுக்கு வழங்குவதாகும். இப்படியே, சாங்கோபாங்கசுவாமிகள் திவாரியிலுள்ள வரப்பிரசாதமாதா ஆலயத்தில் 1676-ம் ஆண்டு ஆடிமாதம் 8-ந் திகதி பிரசாத ஸ்நானம்பெற்றபோது, அவருக்கு யாக்கோமே எனும் அர்ச். யாகப்பரின் திருநாமத்தோடு கொன்சால்வெஸ் எனும் தந்தையாரின் உபநாமமும் சூட்டப்படுவதாயிற்று.

யாக்கோமே கொன்சால்வெஸ் கத்தோலிக்கு வேதபத்தியிற் பழுத்த பெற்றோரிடம், ஒருசத்தியவேத நாட்டிலே தோன்றியவராகவே, அவர் திருச்சபையின் சற்போதகங்கள் திருச்சடங்காசாரங்களில் நிரம்பிய பற்றுதல் உள்ளவராய் வளர்ந்து வந்தமை அதிசயமல்ல. திருச்சபைப் பத்தியோடு சங்கீதப்பிரியமும் அவருக்குப் பெற்றோரிடமிருந்து பிதிரார்ச்சிதமாய்க் கிடைப்பதாயிற்று. வாலவயதில் அவரைப் பார்ப்பது கண்ணையும் கருத்தையும் கவரும் ஓர் காட்சியாகும். உயர்ந்த, ஓசட்டையான ஒருவாலிபன்; கொங்கணப் பிராமணருக்கு இயல்பான நல்ல முகரேகை உள்ளவர்; விரும்பத்தக்க வெண்ணிற மேனியர்; முகத்தின் அழகுக்குத்தக்க புண்ணியசீலமாகிய அகத்தினழகும் கொண்டவர். இளமையில், அவர் தமது செனனவூராகிய திவாரியிலேயுள்ள ஆரம்ப பாடசாலையில் படித்துவந்தபோதே கல்வியில் விசேஷ திறமைகாட்டுகிறவரானார். சங்கீதத்தில் அவருக்கு இயல்பாய் அமைந்திருந்த சுவையினால் பிட்டில் ஆர்மோனியம் முதலான இசைக்கருவிகளை வாசிப்பதில் எளிதிலே சாமர்த்தியம் அடைந்துகொண்டார். பெற்றோர், இவற்றைக்கண்டு, அவரை ஆரம்பபாடசாலையால் எடுத்து ஐரோப்பிய இலக்கியங்களைப் படிக்கவைத்தார்கள். அக்காலம் திவாரியிலேயே கட்டளைக் குருவானவருக்குத் துணையாயிருந்த பெரும் எனும் சுவாமிகள், அதிக புத்திதீட்சணியமுள்ள வாலிபர் சிலரைத் தேர்ந்தெடுத்து வைத்து, அன்னோருக்கு இலத்தின் செய்யுட்பாடமும் அணியிலக்கணமும் ஓதுவித்துக்கொண்டுவந்தார். இவர் போர்த்துக்கேய இந்தியாவுக்கே சேர்ந்த மார்காம் எனும் ஊரவர்; இலத்தின் பாஷையில் மிக வல்லவர்; ஆத்துமாக்களை வழிநடத்துவதிற் தேர்ந்தவர். இலங்கையின் அப்போஸ்தலரான யோசேவாஸ் முனிவருக்கு ஆதியிலே துணையாய்ப் போகவிருந்தவர்களுள் ஒருவர்; வேதாபிமானத்திற் சிறந்தவர். இவருக்குக் கீழேதான் யாக்கோமே இலக்கியம் கற்கச்சென்றார்.



## இளந்தாரிப் புத்தியால் எழுந்த ஒரு யோசனை

பெரும் சுவாமிகளின் பாதத்தடியிற் படித்தமாணவர்கள் விரைவிலே அதிக வேதபத்தியும் அபிமானமும் பூண்டு, திருச்சபைக்கு ஊழியஞ் செய்வதிலே கருத்துக்கொள்வோரானார்கள். அவர்களுட் சிலரும் யாக்கோமேயும் சேர்ந்து ஒருநாள் ஒரு யோசனை பண்ணுவார்கள்: நம்முடைய திவாரியிலிருந்து சில வாலிபர்கள் உரோமாபுரிக்குப்போய்த் திருச்சபையின் பேர்போன ஊழியர்களாய் வந்தது உண்டே. அவர்களுள் மத்தியாஸ் தெ காஸ்திறு என்பவர், உரோமாபுரியிலே பெர்பெரீனி எனும் கருதினாலாண்டவரின் உதவியால் யேசுசபையாரின் உரோமைக் கல்லூரியில் வேதசாஸ்திரங்கற்றுக் குருப்பட்டம் பெற்று, பதின்மூன்று ஆண்டுகளின்பின் திருச்சபையிலிருந்து நேரே அதிகாரம் அடைந்துள்ள அப்போஸ்தொலிக்கு மிஷனரியாக இந்தியாவுக்கு மீண்டனுப்பப்பட்டாரே. பின், அவர் உரோமாபுரிக்கு மீளும்போது, தம்முடைய மருகர்கள் சிலரையும் அழைத்துப்போய் அங்கு திருச்சபை ஊழியர்கள் ஆக்கினாரே. பின்னும், அவர் விசயநகர அப்போஸ்தொலிக்கு விக்காரியுவாக இந்தியாவுக்குத் திரும்பிவந்து மேலும் ஒருகால் உரோமாபுரிக்குச் சென்றவிடத்தில் அங்கு 1677-ம் ஆண்டு மரித்துப்போக, அவரிடத்துக்கு அவர் மருகரான குஸ்தோடியு பீனு விக்காரியு அப்போஸ்தொலிக்குவாக நியமனம்பெற்று இந்தியாவுக்கு அனுப்பப்பட்டாரே. அவருடைய வேறொரு மருகரான தோமஸ் தெ காஸ்திறுவும் கன்னட தேசத்தின் விக்காரியு அப்போஸ்தொலிக்குவாக வந்தாரே. ஆதலால், நாங்களும் ஒளித்தோடிப்போய், கன்னட நாட்டிலுள்ள ஒரு பிறதேசத் துறைமுகத்தில் கப்பலேறி, உரோமாபுரிக்குப் போனால், அங்கே பெரியோருடைய தயவால் கல்வி சாஸ்திரங்களிற் தேறி கர்த்தருக்கு நல்லூழியஞ் செய்யலாம் என்று மனந்துணிந்து, ஒரு நல்ல நாட்காலையில் யாக்கோமேயும் கூட்டாளிகளும் இரகசியமாய்த் தத்தம் இல்லங்களைவிட்டுப் புறப்பட்டுக் கன்னட தேசத்துக்குப் பயணமானார்கள்.

ஒளித்தோடிவிட்ட மாணவர்களின் பெற்றோர் இந்தச் சூழ்ச்சியிற் பெரும் சுவாமிகளும் சேர்ந்திருக்கவேணும் என்று நினைத்து, அவரிடம்போய் அழுதுபுலம்பி முறைப்பட்டார்கள். அந்தச் சுத்தமான மனுஷனுக்கோ நடந்தசம்பவத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவர் பெற்றோருக்கு ஆறுதல்சொல்லி, இளந்தாரிப்புத்தியினால் ஓடிப்போன அவ்வாலிபர்கள் சுறுக்கு

வீடுவந்து சேருவார்கள் என்று கூறி அனுப்பிவிட்டார். சொன்னபடியே நடப்பதுமாயிற்று. கன்னடத் துறையொன்றுக்குக் கரந்துசென்றிருந்த வாலிபர்கள், உரோமாபுரிக்கு ஏகும் கப்பலில் இடம்பிடிக்கமாட்டாமற் போனதால், மனங்குன்றினவர்களாய் மீண்டுவந்தார்கள். வந்தவர்கள் வாயாலேதானே பெரும் சுவாமிகளிற் பிழையொன்றுமில்லை என்றதைப் பெற்றோரும் அறிந்துகொள்ளத்தக்கதாயிற்று. இச்சம்பவம் நடந்து சிலநாட்செல்ல பெரும்சுவாமிகளும் யோசேவாஸ் முனிவருக்குத் துணையாய் நம் தீவுக்கு வந்துவிட்டார்.

## அற்புதச் சிலுவைத் தியானசம்பிரதாயத்தில் ஓர் அங்கமாகுதல்

தேவ இராச்சியத்தில் திருவூழியம் செய்யவேணுமென்று யாக்கோமே கொண்டிருந்த பேரவாவைத் திருத்தியாக்கும் பொருட்டு, அவர் அன்னை தந்தையர் அவரைக் கோவைமா நகரின் சர்வகலாசாலையிற் படிக்க வைத்தார்கள். அங்கு அவர் தமது பதினேழாம் பிராயத்திலே சர்வகலாசாலைப் பிரவேச பரீட்சையில் அரங்கேறி, மூன்றுவருஷம் கலைக்கியானங்களைப் பயின்று, தம்முடைய சகபாடிகளுக்கெல்லாம் தலைமைவகித்திருந்து, கலைக்கியானப் பாலபண்டிதர் எனும் பட்டம் பெற்றார். அப்பால், அக்குயினு தோமையாரின் கழகத்திலே நாலு ஆண்டுத் தேவசாத்திரம் கற்கப்போனபோது, ஆராதனைவேளைகளில் ஆர்மோனியம் வாசிக்கும் பொறுப்பு அவருக்குக் கொடுக்கப்பட்டதினால் அங்குதானே வசிக்கும் உரிமையும் கிடைத்தது. அதினால், தமது படிப்பில் அதிக ஊக்கஞ்செலுத்தத் தக்கவரானார். அவர் தேவசாத்திரத்தில் அடைந்துகொண்டுவந்த தேர்ச்சி பெற்றோருக்கு விசேஷ பிரீதியை அளித்தது. ஏனெனில், தங்கள் குமாரன் தமது சிறந்த படிப்பின் நிமித்தம் வேதஅதிகாரிகளது சனுவைப்பெற்று நல்ல வரும்படியுள்ள ஒருகோயில் மானியத்தை அடைவார் என்று காத்திருந்தார்கள். மானியம் என்பது ஆலயங்களுக்குச் சேர்ந்த நிலம் புலங்களின் பிரயோசனத்தை அனுபவிக்கும் உரித்து. சந்நியாசசபைகளிற் சேராத குருமார் பொருள்பண்டம் வைத்திருந்து புழங்கத் திருச்சபையில் உத்தரவு உண்டு என்றதை வாசிப்போர் அறியவேண்டியது. யாக்கோமேயோ பொருளோடு ஊடாடும் சீவியத்தைவிட்டு முற்றத்துறந்த துறவியாய்ப் பெரும் சுவாமிகள் போனவழியே போக விரும்பிக்கொண்டார். பெரும்சுவாமிகள் அவ்வேளை



இலங்கையிலே ஒல்லாந்த வேதகலாபனையின்கீழ் வருந்திக்கொண்டிருந்த கிறீஸ்தவர்களைக் கைதூக்கப்போன காருண்ணிய வள்ளலாகிய யோசேவாஸ் முனிவருக்கு உதவிசெய்துகொண்டிருந்தவர். அங்கு போகப்புறப்படுமுன், யோசேவாஸ் முனிவராலேதானே தாபிக்கப்பட்ட அற்புதச் சிலுவைச் சம்பிரதாயத்தில் உட்பட்டு, விசேஷ திருச்சபை உத்தரவோடு இலங்கையிலிருந்துகொண்டு தமது நவசந்நியாசத்தை 1700-ம் ஆண்டு நிறைவேற்றினவர். இவரைப்போலத் தாமும் அந்தத் தியான சம்பிரதாயத்திலே ஒரு துறவியாகி இலங்கைக்குப்போய் ஆத்துமாக்களை ஈடேற்றும் பணிவிடையில் ஈடுபடவேண்டும் என்ற விருப்பு அவர் மனதைக் கொள்ளைகொண்டிருந்தது. யாக்கோமே அப்போது தியாக்கோன் எனும் ஆறாம்பட்டம் உள்ளவராய், விரைவிலே குருப்பட்டமும் பெறவிருந்தவர்.

அவருடைய தாய்தந்தையர்கள் இதை அறிந்தபோதோ நெருப்பெடுக்கத் துவங்கினார்கள். இதற்காகவோ நாங்கள் இத்தனை செலவுசெய்து உன்னைச் சருவகலாசாலையில்விட்டுப் படிப்பித்தோம்? எங்கள் தலைப்பிள்ளையாகிய நீ—கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்குகிற நீ—நல்ல மானியமொன்றைப் பெற்று எங்களைத் தள்ளாப்பிராயத்திலே ஆதரிப்பாய், இளைய பிள்ளைகளைப் படிப்பிக்க உதவிசெய்வாய் என்று நாங்கள் காத்திருக்க இப்படிச் செய்யலாமோ? கண்ணுக்கெட்டாத தேசத்திற்போய்க் காடுகரம்பைகளில் உழன்று சீவனுக்கும் மோசத்தைத் தேடலாமோ? என்று பல நியாயங்களைச் சொல்லிப் பல வழியாலும் அவருடைய எண்ணத்தை மாற்றிப்போடப் பார்த்தார்கள். அவருடைய மனதோ எம்பெருமானை அறைகுறையாயல்ல முழுமையாய்ப் பின்பற்றி அவருடைய ஞான மந்தைக்காக எவ்வித பிரயாசையும் படுவதிலே படிந்திருந்தது. பெற்றோரின் கண்ணீர்களால் என்ன, பயமுறுத்துதல்களால் என்ன அவர் சற்றேனும் அசையாமல், தேவ ஏவுதல் ஒன்றையே கடைப்பிடித்து 1700-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 2-ந் திகதி தியான சம்பிரதாயத்தில் நவசீவியாகப் பெயர் கொடுக்கலானார்.

## தியான சம்பிரதாயம்

தியான சம்பிரதாயம் என்ற இந்தத் துறவிகள்கூட்டம் இலங்கைக் கிறீஸ்தவர்களை இரட்சிக்கும்படியாகவே எம்பிரானுடைய தேவஆதீனத்தால் உண்டானது என்று தோன்று

கிறது. சருவேசுரனால் உண்டாகிற தேவமுயற்சிகள் எல்லாவற்றுக்கும்போலவே இதற்கும் தொடக்கத்திலே பலஎதிரிடைகள் ஏற்பட்டிருந்தன. கோவைமாநகரில் நிலைகொண்ட சந்நியாச சபைகள் இந்தியருக்கல்ல, ஐரோப்பியருக்குமட்டும் என்றே இருந்தமையால், சந்நியாச சீவியத்திலே மனம்வைத்த பஸ்குவால் தா கோஸ்த யெறேமியாஸ் எனும் ஒரு வயோதிக குருவானவர் தாமாகவே ஒரு சிறுசபையைத் தாபிக்க எண்ணினார். தம்மோடு இன்னும் நாலு குருமாரைச் சேர்த்துக்கொண்டு கோவை மேற்றிராணியாருடைய அங்கீகாரத்தோடு எழுதிய சில ஒழுங்குகளின்படி ஒரு கூட்டமாய்ச் சீவிக்கத்தொடங்கினார். இப்புதுக்கூட்டம் 1682-ம் ஆண்டு ஆரம்பமாயிற்று. முதல், கூட்டத்தார்கள் பத்திம் எனும் இடத்தில் தேடுவார் இன்றிக் கிடந்த வனத்துயுவானியார் ஆலயத்தில் வசித்தார்கள். ஆயினும் அவர்களுடைய எடுப்பு வாய்க்காமற்போய்விட்டது. சில நாட்களின் பின் யெறேமியாஸ் ஒருவரே தனித்து வனத்தில்யுவானியாரோடு இருப்பவரானார். பின்பு வேறு இருவர் அவரோடு சேருவதற்கு நல்லேவுதல் பெற்றார்கள். இதற்கிடையில் இருந்தவீடும் அழிந்து விழுந்துபோனதால் மூவரும், அப்பால், 1684-ம் ஆண்டில் கோவையிலேயே நற்தரிசனமலை என்ற குன்றிலே கைவிட்டுக்கிடந்த அற்புதச் சிலுவைக்கோயிலின் அறைவீட்டிலே போய்த்தங்கினார்கள். இக்குன்றின்மேல் 1619-ம் ஆண்டு மாசி மாதம் 23-ந் திகதி வெள்ளிக்கிழமை எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து திரளான சனங்களுக்கு மூன்றுமுறை காட்சிகொடுத்தருளினதினால் இவ்விடத்திற் கட்டியகோயில் அற்புதச் சிலுவைக்கோயில் என்று பெயர் அடைந்திருந்தது.

யெறேமியாசுடைய கூட்டம் வறுமைமிகுதியாலும் ஆதரிப்போர் இல்லாமையினாலும் மீண்டும் ஒருகால் அழிந்துபோகும் நிலையில் இருக்கையில், தேவாதீனமாய் ஒரு மகா புண்ணியவான் அவர்கள் குடிசையின் கதவில் வந்து தட்டுகிறவரானார். அவர்தான் யோசேவாஸ் முனிவர். இந்தத் தேவபத்திநிறைந்த குருவானவர் இலங்கையிலே கத்தோலிக்கர்படும் நெருக்கிடைகளைக் கேள்வியுற்று, தாம் அங்குபோய் அவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என்ற தேவ ஏவுதலை அடைந்தவராய், தியான சம்பிரதாயக் கூட்டத்தின்மூலமாய் உதவிக்குருமாரைச் சேர்க்கும் பொருட்டு, தாம் கைக்கொண்டிருந்த கன்னட நாட்டிலே மேற்றிராணியாரின் பதிலாளி எனும் உத்தியோகத்தையும் கைநெகிழ்ந்துவிட்டு வந்தவர். கூட்டத்துக் குருமார் விரைவிலே இவரையே தங்கள் தலைவராகத் தெரிந்து ஏற்படுத்தினார்கள். யோசேவாஸ் முனிவர் ஆறுமாதகாலமாக புதுச்சபையிற் தலைமைவகித்து அதைச் சீர்ப்படுத்தி, அர்ச். பிலிப்புநேரியோருடைய தியானசம்பிரதாயத்திலே அதை ஒருகிளையாக அமைத்து, அதற்குத் திருச்சபை அதிகாரிகளின் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொடுத்தபின் இலங்கைக்குப் பயணமானார். இத்தீவிலே அவர் வேறுகுருமாரும் வந்து ஊழியஞ்செய்ய வழிதிறந்துவைத்த நாளில், கோவைத் தியானசம்பிரதாயமே அவருக்குஉதவியாக உத்தமமான குருமாரை அனுப்பத்தக்கதாயிற்று. இவ்வாறே இலங்கைத் தீவுதான் தியான சம்பிரதாயிகளின் வேலைத்தலமாயும் அவர்களது மகிமையும் கிரீடமுமாயும் வருவதாயிற்று. கோவையிலே போதிய அனுதாபம் அடையாதிருந்த இக்கூட்டம், இலங்கைத்திருச்சபைக்குத் தான்செய்த பேருதவியினால், அர்ச். பாப்புமாராலும் போர்த்துக்கால் இராசாக்களாலும் விசேஷ ஆதரவும் மதிப்பும் பெறுவதாயிற்று. இந்தத் திருக்கூட்டத்திலேயே யாக்கோமே கொன்சால்வெஸ் எனும் சாங்கோபாங்கசுவாமிகள் 1700-ம் வருஷம் தமது இருபத்துநாலாம் வயதிலே தந்தை தாயையும் இனபந்துக்களையும் சகல உலக சிலாக்கியங்களையும் துஞ்சறத்துறந்து உட்படலானார்.



## தியான சம்பிரதாய மடத்துச் சீவியம்

சாங்கோபாங்கசுவாமிகள் தியான சம்பிரதாயத்திலே குருப்பட்டம்பெற்று, தமது நெஞ்சில் இருந்த நல்லாசைகளெல்லாம் சுடர்விட்டெரியப் பண்ணிக்கொண்டிருந்தார். அவருடைய அக்காலத்துச் சீவியத்தைப்பற்றி அவரோடு நன்றாய்ப்பழகிய ஒரு உடன் சம்பிரதாயி பின்வருமாறு வரைந்திருக்கிறார். "யாக்கோமே கொன்சால்வெஸ் அர்ச்சியசிட்டர்களின் ஞானத்தைக் கற்றுக்கொள்ளத் தொடங்கினார். தமது பிற்சீவியகாலமெல்லாம் மனுக்குலத்தின் சத்துருவோடு உலகம் எனும் போர்க்களத்திலே சமராடிக் கிறீஸ்துநாதருக்கு ஆத்துமாக்களைச் சம்பாதிப்பதற்கும் அவருடைய இராச்சியத்தை விசாலமாக்குவதற்கும் அவசியமான ஞானப் படைக்கலங்களைப் பயில ஆரம்பித்தார். தமது காலைக் கடன்செபத்தின்முன் செபத்திலும், திவ்விய பூசைக்கு ஆயத்தஞ் செய்வதிலும் நெடுநேரஞ் செலவழிப்பார். கடன்செபம் முடிய, பாவசங்கீர்த்தனஞ் செய்துகொண்டு பூசைவைப்பார். தமது பூசையின்பின் வேறொரு பூசைக்குப் பரிசாரகனாக நின்று உதவிசெய்து நன்றியறிந்ததோத்திரம்

செலுத்துவார். சம்பிரதாயத்தின் சட்டங்களின்படி வெள்ளியும் சனியும் ஒருசந்தி காப்பதோடு, திங்கள் புதன்களிலும் விரதம் அனுட்டிப்பார். ஞாயிறுதோறும், சகல பிற அலுவல்களையும் ஒழித்துவிட்டு, நாள்முழுதையும் ஞானமுயற்சிகளிலே செபத்திலே பத்தியுள்ள வாசிப்பிலே போக்கி, சருவேசுரனோடே ஐக்கியப்பட்டிருப்பார். வாரத்தின் மற்ற நாட்களில் மடத்தாருடைய ஞான முயற்சிகளுக்குச் செல்லும் நேரம் போக, எஞ்சியதை வேதாகமங்களையும் தேவ சாத்திரத்தின் போதககாண்டம் ஒழுக்ககாண்டமென்னும் இரண்டையும் படிப்பதிற் செலவழிப்பார். இவ்விதமான சீவியத்தில் அவர் கோவைத் திருச்சிலுவைத் தியான சம்பிரதாயமடத்திலே நாலுவருஷம் போக்கி, அறிவிலும், புண்ணியத்திலும் மிகத்தேர்ந்தவரானார். அவர் வெகுவாய்ச் செபம்பண்ணி, குறைவாய்ச் சம்பாஷித்து, தமது சரீரத்தைக் கசையடிகளாலும் உபவாசங்களாலும் அடக்கி, தேவ திருச்சித்தத்துக்கும் முதலாளிமாரின் கட்டளைகளுக்கும் பூரண அமைச்சல் காட்டுவதினால் தமது சொந்த அபிப்பிராயத்தையும் மனதையும் கீழ்ப்படுத்தி ஆளப் பழகிக்கொண்டுவந்தார். நல்ல நூல்களை வாசிப்பதில் அவர் எவ்வளவு கருத்தூன்றியவராயிருந்தார் என்றால், மடத்தாருக்கு உரிய முயற்சிகளில் பங்குபற்றியிராத நேரங்களில் எல்லாம் அவரை அவரது அறையிலோ புத்தகசாலையிலோதான் காணலாம்". இதுவரையும் கண்கண்ட சாட்சி எழுதியது.

# இரண்டாம் அதிகாரம்

## இலங்கைக்குப் போகத் தேவ அழைத்தல்

கொன்சால்வெஸ் தியான சம்பிரதாயத்தில் நாலுவருஷம் இருந்தபின், கோவைமாநகரின் சருவகலாசாலையில் உபந்நியாசம் செய்யும் உத்தியோகம் அவருக்குக் கிடைத்தது. அவரே புதுக் கூட்டத்திலிருந்து முதன்முதல் இப்படிப்பட்ட ஒரு உயர்ந்த உத்தியோகம் பெற்றவர். இது, ஒருபுறத்தில் அவருடைய கல்வித்திறமைக்குப் புகழ்மாலையானதோடு, மறுபுறத்தில் அவருடைய கூட்டத்துக்கும் கவுரவம் அளிப்பதாயிற்று. அவ்வித சீவியமே அவருடைய போக்குக்கும் உடல்நிலைக்கும் ஏற்றது போல தோற்றிற்று. தேவசித்தமோ வேறு வகையாயிருந்தது. எப்படியெனில், இலங்கைத்தீவுக்கு ஞான அதிகாரியான கொச்சிமேற்றிராணியார் தியான சம்பிரதாயத்திலிருந்து ஒரு குருவானவரை அவ்வருஷம் இலங்கைக்கு அனுப்ப ஒழுங்கு செய்துகொண்டிருந்தார். அதற்கிடையில், யோசேவாஸ் முனிவர் ஒருவரையல்ல நாலு குருமாரைக் கேட்டு மேற்றிராணியாருக்கு எழுதலானார். மேற்றிராணியார் அக்காகிதத்தைத் தியான சம்பிரதாயத்தின் முதல்வருக்கு அனுப்பிவைக்க, அது மடத்தார் சகலருக்கும் முன்னிலையில் வாசிக்கப்பட்டது. யோசேவாஸ் முனிவருடைய காகிதத்தின் ஒருபாகமாவது :—

"இலங்கை மிஷனுக்குத் தேவையான காரியங்கள் இன்றைக்கு முன்னிலும் அதிகப்பட்டிருக்கின்றன. தேவகிருபையினால் நாள்தோறும் வெகுபேர் நம்முடைய திருவேதத்திற் சேர்ந்துவருகிறார்கள். கிறீஸ்தவர்களுள் அதிக விசுவாசமும், அடிக்கடி சக்கிறமேந்துகளைப் பெறவேணும் எனும் ஆசையும் மேலிட்டுவருகின்றது. இதைவிட, சில கிறீஸ்தவர்கள் இருந்த இடத்தைவிட்டுத் தங்கள் சீவாதாரத்துக்காகத் தூரமான கிராமங்களில்போய் வசிக்கவேண்டி வந்திருக்கிறது. இப்படிப்பட்ட இடங்களிலிருப்பவர்கள் பலர், முன்னே இரட்சணிய காரியங்களைப்பற்றிக் கவலையற்றிருந்தவர்கள், இப்போது அதிலே ஆவலுள்ளோராகிறார்கள். ஆகவே, நாங்கள் அவர்களுக்கு உதவி செய்யப்போவது அவசியம். அவர்களுடைய முன்மாதிரிகையாலும் போதகத்தாலும் அவர்களைச் சூழ இருக்கிறவர்களும் மனந்திரும்ப வழியாகின்றது. ஆண்பிள்ளைகள் எங்களைத்தேடி நாங்களிருக்கும் இடத்துக்கு வரக்கூடுமானாலும், பெண்பிள்ளைகளும் சிறுவர்களுமோ அப்படிவரமுடியாது. அவர்கள் இருக்

கிற இடங்களுக்கெல்லாம் நாங்கள் போகக்கூடாமலிருப்பதினால், நாங்கள் தங்குகிற அந்தந்த இடத்திலேயாவது கொஞ்சக்காலம் தரித்திருந்தால் வரக்கூடியவர்கள் வர வசதிப்படும். இப்படியே குருமார் மற்ற இடங்களிலும்பார்க்க அதிக காலம் தங்க வேண்டிய இடங்களும் உண்டு; ஒருமடிக்கு இருமடி தரித்திருக்க வேண்டிய இடங்களும் உண்டு. குருமார் எல்லா இடங்களிலேயும் முன்னிலும் அதிக காலம் வசித்திருந்தால்மட்டும் கிறீஸ்தவர்கள் வருஷத்துக்கு ஒருமுறையாவது சக்கிறமேந்துகளைப் பெறக்கூடும். இப்போது எங்கள் தொகை இதற்குப்போதாது. இருக்கிற நாங்களுமோ எல்லோரும் வருத்தவாளிகளாய்ப் போனோம்; பெலக்கேடு உள்ளவர்களானோம். நானும் நோய்வாய்ப்பட்டுக் கிடந்து இப்போதுதான் சுகமாகிவருகிறேன். இங்கே, "வேளாண்மை மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம் பேர்". அந்தக் கொஞ்சம்பேரும் முன்னிலும் வலிகுறைந்தவர்கள் என்றதை நேரத்தோடு ஆண்டவரவர்களுக்கு அறிவிக்கும்படியாக இதை எழுதுகிறேன்."

இந்தக் கடிதத்தை வாசிக்கக்கேட்டிருந்த தியான சம்பிரதாயத்தாருள் ஏறக்குறைய எல்லோருமே இலங்கை மிஷனுக்குப்போக மனங்கொண்டு நின்றார்கள். இந்த மிஷன் மேலும் மேலும் முன்னேறிக்கொண்டுவந்தது. இதில் யோசேவாஸ் முனிவருடைய உதவியாளர்களோ யோசேப் தெ மெனேசெஸ், பேதுரு பெரும், பேதுரு த சல்தாஞ்ஞு, பிராஞ்சிஸ்கு தெ யேசு எனும் நால்வருந்தான். இலங்கை மிஷனுக்கு ஒருபுது மலர்ச்சி உண்டாகிய காலம் அது. ஆதலால் தியான சம்பிரதாயத்தார் யோசேவாஸ் முனிவருடைய வேண்டுதலுக்கு முழுதும் திருப்திசெய்யும்படியாக இன்னும் நாலுகுருமாரை அவருக்குத் துணையாய் அனுப்பத் தீர்மானித்தார்கள். அனுப்புமுன், திருச்சபை ஒழுங்குகளின்படி, தாங்கள் தெரிந்தெடுத்த பேர்வழிகளின் குணாதிசயங்களைக் குறிப்பிட்டு கோவையிலிருந்த "யுந்தா" எனும் மிஷன் ஆலோசனைச் சங்கத்துக்குத் தெரிவிக்கவேண்டியிருந்தது. குறிக்கப்பட்ட நால்வருள்ளே கொன்சால்வேசும் ஒருவர். முதலாளிமாரோ அவருடைய சுகத்தாழ்வையிட்டு யோசிப்போரானார்கள். இலங்கை மிஷனின் கஷ்டங்களுக்கு அவர் ஈடுசொல்லத்தக்கவரா? அங்கே 1696-ம் ஆண்டு போயிருந்த யோசெவ் கர்வாலியு எனும் யோசேவாஸ் முனிவரின் மருகரான சுவாமியார் ஆறுவருஷத்தினுள் மரித்துப்போனாரே. ஆனாலும் கொன்சால்வேசிடத்தில் உடற்றைரி



யத்துக்குப் பதிலாக மனத்தைரியமும் வேதஅபிமானமும் நிரம்ப இருந்தன. இவைகள்தான் மிஷன்வேலை செய்வோருக்கு சரீர சுகத்தைக்காட்டிலும் அதிகம் அவசியமான நிபந்தனைகள் என்று யோசேவாஸ் முனிவர் தாமும் வேறொரு கடிதத்தில் விளக்கியிருந்தார். இவைகளோடு, கொன்சால்வேசுடைய நடபடிக்கு மேலான கல்வித்திறமையும் ஒரு விசேஷம். அவருமோ இலங்கைக்குப் போகவேணும் என்ற தணியாத ஆவல்கொண்டிருந்தார். ஆதலால், அவருடைய பெரியோர்கள் இலங்கைக்குச் செல்லும் நால்வருள் அவரையும் ஒருவராக நியமித்தார்கள். "கொன்சால்வேஸ் சருவகலாசாலையில் உபந்நியாசஞ் செய்யும் சிலாக்கியத்தையும், மாணாக்கரால்வரும் புகழ்ச்சிகளையும், கல்விச்சாலைகளின் பெருமதிப்பையும்விட்டு, தமக்கு அருமையாயிருந்த சந்நியாச ஆச்சிரமத்தின் ஒதுக்கத்தையும் வாசிப்பின் இன்பத்தையுமே துறந்து, தமது உடல்நலத்தின் நிலையையும் ஒரு மிஷனறிக்குரிய சீவியத்தில் தாம் படப்போகிற கஷ்டங்களையும் பாராமல், மடத்திலேயே தமது தவக்கிருத்தியங்களால் பலமுறை அறிவுகெட்டுவிழ நேர்ந்திருந்ததையும் எண்ணாமல் இலங்கை மிஷனறிமாருள் ஒருவரானார்." சருவேசுரனின் ஏவுதலாலேயே அவர் இந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டார் என்றது பின் வெளிப்படலாயிற்று. எப்படியெனில், "அவர் உடலிலே பெலவீனமும் நொய்மையும் உள்ளவராயிருந்தபோதிலும், உயிரிலும் உள்ளத்திலுமோ திடகாத்திரமுள்ளவராகி, பல நெடும் வருஷங்களாய் தியான சம்பிரதாயிகளுக்குள் எல்லாம் அதிக வேலை செய்தவர் ஆனார் அன்றோ".

## இலங்கைப் பிரயாணம்

கொன்சால்வெஸ் சுவாமியாரோடு எமது தீவுக்குவர நியமிக்கப்பட்ட மற்ற மூன்று குருமாரும் யாரெனில், யோசேப் தெ யேசுமரியா, மனுவேல தெ மிராந்த, மிக்கேல் தெ மேலு என்பவர்களாம். மூவருள்ளும்முந்தினவர், வயசிலும் சன்னியாசவார்த்தைப்பாட்டிலும் மூத்தவராயிருந்தபடியால், மற்றவர்களுக்குத் தலைவராக வைக்கப்பட்டார். யோசேப் தெ யேசுமரியா எனும் இவருடைய முற்சீவியம் விநோதமானது. சன்னியாசத்துக்குமுன் இவர் யோசேவாஸ் என்று அழைக்கப்பட்டவர். நல்ல லாபகரமான வியாபாரஞ் செய்து பெரும் பொருள் ஈட்டியிருந்தவர். இவரும் இவர் மனைவியாகிய அப்பொலோனியா வெறெயிறாவும் பிள்ளையில்லாதிருந்தமையால், தங்கள் பிற்சீவி

யத்தைத் தேவஊழியத்துக்கு நேர்ந்துவைக்க விரும்பி, மனைவி, முன்னொருகாலம் நம்முடைய யாழ்ப்பாணத்துப் பாராசசேகரன் மகளான இளவரசியொருத்தி தலைவியாயிருந்து ஆண்ட சாந்த மொனிக்கா அரசமடத்திலே தன் இரு ஒன்றைவிட்ட சகோதரிகளையுங் கூட்டிக்கொண்டு போய்ச் சேர்ந்துகொண்டாள். அவள்கணவனார், மூவருக்கும்வேண்டிய ஸ்திரீதனத்தை அந்த இராசமடத்துக்குக்கட்டி, தமது வரவு செலவுக் கணக்குகளையும் முடித்து, ஊழியர்களுக்கும் உபகாரச்சம்பளம் நியமித்த பின், தம் ஆசைவுள்ள அசைவில்லா ஆதனங்களையெல்லாம் தியானசம்பிரதாயத்துக்குத் தாம் கொண்டுபோகும் முதுசொம்மாகக் கையளித்து 1698-ம் ஆண்டு ஆடிமாதம் 2-ந் திகதி அதிலே நவசன்னியாசம் தொடங்கினார். அவ்வேளை ஆராதிஷ்ட திருக்குடும்பத்தின் திருநாமங்கள் மூன்றையும் ஒருங்கே தரித்துக்கொள்ள விரும்பி, யோசேப் தெ யேசுமரியா என்னும் பெயரை எடுத்துக்கொண்டார். பின் குருத்துவத்துக்குரிய சகல சாஸ்திரங்களையும் கற்று பட்டம்பெற்றிருக்கையில், தமக்கு முதலூழியமாக, இலங்கையிற் பணிவிடைசெய்ய உத்தரவுபெற்றுக்கொண்டார். பிறகிட்டு இவர் 1712-ம் ஆண்டில் கோவைக்கு மீண்டுபோகக் கட்டளைபெற்று, அங்கு 1729-ம் ஆண்டு தைமாசம் 10-ந் திகதி பரலோகத்துக்குப் பழுத்தபழமாகிப் பரமனடி சேர்ந்தார். அடுத்தவரான மனுவேல் தெ மிராந்த இலங்கையிலே மிகக் கைவந்த அதி ஊக்கமுள்ள மிஷனறியாகக் காணப்பட்டமையால், உடனேதானே இத் திராட்சத்தோட்டத்திலே அரும்பாடுபடவேண்டிய அபாயகரமான ஒருபகுதியிலே, அதாவது, நீர்கொழும்புமுதல் மாத்தறை ஈறாக ஒல்லாந்தருக்குக் கீழிருந்த பிரதேசத்துக்கு நியமிக்கப்பட்டார். இவர் வெகு சாக்கிரதையோடும் சித்தியோடும் வேலைபார்த்ததைத் தியான சம்பிரதாயத்தார் அறியவந்தபோது, இவரை 1712-ம் ஆண்டு கோவைக்கு அழைத்து, தங்கள் கூட்டம்முழுதுக்கும் பெரிய தலைவர் ஆக்கினார்கள். மூன்றாமவரான மிக்கேல் தெ மேனு சுவாமியார் இலங்கை மிஷனிலே ஏழுமாதத்துக்குமேல் சீவந்தராய் இருப்பது திருவுளமாகவில்லை. இவர் இத்தீவின் கிழக்குப்பாகத்திலே திருவூழியம் நடத்தப்போயிருந்த காலையில், திடீரென்று நோயுற்று கொட்டியாரத்திலே 1706-ம் ஆண்டு பங்குனி 25-ந் திகதி பரமபதம் அடைந்தார். புறப்பட்டவர்கள் எல்லாருள்ளும் இளையவரான யாக்கோமே கொன்சால்வெசோ இலங்கைத் தேவதாழ்ச்சி உத்தியானத்தில் முப்பத்தேழுவருஷம் உயிர்வாழ்ந்து, இங்கு இதுவரையில் எவரும் எப்போதாவது செய்திராத அளவு திருவூழியம் நடத்தி, நெடுநாள் கொச்சி மேற்றிராணியாரின் பொதுப்பதிலாளியும் குருமாருடைய முதல்வருமாயிருந்து இலங்கையிலே சிங்களத்திலும் தமிழிலும் வேதகல்வி நூல்களுக்கு வழிகாட்டிவிட்டவராக விளங்குவதைக் காண்போம்.

இலங்கைக்குவந்த திருக்கூட்டத்திலே வயதிற்குறைந்தவர் என்றதுபற்றியே பயண வரலாறுகளை நாட்குறிப்புப் புத்தகத்தில் எழுதிக்கொண்டுவரும் கடமையும் யாக்கோமே கொன்சால்வேசுடையதாயிற்று. பயணக்காரர் 1705-ம் ஆண்டு வைகாசிமாதம் 9-ந் திகதி கோவைநகரை விட்டுப் புறப்பட்டார்கள். புறப்படும்போது நமது தீவிலிருந்த குருமாருக்கும் விசுவாசிகளுக்கும் உபகரிப்பதற்கென்று சிலசில வேதச்சாமான்களும், கண்டி அரசனான இரண்டாம் விமலசூரியனுக்குச் சந்திப்பாக "வாசனைக்கட்டிகள் நிறைந்த ஒருபெட்டியும், வேறுவிநோதமான சுகந்தபொருட்களும்" கொண்டுவந்தார்கள். ஏனெனில், அவ்வரசன் இவ்வித பொருட்களிலே தாம் பிரீதிகொள்வதாகக் கண்டியிலிருந்த பேதுரு தெ சல்தாஞ்ஞு சுவாமியாருக்குத் தெரிவித்திருந்தார். (பேதுரு தெ சல்தாஞ்ஞு முன் கன்னடதேசத்தில் திருவூழியஞ்செய்தவர். 1700-ம் ஆண்டு தியானசம்பிரதாயத்திற்சேர்ந்து 1703-ம் ஆண்டு இலங்கைக்குவந்தார். பின் 1717-ம் ஆண்டு கோவைக்குமீண்டு அங்கே தியானசம்பிரதாயிகளின் கூட்டப் பெரிய தலைவராயிருந்து மீண்டும் ஒருகால் 1725-ம் ஆண்டு இலங்கைக்குவந்து இங்குள்ள குருமாருக்கு முதலாளியாய் விளங்கிப் புத்தளத்திலே 1730-ம் ஆண்டு சித்திரை 28-ந் திகதி மரித்தவர்.) அது நிற்க, கோவையிலிருந்து புறப்பட்ட குருமார் மலையாளக் கப்பலொன்றில் ஏறி கொச்சிக்கு வந்தார்கள். அங்கிருந்து அப்பால் செல்வதற்குக் காற்று வளமில்லாதிருந்ததினால், மேற்றிராணியார், அவர்களை இரண்டு மாதத்துக்குமேல் மறித்துவைத்திருக்கலானார். குருமாரோ இலங்கைக்கு வரவேண்டுமென்ற ஆசையினால் வெந்தவர்கள், தரைப்பாதையாயாவது புறப்படவேணும் என்று துணிந்து ஆடிமாசம் 14-ந் திகதி கொச்சியைவிட்டு வெளிப்பட்டு "கால்நடையாகப்போய்த் திருவாங்கூர்க் கரைகளிலே அங்கங்கு கோயில்கட்டியிருந்த யேசுசபைக் குருமார் தங்கள் வழக்கப்படியே காட்டிய தயவையும் உதவியையும்பெற்று அந்தமாதந்தானே 26-ந் திகதி தூத்துக்குடியை அடைந்தார்கள். அங்கே கடலைத்தாண்ட மரக்கலத்தையும் கரைமார்க்கமாய் வழிகாட்

டத்தக்கவர்களையும் எதிர்நோக்கிக்கொண்டு இருபதுநாட் தங்கினார்கள்." ஆவணி 13-ந் திகதி தூத்துக்குடியிலிருந்து பாய் விரித்த ஒரு தோணியிலேறி, பெரியபட்டணத்திலும் இராமேசுரத்திலும் தங்கிப்போய், ஈற்றில், 1705-ம் ஆண்டு ஆவணி மாதம் 31-ந் திகதி தலைமன்னாரைச் சேர்ந்தார்கள்.

## மன்னாரில் வந்திறங்குதல்

மன்னாரிலே ஒல்லாந்தருடைய கோட்டை ஒன்றிருக்கிறதை அறிந்து, பிரயாணிகள் வெகுசாக்கிரதையோடும், அரவமின்றியும் இரவின் அமைதிவேளையிலே இறங்கி நடந்தார்கள். புதுக்குருமார் வந்திறங்கிய செய்தி ஏதோஒருவிதமாய் அங்குள்ள கத்தோலிக்கருக்குள் சத்தப்படவே இவர்களுட் சிலர் கூட்டமாய்ப் போய் குருமாரை எதிர்கொண்டார்கள். "கிறீஸ்தவர்கள் தங்களுக்குக் காட்டிய அன்பையும் வணக்கத்தையும்பற்றி அக்குருமார் அதிசயப்பட்டார்கள். வந்த ஒவ்வொருவரும் அவர்கள்முன்பாக முழந்தாளிட்டு ஆசீர்வாதங் கேட்பார்கள். சிலர் சாஷ்டாங்கமாக விழுந்தும் வணங்குவார்கள். இவர்கள் குருமாருடைய சாமான்களைச் சுமந்துசெல்ல நானோ நீயோவென்று போரிகட்டியதைக் கண்டபோது அவர்கள்கொண்ட அதிசயம் இம்மிரட்டியாயிற்று. ஒவ்வொரு கிறீஸ்தவனும் சுவாமிமாருடைய பொருட்களில் ஏதாவது ஒன்றைக் கொண்டுபோவதினால் தனக்கு அவர்கள்பேரிலிருந்த ஆர்வத்தைக்காட்ட முற்பட்டான். புதிதாய் வந்தவர்களை அந்தக் கிறீஸ்தவர்கள் தங்கள் குருவானவர் அந்நாட்களில் தங்கியிருந்த மறைவிடத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் விட்டார்கள். அக்குருவானவரோ கொன்சால்வேசுடைய பழைய உவாத்தியாரான பேதுறு பெரும் சுவாமிகள்தாம். அவரையே இலங்கையில் முதன்முதல் கண்டது கொன்சால்வேசுக்கு இணையில்லா மகிழ்ச்சியாயிற்று என்றதைச் சொல்லவும் வேண்டுமா? இப்பரிசுத்தவான் வந்தவர்களை ஒல்லாந்தருடைய ஆட்சிக்கப்பால் தாம் வழக்கமாய் வசிக்கிற இடத்துக்குக் கூட்டிக்கொண்டுபோய் வைத்துக்கொண்டு, யோசேவாஸ் முனிவருக்குச் செய்தி அனுப்பினார். அவ்வேளை அந்தமுனிவர் மன்னாரிலிருந்து இரண்டுநாட் பயணத்திலே, வன்னியிலே திருவூழியம் செய்துகொண்டுநின்றார். வன்னிப்பற்று ஒல்லாந்தரின்கீழ் இராதபடியால், குருமார் அங்கு இட்டம்போல் போய்வரலாம்; பிரசித்தமாய்த் தேவ இரகசியங்களையும் கொண்டாடலாம். அதினால்



கிறீஸ்தவர்களும் அங்கே திருநாட்காலங்களில், விசேஷமாய் பரிசுத்த வாரத்தில், பிறவூர்களிலிருந்து வந்து திரளாய்க் கூடுவார்கள். இப்படி, யோசேவாஸ் முனிவர் இடத்துக்கே பெரும் சுவாமிகள் புதுக்குருமார் நால்வரையும் அழைத்துப் போனார். அந்த இடம் நானாட்டான் என்று தோன்றுகிறது. அங்கு போய்ச் சேரும்வேளை, முனிவர் திவ்வியபூசையின்பின் நன்றியறிந்ததோத்திரம் செய்துகொண்டிருந்தார். அவர் அத்தனை குருமார்கூடிவந்ததைக்கண்டபோது, ஆனந்தம்மேலிட்டவராய், உடனேதானே கோயிலின் பீடத்தண்டை அவர்களை இட்டுக்கொண்டுபோய், தம்மோடு அவர்களும் கையில்மெழுகுதிரி கொளுத்திப் பிடிக்கச்செய்து, தெதேயும் எனும் தோத்திரப்பாடலை அவர்களோடு மாறிமாறிப் பாடிச் சருவேசுரன் இலங்கை உத்தியானத்திலே புதுவேலையாட்களை அனுப்பியருளியதற்காக நன்றியறிதலை ஒப்புக்கொடுத்தார்.

சிலநாட்களுக்குப்பின் யோசேப் தெ மெனேசெஸ் எனும் குருவானவரும் தேவமாதா பிறந்த திருநாட்கொண்டாட்டத்திலே யோசேவாஸ் முனிவருக்கு உதவிசெய்யும்படியாகக் கொழும்பிலிருந்து வந்துசேர்ந்தார். இவர் முனிவருடைய ஊராகிய சங்குவாலேயிற் பிறந்து குருப்பட்டம் பெற்றபின் 1687-ம் வருஷம் தியானசம்பிரதாயத்தில் உட்பட்டவர்; முன் கன்னடதேசத்தில் கட்டளைக்குருவாயிருந்து, யோசேவாஸ் முனிவர் இலங்கைக்கு வந்ததையும் இங்கு வேதம்போதிக்க ஆட்தேவையாயிருப்பதையும் அறிந்தபோது, 1696-ம் ஆண்டு கார்த்திகை மாதம் வேஷம்மாறி யாழ்ப்பாணத்துக்கு வந்தவர். இவரே முனிவருடைய முந்தியதோழன். அவருக்குப்பின் மேற்றிராணியாரின் பொதுப்பதிலாளியும் இலங்கைக் குருமாருக்குத் தலையுமாயிருந்தவர், பிற்காலம் இவரைக் கோவையிலே தியானசம்பிரதாயம் முழுதுக்கும் தலைவராயிருக்க அழைத்தபோது, இவர் இலங்கை மிஷனிலே தாம்கொண்ட பேரன்பினால் தம்மை இங்குதானே சாகவிடவேணும் என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டவர். 1724-ம் ஆண்டு தைமாதம் 13-ந் திகதி புத்தளத்தில் மரித்தவர். இவரும்வரவே, வன்னியின் பிரதான கோயிற்பாதுகாவலரான தேவதாயாரின் பிறந்ததிருநாட் கொண்டாட்டத்திலே, நானாதிசைகளிலுமிருந்து கிறீஸ்தவர்கள் வந்து குழுமும் அத்தருணத்திலே, ஏழுகுருமார் பங்குபற்றுவோர் ஆனார்கள். ஒல்லாந்தர் 1658-ம் ஆண்டு இலங்கையைப் பிடித்தபின் இத்தனை குருமார் எப்போதாவது ஒருங்கு கூடியதில்லை. இலங்கையில்

இருந்த குருமாருள் ஒருவர்மாத்திரம் அன்று இல்லை. பேதுறு த சல்தாஞ்ஞ என்ற அவர் வரக்கூடாததற்கு நியாயம் என்னவெனில், அந்நாட்களில் கண்டிதான் இலங்கைத் திருச்சபைக்குத் தலைத்தானமானபடியால், அங்கு குருமாரைத் தேடிப் போகிறவர்களுக்கு வேண்டியவைகளைச் செய்ய ஒருவர் இருப்பது அவசியமாயிற்று. அல்லாமலும், கண்டியரசன் ஒரு குருவானவர் மற்றவர்களுக்கு ஆட்பிணையாகத் தன்னருகிற் கிரியிருக்கவேணும் என்று கட்டளைபண்ணியிருந்தான். இதனாலேதான் சல்தாஞ்ஞ சுவாமியார் அந்தப் பெரிய திருநாளுக்கு வராமற் கண்டியில் தங்கவேண்டியவரானார்.

## யாழ்ப்பாணத்தில் சுவிசேஷவேலை

வன்னியிலே 1705-ம் ஆண்டு புரட்டாதிமாதம் 9-ந் திகதி, யோசேவாஸ் முனிவர், மாதாவின்கோவில் பெரிய பீடத்தின் முன்னால் இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனின் அருளைவேண்டிக் கொண்டு, இலங்கையை நன்றாயறிந்த யோசேப் மெனேசெஸ் பேதுரு பெரும் எனும் இரு குருமாருடையவும் ஆலோசனையோடு, நமது தீவை எட்டுக் குருமாருக்கும் எட்டாகப்பிரித்துக்கொடுத்து, தாம் எல்லாருக்கும் மேற்பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அவரவருடைய திறமையையும் அனுபவத்தையும் உடல் நலத்தையும் நோக்கியே அவரவருக்கு ஒவ்வொரு மீசாம் கொடுக்கப்பட்டது. கொன்சால்வேஸ் சுவாமியார் மன்னார்த் தீவையும், அரிப்பு முசலி எனும் இடங்களையும், ஆற்றுக்கு அப்பால் உள்ள ஊர்களையும் பார்க்க நியமிக்கப்பட்டார். இவைகளெல்லாம் தமிழ் பேசுகிற இடங்கள். கொன்சால்வேஸ் இலங்கைக்குப் புறப்பட்ட நாட்தொட்டே தமிழை மிக ஊக்கத்தோடு கற்றுவந்தபடியால், அது தமது வீட்டுப்பாஷையாகிய கொங்கணத்துக்கு முழுதும் வேறுபட்ட ஒரு மொழியாயிருந்தபோதிலும், அதைத் தெளிவாய்ப் பேசவும் வாசிக்கவும் பழகிக்கொண்டார்.

குருமார் ஒருவரொருவரை நன்றாய் அறிந்துகொள்ளும் பொருட்டு வன்னியிலே இன்னுஞ்சில நாட்போக்கினார்கள். ஏனெனில், பிரிந்துபோனபின், இனி ஒருவரை ஒருவர்காண அருமையாகவே சந்தர்ப்பம் கிடைக்கும். கொன்சால்வேஸ் அந்நாட்களிலே யோசேவாஸ் முனிவரைப்பற்றித் தமக்கு உண்டான முதற்பதிவையும், சனங்களிடத்தில் அவருடைய பரிசுத்த சீவியத்தைப்பற்றிக் கேள்விப்பட்ட வரலாறுகளையும்



தமது நாட்குறிப்புப் புத்தகத்தில் வரைந்துவைத்தது அந்த முனிவரின் சரித்திரத்தை எழுதுவோருக்கு வெகு உபகாரமாயுள்ளது. அது நிற்க, அந்தமாதம் 14-ந் திகதி குருமார் பிரிந்து அங்கங்கே போனார்கள். யோசேவாஸ் முனிவர், முதல், புதிதாய் வந்தவர்களுள் ஒருவரான மிக்கேல் தெ மேலு சுவாமியார் அங்கே தம்மோடு ஊழியஞ் செய்வதற்கு உத்தரவு கேட்கக் கண்டி நகருக்குப்போனார். சாங்கோபாங்க சுவாமிகள் மன்னாரில் வேலைசெய்யத் தொடங்குமுன் சுவிசேஷவூழியத்தில் பழகிக்கொள்ளும்பொருட்டும், ஒல்லாந்தருடைய கட்டுக்காவலுக்குத் தப்பும் சூழ்ச்சிகளை அறிந்துகொள்ளும் பொருட்டும் யோசேப் தெ மெனேசெஸ் சுவாமியாரோடு யாழ்ப்பாணத்துக்கு வந்தார். ஏனெனில், யாழ்ப்பாணத்தைப்போலவே மன்னாரும் ஒல்லாந்த அரசாட்சியின் கீழிருந்தது என்றதை வாசிப்போர் அறிவர்.

யாழ்ப்பாணத்திலிருந்த சில நாட்களுக்குள் சுவாமிகள், அக்கால வேதபோதகர்களுக்கு வரக்கூடிய ஒரே ஆறுதலை ஒரு பக்கத்திலும், ஆபத்தை மறுபக்கத்திலும் சுவைபார்க்கலானார். அதெப்படியெனில், அவருடைய பிரயாசையால் இங்கு எழுநூறுபேர் பிராயப்பட்டவர்கள் வேத அறிவிற் தேறி அவர் கையால் ஞானஸ்நானம் பெற்றார்கள். புது மிஷனறியானவருக்கு இது எவ்வளவு ஆறுதலையும் மனத்தென்பையும் கொடுத்திருக்கும் என்று நாம் ஊகித்துக்கொள்ளலாம். விரைவிலே இந்த உத்தமவூழியத்துக்கு ஒரு பெருந்தடை நேரிடுவதாயிற்று. ஊரில் ஏதோ ஒருகாரணத்தால் ஒரு குழப்பம் உண்டாயிற்று. இப்படிப்பட்ட தருணங்களில் ஒல்லாந்தர் குற்றவாளிகளை வீடுவீடாய்த் தேடித்திரிவார்களானதினால் குருமாரின் ஒளிப்பிடங்களையும் கண்டுபிடிக்கவரும். கண்டுபிடித்தாலோ, கோவையிலிருந்துவரும் குருமார்தான் அரசியற்கலகங்களுக்குக் காரணம் என்று ஒல்லாந்தர் சொல்லும் அபாண்டமும் மெய்போல வந்துவிடும்; கத்தோலிக்கரைக் கொடுமையாய் நடத்துவதற்கு அவர்கள் வழக்கமாய்ச் சொல்லிக்கொள்ளும் சாக்குப் போக்கும் பொருந்திவிடும். ஆதலால், இரு குருமாரும் நமது குடாநாட்டை விட்டுத் துரிதமாய்ப் புறப்படவேண்டியதாயிற்று. ஆகவே சாங்கோபாங்க சுவாமிகள் தமக்குக் குறிக்கப்பட்ட இடத்துக்குச் சென்றார்.

அடுத்தவருஷம் மாசிமாதத்தில் சுவாமிகள் புத்தளத்துக்குப்போனவிடத்தில், அங்கே, யோசேவாஸ் முனிவரையும் மேலு சுவாமியாரையும் கண்டார். முனிவர் கண்டி அரசரு

டைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு, அளம்பில் கொட்டியாரம் திருக்கோணமலை மட்டுக்களப்பு எனும் கிழக்கு ஊர்களைத் தரிசிக்க இருந்தவர், கண்டியில் தாம் பார்க்கப்போன அலுவலைப் பார்க்க முடியாமல் திரும்பி, மேற்சொல்லிய கிழக்குப் பாகங்களுக்குப்போகும்நோக்கமாய் தெ மேலு சுவாமியாரோடு புத்தளத்துக்கு வந்திருந்தார். ஏனெனில், கண்டி அரண்மனையில் ஒரு கலாதி உண்டுபட்டிருந்தது. அதெப்படியென்றால், அரசனுடைய மாளிகையாருட் சிலர், ஏலவே மனந்திரும்பி முனிவர் கையால் ஞானஸ்நானம் பெற்றிருந்ததை அறியவந்த சில உத்தியோகஸ்தர்கள், அன்னோருடைய பொருள்களைப் பறிமுதலாக்கியும் அவர்களை வேலையால் விலக்கியும் குருமாருக்கு மாறாகக் கதைகட்டியும் கலவரம் விளைத்ததோடு, அரசனையும் கோபம்மூட்ட எத்தனித்தார்கள். விமலதர்மராசாவோ யோசேவாஸ் முனிவரை நன்றாய் அறிந்திருந்தபடியால், யாதொரு விசாரணையும் பண்ணாமலே, மனந்திரும்பிய அரண்மனையாருடைய பொருள் பண்டங்களையும் உத்தியோகங்களையும் திரும்பக் கொடுத்துவிடும்படி கட்டளை பண்ணியிருந்தார். இந்தத் தறுவாயில் யோசேவாஸ் முனிவர் அரசரிடம் தாம் கேட்கப்போன உத்தரவைப்பற்றிப் பேசாது விட்டிடுதல் நன்று என்று எண்ணினார். மற்றும் குருமாரும் அதற்குச் சம்மதித்து, தங்கள் தலைவர், முன் தாம் நினைத்திருந்த கிழக்கு நாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டே பிறகு உத்தரவுபெற வரவேண்டுமென்று ஆலோசனைகூறினார்கள்.

## தெ மேலு சுவாமியாரின் மரணம்

யோசேவாஸ் முனிவர் தெ மேலு சுவாமியாரோடு சாங்கோபாங்க சுவாமிகளையும் அழைத்துக்கொண்டு கீழ்மாகாணத்துக்குப் புறப்பட்டார். ஒருநாள் வழிநடந்தபின், தம்முடைய ஓய்வற்ற பயணங்களினால் இளைத்துப்போயிருந்த அவருக்கு, வரவர அதிகமாய் அடிக்கடி காணும் நோயொன்று வந்துவிட்டது. கொட்டியாரத்திலிருந்து அவரை எதிர்கொள்ள வந்த கிறீஸ்தவர்கள் தாங்கள் கொண்டுவந்திருந்த ஒருதடதடத்த வண்டியில் அவரை ஏற்றினார்கள். நோயுற்ற வயோதிகரான முனிவருக்குச் சடார்பிடாரென்று குலுக்கியடிக்கிற வண்டியில் இருப்பதைக்காட்டிலும் இறங்கி நடப்பதே சுகமாகக் காணப்பட்டது. இனி, அப்பால் போகமாட்டாமல், ஒரு இடத்தில் தரித்துவிட்டார். தலைவருக்கு நோய் தணிந்தாலல்லாமல் புத்தளத்துக்கு மீளுவதே நலமென்று கூட்டாளிகள் தீர்மானித்தார்கள். தேவாதீனமாய் நோயும் தணிந்தது. பின்பு பயணத்தை நடத்துவது புத்தியோ என்ற சந்தேகம் யோசேவாஸ் முனிவருக்குப் பிறந்தது. அவர், இப்படிப்பட்ட தருணங்களில் தாமாக ஒரு தீர்மானமுஞ் செய்யாதவர் ஆகையால், சாங்கோபாங்க சுவாமிகளே ஒரு முடிவு சொல்லவேணுமென்று கேட்டார். இவர், மற்றவரோடு யோசனைபண்ணியபின், முனிவர் தேவாதீனத்திலே நம்பிக்கை வைத்துக்கொண்டு பயணத்தை நடத்துவதே நல்லது என்றும், தாங்களிருவரும் ஊரை அறியாததினாலும், விசேஷமாய் கீழ்மாகாணக் கரையில் நெடுநாள் குருமார் போகாதிருந்தமையினாலும், மூவரும் கூடிப் போவது அவசியம் என்றும் சொன்னார்.



தலைவர் சந்தோஷத்தோடு சம்மதித்ததினால், மூவரும் வழிநடந்து பங்குனிமாதக் கடைசியில் கொட்டியாரத்தைச் சேர்ந்தார்கள். ஆனால், என்சொல்லுவோம்! மாதா மங்களங்கேட்ட திருநாளின் விழிப்பிராவில், நடுச்சாமமுண்டு, தெ மேலு சுவாமியார் திடீரென்று நோய்வாய்ப்பட்டு பதினெட்டு மணித்தியாலங்களுக்குள்ளே, திருந்தாதிமணிவேளை, மரண நித்திரையானார். கூடிப்போன இரு குருமாரும் அடைந்த துயரத்துக்கு ஒரு அளவில்லை. அவர்கள் சொல்லொணா வியாகுலத்தோடு இறந்தவரை அடக்கம்பண்ணினார்கள். தெ மேலு சுவாமியாரின் கல்லறை ஒன்றுதான் அக்காலத்துக் குருமாருடைய சமாதிகளிலெல்லாம் நிச்சயமாய் அறியப்பட்டதொன்று. அது இன்றைக்கும் விசுவாசிகளாலும் பிறராலும் அதி பூச்சியத்தோடு தரிசிக்கப்பட்டுவருகிறது. 1922-ம் ஆண்டு கொட்டியாரக் கட்டளைக் குருவாயிருந்த லாசரு சுவாமியார் அதற்கு ஓர் ஞாபகக் கல்வெட்டை வைப்பித்தார்.

அதுநிற்க, இதன்பின் யோசேவாஸ் முனிவரும் சாங்கோபாங்க சுவாமிகளும் திருக்கோணமலையிலும் மட்டக்களப்பிலும் திருவூழியம் நடத்திமுடித்தபின், முனிவர் கண்டிக்கு மீள, சுவாமிகள் மன்னாருக்குத் திரும்பினார்.

## மூன்றும் அதிகாரம்

### வேத கல்வி நூல்களை இயற்றலும் ஒல்லாந்த நெருக்கிடையுள் வேலையும்

யோசேவாஸ் முனிவர் சாங்கோபாங்க சுவாமிகளை அறிய அறிய, தாம் நெடுநாளாய் மனதில் வைத்திருந்த ஒருபணிவிடையை முடிப்பதற்கு இவரே தக்கவர் என்று கண்டுகொள்ளலானார். இலங்கைத்தீவின் சுயபாஷைகளான சிங்களத்திலேயும் தமிழிலேயும், விசேஷமாய்ச் சிங்களத்திலே, வேதகல்விக்கும் பத்திக்கும் உரிய நூல்கள் அந்நாளில் வெகுசூச்சியம். மிஷனறிமார் ஒரு இடத்திலே கனநாள் தங்கியிருந்து கிறீஸ்தவர்களுக்கும், முக்கியமாய் இளையோர் சிறியோருக்கும், வேத அறிவை ஊட்டிக் கொடுப்பதிலோ ஆபத்து மறைந்திருந்தது. புத்தகங்கள் மூலமாய் ஞானகாரியங்களைப் படிப்பிக்கலாம் என்றால், அதற்கும் போதிய நூல்கள் இல்லை. நன்றாய் மொழிபெயர்த்த செபப்புத்தகங்களும் இல்லை. ஞானோபதேசக் குறிப்பிடமும் இல்லை. ஒல்லாந்தருடைய பள்ளிக்கூடங்களிலே சத்தியவேதத்துக்கு மாறான பொய்க்கொள்கைகளெல்லாம் போதிக்கப்பட்டுவந்தன. அப் பள்ளிக்கூடங்களுக்கே கத்தோலிக்கு பிள்ளைகளையும் அனுப்பும்படி அரசாட்சியார் நெருக்கிடை பண்ணிக்கொண்டு வந்தார்கள். அவைகளால் விளையும் தீமையை நீக்க சத்தியவேத தர்க்க நூல்களும் அவசியம். ஆனபடியால், யோசேவாஸ் முனிவர் தம்முடைய உதவி ஆட்களுள் ஒருவரை இதற்கென்று புறம்பாக்கி வைத்து, அவர் சிங்களத்தையும் தமிழையும் கசடறக் கற்கவும், வேண்டப்பட்ட நூல்களை திருத்தமான முறையில் எழுதவும்பண்ண ஆசித்தார். சாங்கோபாங்க சுவாமிகள் தமிழை நன்றாய்ப் பேசுகிறார் என்று யோசேவாஸ் முனிவர் கேள்விப்பட்டிருந்தார் ; கேள்விப்பட்டது உண்மையேயென்று இப்போது கண்கூடாகக் கண்டுகொண்டார். ஆகவே, சிலநாட்களுள் முனிவர் இவரைக் கண்டிக்கு அழைத்து, அங்கே இவர் சிங்களத்தையும் துறைபோகக் கற்றுக்கொள்ளுதற்கு வேண்டிய வழிவகைகளை இவருக்கு அமைத்து வைத்தார்.

சிங்களமோ தமிழோடு ஒத்த வசனக்கட்டு உள்ள ஒரு பாஷை. அதில் அமோகமாய்ச் சேர்ந்திருக்கிற வடசொற்களோ கொங்கணப் பாஷைக்கு இனமானவைகள். ஆகவே, கொங்கணத்தைத் தமது வீட்டுப்பேச்சாகக்கொண்டிருந்த சாங்



கோபாங்க சுவாமிகளுக்குத் தமிழறிவும் இருந்தபோதே, சிங்களத்தை எளிதாகக் கற்றுக்கொள்ளக் கூடியவரானார். ஆயினும், பேச்சுச் சிங்களத்திலும் எழுத்துச் சிங்களம் கடினமானதாதலால், சிங்களத்தை எழுதக் கற்பதிலே சற்றுக் கஷ்டம் தோன்றும். இதிலே இவருக்கு புத்த உன்னான்சைமார் உதவிசெய்தார்கள் என்று பரம்பரையாக உறுத்திச் சொல்லுகிறார்கள். சுவாமிகள் எழுதிய நூல்களைப் பார்க்கும்போது அவர் புத்த நூல்களை நன்றாய் அறிந்திருந்தார் என்ற உண்மை துலங்குகிறபடியால், இந்தப் பாரம்பரியம் உண்மையாகவும்கூடும். யோசேவாஸ் முனிவரும் தமது ஆதிநாட்களிலே சில செபங்கள் முதலியவற்றைச் சிங்களப்படுத்துவதற்கு புத்தகுருமாருடைய உதவியை நாடியிருந்தார் என்றதை அறிவோமே. ஆயினும், எழுத்திலுள்ள வரலாறுகளைப் பார்த்தால், சுவாமிகள் சிங்களம் படிப்பதில் பேதுறு கஸ்கோன் என்பவரிடத்திலேயே அதிகமாய் உதவி தேடியதாகத் தோன்றுகின்றது. கஸ்கோன் ஒரு பிராஞ்சியனுக்கும், கண்டியிலிருந்த போர்த்துக்கேய கலப்புள்ள ஒரு பெண்ணுக்கும் பிறந்தவர். சிறுவயதிலே யோசேவாஸ் முனிவரிடம் போர்த்துக்கேய பாஷைகற்றுக்கொண்டதினால், இவர் பிறதேசத்தாரோடு அப்பாஷையிலே கடிதப் போக்குவரவு செய்வதிலே அரசருக்கும் பிறருக்கும் பேருதவி செய்கிறவரானார். போர்த்துக்கேயம் தான் அந்நாட்களில் பிறநாட்டாரோடு புழங்கிய பொதுப்பாஷை. கஸ்கோன், கல்வீன் மதத்தவரானாலும், சிறுவயதில் தமக்கு உதவியாயிருந்த கத்தோலிக்கு குருமாரை ஒருபோதும் மறக்கவில்லை. இவர், பிற்காலம், சிங்களப்பாஷை அறிவில் மிகத்தேர்ந்தவரானதுமன்றி, கண்டி இராச்சியத்திலே அரசனுக்கு அடுத்தபடியில் உள்ளதாகிய தலைமை அதிகாரி என்னும் பதவியையும் அடைகிறவரானார். இவர்தாம் சாங்கோபாங்க சுவாமிகளுக்கு சிங்கள உவாத்தியாரானார். சுவாமிகள் விரைவிலே சிங்களப்பாஷையில் பாண்டித்தியம் அடைந்து, சிங்கள வேதநூலாசிரியர்களுக்கு மட்டுமல்ல இலங்கையின் தமிழ் வேதநூலாசிரியர்களுக்கும் பிதாவாக விளங்குகிறவரானார்.

### தமிழ்ச் சேபங்கள்

அக்காலத்தில் குருமார் பாஷைபடிப்பதில்மாத்திரம் நாட்போக்கிக்கொண்டிருக்கக் கிடைக்கவில்லை. சாங்கோபாங்க சுவாமிகள் தமது படிப்போடு மீசாம்வேலையும் பார்க்கவேண்டியவ

ரானார். அந்தத் திருத்தொழிலும் தாம் படித்தவைகளை அனுபவத்துக்குக் கொண்டுவருவதற்கே உபகாரமாயிற்று. யோசேவாஸ்முனிவர் தள்ளாப்பிராயமாய், மேலும் மேலும் நோய் கொண்டவராய்வர, அவருக்குத் துணையாக இவரே கண்டியில் அவர் பக்கலில் இருந்து, அவருக்கு ஒரே தடவையில் சீடரும் ஆத்தும குருவுமாகவேண்டிவந்தது. கண்டி மீசாமுக்குச்சேர்ந்த மற்றக் குருவாகிய பேதுரு தெ சல்தாஞ்ஞா என்பவர் தூரக் கிராமங்களில் திருவூழியம் நடத்திக்கொண்டுவந்தார். இந்நாட்களிலேதான் சுவாமிகள் யோசேவாஸ் முனிவர் முன்னே தமிழில் ஒருபடியாக எழுதிவைத்த செபங்களையும், சின்ன உத்தாரம் பெரிய உத்தாரம் எனும் ஞானோபதேசக் குறிப்பிடங்களையும், பிரார்த்தனைகளையும், சிலுவைப்பாதையையும், செபமாலைக்காரணிக்கங்களையும் நல்ல தமிழிற் திருப்பியும் அவைகளைச் சிங்களத்தில் மொழிபெயர்த்தும் உதவினார்.

இவற்றோடு விசுவாசிகளுக்கு உபயோகமான வேறுசில நூல்களையும் இருமொழியிலும் எழுதினார். அந்நாட்களில் ஒல்லாந்தர் கொழும்பிலே ஒரு அச்சுக்கூடம்வைத்து நடத்திவந்தபோதிலும், கத்தோலிக்கருக்கோ அச்சியந்திரம் இல்லை. ஆதலால் சுவாமிகள் எழுதிவரும் நூல்களை ஓலையில் எழுத்தாணி பிடித்துப் படியெடுப்போரின் கையாலேயே பிரசித்தமாக்க நேர்ந்தது. ஏடெழுதுவது எவ்வளவு கைபிடித்தவேலையென்பதையும், எழுத்தாணியா லெழுதிப் பழக்கமுள்ளோர் மாத்திரம் அப்படிப்பட்ட வேலையைத் திருத்தமாய்ச் செய்யக்கூடும் என்பதையும் பழைய மனுஷர் அறிவார்கள். அவ்வருஷம் பாஸ்குத் திருநாளோடு, ஏடெழுதுவோருக்குப் போதியவேலை கொடுக்கத்தக்க நூல்கள் சுவாமிகளால் ஆயத்தஞ்செய்திருந்தன. யோசேவாஸ்முனிவர் வருஷத்துக்கொருமுறை குருமார் ஒன்றுகூடி ஆலோசனைபண்ணவேணும் என்ற ஒரு ஒழுங்கை அந்நாட்களில் செய்யலானார். அவ்வருஷம் ஆலோசனைக்கூட்டம் புத்தளத்திலே நடக்கவிருந்தது. அதற்குச் சுவாமிகளும் தாமெழுதிய நூல்களோடு பயணமானார்.

ஆலோசனைக்கூட்டம் 1707-ம் ஆண்டு கண்டியிலல்லாமல் புத்தளத்திலே நடக்கவந்தது எப்படியென்றால், கண்டிநகரிலும் பார்க்க அங்கு குருமார் இலேசாய்ப்போய், உலகப்பிரசித்தியில்லாமல் கூடலாம் என்றதினாற்தான். மிஷனறிமார் மீசாங்களின் அலுவல்களைப்பற்றியும் ஒழுக்க சம்பந்தமான விஷயங்களைப் பற்றியும் ஆராய்ச்சி நடத்துவதும், தங்களுடைய வருஷாந்தர



ஞான ஒடுக்கத்தைச் செய்வதும், குருமாருள் ஆண்டுதோறும் நிகழும் மாற்றங்களைப் பண்ணுவதும், சிலநாள் ஒன்றாகச் சீவித்து ஒருவரையொருவர் அறிந்து ஒருவர் ஒருவருக்கு ஊக்கங்கொடுப்பதும் தான் இவ்வித கூட்டங்களின் நோக்கம். ஆங்காங்கு சிதறுண்டிருந்த மிஷனறிமார் எல்லோருக்கும் ஏலவே அறிவித்தல் அனுப்பப்படும். சகலருக்கும் தலைவரான மூப்புச் சுவாமியாரே கூட்டத்தில் தலைமை வகிப்பார். ஆயினும், அவ்வருஷம் யோசேவாஸ் முனிவர் சுகத்தாழ்வினால் நெடுந்தூரப் பயணம்பண்ண முடியாதவராயிருந்ததினால், தமக்குப்பதிலாக மிஷனறிமாருள் மூத்தவரான யோசேப் தெ மெனெசேசை கூட்டத்துத் தலைவராக ஏற்படுத்திவிட்டார். எல்லா மிஷனறிமாரும், எழுந்தேற்றத் திருநாளை அடுத்த நாலாம் ஞாயிற்றுக்கிழமை புத்தளத்தில் வந்து சேர்ந்தார்கள். ஆலோசனைக் கூட்டத்தின்பின் சாங்கோபாங்க சுவாமிகள் மனுவேல் தெ மிராந்தா சுவாமியாரோடு கம்மலுக்குச் சென்றார். அங்கே, அவர் பன்னிரண்டு எழுத்தாளர்களை வேலைக்கு அமர்த்தி தமது நூல்களையும், அவற்றுள் பிரதானமாய்த் தாம் சிங்களத்தில் எழுதிய ஞானோபதேசக் குறிப்பிடத்தையும் படிசெய்வித்தார். இந்தக் குறிப்பிடத்தைப்பற்றி மிராந்தா சுவாமியார் பின்வருமாறு கோவைக்கு எழுதினார்: “இந்த நூல் இலங்கை மிஷனுக்கு அவசியம் வேண்டப்பட்டதொன்று. போர்த்துக்கேயர் காலத்துக் குருமாரும் இப்படிப்பட்ட ஒன்றை எழுதியிருக்கவில்லை. சிங்களத்திலுமோ நமது பரிசுத்த வேதத்தைப்பற்றிய நூல் ஒன்றுமில்லை. ஆதலால், இது ஆத்துமாக்களுக்கு வெகு உபயோகமாயிருக்கும் என்றதிற் சந்தேகமில்லை. தங்கள் சுயபாஷையிலே இவ்விதமான ஆத்தும உணவு தங்களுக்கு வேண்டும் வேண்டும் என்று எத்தனையோ பேர் கேட்டுக்கொண்டு வருகிறார்கள்” என்றார்.

## ஒல்லாந்த நாடுகளில் திரு ஊழியம்

கம்மல் எனும் ஊரில் இவர்கள் இரு குருமாரும் போயிருந்தபடியால், அவ்வருஷம், இஸ்பிரீத்துசாந்து திருநாள் அங்கே வழமையிலும்பார்க்க அதிக சிறப்பாய்க் கொண்டாடப்படலாயிற்று. அந்த ஊரே ஒல்லாந்தருடைய அரசாட்சிக்குட்படாத கரைதுறை ஊர்களிற் பெரியது. அவர்களுடைய வடக்கு எல்லை நீர்கொழும்பு. அதற்கும் வடக்கிலுள்ளதாகிய இக் கம்மல் ஊரில் விசுவாசிகள் தங்கள் வேதக்கொண்டாட்டங்களை மனம்போலச்செய்யலாம் என்றதினால், இலங்கையின் பலவிடங்களி

லும், விசேஷமாய் கொழும்பிலும் நீர்கொழும்பிலும் நின்று, அநேக கிறீஸ்தவர்கள் தங்கள் மெய்விவாகச் சடங்குகளை நிறைவேற்றவும் ஞானஸ்நானத்தையும் மற்றச் சக்கிறமேந்துகளையும் பெற்றுக்கொள்ளவும் அத்தோடு திருநாட் கொண்டாட்டத்திற் பங்குபற்றவும் என்று வந்து கூடினார்கள். சாங்கோபாங்க சுவாமிகள் தமிழிற் பிரசங்கம்செய்தார்.

திருநாள் முடிந்த சிலநாட்களுள் ஒரு துக்கசெய்திவந்தது. கண்டி அரசரான இரண்டாம் விமலதர்மசூரியர் ஆனி மாதம் 14-ந்திகதி இறந்து 16-ந்திகதி தகனிக்கப்பட்டார். இந்த அரசர் கிறீஸ்தவர்களுக்கும், அதிகமாய்க் குருமாருக்கும், மிகவும் சனுவாய் இருந்து வந்ததின் நிமித்தம், இலங்கைக் கிறீஸ்தவர்கள் எல்லோரும் இவர் பிரிவால் மனம் வாடுவோரானார்கள். இவர் மரித்தது, எல்லாரிலும் பார்க்க, யோசேவாஸ் முனிவருக்குப் பேரிடி விழுந்ததுபோல் ஆயிற்று. தமக்கு எவ்வளவோ நன்றிகளைச்செய்துவந்த இந்த அரசரின் தேகவியோகத்தைப்பற்றித் துக்கங்கொண்டாடி இவருக்குப்பின் அரசராய் வந்த பதினெட்டு வயசு வாலரான நரேந்திரசிங்கருக்குச் சந்தோஷங் கூறும்படியாக சாங்கோபாங்கசுவாமிகளும் மற்றும் குருமாரும் தாமதமில்லாமல் கண்டி நகருக்கு வரவேணுமென்று முனிவர் சீட்டு அனுப்பியிருந்தார். அவர் கண்டியில் தனித்திருந்தபடியால், சாங்கோபாங்கசுவாமிகள் உடனே அவருக்குத் துணையாய்ப் போகவேண்டியிருந்தது. மற்றக் குருமாரும் புதிய அரசருடைய சனுவைப் பெற்றுக்கொள்ளும்படியாக, தங்கள் திருஊழியத்திற்குச் சிறிதுவேளை நேரக்கூடிய குறையையும் பாராமல், புறப்பட்டுப்போய் அவருக்கு வேண்டிய மரியாதை செய்வது அவசியமாயிற்று. யோசேவாஸ் முனிவருடைய கடிதம் புத்தளத்தில், மாதோட்டத்தில், யாழ்ப்பாணத்தில் இருந்த குருமாருக்கும், அந்நாட்களிற்தானே கீழ்மாகாணத்துக்குப் பயணமான சல்தாஞ்ஞ சுவாமியாருக்கும் அனுப்பப்பட்டது. சாங்கோபாங்க சுவாமிகள் உடனேதானே, அதாவது ஆடி 14-ந் திகதி, புறப்பட்டு, நம்பிக்கையுள்ள சில வழிகாட்டிகளின் உதவியால், ஒல்லாந்தருடைய நாடுகளுக்கூடாகச் சேமமாய் ஒளித்தொளித்துச் சீத்தாவக்கைக்குப் போய், அங்கிருந்து கண்டிநகர் சேர்ந்தார்.

அங்கே, கண்டியில் மீசாம்வேலை முழுதும் அவர் பேரிலேயே சுமந்தது. அதுமட்டுமல்ல, புத்தளத்தின் ஆலோசனைக் கூட்டத் தீர்மானத்தின்படி, அவரே நீர்கொழும்பு கொழும்பு



என்னும் நகரிகளோடு மாத்தறைவரைக்கும் உள்ள கரையூர்களின் கிறீஸ்தவர்களையும் பார்க்கவேண்டும் என்றிருந்தது. இந்தப் பாகமெல்லாம் ஒல்லாந்தருடைய ஆணையின்கீழ் அடங்கியபடியால், கத்தோலிக்கு மிஷனறியானவர் இவைகளில் ஊடாடுவது பெரும் அபாயத்துக்கிடமாயும், வேலைசெய்வது வெகு கஷ்டமாயும் இருந்தது. இந்தப்பாகத்தைப் புத்தளத்திலிருந்து தரிசிப்பதிலும் கண்டியிலிருந்து பார்ப்பதே இலேசு என்றும் தோன்றிற்று. சாங்கோபாங்க சுவாமிகள் தாமே இவ்விதவேலைக்குத் தகுந்தவர் என்றதும் அவர் கூட்டாளிகளுக்குத் தெரிந்திருந்தது. ஏனெனில், அவரே தமிழ் சிங்களம் போர்த்துக்கேயம் எனும் மூன்று பாஷைகளையும், ஒன்றுக்கு மற்றது தாழ்வில்லாமல், நன்றாய்ப் பேசத்தக்கவர். யாழ்ப்பாணம் மன்னார் வன்னி கம்மல் நீர்கொழும்பு எனும் இடங்களிலெல்லாம் தமிழே நாடோடிப் பாஷை. ஒல்லாந்த நகரிகளிலோ போர்த்துக்கேயத்தை அதிகமாய்ப் பேசுவார்கள். அதுதான் போர்த்துக்கேயரின் சந்ததியாரான பறங்கிமாருள் மட்டுமல்ல, ஒல்லாந்தர் வீடுகளிலும் வழங்கிவந்தது. கற்றவர்கள் பலர் கூடுமிடத்தில் பேசப்படுவதும், பிறசாதியாரோடு புழங்குவதற்கு உதவுவதும் அந்தப்பாஷைதான். இதனாலேதான், தியானசம்பிரதாயக் குருமார் இலங்கைக்கு வந்தவுடனேயே ஒல்லாந்த நகரிகளில் வேலைசெய்ய விடப்படுவார்கள். கொஞ்சம் தமிழும் அறிந்துவிட்டால், இலங்கையின் வடபாகத்துக்கு அனுப்பப்படுவார்கள். தென்பாகத்திலே, அதாவது கொழும்பு நின்று மாத்தறைவரையுமோ சிங்களமும் நன்றாய்ப்பேசத் தெரிந்திருப்பது அவசியம். இதன் நிமித்தம் சாங்கோபாங்க சுவாமிகளுக்கு இந்த ஆபத்து நிறைந்த மீசாம் வருவதாயிற்று.

## கொழும்பில் அருமையானவேலை

அவர் தமக்குக் குறிக்கப்பட்ட புதுமீசாமுக்குப்போக 1708-ம் ஆண்டுத் தபசுகாலத்தின் முதல் நாளிலே புறப்பட்டு, முன்பு ஒல்லாந்த அரசாட்சியின் தலைத்தானமான கொழும்பு நகரில் மூன்றுமாதம் இடையீடில்லாமல் வேலைசெய்தார். அங்கே வேதச் சடங்கெல்லாம் இரவிலேமட்டும் வெகு அந்தரங்கமாய் நடத்தவேண்டியிருந்தது. குருமார் தெருக்களிலே போவதானால், மறுவேஷம் போட்டுக்கொண்டு அல்லாமற் போகமுடியாது; ஒரு இடத்திலே நெடுநாள் தங்கவும் கூடாது. திருச்சடங்குகள் நிறைவேற்றுகிற வீட்டை பிறகத்தோலிக்கருங்கூட

அறியப்படாது. இன்னநாளைக்கு இன்ன வீட்டுக்கு வரவேண்டும் என்று இரகசியமாய் அழைக்கப்பட்டவர்கள் மாத்திரம் அந்த மறைவிடத்தை அறிவார்கள். பொழுதுபட்டபின், குருவானவர் வேஷம் மாறினவராய் அந்த வீட்டுக்கு வருவார். அதில், ஒரு சாரிலே, திவ்விய பூசைக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து வைத்து, விடியுமுன், அங்கே பூசைநடந்ததென்ற அடையாளம் ஒன்றும் இல்லாமற் பண்ணிப்போடுவார்கள். பூசைக்கு வருகிற அயற் கிறீஸ்தவர்கள் எல்லோரும், மற்றும் வீட்டார்கள் நித்திரைக்குப்போன பின்பே, சத்தப்படாமல் குறித்த வீட்டுக்குப் போகப் புறப்படவேண்டியது. எல்லோரும் வந்து சேர்ந்தபின், வீட்டின் வெளிக் கதவுகளைப் பூட்டிக் காவலும் வைத்துக்கொண்டுதான், குருவானவர், பாவசங்கீர்த்தனங்களைக் கேட்டும், ஞானஸ்நானம் பெறவேண்டியவர்கள் இருந்தால் அவர்களுக்கு அந்தத் தேவதிரவிய அனுமானத்தைப் பரிமாறியும், ஒருபாஷையிலோ பலமுறையும் இரண்டு பாஷைகளிலோ புத்திபோதகங்களைச் சொல்லியும், அதன்பின் பூசைதொடங்கி அதிலேயும் பிரசங்கம் வைத்துச் சகலமும் முடித்துக்கொண்டு பலார்பற்றி விடியுமுன் தூரத்திலுள்ள வேறொரு ஒளிப்பிடந்தேடிப் போய் விடுவார். அந்தவிடமும் நம்பிக்கையுள்ள சில கிறீஸ்தவர்களுக்கு மாத்திரம் தெரிந்ததாயிருக்கும். அங்கேயும், இப்போது சொல்லியபடியே எல்லாம் நடைபெறும். முழுதும் கத்தோலிக்கர் வசித்திருந்த சில தெருக்களில் ஒவ்வோர் சிறுக்கோயில் இருந்ததும் உண்டு. இவைகள், கோயிற் சாங்கம் கொஞ்சமுமில்லாமல், கிட்டங்கிகள் போலிருக்கும். இவைகளிலேயே கிறீஸ்தவர்கள் தேவதிரவிய அநுமானங்களைப் பெற்றுக்கொள்வதற்கு மறைவாகக் கூடுவார்கள். இப்படிப்பட்ட போலிக் கோயில்களிலென்ன, கிறீஸ்தவர்கள் வீடுகளிலென்ன, குருமார் ஒரே இடத்தில் இரண்டு நாட் தங்காமல், அடுத்தடுத்து இரவிலேமட்டும் வேலைசெய்து நாட்கழிப்பது எவ்வளவுகஷ்டம் என்பதை எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. சாங்கோபாங்க சுவாமிகள் இந்த மூன்றுமாதத்திலும் "ஒரு இரவாவது பாவசங்கீர்த்தனங்கள் கேளாமலும் ஞானஸ்நானங்கள் கொடாமலும் இருந்ததில்லை". இந்நாட்களிலே 1,300 பிராயப்பட்டோர் ஞானஸ்நானம் பெற்றார்கள். ஞானஸ்நானங்கள் ஒருநாளைக்கு ஐம்பது வரையிலும் கொடுக்கப்பட்டன. "சுவாமியார் கையால் மனந்திரும்பியோருள் பலர் ஒல்லாந்தருக்குக்கீழ் சட்டம்பிமாராயிருந்தவர்கள்; பலர் இந்துசமயத்திலும் புத்தசமயத்திலும்நின்று வந்தவர்கள்; மகமதியருள்ளும் சிலர் மனந்திரும்பினார்கள்".



1708-ம் ஆண்டிலேதான், இந்தப் பயணத்தின்போதோ வேறொன்றின்போதோ தெரியாது, சாங்கோபாங்கசுவாமிகள் கண்டிக்கு மீளும்வேளையில் ஒரு கள்ளயானை குறுக்கிட்டதென்று அக்காலத்து வரலாறுகள் சொல்லுகின்றன. கள்ளயானை என்பது கூட்டத்திலிருந்து பிரிந்து ஓடித்திரியும் யானை. அப்படிப்பட்டது ஆவேசங்கொண்டு மனிதரை விட்டுத்துரத்தியும் பயிர்முதலியவைகளைத் தாறுமாறாய் அழித்தும் அனர்த்தம் செய்யும். கூட்டத்திலுள்ளவைகளோ, கோபமூட்டப்பட்டாலன்றி, மனிதரைச் சருவுவதில்லை. இந்தக் கள்ளன் சில நாளாய் குழப்பிக்கொண்டு அங்குமிங்கும் திரிந்து அநேகரைக் கொன்றும்போட்டதினால், சனமெல்லாம் இதற்குப் பயந்து கொண்டிருந்தது. சாங்கோபாங்கசுவாமிகளும் அவரோடுகூடக் காட்டுப்பாதையாய்ச் சென்ற மூன்று ஆட்களும் ஒரு நாள் ஒரு மூட்டாற் திரும்பும்போது, திடீரென்று, இந்தக் கள்ளயானை அவர்களை எதிர்ப்பட்டது. கூடப் போனவர்கள் கெடிக்கலங்கி இனித் தங்கள்பாடு முடிந்தது என்று ஏங்கிநிற்க, சுவாமிகள் அச்சமில்லாமல் முன்நடந்து போனார். இதுவரையும் எதிர்ப்பட்ட எவரையும் கொன்றுவிட்ட அந்தயானையோ சத்தங்காட்டாமல் அப்படியே போய்விட்டது. இது ஒரு தேவ அற்புதம் என்று அந்நாட்களின் கடிதங்களிலே எழுதியிருக்கிறது.

# நாலாம் அதிகாரம்

## வேதப்பரப்புதல் வேலையிற் சித்தி

**1710-ம்** ஆண்டளவில் சாங்கோபாங்க சுவாமிகள் முன் தமக்குக் கோவையில் அடிக்கடிவந்த நோய்கள் இல்லாதவராய், பூரண சுகதேகியாய்க் காணப்பட்டார். வெளியில் உலாவி வேலைசெய்தது அவர் உடம்புக்கு நலமாயிருந்ததுபோலும். அவர் நமது நாட்டின் மூன்று பாஷைகளிலும் அடைந்திருந்த தேர்ச்சியினால் எல்லாவகுப்பாரோடும் அளவளாவி நடக்கத்தக்கவராகவே, வேதப்பரப்புதல் வேலையை முன்னேற்றுவதில் அதிக ஊக்கமாய் உழைக்கலானார். அவருக்குமுன் வந்திருந்த கோவைக் குருமார், தாங்கள் பட்ட கஷ்டங்களுக்குள்ளே, முன் வேதமாயிருந்து கெட்டுப்போனவர்களையே திருத்தியெடுப்பதில் அதிகமாய் முயற்சிசெய்யத் தக்கதாயிற்று. இதுவரையில் மனந்திரும்பியவர்களுள் அநேகர் தவறிப்போன வேதக்காரரின் பிள்ளைகுட்டிகளே. இவர்கள், பெற்றோரின் வேத அறிவுக்குறைவினாலும், ஒல்லாந்தரின் நெருக்கிடையினாலும் ஒன்றில் வேத அசமந்தத்தில் அமிழ்ந்திக் கிடந்தவர்கள், ஒன்றில் தங்கள் அயலாருடைய சமயத்தைப் பின்பற்றிக்கொண்டிருந்தவர்கள், குருமார் மீண்டும் தங்கள் மத்தியில் கெட்டுப்போன ஆடுகளைத் தேடிவரக்கண்டு நன்மனதோடு தங்கள் முன்னோரின் வேத வழிபாடுகளைக் கைக்கொள்ளத் தொடங்குவோர் ஆனார்கள். சாங்கோபாங்க சுவாமிகளோ தவறிப்போன ஆடுகளைப் பட்டியில் சேர்ப்பது போதுமென்றிராமல், புறத்தியாரையும் திருச்சபையின் ஆடுகளாக்க முயன்றார். விசேஷமாய்க் கத்தோலிக்கர் மத்தியிலே இருந்த பிறமதத்தவர்களோடு அந்தக் கத்தோலிக்கர் மூலமாய் வேலைசெய்வது அவருக்கு எளிதாயிற்று. அவர்களோடு புழங்கிவந்த பிறசமயிகள், அவர்களுக்குள் உலாவிவந்த குருமாருடைய தன்னயங்கருதாத முயற்சிகளைக் கண்டு சத்தியவேதத்தில் வெகு அபிமானம் கொண்டிருந்ததும் ஒரு துணைக்காரணமாயிற்று. யோசேவாஸ் முனிவருடைய கீர்த்தி இலங்கையெங்கும் பரவியிருந்தது அல்லவா? அவரைப் பின்தொடர்ந்து இலங்கைக்கு வந்த பிராமணக் குருமார், ஒல்லாந்தருடைய துன்புறுத்தல்களையும் கவனியாமல், எத்தனையோ ஆபத்துக்களின் நடுவே, தங்கள் ஞானச் சகோதராகிய கிறீஸ்தவர்களுக்குச் செய்துவந்த உத



விகளைக் காண்போருடைய கல்லான மனமும் இளகாமல் இருக்குமா? இக் குருமாருள் இதோ! ஒருவர், தமது கல்வித் திறமையினாலும் சனங்களுடைய பழக்க வழக்கங்களை ஆதியோடந்தமாய் அறிந்ததினாலும் அவர்களுக்கு எல்லாவிதத்திலும் நன்மைசெய்து வருகிறார். சாங்கோபாங்க சுவாமிகளைப்பற்றிய இந்தக் கீர்த்தி காட்டுத்தீ போல் எங்கும் பரந்திருந்தது. அவர் இதைத் தமது தற்புகழ்ச்சிக்கல்ல, தேவதோத்திரத்துக்கு ஏதுவாகக்கொண்டு, பிறசமயத்தவர்களைச் சத்தியவேதத்திற் சேர்ப்பதில் அதிக மும்முரமாக முயற்சிசெய்கிறவரானார். ஆயினும், தமக்குக் கற்பிக்கப்பட்டிருந்த வேதநூல்களை இயற்றும் வேலையையும் கைவிட்டவரல்ல.

ஆகவே, கண்டிநகரில் இருந்துகொண்டுதானே நீர்கொழும்பு முதல் காலி ஈறாகவுள்ள ஒல்லாந்த கரைதுறைப் பட்டணங்களையும், கண்டிக்கும் கொழும்புக்கும் இடைப்பட்ட ஊர்களையும் கிரமமாய் அடிக்கடி தரிசித்து, எவ்வித இடையூறையும் பொருட்பண்ணாமல், தமது சுவிசேஷத்தொண்டை நடப்பித்துக்கொண்டுவந்தார். அவர் ஆபத்துக்கு அஞ்சாமல் ஒல்லாந்த பட்டணங்களில் உட்பட்டமை கத்தோலிக்கருக்குப் பயங்கரமாயிருந்தது. ஒல்லாந்தருடைய துன்புறுத்துதல்களின் மத்தியிலே கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தவர்களுள்ளே உத்தம கிறீஸ்தவர்களுங்கூட அவர் தங்களைத் தேடி வரவேண்டாமென்றும், அவர் தங்கள் வீடுகளில் நுழைவதால் தங்களுக்கு அரசினரால் மோசம் நேரிடும் என்றும் சொல்லிவிடுவார்கள். போர்த்துக்கேய பாஷையில் அவருடைய சரித்திரத்தை எழுதியவரான செவஸ்தியாம் டோ றேகு என்பவர் எழுதிவைத்தபடி, "சிலர் அவர் இரவில் வீட்டுக்கு வந்தபோது அவரை வெளியே நிறுத்திக் கதவைச் சாத்தியும் விடலானார்கள். அவர் எங்குபோவது என்று அறியாமல் திரிந்து, பொழுதுவிடியுமுன், காடுகளுக்குள் போய் மறைந்துகொள்ள வேண்டியிருந்தது. பகலில் பட்டணத் தெருக்களில் காணப்பட்டாலோ ஒல்லாந்தர் கைப்படுவது நிச்சயம். மறுபடி இரவாகும்போது, மாறிமாறி வேஷம் எடுத்துக்கொண்டு, வேறு விசுவாசிகளைத் தேடிப் போவார். அவர்களுட் சிலர் இவருடைய அஞ்சாநெஞ்சையும் ஆத்துமாக்களின் ஈடேற்றத்துக்காக இவர்கொண்ட ஆவலையும் கண்டு, தங்கள் கோழைநெஞ்சுத்தனத்தைப்பற்றி வெட்கப்பட்டுத் தங்கள் வீடுகளில் இவரை வரவிடுவார்கள். ஒரு வீட்டார் செய்ததைக்கண்டு மறுவீட்டாரும் அப்படிச் செய்யவே சுவா

மியார் இரண்டுமூன்று மாதந்தானும் ஒல்லாந்த பட்டணங்களிலே தங்கித் தேவதொண்டு செய்துபோடுவார். கத்தோலிக்கர் மூலமாய்ப் பதிதரையும் அறிமுகப்படுத்திச் சத்திய திருச்சபையிற் சேர்ப்பார். விசேஷமாய்க் கத்தோலிக்கு பெண்களை விவாகம் முடித்த பதிதர் பலரை, நீர்கொழும்பு கொழும்பு காலி நகர்களிலும் பிறவிடங்களிலும், இப்படியே மனந்திருப்பினார். பல தருணங்களில் இவர் பதித நகரிகளுக்குப் போயிருக்கையில், எத்தனையோ நாள், ஒடுங்கிய இருட்டான கொட்டில்களிலே மறியற்கூடத்திலே போல அடைபட்டிருக்கவேண்டி நேர்ந்தது. சிலதடவை இவர் நிலத்தின்கீழ் கிடங்குகளிலே பலநாள் மறைந்திருக்க, மேலேயுள்ள ஓட்டையின்வழியாக இவருக்கு உணவு இறக்கிவிடப்படும். சிலதடவைகளில் முழு நாளும் உணவில்லாமல் தங்கியிருப்பார்.

“தேவநேசத்தினால் இவர் தம்மை உதாரமனதோடு இவ்வித நெருக்கிடைகளுக்கு உள்ளாக்கிக்கொண்டுவர, சருவேசுரனும் தம் அடியவரைச் சிலதடவை அற்புதமான விதமாகத் தானும் ஆபத்துகளில் நின்று மீட்டுக்கொண்டு வந்தார். சில முறை இவருடைய சத்துருக்களே இவரைப் பாதுகாக்கிறவர்களாய் வரவுஞ்செய்தார். ஒருமுறை இவர் களுத்துறையிலிருந்தபோது, ஒரு பதித உபதேசி இவரை ஒல்லாந்தரிடம் பிடித்துக்கொடுக்கத் திரிந்தான். சுவாமியார் ஒளித்துக்கொள்ள, அங்குள்ள கத்தோலிக்கர்கள், இவர் ஊரைவிட்டுப் போய்விடவேண்டும் என்றும் அங்கு தங்கியிருந்து பிடிபட்டால் இவருக்கு இல்லிடங்கொடுத்ததற்காக தங்களுக்கு ஆக்கினை கிடைக்கும் என்றும் விண்ணப்பஞ்செய்தார்கள். சுவாமியார் ஏது செய்வதென்றறியாமல் நின்றார். அங்கே அவ்வருஷம் சக்கிறமேந்துகளைப் பெறாதவர்கள் அநேகர் இருந்தார்கள் என்று வந்தவர், அவர்களுக்குச் செய்யவேண்டிய திருத்தொழிலைச் செய்யாமல் விட்டுப்போகலாமா என்று கவன்றுகொண்டிருந்தார். இருக்கையில், என்ன அதிசயம்! இவரைப் பிடித்துக்கொடுக்கத் திரிந்த பதித உபதேசிதானேவந்து இவர் பாதத்தடியில் தண்டனிட்டிருந்துகொண்டு: தேவரீரை ஒல்லாந்தருக்குக் கையளிக்க ஒருநாட் பதிவிருந்த நான் இன்றைக்கு என்னைத் தானே தேவரீருக்குக் கையளிக்கிறேன். எனக்காகப் பிதாவை மன்றாடி நான்செய்த பாவத்துக்குப் பொறுதி அடைந்து தரவேணும் என்று விழுந்துவிழுந்து கும்பிட்டான். இதைக் கண்டவர்கள் எல்லாரும் ஆச்சரியவசத்தரானார்கள். அவனோ சத்திய



திருச்சபைக்குப் பெரிய சத்துராதியாயினும், தேவ அற்புதத்தால் அவன் தன் பதித தப்பறைகள் எல்லாவற்றையும் சபித்துத்தள்ளி திருச்சபையிற்சேர்ந்து, பின், அனைவருக்கும் முன்மாதிரிகையாக நடந்துவந்தான். அவன் மனந்திரும்பியதைக் கண்ட கத்தோலிக்கர் ஒருபுசம் இருபுசமாகி, சாங்கோபாங்க சுவாமிகள் தமது திருவூழியத்தை முடித்துக்கொண்டுபோக எல்லாவித ஒத்தாசையையும் செய்தார்கள்.

“வேறொருமுறை, குறுபவில்ல எனுமிடத்திலே இருந்த ஒரு முதலியின் வீட்டுக்குப் போனார். அவன் நாலுபேரும் அறிந்த ஒரு கத்தோலிக்கன். அந்நாட்களில் அப் பகுதிகளின் திசாவை எனும் உத்தியோகஸ்தன் இவரைச் சிறைப்பிடிக்கச் சமயம்பார்த்துக்கொண்டிருந்தபடியால், அந்த முதலி, பதிதருக்குப் பயந்து, சுவாமியார் தன் இல்லத்தில் உட்படவிடாமற் தடுத்ததோடு, இவரை வேறோரிடத்துக்குக் கூட்டிப்போக ஒரு ஆளென்றாலும் பிடித்துக்கொடாமல் விட்டுவிட்டான். சுவாமியாருக்கு நேர்ந்ததுக்கம் கொஞ்சமல்ல. இதோ விடியப்போகிறது! வேறோரிடத்துக்குப் போகவும் வழியில்லை. இவர் இந்தக் கவலைக்குட்பட்டிருக்கும் நேரம், முன்னொருநாள் கண்டிக்கும் இந்த ஊருக்கும் இடையில் இவர் சந்தித்த ஒரு பிறசமயத்தவன் இவரிடம் வந்து ஞானஸ்நானம்பெறக் கேட்டான். பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட ஒரு தேவதூதனைப் போல் அந்தப் பிறசமயிதானே சுவாமியாரை அன்று ஆபத்திலிருந்து காக்கிறவனாகி, இவரைத் தன்வீட்டுக்கு இட்டுக்கொண்டுபோய் விடுதி கொடுத்து வைத்திருந்து, பின்னும் இவருக்குத் துணையாய்க் கொழும்புக்கும் போனான். பின்னும் மிகவும் உறுதியாய் நடந்து வேதத்தைப் பரப்புவதில் வெகு அபிமானங் காட்டிக்கொண்டுவந்தான்”.

## வெற்றிகளின் நடுவே விதனங்கள்

1710-ம் ஆண்டில் சாங்கோபாங்க சுவாமிகள் தமது அரிய போதகங்களினால் மனந்திரும்பியவர்களுள் ஒருமுறை மாத்திரம் அறுநூறு பிராயப்பட்டோருக்கு ஞானஸ்நானங் கொடுத்தார். இவர்கள் பெரும்பாலும் படிப்புள்ள ஆட்கள். இவர்கள் சுவாமியார் தங்களுடைய பாஷையில் அடைந்திருந்த புலமையை அறிந்து, அவரோடு ஊடாடிக் கல்விவிஷயங்களைப் பற்றிப் பேசத்தொடங்கி, நம்முடைய திருமறையின் உண்மையையும் உணர்ந்துகொள்ளுவோரானார்கள். வேத அபிமானங்

கொண்ட இந்தப் புதுக்கிறீஸ்தவர்களின் மூலமாய் அவர் குறுபவில்ல ஊர்முழுவதையும் சத்தியவேதத்திற் சேர்த்துப்போட்டார். அந்தக் குறிச்சியை அவர் பலமுறையும் தரிசித்து, பிறசமயிகளை வேதசத்தியங்களில் நன்றாய் உணர்த்தியபின்தான் ஆயத்தப்பட்டோருக்கெல்லாம் புதுப் பிறப்புக்குரிய தேவதிரவிய அனுமானத்தை வழங்கினார். குறுபவில்லவிலிருந்துகொண்டே அயற் கிராமங்களுக்கும் பலமுறை போய் ஏழு கிராமங்களைத் திருச்சபையின் மடியிற் சேர்த்ததோடு, மற்றவைகளில் நின்றும் நூறு குடும்பங்களை வேதமாக்கினார். தமது திருவூழியம் சித்தியடைய அடைய, ஆத்துமாக்களை ஆண்டவருடைய பட்டிக்கு இட்டுக்கொண்டு வருவதிலே அவருக்கிருந்த ஆவலும் ஊக்கமும் பெருகுவதாகி "ஒரேயொரு ஆத்துமத்தைத் தானும் சத்தியவேதத்திற்குக் கொண்டுவருவதற்காக ஆயாசத்தையோ தொந்தரைகளையோ எவ்வித தடைகளையோ பாராமலிருப்பார்".

கொழும்புக்கும் கண்டிக்குமிடையில் இப்படியே அவர் மேலும்மேலும் வெற்றிகளை அடைந்துகொண்டுவர, கொழும்பிலே அவர் கையால் திரளான பதிதர்கள் மனந்திரும்புவதைப் பற்றி ஒல்லாந்த அரசினர் கேள்விப்பட்டு, அவரைத் துரந்து வேட்டையாடிப்போட எல்லாவிதமான சூழ்ச்சிகளையும் கையாளத் தொடங்கினார்கள். இந்தக் குருவேட்டையைப்பற்றிய விபரங்கள் நமக்குக் கிடையாதிருக்கிறது துக்கம். அக்காலம் இலங்கையில் சுவிசேஷத்தொண்டு நடத்திய வேறொரு குருவானவராகிய மனுவேல் தெ மிராந்தா என்பவர் மாத்திரம் கோவைக்கெழுதிய ஒரு கடிதத்திலே 1710-ம் ஆண்டு புரட்டாதி மாதத்தில் "பதிதர்கள் கிளப்பிய கலாபனையிலேயும் குருமாரைப்பிடிக்கும் வேட்டையிலேயும் கொன்சால்வெஸ் சுவாமிகள் பிடிபடாமற் தப்பியது ஒரு அற்புதம்" என்று எழுதியது காணப்படுகிறது. அவ்வருஷம் திடீரென்று உண்டான துன்புறுத்தல் மிகக்கடூரமானது என்றதையோ வேறுவழிகளால் அறிவோம். முதன்மையான பல கத்தோலிக்கர்கள் பிடித்து வடகரைக்கு ஏற்றப்பட்டார்கள். அந்நாட்களில் ஒல்லாந்தர் கத்தோலிக்கர்மேற் கொண்ட கோப ஆவேசத்தைக் கண்டு யோசேவாஸ் முனிவரும் கொஞ்சநாளைக்கு கொழும்புக்கும் நீர்கொழும்புக்கும் குருமாரை அனுப்பாமல்விடுவது புத்தியென்று எண்ணினார். பதிதர் பிரட்டம்செய்தவர்களுள் நீர்கொழும்பின் முதலியாரான அல்போன்சு பெறெயிறாவும் அவர் சகோதாரான டொன் லூறெஞ்சு பெறெயிறாவும் ஒரு சிலராம். இவர்களை மனைவிமக்களோடும் பிடித்து தூத்துக்குடிக்கு ஏற்றிவிட்டு, இவர்கள் சொத்துக்களை எல்லாம் அரசினர் கவர்ந்துகொண்டார்கள். பிறகு, இவர்களைக் காலிக்குக் கொண்டுவந்து அங்கிருந்து ஆபிரிக்காவிலுள்ள நன்னம்பிக்கை முனைக்குக் கடத்திவிட்டார்கள். கத்தோலிக்கு வேதத்தை ஆதரித்தவர்கள் என்றதும் கத்தோலிக்கு குருமாருக்கு இல்லிடங்கொடுத்தார்கள் என்றதுமே இவர்கள் மேல் பாரிக்கப்பட்ட குற்றச்சாட்டு. ஒல்லாந்தர் தாங்கள் 1658-ம் ஆண்டு புரட்டாதி 19-ந் திகதி பிரசித்தம்பண்ணி, மீண்டும் பதினைந்து வருஷங்களுள் மூன்றுதரம் புதுப்பித்திருந்த சட்டத்தின்படி இக்குற்றச்சாட்டுக்கு மரணதண்டனையும் விதித்திருந்தது. மேற்சொல்லிய உத்தம கத்தோலிக்கரைப்போலவே அந்தோனியு தெ கொஸ்தா எனும் ஒரு உபதேசியும் தியேகு தெ அபியேயு என்பவரும் பிடிபட்டுத் தேசப்பிரட்டம் அடைந்து அந்நிய தேசத்தில் மாண்டார்கள். ஒல்லாந்தருக்குக்கீழே ஆராய்ச்சி உத்தியோகத்திலிருந்த சீமோன் த குறாஸ் என்பவரை, எழுபதுவயது வரையிலுள்ள வயோதிகரென்றும் பாராமல், நாட்டைவிட்டோட்டிவிட்டார்கள். இவர் வெகு தைரியமும் அஞ்சாநெஞ்சும் படைத்த ஒரு கத்தோலிக்கர். பலமுறை, குருமாருக்குக் கொழும்பில் ஆபத்து நேரக்கூடிய வேளைகளில், அவர்களை வெளியேகொண்டுபோய்ச் சேமமான இடங்களில் விட்டவர். அவ்வேளைகளில் குருவானவர் ஆராய்ச்சியாருடைய சேவகருள் ஒருவர்போல வேஷம் போட்டுக்கொண்டு தப்பிவிடுவார். 1707-ம் ஆண்டு இவரை ஒல்லாந்தர் விட்டு விளங்கியபோது இவர் சொல்லிய தடதடப்பில்லாத உறுதியான விடைகளை அவர்கள் எழுத்தில் வைத்திருந்தார்கள். இம்முறை, இவர் நாடுகடத்தப்பட்டபோது, தம்மைக்கொண்டுபோய் விட்டிருந்த இடத்திலிருந்து ஒளித்தோடிவந்து கண்டி ராச்சியத்தில் உட்பட்டு, அங்கு தமது இறுதி நாட்களை அமரிக்கையாய்க் கழிக்கலானார்.

இந்தத் துன்புறுத்தல்கள் ஒருபுறத்தில் சாங்கோபாங்க சுவாமிகளுடைய மனதை வருத்திக்கொண்டிருக்க, மறுபுறத்தில், யோசேவாஸ் முனிவரின் சுகத்தாழ்வு கூடிக்கூடிக்கொண்டு வந்தமையும் அவருக்கு ஒரு பெருங்கவலையாயிற்று. முனிவர், ஒன்பது வருஷகாலமாய்த் தனித்து இலங்கை முழுதும் சுற்றித்திரிந்து, மேய்ப்பனில்லாமற்கிடந்த ஆடுகளை மேய்த்துவந்த கஷ்டங்களினால் மிகப் பெலவீனப்பட்டிருந்தவர், அடிக்கடி

நோயுற்றுக்கிடப்பார். 1706-ம் ஆண்டு கொட்டியாரத்துக்குப் போகும் வழியில் ஆபத்தான வியாதியாய் விழுந்ததைக் கண்டோம். அடுத்தவருஷமும் கண்டியில் நோயுற்று வருந்தினார். 1710-ம் ஆண்டு கொட்டியாரத்தில் மறுபடியும் வியாதியாய் கிடந்து கண்டிக்குக் கொண்டுவரப்பட்டார். இதையறிந்து, கோவையிலுள்ள முதலாளிமார் அவரை அங்கு அழைத்துச் சுகப்படுத்த விரும்பியபோதிலும், இலங்கைக் குருமார் அதற்குத் தடையாய் நின்றார்கள். ஏனெனில், யோசேவாஸ் முனிவரே அவரது பரிசுத்ததனத்தின் கீர்த்தியினால் தங்களுக்குக் கண்டியரசனின் நாடுகளிலும் ஒல்லாந்தருடைய பிரிவுகளிற்றானும் ஒரு பாதுகாவலும் அரணுமாயிருந்தார் என்று அநுபவத்திலே கண்டிருந்தார்கள். அவர் இலங்கையில் நில்லாவிட்டால், இந்தத்தீவின் திருச்சபை சமாதானமாய் நடைபெறமாட்டாது என்று இவர்கள் எடுத்துக் காட்டியபடியால், கோவை அதிகாரிகள் அவரை அங்கு அழையாமல்விட ஒருப்படலானார்கள். சாங்கோபாங்க சுவாமிகளும் சுத்தமான யோசேவாசைக் கூடியளவிலே உயிர்பிழைக்கச் செய்துகொள்ளுவதிலே முழுக்கருத்தாயிருந்தார். அவரே முனிவருக்கு வலக்கைபோலிருந்து, ஒரே தடவையில் முனிவருடைய சீஷனும் ஆத்தும குருவும் நோயாளியூழியனுமானார். ஆயினும், சுவாமிகள் மீசாம்வேலைகளுக்குப்போகும்வேளைகளில், அவருக்குப்பதிலாய் கண்டியில் முனிவரோடு இருப்பதற்கு, புதிதாய் இலங்கைக்கு வந்திருந்தவரான இஞ்ஞாசியு தெ அல்மெயிதா சுவாமியார் கண்டியின் இரண்டாம் உதவிக் குருவானவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இடையில், யோசேவாஸ் முனிவர் சற்றே உடல்நலம் பெற்று, ஊன்றுகோல் பிடித்து நடந்து கண்டிநகரியிலேயுள்ள வருத்தக்காரரைத் தரிசிக்கத்தக்கவரானதின்பின், அவர் தம்முடைய உதவிக்காரர் இருவரும் இனித் தம்மை நகரியின் அலுவல்களைப் பார்க்க விட்டிட்டுத் தங்கள் மீசாங்களுக்குப் போகவேண்டுமென்று நின்றதினால், இருவரும் போய்விட்டார்கள். விட்டபின், முனிவர் கண்டியிலிருந்து ஒருநாட் பயணத் தூரத்திலே ஒரு அவஸ்தைக்குப் போய்ச் சேமமாய்த் திரும்பி வந்து, பின்னுமொரு முறைஒரு தூரமான இடத்துக்கு அவஸ்தைத் தேவதிரவிய அனுமானங்களைக் கொடுக்கச் சென்றார். ஆயின், திரும்பி வரும் வழியில் அவர் தோளாவிலிருந்து தவறிவிழுந்து, அறிவு நினைவில்லாமல் கண்டிக்குக் கொண்டு



வரப்பட்டார். இதன்பின், அவர் ஒருபோதும் கோயிலுக்கப்பால் போகக்கூடியதாகவில்லை. இது சாங்கோபாங்க சுவாமிகளுக்கு இனிமேலில்லையென்ற கவலைக்குக் காரணமாயிற்று. அப்பால், காதில் உண்டுபட்ட ஒரு இரணத்தோடு வந்த காய்ச்சலினால் சில நாள் பாயும் படுக்கையுமாயிருந்து, இலங்கை அப்போஸ்தலர், 1711-ம் ஆண்டு தைமாசம் 16-ந் திகதி தமது சுத்தமான ஆத்துமத்தைப் படைத்தோனிடம் கையளித்தார்.

தேவச்செயலாய், முனிவருடைய உதவியாளரான குருமாரிருவரும் அவர் மரணப்படுக்கையண்டையில் வந்துவிட்டார்கள். அல்மெயிதா சுவாமியார், மீசாம் பார்க்கப் போயிருந்தவர், ஏதோ ஒரு அறியப்படாத கவர்ச்சியினால் ஏவப்பட்டு அன்று தானே கண்டிக்கு வந்திருந்தார். சுவாமிமாரெல்லாரும் நினைத்தவுடனே கண்டிக்கு வருவது கூடியகாரியமல்ல. ஆதலால், இரு குருமாரும் தங்களால் இயன்ற ஆசார உபசாரத்தோடு சரமச் சடங்குகளை நிறைவேற்றினார்கள். திரளான விசுவாசிகள் முனிவர் பரலோகஞ்சென்றதையறிந்து வந்துகொண்டிருந்தமையால், திருப்பிரேத சேமம் இரண்டுநாளைக்குப் பின்போட்டு வைக்கப்பட்டது. கண்டியரசரும் மாளிகையாரும் முனிவரின் திருமரணத்தைப்பற்றி வெகு அனுதாபங்காட்டினார்கள். அரசரான நரேந்திரசிங்கர் திருமேனியை ஆலயத்துள்ளேதானே அடக்கம் பண்ண உத்தரவுகொடுக்கச் சித்தமானதினால், அது பீடத்தின் முன்னே பவுத்திரமாய்ச் சேமஞ்செய்யப்பட்டது. அந்நேரம் சாங்கோபாங்க சுவாமிகள் அருட்சிக்குரிய ஒரு பிரேதசேமப் பிரசங்கஞ்செய்தார்.

## ஓர் இயலாமையால் நேர்ந்த இடையூறு

யோசேவாஸ் முனிவர் கொச்சி மேற்றிராணியாரின் பதிலாளியும் இலங்கைக் குருமாரின் முதலாளியுமாயிருந்தவர் என்றதை வாசிப்போர் அறிவார்கள். அவர் இந்த உத்தியோகங்களைக் கைவிட்டுவிட எவ்வளவு ஆசித்தபோதிலும், மேற்றிராணியாரும் இடங்கொடுக்கவில்லை; தியானசம்பிரதாயத்தின் தலைவரும் சம்மதிக்கவில்லை. அவர் மரிக்குந் தனையுமே இத் திருப்பொறுப்புகளை நடப்பித்து வரவேண்டும் என்றும், கடைசிநாட்களிலே மாத்திரம் இவ்விரண்டு உத்தியோகங்களுக்கும் தமக்குப் பிரியமான ஒரு குருவானவரை நியமித்து வைக்கலாம் என்றும் சொல்லியிருந்தார்கள். அப்படியே, முனிவர் தேகவியோகமாவதற்குப் பத்துநாட்களின்முன் தம்முடைய கூட்டாளிகளுள்

ஆக முதியவரான யோசேப்பு தெ மெனேசெஸ் என்பவரை மேற்றிராணியாரின் பதிலாளியாகிய விக்காரியு ஜெனறலாகவும் மூப்புச் சுவாமியாராகவும் தெரிந்துவைத்தார். மெனேசெஸ் சுவாமியாரோ கண்டி அரசருக்கு நல்அறிமுகமில்லாதவராதலால், தாம் புத்தளத்திலே இருந்துகொள்ள, அரசருக்கு உவப்பான ஒருவர் இலங்கை மீசாம் முழுதினும் கருமங்களைப் பார்க்கும் பொருட்டு கண்டியில் வசிக்கவேண்டும் என்று விரும்பி, சாங்கோபாங்க சுவாமிகளை விக்காரியு த வாறு, அதாவது, மேற்றிராணியாரின் உபபதிலாளி எனும் உத்தியோகத்தில்வைத்து அதற்குரிய தத்துவங்களையும் கொடுத்தார். இந்த நியமனத்தினால், இலங்கைத்தீவின் திருச்சபை, இருபிரிவுகளாக வகுக்கப்பட்டது. வடபகுதிகளும் கீழ்மாகாணமும் புத்தள மீசாமாகவும், நீர்கொழும்புமுதல் தென்பாகமெல்லாம் கண்டி மீசாமாகவும் வந்தன. இத்தென்பாகம் ஏறக்குறையச் சிங்களம் வழங்கும் நாடுகளை அடக்கியது. இப்படியே, சுவாமிகள் இலங்கையின் அதிமுக்கியமான பாகத்துக்குத் திருச்சபைத் தலைவரும் தம்மனங்கொண்ட அளவில் அந்தப் பகுதிக்காக உழைக்கத்தக்கவரும் ஆனார்.

யோசேவாஸ் முனிவர் இறந்த அயல்நாட்களில், அவர் கண்டியிலிருந்தபோது, அவருக்கு ஒரு ஊறுபாடு நேர்ந்தது. எப்படியெனில், ஒரு குளிர்மிகுத்த நாட் காலை கொட்டாவி விடும்போது அவருடைய அலகு மூட்டுவிலகிப்போய்விட்டது. வீட்டிலிருந்தவர்கள், சூடு காட்டிச் சுகப்படுத்தலாமென்று வகைமோசமாய் எண்ணி, பலவகையான ஒத்தணங்களையும் பிடித்ததினால், கன்னங்கள் பொக்குளித்து தசைநார்கள் திமிர்த்துப்போய், கீழலகு ஒருபுறம் திரும்பியும், வாய் அரைவாசி திறந்தபடியும் வந்துவிட்டது. இந்தத் துன்பத்தையும் அவலட்சணத்தையும் சுவாமிகள் பாராமல், பிரசங்கம்பண்ண முடியாதிருந்தபோதிலும், சிங்கள நூல்களை எழுதுவதில் காலம் போக்கிவந்தார்.

புது மூப்புச்சுவாமியாராகிய யோசேப்பு தெ மெனேசெஸ் அந்நாட்களில் கண்டிக்கு வந்து சிலநாட் தங்கியிருந்தபோது, சுவாமிகளுடைய நிலைபரத்தைக்கண்டு, அவரைப் புத்தளத்துக்குக் கொண்டுபோனால் அங்குள்ள வைத்தியர்களுக்குக் காட்டிச் சுகப்படுத்தலாம் என்று எண்ணி, அவரை அவ்வருஷம் பெந்திக்கோஸ்துத் திருநாள் அட்டகத்தினுள்ளே நடக்கப்போகிற குருமாரின் கூட்டத்திற் சமுகமாயிருக்க அழைத்தார். புத்த



ளத்து வைத்தியர்களால் ஒன்றும் செய்யமுடியாமற் போனதினால், சுவாமிகள், நோயைக் கவனியாமல், தமது மீசாம் அலுவலைப்பார்க்கத் தீர்மானித்துக்கொண்டு, கட்டுக்கம்பளைக் கோறளையினூடாகச் சீத்தாவக்கைக்குப் பயணமானார். ஆயினும், வாய் சரியாய்த் திறக்கவும் மூடவும் கூடாமலிருந்தமை அவருடைய திருவூழியத்துக்கு, விசேஷமாய்ப் பிரசங்கஞ்செய்வதற்குப் பெருந்தடையாயிற்று. கொழும்பிலுள்ள ஒல்லாந்த சத்திர வைத்தியர்களுக்குக் காட்டலாம் என்றால், முதல் அவர்களிடம் போவதும், அப்பால், தாம் ஒரு கத்தோலிக்கு குருவானவர் என்றது வெளிப்படாதபடிக்கு நடந்துகொள்ளுவதும் கூடாத காரியம். அவர்களோ எல்லாரும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள்.

சுவாமிகள் இப்படி எண்ணமிட்டுக்கொண்டிருக்கும்போது, தேவச்செயலாய், மக்காமிலிருந்து இளைப்பாறிக் கோவைக்குப் போய்க்கொண்டிருந்த போர்த்துக்கேய தேசாதிபதியாகிய தியேகு தெ பீனு தைக்சேரா என்பவர் கொழும்பிலிறங்கிக் கோவைக்கப்பலை எதிர்பார்த்திருக்க நேர்ந்தது. அவர், குடும்பத்தோடும் ஒரு அரண்மனைக் குருவானவரோடும் வந்திருந்தபடியால், கொழும்பு ஒல்லாந்த கவர்ணரிடம் உத்தரவுபெற்று ஒரு வீடு பிடித்துத் தங்கியிருக்கையில், கோவைத் தியானசம்பிரதாயக் குருமாரோடு கொண்டாட்டஞ் செய்யவும் அவர்களுக்குத் தம்மாலியன்ற உதவிகளைப் பண்ணவும் ஆவல்கொண்டார். சுவாமிகளுக்கு நேரிட்ட விபத்தைப்பற்றி அவர் அறிந்தவுடனே, தாம் அவரைத் தமது வீட்டிலே வைத்திருந்து அவர் யாரென்ற குறிப்புத் தெரியாதபடிக்கு ஒல்லாந்த சத்திரவைத்தியர்களைக்கொண்டு பார்ப்பிப்பதற்கு விரும்பினார். ஆகவே, சுவாமிகள் வேஷம் மாறிக் கொழும்புக்கு வர, பீனு என்பவர் தாமே அவரை எதிர்கொண்டுபோய் அழைத்துவந்து, தமது இல்லத்திலே வைத்தியர்களைக் கூப்பிட்டுச் சோதிப்பித்தார். அவர்கள் சில மருந்துகள் கொடுத்தும் சுகப்படாமையால், வேறொரு நல்லமருந்து உண்டென்றும், அதினால் ஓர்வேளை சீவமோசமும் வரக்கூடுமென்றும் சொன்னார்கள். முதலாளிமார் அதற்குச் சம்மதியாமற் போகவே, சுவாமிகள் கொழும்பில் இனிநிற்பது ஆபத்துக்கிடமாகுமென்று அஞ்சி, கண்டியரசனின் நாடுகளிலே மீசாம் வேலை பார்க்கப் புறப்பட்டுப்போனார்.

நரேந்திரசிங்கர் சுவாமிகளுடைய இயலாமையைப்பற்றிக் கேள்விப்பட்டபோது, அவரை அழைப்பித்து, தமது இராச்சியத்திலுள்ள பேர்போன சில வைத்தியர்களைக்கொண்டு மருந்து செய்விக்க அவருக்கு விருப்பமோ என்று கேட்டார். சுவாமிகள் அதற்குச் சொன்ன மறுமொழியையும் பின்நடந்ததையும் அவரே கோவைக்கு எழுதிய ஒருகாகிதத்தின்படி காட்டுவோம்: "இராசா கேட்டதற்கு மறுமொழியாக நான்: தங்கள் இராசமகத்துவம் கட்டளையிட்டபடி செய்ய எப்போதும் ஆயத்தம் என்றேன். சிலநாட்பொறுத்து, அரசர், மூன்றுநாட் பயணத்துக்கு அப்பால் இருந்த கைகண்ட சில சத்திர வைத்தியர்களுக்கு, என்னை அறியாமலே, ஆள்விட்டு அழைப்பித்தார். அவர்கள் வந்தவுடனே, அரண்மனைக்குச் சேர்ந்த சில அப்புகாமி எனும் பிரபுக்களோடு கோயிலிலே என்னைக்காண அனுப்பி, என்னைச் சுகப்படுத்தக்கூடுமோ என்று பார்த்துச் சொல்ல விட்டார். தமது மாளிகையில் வைத்துத் தமக்கு முன்பாகவே எனக்கு அவர்கள் வைத்தியம் செய்யவேணும் என்றது அரசருடைய விருப்பம். இது, எந்த அரசராவது தமதுபட்சத்தைப் பெற்றுக்கொண்ட ஒருவனுக்குக் காட்டியிராத ஒரு தாட்சணியம் ஆகையால், எல்லாருக்கும் வியப்பை உண்டாக்கிற்று. ஆயினும், அரசர் என்னை மாளிகைக்கு அழைக்கிறதற்கிடையில், கிறீஸ்தவர்கள் கோயிலிலேதானே புதுமருந்தைக் கொடுக்கத் தொடங்கிவிட்டபடியால், நான் அரண்மனைக்குப் போகமுடியாமலிருந்தது. இதை அரசர் அறிந்தபோது, கோயிலிலேயே மருந்து நடந்துகொண்டு வரலாமென்று உத்தரவுசெய்து, அந்தச் சத்திரவைத்தியர்கள் என்னைக் குணமாக்கிப்போட்டால் அவர்களுக்குப் பெரியபெரிய வெகுமதிகள் கொடுப்பதாகவும் வாக்குப்பண்ணினார். அவர்கள் ஒரு மாதத்துக்குத் தங்களாலான வித்தையெல்லாம் பண்ணிக்கொண்டுவந்தார்கள். அரசரும் ஒன்றைவிட்டொருநாள் என் சுகத்தை விசாரிக்க ஆளனுப்பிக்கொண்டிருந்தார். ஆனாலும், என்னுடைய இடர் தீராமல் நிலைக்கவேணும் என்றது தேவசித்தமாயிற்று. பின்பு, இராசமகத்துவர் என்னைத் தமது முன்னிலைக்கு வரக்கட்டளையனுப்பி, என்னைப் பரிசோதித்து, அலகு முன்னிலும் சற்றே நிமிர்ந்திருக்கிறதென்று கண்டபோதிலும், எனது அந்தக்கேடு திருந்துதற்கு வழியில்லாதபடியால், இனி மருந்து செய்வதிற் பிரயோசனமில்லை என்றார்."



சாங்கோபாங்க சுவாமிகள் தேவதிருவுளத்துக்கு முழுமனதோடும் அமைந்து, இனி யாதொரு மருந்துஞ் செய்வதில்லை என்று தீர்மானித்துக்கொண்டு, வேதநூல்களை இயற்றுவதிலேயே தமது நாட்களைச் செலவழிக்கத் தொடங்கினார். ஆயினும், சற்றுச் சறுக சுகமாக அவர் மீசாம் வேலைகளையும் பார்த்துவந்து, அலகிலுள்ள ஊறுபாட்டைப் பழக்கத்தினால் வெல்லுகிறவராகி, சிறிது காலத்துக்குள்ளே முன்போல் பிரசங்கம் பண்ணவும் பிரசித்த தர்க்கங்கள் நடத்தவும் தமது பாடல்களை அரங்கத்திலே படித்துக்காட்டத்தானும் வல்லவரானார். உள்ளபடி, அவருக்கு வந்த இடையூறு அவர் இலங்கைத் திருச்சபைக்கு இணையில்லா நன்மை பயக்கும் வேத நூல்களை இயற்றித் தருவதற்கென்றே தேவாதீனமாய்ச் சம்பவித்தது போல் இருந்தது.

# ஐந்தாம் அதிகாரம்

## ஓர் பிரசித்த தர்க்கம்

சாங்கோபாங்க சுவாமிகள் இலங்கைத் திருச்சபைக்கு இயற்றித்தந்த அருமையான நூல்களைப்பற்றிப் பின்னோரிடத்தில் பேசுவோம். இப்போது, அவர் கண்டியிலே பதிதரோடு அரங்கத்திற் செய்த ஒரு பிரசங்கத்தை விபரித்துக் காட்டுவது வாசிப்போருக்கு மனோகரமாகும். பதிதமதம் ஒல்லாந்த ஆட்சிக்குக் கீழ்ப்பட்ட நாடுகளில் மட்டுமல்ல, கண்டி நகரிலும் உட்பட்டிருந்தது. கண்டியரசர்கள் அவ்வக்காலம் பிடித்து மறியற்படுத்தியிருந்த ஐரோப்பியருட் சிலர் பதிதராயிருந்தும், அவர்களாற் பதிதமதம் பரவவில்லை. தெலா நெரோல் எனும் ஒரு பதிதனே அதைப் பரப்ப முயன்றான். எப்படியெனில், 1672-ம் ஆண்டு தெலா ஹேய் எனும் பிராஞ்சிய அட்மிறல் சில கப்பல்களோடு திருக்கோணமலையில் வந்திறங்கி, கண்டியரசருடன் வியாபாரப் பொருத்தனை செய்துகொண்டு, திருக்கோணமலையில் ஒரு அரண்செய்த பண்டசாலையும் அமைத்திருந்தான். பின்பு, தன் கப்பல்களுக்கும் அரணுக்கும் வேண்டிய போசன பதார்த்தங்கள், பொருத்தனைப்படி, கண்டியிலிருந்து வாராததைக்கண்டு, அவற்றை விரைவாய் அனுப்பச் செய்வதற்கு தெலா நெரோல் எனும் பிராஞ்சியனையும் சிலகூட்டாளிகளையும் அரசரிடம் தூது போக்கிவிட்டு, தான் இந்தியாவை நோக்கிப் பாய்விரித்துச் சென்றான். அந்நாட்களில் கண்டியரசராயிருந்தவர் நரேந்திரசிங்கரின் பாட்டனான இராசசிங்கர். இவர் சமுகத்தில் தெலா நெரோல் காட்டிய கர்வத்தின் நிமித்தம், அவனும் கூடிவந்தவர்களும் மறியலில் அடைபட்டார்கள். காலகதியில் அவர்கள் விடுதலையடைந்து, நாட்டில் மீந்திருந்த போர்த்துக்கேய சந்ததியாரோடு விவாகஞ் செய்துகொண்டு தங்கிவிட்டார்கள். பிற்காலம் தெலா நெரோல் நரேந்திரசிங்கரால் விரும்பப்பட்டவனுமானான். ஆனபோதிலும், அவனோ உன்மத்தம் தலைக்கேறிய ஒரு பதிதன். தன்னோடும் கூட்டாளிகளோடும் விவாகத்தினால் ஒரு பந்தியாகிவிட்ட போர்த்துக்கேய சந்ததியாரையுமே தனது கல்வீனிய மதத்திற் சேர்க்கவும், கத்தோலிக்கு திருமறையைத் தூஷிக்கவும் வாய்மூத்து நின்றான். இவன்தான், பலவருஷங்களின் முன், யோசேவாஸ் முனிவர் ஆதியிற் கண்டிக்கு வந்தபோது, அவர்பேரில் பொய்க் குற்றஞ்சாட்டி அவரை மறியலில் அடைப்பித்தவன்.



தெலா நெரோல் தன்வசப்படுத்தியவர்களுள் ஒருவர் பேதுறு கஸ்கோன் எனும் தலைமையதிகாரி. இவர் குருமாருக்கு நண்பராகி, சாங்கோபாங்க சுவாமிகளுக்கும் சிங்களம் படிப்பதிலே வெகு உதவி செய்தவர் என்று முன்னமே கண்டோம். 1712-ம் ஆண்டில், சுவாமிகள் தம்மோடுகூடக் கண்டியில் வசித்த இஞ்ஞாசியு தெ அல்மெயிதா சுவாமியார் அரசருடைய அனுவலின் பேரில் சீத்தாவக்கைக்குப் போய்விட, நோயாளியாயிருந்த தம்மைப் பார்ப்பதற்கு ஆளில்லாமையால் அங்குறுங்கெட்டையிலேயிருந்த கஸ்கோன் அதிகாரியின் சகோதரிவீட்டிலே ஒரு புறம்பான அறையிற்போய் ஒரு மாதத்துக்குமேற் தங்கியிருந்தார். அரசரும் அந்நாட்களில் அந்த நகரியிலேயே வசித்திருந்தார். சுவாமிகள் அதிகாரியும் அவர் தாயும் சகோதரியும் தமக்கு காட்டிய ஆசார உபசாரங்களை ஒருபோதும் மறவாதிருந்தார். ஒரு நாள் அவர் அதிகாரியின் சகோதரிவீட்டிற்குப் போனபோது வீட்டாரை நோக்கிச் சொல்லுவார்: நீங்கள் எனக்குக் காட்டிவந்த சங்கை மரியாதைகளுக்கும் அன்னபானம் அளித்துச் செய்துவந்த உதவிகளுக்கும் கைம்மாறாக உங்கள் ஆத்தும ஈடேற்றத்துக்குரிய மெய்யான வழியைக் காட்டித்தருவதைத் தவிர வேறொன்றையும் செய்ய அறியேன் என்றார். அதற்கு அவர்கள்: நாங்கள் என்ன சொல்லுவதென்று தெரியாமற் திகைக்கிறோம். இப்போது நாங்கள் கைக்கொள்ளுகிற மார்க்கத்தை அந்தப் பிராஞ்சுக்காரனே எங்களுக்குப் போதித்தார். அவரும் தம்முடைய மார்க்கத்தை நன்றாய்க் கற்றிருக்கிற ஒருவர். அவரோடு நீங்கள் இந்த விஷயத்தைக்குறித்துத் தக்க நியாயங்களை எடுத்துக்காட்டித் தர்க்கம் பண்ணினால், உங்கள் மார்க்கமோ அவருடைய மார்க்கமோ எது சரி என்று கண்டு சரியானதைக் கைக்கொள்ள மனம் ஏவப்படுவோம் என்றார்கள். அதற்குச் சுவாமிகள் அந்த ஆளைத் தம்மிடம் கூட்டிக்கொண்டுவரச் சொன்னார். அவர்கள் தெலா நெரோலை ஒரு இரவு அழைத்துக்கொண்டுபோய் விட்டார்கள். பதிதனோடு சுவாமிகள் செய்த தர்க்கத்தை இவருடைய சொந்த வார்த்தைகளிலேயே இங்கு தருவோம்.

## சுவாமிகள் தாமே தந்த விபரம்

அவர் 1712-ம் ஆண்டு புரட்டாதிமாதம் 8-ந் திகதி கோவைக்கெழுதிய கடிதத்திற் சொல்லுவது:- "முதன்முதல்: நீ அனுசரிக்கிற மார்க்கம் என்ன என்று நான் அந்தப் பதிதனைக் கேட்க, அவன்: இறப்பிறமாது மார்க்கம் என்றான். இறப்பிற

மாது என்ற சொல்லுக்குக் கருத்தென்ன என்று கேட்க, புதுப்பித்தது அல்லது பிழைபார்த்தது என்றான். ஒரு மார்க்கம் பிழையாய்ப்போய்விட்டது என்று காணுமுன் அதைப் புதுப்பிக்க அல்லது பிழைபார்க்க முடியுமா? என்றேன். அதற்கு அவன்: முன்னிருந்ததாகிய ரோமானு திருச்சபை தவறிப்போய்விட்டது என்று தன்னால் அத்தாட்சி பண்ண முடியாவிட்டால் இறப்பிறமாது திருச்சபையென ஒன்று இருக்க நியாயம்வராது என்றான். அப்படியானால், ரோமானு திருச்சபையிலே இருந்த தவறுகளை வேதவாக்கியங்களைக்கொண்டு எடுத்துக்காட்டு; காட்டாவிட்டால் நீ கைக்கொள்ளுகிற சபை பொய்யென்று முடிந்துவிடும் என்றேன்.

“அப்போது பதிதன் முதற்சொல்லுவான்: வேதாகமத்திலே சருவேசுரன் எவ்விதமான சுரூபங்களையும் வணங்கப்படாதென்று கட்டளை பண்ணியிருக்க, உங்கள் திருச்சபையிலே அது நடக்கிறதே என்றான். அதற்கு நான்: சருவேசுரன் சுரூபங்களைத் தெய்வங்களாக வணங்கவேண்டாம் என்றார் ஒழிய, தம்முடைய சுத்தவாளர்களின் உருவங்களை அடையாளமாகவைத்து வணங்கவேண்டாமென்று சொல்லவில்லை; இது வெளிப்படையான ஒரு உண்மை; ஏனெனில் எடுத்துக்காட்டிய வேதவாக்கியத்திலேதானே: ‘நீ எனக்கு முன்பாக அன்னிய தெய்வங்களைக் கொண்டிருக்கவேண்டாம்’ என்றும், அதின்பின்: ‘நீ அவைகளை ஆராதிக்கவும் வேண்டாம் அவைகளுக்கு ஊழியம் பண்ணவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர் நாமே’ என்றும் எழுதியிருக்கிறது (புறப்பாட்டாகமம் 20: 3-5). இதினால் வேறுதெய்வங்களை ஆராதியாமலிருக்கும்பொருட்டே உருவங்கள் விலக்கப்பட்டன என்றது தெளிவாயிருக்கிறது என்று காட்டியபின், இதை மேலும் வெளிப்படையாக்கும்பொருட்டு அவனைநோக்கி: இந்த வாக்கியங்களாலே விலக்கப்பட்ட பாவம் என்ன? என்று கேட்டேன். அவன் விக்கிரகாராதனைதான் விலக்கப்பட்டது என்றான். அப்போது, நான், விக்கிரகாராதனை என்றசொல்லின் கருத்தை விபரித்து, விக்கிரகங்களுக்குத் தேவ ஆராதனை செலுத்துவதுதான் வேதாகமத்திலே விலக்கியிருக்கிறது அல்லாமல், மெய்யான சருவேசுரனுடையவும் அவருடைய அர்ச்சியசிட்டர்களுடையவும் சாயல்களை அடையாளமாக வைத்து வணங்குவது விலக்கப்படவில்லை என்று தெளிவித்தேன்.



“இதற்குமாறாகப் பதிதன் வேதாகமத்திலிருந்து ஒன்றும் கொண்டுவர மாட்டாமற்போனான். இப்படியே நியாயத்தினால் அவனைக் கண்டித்தபின், நான் சொல்லியதை மேலும் வலியுறுத்தும்பொருட்டு, சருவேசுரன் சுரூபங்களை விலக்காமல்விட்டது மாத்திரமல்ல, அவைகளை வைக்கும்படி கட்டளையிட்டும் இருக்கிறார்; அவைகளை அவமதித்தவர்களைத் தண்டித்தும் சங்கை பண்ணினவர்களுக்குப் பலனளித்தும் இருக்கிறார் என்று ஒப்பிக்க ‘எனது பாதபடியை ஆராதிப்பாயாக’ என்று சங்கீதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிற வாக்கியத்தை எடுத்துச்சொன்னேன். பாதபடி என்றது மரத்தினாற்செய்த உடன்படிக்கைப் பேழை. ஆயினும், மனுஷனாய் அவதரிக்கப்போகிற தேவவாக்கு ஆனவருக்கு ஒரு அறிகுறியாக அதை அவர்கள் ஆராதிக்கவேணுமென்று சருவேசுரன் கற்பித்தார். தாவீதுராசா அதை ஆராதித்து, சுற்றுப்பிரகாரமாய் எழுந்தருளுவித்து அதின்முன்பாகப் பாடி நடனஞ்செய்தார். அதைச் சங்கைபண்ணாத பிலிஸ்தியர்கள் கொள்ளைநோய்களினால் பீடிக்கப்பட்டுத் தண்டனையடைந்தார்கள். ஒபேடெடொன் அதைத் தனது வீட்டிலே வெகு உபசாரத்தோடு காப்பாற்றியதற்கு உபகாரமாக அநேக ஆசீர்வாதங்களை அடைந்தார். இந்த உண்மைக்கு அத்தாட்சியாக வேதபுத்தகத்திலிருந்தே வேறு உதாரணங்களையும் எடுத்துக் காட்டினேன்.

“இரண்டாவதாக, பதிதன், நாங்கள் பத்துக்கற்பனையின் இரண்டாவதை நீக்கிப்போட்டோம் என்றும், பத்தாவதை இரண்டு கூறாக்கி வைத்திருக்கிறோம் என்றும் சொன்னான். ஏனெனில், பதிதர்கள் ‘நீ உருவங்களை ஆராதியாதிருப்பாயாக’. என்றதை இரண்டாம் கற்பனையாக்கியிருக்கிறார்கள். அதற்கு நான்: வேதவசனங்களிலே இது முதலாங்கற்பனை, இது இரண்டாவது, இது மூன்றாவது என்று பிரித்துவைத்திருப்பதைக் காட்டு என்று கேட்க, அவன் அப்படிக் காட்டமாட்டாமற்போனான். ஏனெனில், வேதாகமத்திலே கற்பனைகள் இலக்கமிடப்பட்டில்லை. நீ விரும்பிய விரும்பியபடி அவைகளுக்கு இலக்கமிடுவதை நான் ஏற்றுக்கொள்ளக் கடனில்லை என்றேன். இதை அவனுக்கு இன்னும் நன்றாய் உணர்த்தும்படியாக நான் கேட்டதாவது: ஒருவன் ஒரு விக்கிரகத்தைச்செய்து அதைக் கும்பிட்டால் அவனுக்கு ஒரு பாவமோ இரண்டு பாவமோ என்றும், அப்படிப்பட்டவன் ஒரு கற்பனையையோ இரண்டு கற்பனையையோ மீறுகிறான் என்றும் கேட்டேன்.

"இப்படியே தன்னுடைய கொள்கை தவறென்று காட்டப்படவே, அவன் வேறு துறைகளிற் தத்தித்தத்திப்போய் ஒன்றையும் ஒப்பனைபண்ண மாட்டாமல் பெரிய இடம்பமான சொற்களை மாத்திரம் எடுத்து வசனித்துக்கொண்டிருந்தான். இதுதான் பதிதருடைய வழக்கம். ஆகையால், நான் அவனைப் பார்த்து: இது நியாயம் பேசுவதல்ல உதாசனம் சொல்லுவதேயாம் என்று சொல்லிவிட்டு, சூழ நின்றோரை நோக்கி: உங்களுடைய குரு கண்டிக்கப்பட்டார்; ஆதலால் அவருடைய மார்க்கம் பிழையென்று கண்டித்து ஒதுக்கப்பட்டது; ஏனெனில், அவர் தொடக்கத்திலே பொருந்திக் கொண்டதின்படி உரோமைத் திருச்சபையிலே ஒரு தவறையும் காட்டமாட்டாமற்போனார் என்றேன்.

"திருத்தினது என்ற இறப்பிறமாது இப்படியே ஒரு பெரும்பிழை என்று காண்பித்தபின்பு, உரோமானு சபையே உண்மையானது என்றதை அதிக தெளிவாய்க் காண்பிக்கத் தெண்டித்தேன். இதற்காக நான் அவனைப்பார்த்து: கிறீஸ்து வேதத்தைத் திருத்தினதுயார்? சருவேசுரனா மனிதனா என்று கேட்டேன். சருவேசுரன்தானே முதல் கிறீஸ்துவேதத்தை உண்டாக்கினபடியால், அவர் அது பிழையாய்ப்போகப் பின்பு திருத்தினார் என்று வராது அல்லவா? பதிதன் எனது கேள்விக்கு விடையாக மனிதரே திருத்தினார்கள் என்று சொல்லவேண்டியிருந்தபடியால், பதிதர் சருவேசுரனுடைய மார்க்கத்தையல்ல, மனிதருடைய மார்க்கத்தையே பின்பற்றுகிறார்கள் என்று நான் நன்றாக ஒப்பிக்கத்தக்கதாயிருந்தது.

"அப்பால், இரண்டாமிடத்தில், கிறீஸ்துவேதத்தைத் திருத்தின மனிதர் யார்? என்று கேட்டேன். அவன் மறுமொழிசொல்ல வெட்கப்பட்டுத் தடுமாறிக்கொண்டு நின்றான். நான் நிறுத்திப்பிடித்து, சூழநிற்போர் அறியும்படியாக மீண்டும் கேட்க, அவன்: லுத்தரும் கல்வீனுமே என்றான். பின்பு: லுத்தர் தேவநற்கருணையைப்பற்றி என்ன போதித்தார்? என்றேன். அதற்கு அவன்: லுத்தர் தேவநற்கருணையிலே கிறீஸ்துநாதருடைய சரீரம் மெய்யாகவே உண்டு என்று போதித்தார் என்றான். கல்வீன் அந்தப் போதகத்தை எப்படித்திருத்தினார்? என்று கேட்க: அவர் தேவநற்கருணையிலே கிறீஸ்துநாதருடைய சரீரம் இல்லை, அதின் அடையாளமும் பிரதிமையும் மாத்திரமே காணப்படும் என்று சாதித்தார் என்றான். அப்படியானால்: எது உண்மையான திருத்தம், கல்வீனுடையதோ லுத்த



ருடையதோ? என்று கேட்டேன். நீ இரண்டையும் கைப்பற்றினால் ஒன்றுக்கொன்று மாறான இரு போதகங்களை ஏற்றுக்கொள்ளுவாய்; கல்வீனுடைய எண்ணத்தின்படி லுத்தருடைய போதகம் பொய், லுத்தருடைய எண்ணத்தின்படி கல்வீனுடைய போதகம் பொய். இரண்டு திருத்தமென்றது ஒரு திருத்தமுமல்ல என்று நான் எடுத்துக்காட்ட, அவன் ஒருவிடையும் சொல்ல மாட்டாமற் திகைத்தான். கேட்டு நின்றவர்கள் எல்லாரும் சிரிக்கத்தொடங்கினார்கள்.

"'பாதாளங்களில் இறங்கினார்' என்ற விசுவாச மந்திரப் பிரிவைப்பற்றியும் இவ்விதமாகவே கேள்வி கேட்டேன். ஏனெனில், கிறீஸ்துநாதருடைய ஆத்துமம் பாதாளங்களில் இறங்கிச் சென்றது என்று லுத்தர் போதிக்க, கல்வீனோ கர்த்தருடைய சரீரம் கல்லறையில் அடக்கப்பட அவருடைய ஆத்துமம் சிலுவையிலே நரகவேதனைப்பட்டது என்று பிதற்றினான். லுத்தரும் கல்வீனுமே மார்க்கத் திருத்தக்காரர் என்று பதிதன் முன்னே சொல்லிவிட்டபடியால், திருத்தக்காரர் இருவரும் இதிலே ஒருவருக்கொருவர் மாறுபாடாய்ப் பேசினார்கள் என்றதைக் கொண்டு, அவனை, இதிலேயும் அவ்வித மாறுபாடுள்ள வேறு துறைகளிலேயும், வெட்கும்படி கண்டிப்பது இலகுவாயிருந்தது.

"அந்த மனிதன் வெகுவாய்க் கலங்கித் தடுமாறிப் போனான். அதிகாரியுடைய வீட்டிலும் தாய்வீட்டிலும் உள்ளவர்களோ, அவனிலே தாங்கள்கொண்டிருந்த நம்பிக்கையை இழந்துபோகத் தொடங்கியதோடு, எங்கள் சத்திய மார்க்கத்திலே மிகவும் சார்புள்ளவர்களுமானார்கள். இன்னும் அவர்கள் இதில் சேராமலிருக்கிறது உலக நியாயங்களினாலேதான். ஆதலால், அவர்களுடைய பாதையிலே பிசாசு போட்டிருக்கிற தடைகளை அவர்கள் வெல்லத்தக்கதாகவும், எல்லாம் சருவேசுரனுடைய மேலான மகிமைக்குக் காரணமாய்ப் போகத்தக்கதாகவும் அவருடைய வரப்பிரசாத உதவியைக்கேட்டுப் பயபக்தியோடு மன்றாடுவோமாக". (இம்மட்டும் சாங்கோபாங்க சுவாமிகள் எழுதிய காகிதத்திலிருந்து எடுத்தது.)

# ஆறும் அதிகாரம்

## இராச சமுகத்திற் தர்க்கம்

இதற்குப்பின் சில நாட்களாய் அங்குறுங்கெட்டை அரண்மனையிலே கத்தோலிக்கருக்கும் பதிதருக்கும் இடையில் அடிக்கடி சமய தர்க்கம் நடந்துவந்தது. அதெப்படியெனில், கத்தோலிக்கரும் பதிதருமான பல அப்புகாமிகள் அரசசேவகத்தில் அமர்ந்திருந்தார்கள். அரசர் கத்தோலிக்கரின் பக்கமாகவே எப்போதும் பேசி பதிதரை நிந்தித்துவந்தபடியால், கத்தோலிக்கர் தர்க்கத்தில் இலேசாய் வெற்றிகொள்ளத்தக்கதாயிருந்தது. ஆயினும், பதிதர் தாங்கள் தோற்றுப்போனதை ஒப்புக்கொள்ளாதிருந்தார்கள். அவர்கள், தாங்கள் செய்வதெல்லாம் வேதாகமத்தில் இருக்கிறதென்றும், கத்தோலிக்கர் அதற்கு மாறாய் நடக்கிறார்களென்றும் சொல்லிக்கொள்ளுவார்கள். அரசர் இது மெய்தானோ என்று அறிவதற்கு குருமாரை தமது சமுகத்திற்கு அழைக்க விரும்பினபோதிலும், இவ்விஷயம் தீவெங்கும் பரந்துவிடும் என்று சொல்லி, பிரதானிகள் அவரைத் தடுத்துக்கொண்டு வந்தார்கள்.

ஈற்றில், 1714-ம் ஆண்டின் எழுந்தேற்றத் திருநாள் அட்டகத்துள் ஒருநாள், இருபகுதியாருக்குமிடையில் மும்முரமான வாக்குவாதம் உண்டானபோது, அரசர் சாங்கோபாங்க சுவாமிகள் அங்கிருந்தால் பதிதருடைய வாயை அடக்கி விடுவாரே என்றும், அவர்களுடைய நியாயங்களெல்லாம் பரிதிமுன் பனிபோல் பறந்துவிடுமே என்றும் சொல்லுகிறவரானார். கத்தோலிக்கரே வெல்லவேண்டும் என்று அவர் விரும்பியிருந்தபடியால், அரண்மனையார் இருவரைச் சுவாமிகள் இருந்த கோவிலுக்கு அனுப்பி, அவர் பிராஞ்சிய பதிதனோடு தர்க்கமாடவிரும்பினால் தமது சமுகத்துக்கு வரலாம் என்று உத்தரவு செய்வித்தார். சுவாமிகள் இதைக்கேட்டு, விவிலியம் எனும் வேதாகம நூலையும் வேறுசில புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு, அரண்மனைக்குச் சென்றார். அங்கு அவரை அரசருடைய அறைக்கு அழைத்துக்கொண்டுபோய் விட்டார்கள். சுவாமிகள் அரச சமுகத்தை அடைந்தபோது, அரசர் தம்மைச் சமய விஷயமாய்ப் பேச அழைத்ததற்காக நன்றிகூறி, தாம் கைக்கொண்டும் போதித்தும் வந்த உண்மை மார்க்கத்தைப்பற்றிப் பேசுவது தமக்கு மகா ஆனந்தமென்று சிறந்த சிங்களத்தில் வசனித்தார். அவருடைய



பாஷையின் சிறப்பை அரசரும் கேட்டிருந்தோர் எல்லோரும் மெச்சிக்கொண்டார்கள். சுவாமிகளை அரசர் தமது அருகில் இருக்கப்பண்ணி பதிதன் அவரிடத்தில் தனது தடைகளைச் சொல்லச்செய்தார்.

## சுவாமிகள் பதிதன்வாயை அடைத்தது

“ அப்போது பதிதன் தனது பிராஞ்சுப் பாஷை விவிலியத்தைத் திறந்து, புறப்பாட்டாகமத்தின் இருபதாம் அதிகாரத்திலே பத்துக்கற்பனையிருக்கிற இடத்தை வாசித்துச் சிங்களப்படுத்திக்கொண்டு, பின்வரும் வசனங்களை எடுத்தான். அதாவது: ‘எகித்து தேசத்திலிருந்து உன்னை அழைத்துக்கொண்டு வந்த உன் தேவனாகிய கர்த்தர் நானே; எனக்கு முன்பாக நீ அன்னிய தேவர்களை வைத்திருக்கவேண்டாம். உனக்கு எந்த உருவத்தையாவது, மேலே வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின்கீழ் தண்ணீரிலும் உள்ளயாதினும் சாயலையாவது உண்டாக்கிக்கொள்ளவேண்டாம். அவைகளை ஆராதிக்கவும் வேண்டாம், அவைகளுக்கு ஊழியஞ் செய்யவும் வேண்டாம் என்று வாசித்தான். சுவாமிகள் பதிதனை நோக்கி: மேலே வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின்கீழ் தண்ணீரிலும் என்ற வாக்கியங்களின் பொருளென்ன? சருவேசுரன் அவ்வார்த்தைகளால் விலக்கியிருப்பதென்ன? என்று கேட்க, அவன்: அந்த வாக்கியங்கள் உரோமானு கத்தோலிக்கர் வணங்கும் எல்லாச் சுரூபங்களையும் விலக்குகின்றன என்று பதில் சொன்னான். அதற்கு சுவாமிகள் அவன் சொல்லிய கருத்து பிழை என்றுகூறி, அந்த வேதவாக்கியங்களால் விலக்கப்பட்டது சத்தியவேதச் சுரூபங்களல்ல என்று காண்பிப்பதற்குச் சருவேசுரன் தாமே மோசேசின் வாயால் அவ்வாக்கியங்களுக்குக் கொடுத்திருக்கிற வெளிப்படையை உபாகமத்தின் நாலாம் அதிகாரத்தில் 15-ம் வசனம் முதலாக எடுத்துப்பார்க்கச் சொன்னார். அவன் அந்த வசனங்களை வாசித்து இவ்விதம் மொழிபெயர்த்தான்: ‘கர்த்தராகிய தேவன் உன்னோடு ஒறேப்பிலே அக்கினியின் நடுவிலே பேசிய அன்று, நீ ஒரு உருவத்தையும் கண்டதில்லை. கண்டிருந்தால், ஓர்வேளை நீ ஏமாந்துபோய், உனக்கு ஒரு உருவத்தை, அல்லது ஆண் அல்லது பெண் சாயலையோ பூமியில் உள்ள மிருகங்களின் அல்லது வானத்தின்கீழ்ப் பறக்கிற பட்சிகளின் அல்லது நிலத்தின்மேல் நடமாடுகிற ஊரும் செந்துக்களின் சாயலையோ உண்டாக்கியிருப்பாய். இராவேளை வானத்தை நோக்கி உன்

கண்களை ஏறெடுத்து சூரியனையும் சந்திரனையும் ஆகாசத்தின் சகல நட்சத்திரங்களையும் கண்டு ஏமாந்து போய், கர்த்தராகிய உன் தேவன் சிருட்டித்த அந்தப் பொருட்களை ஆராதித்து அவைகளுக்கு ஊழியம்பண்ணத் தூண்டப்படுவாய்' என்று வாசித்தான். சுவாமிகள் சொல்லுவார்: சருவேசுரன் ஆராதிக்கவேண்டாமென்று கற்பித்தவைகளை இதோகண்டோம். பூமியின் மிருகங்களையும் சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்தின் பறவைகளையும் வானத்தின் வெள்ளிகளையும் ஆராதிக்கப்படாது. அவைகளையும் அவைகளைப்போன்ற வேறு படைப்புக்களையும் வணங்கும்படியாக உருவங்களைச் செய்யப்படாது. ஏனெனில், அவைகள் மனுஷனுடைய ஊழியத்துக்காகப் படைக்கப்பட்டவைகளே அன்றி, மனுஷன் அவைகளை வழிபட்டு ஆராதிப்பதற்காக உண்டாக்கப்பட்டவனல்ல. சருவேசுரனையும் அவருடைய அச்சியசிஷ்டர்களையும் குறிக்கிற உருவங்களோ அந்த வாக்கியத்தினாலாவது வேறெந்த வாக்கியத்தினாலாவது விலக்கப்பட்டில்லை என்றார்.

"பதிதன் அதற்குச் சொல்லுவான்: சருவேசுரன் சுத்த அரூபியாயிருப்பதினால், அவருக்குச் சரீரமும் உருவமுமில்லை. அவரை உருவமாய்க் காண்பிப்பது எப்படி? அவருக்கு உருவஞ் செய்வது பாப்பியருடைய ஒரு வைப்புக்கட்டு. அவர் இப்படி உருவம் வைக்கக் கட்டளையிடவுமில்லை, அவைகளைப்பற்றி யாதொரு வாக்குப்பண்ணவுமில்லை. செய்யமுடியாத காரியங்களை அவர் கட்டளைபண்ணுவாரா? என்றான். சுவாமிகள் மாறுத்தாரமாக: சருவேசுரனுக்கு சரீரமும் உருவமும் இல்லாதபடியால் அவருக்கு ஒரு சாயலை உண்டாக்கக்கூடாது என்பது மெய்தான்; ஆயினும், அவருடைய இலட்சணங்களைக் குறிப்பதற்கு நாம் மனுஷ அறிவுக்கு ஏற்ற அடையாளங்களை வழங்கலாம். இவ்விதமான குறிப்புகள் அவருடைய உண்மையான சாயல் அல்லாவிட்டாலும், அவைகளை ஒப்பனைகள் என்று சொல்லலாம். அவைகள் உரோமானு திருச்சபை எடுத்துக்கட்டியவைகளல்ல, சருவேசுரன் தாமே ஏற்படுத்தியவைகள் என்று வேதாகமத்தில் காண்கிறோம். தானியேல் ஆகமத்தின் ஏழாம் அதிகாரம் ஒன்பதாம் வசனத்தை எடுத்துப்பார். அதிலே தானியேல் தீர்க்கதரிசி பரிசுத்த பரமதிரித்துவத்தின் முதலாம் ஆளான பிதாவாகிய சருவேசுரனை மூடுபனி போல வெண்மையான உடைதரித்த ஒரு ஆசாரத்துக்குரிய வயோதிகராகக் கண்டார் என்று எழுதியிருக்கிறது. புறச்சாதிகளின் அப்



போஸ்தலராகிய பாவுலு ஆனவர் கொலோசியருக்குத் தாம் எழுதிய நிருபத்தின் முதலாம் அதிகாரம் பதினைந்தாம் வசனத்திலே, தேவவார்த்தை எனும் இரண்டாமாளாகிய சருவேசுரனை "காணப்படாத சருவேசுரனின் சுரூபம்" என்கிறார். இந்தத் தேவவார்த்தையானவர் மனுஷரூபமாய் அவதரித்தபடியால் அவருக்கு ஒரு சரீரமும் உருவமும் உண்டென்பதிலே எவ்வித தர்க்கத்துக்கும் இடமில்லை. ஆகையால், அவருடைய உருவத்தை வெட்ட அல்லது படத்திலே எழுதக்கூடும் என்பதை மறுக்கலாமா? அர்ச்சியசிஷ்ட திரித்துவத்தின் மூன்றும் ஆளான இஸ்பிரீத்து சாந்துவும், கிறீஸ்துநாதர் யோர்தான் நதியில் ஸ்நாபிக்கப்பட்ட வேளையிலே, ஒரு புறாவின் வடிவமாய் அவர்மேல் எழுந்தருளிவந்தார் என்று சுவிசேஷக மாற்கு முதலாம் அதிகாரத்திலும், லூக்கா மூன்றும் அதிகாரத்திலும், யுவானியார் முதலாம் அதிகாரத்தின் முப்பத்திரண்டாம் வசனத்திலும் சாட்சியிடுகிறார் என்றார். பதிதன் விடைசொல்லமாட்டாமல் விழிக்கவே, பக்கத்தில் நின்றவர்களெல்லாரும் அவனை நையாண்டிபண்ணிப் பேசத்தலைப்பட்டார்கள். அரசரும் அவனை, தான்படித்த புத்தகங்களின் கருத்தை அறியமாட்டாத புத்தியற்ற மூடன் என்றும், தன் தப்பறைகளைக் கைவிடாமலிருந்த மூர்க்கன் என்றும் அழைத்தார்.

"பதிதன் வெட்கிப்போய், விவிலியப் புத்தகத்தை விட்டிட்டு, ஞானோபதேசத்தை எடுத்து அதிலிருந்து: 'ஒரே சருவேசுரனையல்லாமல் வேறொருவரையும் ஆராதியாதே' என்ற வார்த்தைகளை வாசித்துப் பின்வருமாறு நியாயம் பேசினான்: சருவேசுரனுடைய உருவங்கள் சருவேசுரனல்ல; சருவேசுரனை ஆராதித்து வணங்கவேணுமேயொழிய அவருடைய உருவங்களை அல்லவே என்றான். அதற்குச் சுவாமிகள் சொல்லுவார்: திருச்சபையானது சருவேசுரனுடைய உருவங்கள் தேவத்தன்மையுள்ளவைகள் என்றாவது, அவைகள்தாம் சருவேசுரன் என்றாவது ஏற்றுக்கொள்ளுவதில்லை. இதற்குமாறாக, ஒரே சருவேசுரன்மாத்திரம் உண்டு என்று அது போதிக்கின்றது. ஆயினும், அவருடைய சாயல் சுரூபங்களுக்கும் குறிப்புகளுக்கும் அவருக்கு உரிய வணக்கத்தைச் செலுத்தும்போது, அவருக்குச் செல்லவேண்டிய தேவ உபசாரத்தை எவ்விதத்திலும் குறைப்பதாயிராது, கூட்டுவதாயும் அவரை மேலும் மகிமைப்படுத்துவதாயுமே இருக்கும். இப்படியே, ஒரு அரசனுடைய கொடி குடை முதலிய இலாஞ்சனைகளுக்கு அல்லது படங்களுக்குப்

பண்ணும் சங்கை அந்த அரசனையே அல்லாமல், அந்தந்த இலாஞ்சனை அல்லது படம் செய்திருக்கிற மரத்தை கல்லை மகிமைப்படுத்திப் போற்றமாட்டாது; அவ்விதமாகத்தானே, சருவேசுரனுடைய சாயல் சுரூபங்களுக்குக் கத்தோலிக்கர் பண்ணுகிற சங்கை வணக்கங்கள், அவைகளைச் செய்த மரத்துக்கும் கல்லுக்கும் படத்தின் பூச்சுக்கும் அல்ல, அவைகளாற் குறிக்கப்படும் சருவேசுரனுக்கே செய்யப்படுகின்றன. இவைகளால் அவருக்கே துதியும் மகிமையும் உண்டாகிறது என்றார்.

“இந்த உதாரணம் அங்குள்ளோருக்கெல்லாம் நன்றாகப் பிடிபட்டதினால், அவர்கள் அஞ்ஞானிகளாயிருந்தபோதிலும், சுவாமிகள் எடுத்துச்சொன்ன நியாயமே சரி என்று காட்ட அவரவர் இன்னும் வேறு உதாரணங்களை எடுத்துவைத்துத் தங்களுக்குள்ளே நியாயம் பேசிக்கொண்டார்கள். அரசரும் பதிதனைப் பார்த்து: ‘ஒல்லாந்த தானாபதிகள் எனது கொலுமண்டபத்துக்கு வரும்வேளை, நான் அங்கு இல்லாவிட்டாலும், வழக்கத்தின்படியே, எனது சிங்காசனத்துக்கு ஆசாரம் செய்கிறார்கள். அவர்கள் சங்கைபண்ணுவது சிங்காசனத்தின் மரத்தையும் கல்லையும் கம்பளத்தையுமா?’ என்று கேட்க, பதிதன்: ‘இல்லை, ஐயனே, சகல சங்கை மரியாதைக்கும் உரிய தேவரீரது இராச மகத்துவத்தைத்தான் சங்கைபண்ணுகிறார்கள் என்றான். அப்போது அரசர்: ‘இவ்விதமாகவே கடவுளுடைய உருவத்துக்குச் செய்யும் சங்கையும், அந்த உருவங்கள்பண்ணியிருக்கிற மரத்துக்கோ கல்லுக்கோ வேறொன்றுக்கோ அல்ல, கடவுளுக்குமாத்திரம் செய்யப்படுகிறது’ என்றார்.

“பதிதனோ இன்னும் தனது சொற்போரைக் கைவிடமனமில்லாமல், வேறொரு நியாயம் கொண்டுவந்தான். அதாவது: சருவேசுரன் கட்டளைபண்ணாத ஒன்றையும் நாங்கள் செய்யப்படாது. அவரோ தமக்கு உருவங்களைச்செய்ய ஒருபோதும் கட்டளைபண்ணியிருக்கவில்லை என்றான். சுவாமிகள் அவனைப் பார்த்து: உனது விவிலியப் புத்தகத்தைத் திறந்து, புறப்பாட்டாகமம் 25-ம் அதிகாரத்திலே 18-ம் வசனத்தை வாசி. அதிலே, கர்த்தர், கெருபின்களின் உருவங்களை உண்டாக்கிவைக்கச்சொல்லியிருக்கிறார். எண்களின் ஆகமத்திலே 21-ம் அதிகாரம் 8-ம் வசனத்திலே, ஒரு சர்ப்பத்தின் உருவத்தை வெண்கலத்தாற்செய்து தம்முடைய குமாரனாகிய கிறீஸ்து எனும் உலகரட்சகருக்குக் குறிப்பாக வைக்கக் கற்பித்தார். இது ஞான ஆகமத்

005684



தின் 16-ம் அதிகாரம் 7-ம் வசனத்தில் நன்றாக விளக்கியிருக்கிறது. அந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தவன், ‘தான் கண்ட அதினாலல்ல, சகலருடையவும் மீட்பராகிய உம்மாலேயே குணமாக்கப்பட்டான்’ என்று எழுதியிருக்கிறது. இன்னும் விபரமாய், கிறீஸ்துநாதர்தாமே அர்ச். யுவானியார் சுவிசேஷத்தின் மூன்றாம் அதிகாரம் 14-ம் வசனத்திலே, அந்த வெண்கலச் சர்ப்பம் தமக்கு உருவமும் குறிப்புமாயிருந்தது என்று திருவுளம்பற்றியிருக்கிறார். ‘மோசேஸ் கானகத்திலே சர்ப்பத்தை உயர்த்தியது போலவே மனித குமாரனும் உயர்த்தப்படுவார்’ என்றது அவருடைய திருவசனம். இதற்குப் பதிதன் சொல்லப்போகிற மறுமொழி என்ன? என்றார். அவன் முழுதும் மதியிழந்துபோய் உரக்கப்பேசிக் கலகலத்தானேயன்றி, கேட்டதற்கு விடைசொல்லமாட்டாமல் நின்றான். பின்னும் பல சொற்களையடுக்கி வெறும் சத்தம் போட்டபின், மூடத்தனமாய், சருவேசுரன் உருவங்களைச் செய்யக் கட்டளையிடவில்லையென்று தான் முதல் சாதித்ததை மாற்றிப்பேசி, அவர் உருவங்களைச் செய்யக்கட்டளையிட்டாலும் நாங்கள் அவைகளை வணங்கக் கட்டளையிட்டதற்கு வேதவாக்கியம் இல்லை என்றான்.

“அப்பால் பதிதனோடு வாதாடுவதினால் பிரயோசனமில்லையென்று சுவாமிகள் கண்டு, அரசர் பக்கமாய்த் திரும்பிச் சொல்லுவார்: தங்களுடைய அரசமகத்துவத்தின் முன்னேயும் அரண்மனையின் பெரியோர் முன்னேயும், பதிதன் எடுத்து வாதித்த எல்லாத் துறைகளும் உதாரணங்களும் தவறென்று காட்டிவிட்டேன். முதல், சருவேசுரன் சகலவிதமான உருவங்களையும் விலக்கியிருக்கிறார் என்று அவன் சாதிக்க, நான், சருவேசுரன் விலக்கிய உருவங்கள் எவை, விலக்காதவை எவை என்று வேதவாக்கியங்களாற் தாபித்தேன். இரண்டாவதாக, சருவேசுரனைக் குறிக்கும் உருவங்கள் செய்யப்படமுடியாது என்றான். நான், அவருடைய சாயலைக் காண்பிக்கிற உருவங்களை அமைக்கத் தேவ உத்தரவு உண்டென்று வேத வசனங்களால் நிலைநாட்டினேன். மூன்றாவதாக, சருவேசுரனுடைய உருவங்களை ஆராதிக்கப்படாதென்றும், அப்படிச் செய்வதால், சருவேசுரனுக்கு உரிய சங்கை மரியாதையை அந்த உருவங்களுக்குக் கொடுப்பதாகும் என்றும் நியாயம் வாதித்தான். நாலாவதாக, அவர் உருவங்களைச் செய்யக் கற்பித்தார் என்றதை முற்றும் மறுத்துப் பேசினான். நான் எடுத்துக்காட்டிய வேதவசனங்களிலே சரு

Nallur Swami Gnanapragasar Library
OBLATE FATHERS
"THODARBAHAM"
657/1, HOSPITAL ROAD, JAFFNA

வேசுரன் தம்முடைய பரிசுத்த தூதர்களாகிய கெருபின் உருவங்களையும் மெய்யான தேவ மனிதனாகிய கிறீஸ்துநாதருக்குக் குறிப்பான வெண்கலச் சர்ப்பத்தையும் உண்டாக்கக் கற்பித்தாரென்று தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. முழுதும் துலாம்பரமாயிருக்கிற அந்த வேதவசனங்களை மறுத்துப்பேசமாட்டாமல், தான் முன் மறுத்ததைப் பின் ஒப்பினான். இப்போதோ, சருவேசுரன் உருவங்களைச் செய்யக் கற்பித்திருந்தபோதிலும், அவைகளை வணங்கவேண்டும் என்பதாக அவர் கேட்கவில்லையென்று சொல்லுகிறான். இனி, இந்த மனுஷனின் வாயை அடைப்பதற்குச் செய்யவேண்டியது என்னவானால், சருவேசுரன் உருவங்களையும் பிரதிமைகளையும் செய்வதை விலக்காமல் விட்டதுமாத்திரம் அல்ல, அவைகளை உண்டாக்க அவர் கற்பித்தது போலவே அவைகளை வணங்கவும் கற்பித்தார் என்று காட்டுவதுதான். சருவேசுரன் உருவங்களைச் சங்கித்து வணங்கக் கற்பித்தது மாத்திரமோ, அப்படி வணங்கினவர்களுக்குச் சம்பாவனைகொடுத்தும் வணங்கிச் சங்கியாதவர்களுக்குத் தண்டனையிட்டுமிருக்கிறார் என்கிறேன். பதிதன் தனது விவிலியத்தைத் திறந்து 98-ம் சங்கீதத்தை வாசிக்கட்டும். அதிலே அவர்: ‘வாக்குத்தத்தப் பேழை பரிசுத்தமானது, ஆகையால் அதை வணங்கக்கடவீர்கள்’ என்று கற்பித்திருக்கிறதைக் காண்பான். இராசாக்களுடைய முதலாம் ஆகமத்தை வாசிக்கட்டும். அதின் பத்தாம் அதிகாரத்திலே, கர்த்தருடைய பரிசுத்த பேழைக்கு மரியாதை செய்யாததற்காகப் பிலிஸ்தியர் அடைந்த கடுந் தண்டனை வரைந்திருக்கிறது. இராசாக்களின் இரண்டாம் ஆகமத்திலே, அந்தத் திருப்பேழையின் நிமித்தம் ஒபேடெடோன் வீட்டாருக்கு அவர் அளித்த ஆசீர்வாதத்தைப்பற்றி வாசிக்கிறோம். அந்த வாக்குத்தத்தப் பேழை மரத்தாற் செய்த ஒரு பெட்டியேயானாலும், அது கிறீஸ்துநாதருடைய மகா பரிசுத்தமான மனுஷீகத்துக்குக் குறிப்பாயிருந்தபடியாலேதான், அதை ஆராதிக்கும்படி சருவேசுரன் கட்டளையிட்டார் அல்லவா? அதை ஆராதிக்கக் கட்டளையிருந்தபடியாலேதான், அந்தக் கட்டளையை மீறிய பிலிஸ்தியர் தண்டிக்கப்பட்டார்கள் அல்லவா? அதைச் சங்கித்து வணங்குவது சருவேசுரனுக்குப் பிரியமாயிராவிட்டால், ஒபேடெடோன் அவரிடம் விசேஷ தயவுகளை அடையப் பாத்திரமானது எப்படி?



“இவைகளைக்கேட்டு, அரசரும் அரண்மனையாரும் சுவாமிகளுடைய பேரறிவையும் வாய்ச்சாலத்தையும்பற்றி அதிசயப்பட்டு, அவர் தம்முடைய மேற்கோள்கள் இன்ன அதிகாரத்திலே இன்ன வசனம் என்று தடக்கில்லாமல் எடுத்துச் சொல்லியதினால் விவிலியநூல் முழுமையும் கரைத்துக் குடித்திருக்கிறார் என்று நினைத்து அவரை மெச்சினார்கள். மற்றெல்லோரிலும் பார்க்க அரசரே சுவாமிகள் எடுத்த வெற்றியைப்பற்றி அவரைப் பாராட்டினார். பதிதன், முழுதும் தோல்வியடைந்து வெட்கியிருந்தபோதிலும், ஏதோ வாய்க்குள் முணுமுணுத்துக்கொண்டேயிருந்தான். கடைசியில் இன்னும் ஒருகை பார்க்கும்படியாக அவன்: ‘அவருடைய பாதபடி பரிசுத்தமுள்ளதாகையால் அதை ஆராதியுங்கள்’ என்ற 98-ம் சங்கீதத்தின் வசனத்துக்கு ஒரு சிரிப்புக்கிடமான கருத்தெடுத்தான். அதாவது: சருவேசுரன் வாக்குத்தத்தப் பேழையை ஆராதிக்கச்சொன்னபோது, அதின்முன் இருந்துகொண்டு தம்மையே ஆராதிக்கக்கற்பித்தார் என்றும், கிரேக்க பாஷையிலுள்ள விவிலியத்தில் அப்படியே வரைந்திருக்கிறதென்றும் சொன்னான். சுவாமிகள் அவனைப் பார்த்து: உனக்குக் கிரேக்கபாஷை வாசித்து விளங்கிக்கொள்ளத்தெரியுமா? உனது பிராஞ்சிய விவிலியத்திலும் அப்படி வரைந்திருக்கிறதா? என்றுகேட்க, அவன் மவுனஞ்சாதித்தான். அரசரும் அவனை இனிமேல் கத்தோலிக்கு மார்க்கத்துக்கு எதிராகப் பேசப்படாது என்று ஆக்கியாபித்து, அவன் ஒரு மடையன் என்றும், பிடிவாதக்காரனை ஒரு கள்ள ஞானி என்றும், தான் அறிந்த உண்மையைப் பேசாமல் தனது பொய்க்கட்டான தப்பறைக்குட் சனங்களை விழுத்துகிறவன் என்றும் சொல்லி முடித்தார். இனி எப்போதாவது அவன் கத்தோலிக்கு மார்க்கத்தை இகழ்ந்து பேசினால், தாம் அவனைப்பிடிப்பித்து கத்தோலிக்கர் கையில் ஒப்பித்து, அவனுக்கு ஏற்ற ஆக்கினையைச் செய்யவிட்டுவிடுவாரென்றும் பயமுறுத்திவிட்டார்.”

இவ்வளவும் சுவாமிகளது சரித்திரத்திற்கண்டது. அவர் தாமே இத்தர்க்கத்தைப்பற்றி எழுதியதாவது: “இத்தருணத்திலே அரசர் விவிலியம் பூசைப்புத்தகம் கடமைச் செபச்சுவடி எனும் சில புத்தகங்களோடு, நான் சில நாட்களின் முன் சிங்களத்தில் எழுதிய [பேதகாறயங்கே தர்க்கய = பிரிவினைக்காரரோடு தர்க்கம் எனும்] நூலையும் என்னிடமிருந்து ஏற்றுக்

கொண்டார். இந்தத் தர்க்கநூலில் லுத்தரும் கல்வீனும் கட்டி வைத்த தவறுகளும், அவர்கள் தங்கள் மதத்தைத் தாபிப்பதற்கு எடுத்துச் சொல்லிய பொய்ப்புதுமைகளும், அதை அவர்கள் இங்கிலாந்திலும் ஒல்லாந்த தேசத்திலும் நுழைவித்த விதமும், அவர்கள் தாங்களே எப்படிச் சீவித்து மரித்தார்கள் என்றதும் விளக்கப்பட்டிருக்கிறது. அரசர் அதை வாசித்து அதில் மிகு பிரீதிகொண்டார். பதிதருள்ளும் சிலர் அந்தப் புத்தகத்தைத் தரச்சொல்லிக் கேட்டு வாங்கி வாசித்து, அதிலுள்ள மறுமொழிகளையும் கண்டு, அதில் எடுத்துக்காட்டிய வசனங்களையும் தங்கள் விவிலியத்தோடு ஒத்துப்பார்த்து இப்போது தங்கள் மனதிலே உண்மையை ஏறக்குறைய நன்றாகத் தெளிந்துகொண்டிருக்கிறார்கள். ஆயினும், முகத்தாட்சணியத்தால், தங்கள் மதத்தையும் முரட்டுத்தனத்தையும் கைவிட்டுச் சருவேசுரன் பக்கமாய்த் திரும்பாமலிருக்கிறார்கள். சிலர் தாங்கள் மனந்திரும்புவதாக வாக்குப்பண்ணி, தங்கள் பெண்மக்களைக் கத்தோலிக்கர் விவாகஞ்செய்யக் கேட்கிறார்கள்."

# ஏழாம் அதிகாரம்

## ஒல்லாந்தரால் வந்த நெருக்கிடை

கண்டி அரசரின் நாடுகளில் சாங்கோபாங்க சுவாமிகளுக்கு உண்டான செல்வாக்கினால் இராச்சியம் முழுதிலும் அதிகரித்த வேலையும் வேதப்பரப்புதலும் நடப்பதாயிற்று. அந்த இராச்சியத்திலுள்ள கிறீஸ்தவர்களைக் குருமார் ஒழுங்காய்ச் சந்தித்து வரவே, பலமனந்திரும்புதல்களும் விளைந்தன. சுவாமிமார் தங்கள் மீசாம் வேலையை ஒளிப்புமறைப்பில்லாமற் செய்துவந்ததினால், விசுவாசிகள் சுற்றுப்பிரகாரங்கள் பாசுக் காட்சிகளால் பத்தியில் அதிகரிக்கவும் அவிசுவாசிகள் வேதத்தைப் பாராட்டவும் தொடங்கினார்கள். ஒல்லாந்தருடைய நாடுகளிலோ அப்படியல்ல. முன்பு, இந்நாட்களில் அங்குநடந்த பெரும் அரசியற் குழப்பங்களினால் குருமார் கரைதுறை ஊர்களில் வசித்த கத்தோலிக்கரிடம் போவதைப்பற்றி வெகு சாக்கிரதையாய் இருக்க வேண்டியதாயிற்று. இது ஒன்றைத்தவிர, சாங்கோபாங்க சுவாமிகள் 1714-ம் ஆண்டுக்கும் 1724-ம் ஆண்டுக்கும் இடைப்பட்டதாகிய அக்காலத்தில் செய்தவைகளைப்பற்றிய வரலாறு சிறிது மாத்திரம் கிடைத்திருக்கிறது.

கண்டியில் விக்காரியு தெ வாரு, அதாவது, மேற்றிராணியாருக்கு உபபதிலாளியாயிருந்த சுவாமிகள் நடப்பிக்க வேண்டியதான ஒரு கடமையைமட்டும் அறிவோம். அதாவது, யோசேவாஸ் முனிவர் நெடுங்காலம் செய்து வந்தது போலவே, இவரும், கோவையிலிருந்து புதிதாய் வரும் குருமாரை அரசர் சமுகத்தில் கொண்டுபோய் விட்டு, அன்னோர் கண்டி இராச்சியத்தில் வேலை செய்ய உத்தரவு பெற்றுக்கொண்டு வருவார். நரேந்திர சிங்கராசா தாராள மனதோடு அந்த உத்தரவைக் கொடுத்ததும் அல்லாமல், குருமாருடன் முன்னிலும் அதிகமாய் அளவளாவி நடக்கவும் தொடங்கினார். இவர்களுள் இஞ்ஞாசியு தெ அல்மெயிதாவும் கிறிசோஸ்தொம் பொர்ணண்டுவும் எனும் இரு குருமாரும் ஒருவர் மாறி ஒருவராய் தாம் வசித்திருந்த அங்குறுங்கேட்டையிலேயே இருக்கக் கேட்டுக் கொண்டார். அங்கு கொஞ்சம் கத்தோலிக்கர் மட்டுமே இருந்தனர். குருமார் அங்கிருந்து சமீபமான வேறிடங்களுக்குப் போனாலும், நெடுநாள் தங்காமலும் அரண்மனைக்குத் தூரத்திலிராமலும் பார்த்துக் கொள்ளுவார். இதற்குச் சம்மதிப்பது உத்தமம் என்று சாங்கோபாங்க சுவாமிகள் கண்டார். ஏனெனில், குருமார் இலங்

கைத்தீவில் நின்று மிஷன் வேலையை நடத்துவதற்கு அரசரின் ஆதரவு முக்கியமாய் வேண்டப்பட்டதாயிற்று. அவர்கள் கண்டியரசரின் பிரசைகளாயிருந்தமை அவர்களுக்கு ஒல்லாந்தருடைய நாடுகளிலேயும் வெகு சிலாக்கியம் தருவதாயிற்று. அன்றியும், அரண்மனையில் ஒரு குருவானவர் ஊடாடுவது குருமாருக்கு எதிராய் வேத விரோதிகள் பரப்பிக்கொண்டுவந்த அபவாதங்களைக் கண்டித்து ஒதுக்குவதற்கு ஒரு உத்தம வழிபாடு அல்லவா? அரசர் குருமாருக்குத் தமது மாளிகைக்கருகில் ஒரு சிறுக் கோவிலும் அறை வீடும் கட்ட நிலங் கொடுத்திருந்தார். அது மட்டுமல்ல, போர்த்துக்கேயர் காலந்தொட்டு அரண்மனையில் கிடந்த பூசை உடுப்புகளையும் திருப்பாடுகளின் படங்களையும் அவர்களுக்கு உபகரித்தார். மாளிகையிலே, அர்ச். அந்தோனியார் சுரூபம் ஒன்று சங்கையான ஒரு இடத்தில் ஆசாரமாய் வைத்திருந்தது.

அரசர் இவ்விதம் குருமாருக்குத் தயவு காட்டியதை அறிந்த வேத விரோதிகள் அவர்களில் எரிச்சல் கொள்ளத் தொடங்கியதும் இயல்பே. இவர்களால் சாங்கோபாங்க சுவாமிகளுக்குப் பெருங் கவலைகள் உண்டாகவிருந்தன. ஆயினும், இவர்கள் தங்களுக்கு ஒரு தலையாள் ஆகப்படுமட்டும் பொறுத்திருந்தார்கள். அந்நாட்களில் ஒல்லாந்த நாடுகளில் நடந்தவைகளைப்பற்றி, சுவாமிகளே 1714-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 18-ந் திகதி கோவைக்கு எழுதியனுப்பிய ஒரு கடிதத்தில் சில குறிப்புகளைக் காண்கின்றோம். அவர் சொல்வது: "சென்றுபோன இந்த நாட்களில் கொழும்பிலே பெருங் கலிபிலி உண்டாகியிருக்கிறது. ஒல்லாந்தர் புதுவரிகளை நியமித்ததின் நிமித்தம் சனங்கள் அவர்களுக்கு எதிராய் எழுந்து இரு பக்கத்தாரும் அடிபட்டுக்கொண்டார்கள். ஒல்லாந்தர் முப்பது பேரைப் பிடித்து, சிலருக்குக் காதுகளை வார்ந்து விடவே, சனங்கள் மிகவும் கொந்தளித்து அவர்களுட் சிலர் இப் பகுதிகளுக்கு ஓடி வந்திருக்கிறார்கள். ஒருமுறை கேவகம்கோறளையின் தலைவனோடு நூறு பேர் வந்தார்கள். வேறொருமுறை தொளாயிரம் பேரும், இப்போது இன்னும் நானூறுபேரும் வந்திருக்கிறார்கள். அரசர் அவர்களைத் திருப்பி அனுப்பப்பார்க்க, அவர்களோ: ஊருக்கு மீளுகிறதைக் காட்டிலும் இங்கேயே இறந்துவிட மனமாயிருக்கிறோம்; ஏனெனில், பதிதர்களுடைய அநியாயங்களை எங்களால் தாங்க முடியாது; அவர்கள் எளிய சனங்களின் இரத்தத்தை உறிஞ்சுவதிலேயே கண்ணாயிருக்கிறார்கள் என்றார்கள்" என்றெழுதினார். ஆயினும்



சனங்கள் தங்கள் நாடுகளை விட்டு ஓடிப்போவதைக் கண்ட ஒல்லாந்த கொம்பனிக்காரர் கத்தோலிக்கரும் அப்படியே ஓடிவிடுவார்களென்றுபயந்து செய்தது என்ன என்றும் சுவாமிகள் எடுத்துச் சொல்லுகிறார். அதெப்படியெனில்: "எங்கள் கொழும்பு நீர்கொழும்புக் கிறீஸ்தவர்கள் எங்களுக்கு இல்லிடம் தந்தும் கத்தோலிக்கு வேதத்தின் நன்மையை ஊக்கப் படுத்திக்கொண்டும் வந்ததற்காக நாட்டைவிட்டு ஓட்டப்படவிருந்தவர்களை இப்போது மீண்டும் தங்கள் வீடுகளிலே இருந்துகொள்ளவும் தங்கள் வேலைகளைப் பார்க்கவும் விட்டிருக்கிறார்கள். தேசப்பிரட்டம் செய்யப்பட்டவர்களுள் உயிரோடிருக்கிறவர்கள் எல்லாரும் வந்துவிட்டார்கள். முதலியார் டொம் அப்போன்சு பெறெயிறாவும் அவருடைய சகோதரரான டொம் லூறென்சுவும் மாத்திரம் இன்னும் வத்தாவியில் சிறையிருக்கிறார்கள். கத்தோலிக்கருக்கு மாறாகக் கடுமை பண்ண வேண்டாமென்று அங்கிருந்துதானே கட்டளை வந்திருந்தும், அவர்கள் சிறை மீளவில்லை. இப்படியிருப்பதால் எங்கள் சுவாமிமார் ஒல்லாந்த பாகங்களில் நுழைந்து மீசாம் வேலை பார்ப்பது இன்னமும் ஆபத்துக்குரியதாகவே இருக்கின்றது. எங்கள் மிஷனுக்கு எவ்வளவோ அபாயகரமான இந்த நிலைபரம் நீங்கிப் போகும்படியாகச் சருவேசுரன் இரக்கம் பண்ணுவாராக!"

## அல்மெயிதா சுவாமியார் சிறைப்படல்

ஒரு வருஷத்துக்கு மேலே சுவாமிமார் கொழும்புக்குப் போகாமலிருந்தபடியால், சாங்கோபாங்க சுவாமிகள், கண்டியில் தமக்குத் தலைமை உதவியாளராயிருந்த இஞ்ஞாசியு தெ அல்மெயிதா சுவாமியாரை இராசா கொடுத்த மெய்க்காவலோடு கூட்டி அங்கு அனுப்பினார். அந்தச் சுவாமியார் முதல் அரசருக்கு வேண்டிய சில பொருட்களைக் கொழும்பில் வாங்கி அனுப்ப நியமித்திருந்தது. அவர் கொழும்பைச் சேர்ந்து, வாங்க வேண்டிய பொருட்களை வாங்கிக் கொடுத்து, தமக்கு மெய்க்காவலாய் வந்த அரண்மனை உத்தியோகத்தனையும் அவனோடு சேர்ந்த மூவரையும் கண்டிக்கு அனுப்பிவிட்டு தாம் கொழும்பிலே சக்கிறமேந்துகளைக் கொடுப்பதற்காகத் தங்கினார். அங்கே தேவ திரவிய அனுமானங்களைப் பெற ஆவலாயிருந்த கத்தோலிக்கர் தொகை அதிகமானபடியால், ஒரு மாதத்துக்கு மேல் தமது திரு ஊழியத்தை அவர்கள் மத்தியில் நடத்திக் கொண்டிருக்க வேண்டி நேரிட்டது. இதற்கிடையில் நகரியிலே ஒரு குருவானவர் வந்திருக்கிறார் என்ற செய்தி ஒல்லாந்த

அதிகாரிகளின் செவிக்கு ஏறிவிட்டது. உடனே அவரைப் பிடிக்க அடுக்குப் பண்ணினார்கள். கண்டியரசனுடைய சனுவைப் பெற்றிருந்த ஒரு குருவானவரை அகப்படுத்திப் போடுவதில் அவர்களுக்கு ஒரு துட்டாட்டரான உருசி பிறந்தது. அவரைக் கைப்பற்ற உளவு சொல்லிக் கொடுப்போருக்கு ஒரு வெகுமதியும் வாக்குப்பண்ணி பிரசித்தம் செய்யப்பட்டது. ஒருநாள், கத்தோலிக்கர் என்று எண்ணப்பட்ட மூன்று பெண்டுகள் இரவில் தங்கள் வீடுகளை விட்டுப் புறப்பட்டு எங்கேயோ போனார்கள் என்று அறிவிக்கப்பட்டபோது, அவர்களை, பூசைக்குப் போனார்கள் என்ற சந்தேகத்தின் பேரிற் பிடித்து, கண்டிப்பான விசாரணைக்கு உட்படுத்தினார்கள். அவர்களோ தாங்கள் வேறு அலுவலாய்ப் போயிருந்ததாக நிறுத்திச் சொல்லிக்கொண்டிருந்ததினால் காரியம் வாய்க்கவில்லை.

இந்த அருட்சியின் நிமித்தமாக சுவாமியார் தமது ஊழியத்தை நடத்த முடியாமல், கத்தோலிக்கருக்கு மோசம் வாராவண்ணம், புறப்பட்டுப்போய், ஆட்களில்லாத ஒரு வீட்டிற் தங்கினார். அந்த வீட்டுக்காரன் நகரியை விட்டுப் போயிருக்க, அவருடைய வேலைக்காரனோ, அரசினர் தருவோமென்ற வெகுமதிக்கு ஆசைப்பட்டு, சுவாமியார் இருக்கும் மறைவிடத்தை காவற் சேனைத் தலைவனுக்கு அறிவித்து விட்டான். விடவே, அல்மெயிதா சுவாமியாரை ஒல்லாந்தர் அப்பிக்கொண்டார்கள். இதுதான் தியான சம்பிரதாயக் குருவானவர் ஒருவரை அவர்கள் அகப்படுத்திய முதன் முறை.

சுவாமியாரை ஒன்றரை நாள் அடைத்து வைத்திருந்தபின், கப்பித்தான் மையோர் சமுகத்துக்குக் கொண்டுபோனார்கள். அங்கு, பிசுக்காலும் கவண்மெந்து சக்கிடுத்தாரும் மூன்று கல்வீனுமதப் போதகர்களும் இரு நகரப் பெரிய மனுஷரும் நியாய சபையாகக் கூடியிருக்க விசாரணை நடந்தது. "அவரை நீ ஒரு குருவோ என்று கேட்டார்கள். அவர் ஆம் என்றார். எங்கிருந்து வந்தாய்? கண்டியிலிருந்து அரசருக்குச் சில பொருட்களை வாங்க வந்தேன். யாருக்காவது ஞானஸ்நானங் கொடுத்தாயா? அநேகருக்கு, ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்குக் கொடுத்தேன். உனது சுய தேசம் எது? கோவை நகர். இத் தீவில் எப்படி நுழைந்தாய்? என்று இப்படிப் பல கேள்விகள் போட அவர் எல்லாவற்றுக்கும் தாராளமாய் ஒன்றையும் ஒளியாமல் விடைகொடுத்தார். கொழும்பிலே தமது கையால் சக்கிறமேந்துகளைப் பெற்றுக்கொண்ட கத்



தோலிக்கர்களின் நாமங்களை மட்டும் வெளிப்படுத்தவில்லை. அதற்காகத் தம்மைத் தண்டிக்க விரும்பினால் என்ன ஆக்கினையும்பட ஆயத்தம் என்று உறுதியாய்க் கூறினார். அப்பால், அவர்கள் மார்க்க விஷயமாய் அவரிடத்தில் சில கேள்விகளைத் தொடுக்க, அவர் அவைகளுக்குப் பூரணமாய் விடைகொடுத்து அவர்களை வெட்கப்பண்ணியும் விட்டார். உடனே, அவர்கள், ஒல்லாந்து தேசத்தில் நின்று வந்திருந்த ஒரு கப்பலில் அவரை ஏற்றிவிட்டார்கள்."

கப்பல் தூத்துக்குடிக்குப் பாய் விரித்தது. அங்கே இருந்த கொச்சி மேற்றிராசனத்துக்குச் சேர்ந்த ஒரு குருவானவர் இலங்கைக் குருவானவர் ஒருவர் கப்பலிலே மறியலாய் அடைபட்டு கரையைக் காணக் கூடாமலிருக்கிறார் என்று கேள்விப்பட்டு, அவருக்குச் சில உடுப்புகளும் உணவுப் பொருட்களும் சூழ்ச்சமாய்க் கொடுத்தனுப்பி வைத்தார். ஏனெனில், அவருக்கு, தாம் அணிந்திருந்த உலோவு மாத்திரமன்றி வேறு உடுப்பில்லை. சாப்பாட்டுக்கும் மிகத் தட்டுப்பட்டார். தூத்துக்குடியிலிருந்து கப்பல் காலிக்குத் திரும்பி வந்து, பின், ஒல்லாந்துக்குப் போயிற்று. இடை வழியில், நன்னம்பிக்கை முனையிலே அவரைக் கடலுள் எறிந்துவிடப் போகிறார்கள் என்ற வதந்தி பிறந்தபோதிலும், கப்பற்காரர் அப்படிச் செய்யாமல் அவரை ஒல்லாந்திலே கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். அங்கே இருந்த போர்த்துக்கேய ஸ்தானபதியிடம் அவர் ஏதோவிதமாய்ப் போய்ச் சேர்ந்து, இவரால் போர்த்துக்காலின் தலைநகராகிய லிஸ்போனுக்கு அனுப்பப்பட்டு, சில காலம் லிஸ்போனின் தியான சம்பிரதாயக் குருமாரோடு தங்கி, பின் 1718-ம் ஆண்டு புறப்படச் சமயம் வாய்த்தபோது கோவைக்கு வந்தார்.

இதற்கிடையில், ஒல்லாந்தர், கொழும்பிலே கத்தோலிக்கருக்கு எதிராகக் கடினமான சட்டங்களைப் பிறப்பித்திருந்தார்கள். ஒரு சட்டத்தினால், கத்தோலிக்கர் பிரசித்தமாய் அல்லது இரகசியத்தில் ஒருங்குகூடுதல் விலக்கப்பட்டது. அதை மீறுவோருக்கு முதன்முறை 100 இறைசாலும், இரண்டாம் முறைக்கு 200 இறைசாலும், மூன்றாம் முறைக்குச் சரீர தண்டனையும் விதித்திருந்தது. வேறொரு சட்டம் "கத்தோலிக்கு குருமார்கையால் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பித்தல் விலக்கப்பட்டது." (ஒல்லாந்த அரசசட்டங்கள் 2-ம் காண்டம், 185-ம் பக்கம்.)

## புது மனந்திரும்புதல்கள்

அல்மெயிதா சுவாமியாரைப் பிடித்து அப்புறப்படுத்திவிட்டமையால், சாங்கோபாங்க சுவாமிகளே கொழும்புக்கும் நீர்கொழும்புக்கும் போகவேண்டியதாயிற்று. கொழும்பில அவர் "சமாதானமும் அமரிக்கையுமாய்ச் சித்தியோடு வேலை செய்ய" ஒரு நல்ல சந்தர்ப்பம் தேவாதீனமாய் வாய்த்தது. அங்கே, அந்நாட்களில் வோர்ஜில் மான்சி எனும் யேசு சபைக் குருவானவர் ஒல்லாந்த கவணரான ஈசாக்கு அகுஸ்துஸ் றும்ப் என்பவனுடைய விருந்தாளியாய் வந்திருந்தார். இவன் கத்தோலிக்கருக்கு அன்பனல்லாவிடினும், அந்தக் குருவானவருடைய சிநேகிதனாய் இருந்தபடியால், அவர் நிமித்தமாய், சாங்கோபாங்க சுவாமிகள் செய்த வேலையை அறியாதவன் போல இருந்துவிட்டான்.

அந்த நாட்களிலே, கண்டியிராச்சியத்திலே சாங்கோபாங்க சுவாமிகளும் அவருடைய துணைவரான யோசேப் கோமெசு எனும் குருவானவரும் இரண்டு கிராமங்களை முழுதாக வேதத்திற் திருப்புவோரானார்கள். இக் கிராமவாசிகளின் முன்னோர், முந்திய நூற்றாண்டிலே நீர்கொழும்பு ஒல்லாந்தர் கைப்பட்டபோது, அங்கிருந்து கண்டியிராச்சியத்திற்கு வலசைவாங்கியிருந்தார்கள். அவர்களுடைய சந்ததியாரான இவர்கள், நெடுங்காலம் கிறீஸ்தவர்களல்லாதவர்கள் மத்தியிற் சீவித்ததினால், அஞ்ஞானிகளைப் போலவே நடந்து வருவார்கள். இவர்களுடைய பெயர்கள் மாத்திரம் இவர்களைக் கத்தோலிக்கரென்று காட்டிக் கொண்டிருந்தனவல்லாமல், நடையில், வேதத்துக்கு உரியது ஒன்றும் இவர்களிடம் காணப்படவில்லை. குருமார் இருவரும் பலவிதமான நியாயங்களையும் சொல்லி இவர்களை உடன்படுத்தி மீண்டும் வேதத்திற் சேர்த்தார்கள்.

இக்காலத்திலேதான், சாங்கோபாங்க சுவாமிகள், அலங்காரமான சிங்களத்தில் ஒரு தர்க்கநூல் எழுதி நரேந்திரசிங்க அரசரை உவப்பித்தார். இந்த அரசர் சமய தர்க்கங்களைக் கேட்பதில் விருப்புற்று, பல மார்க்கத்தவர்களையும் தமது சமுகத்தில் தர்க்கம்போட அழைப்பார். யோசேப் கோமெஸ் சுவாமியார் அரண்மனைக்கு அடிக்கடி போகத்தக்கதாக, அவரை அரசர் தமது செலவிலே ஒரு பிரதானியின் வீட்டில் தாபரித்துவந்தார். சாங்கோபாங்க சுவாமிகள் அக்கியானத்தையும், விசேஷமாய், புத்த சமயத்தையும் கண்டித்துச் சொல்வதையெல்லாம் கோமெஸ் சுவாமியார் எழுத்தில் வைத்துக்



கொடுக்க, அவற்றை அரசர் மிகு விருப்போடு வாசித்து அவைகள் "பொழுது போக்குக்கு மிக ஏற்றவை" என்று சொல்லி வருவார். ஆயின், கண்டியிலே கிறீஸ்தவர்களுக்கு எதிரான கட்சியார் பிற்காலம் பெலங்கொண்ட நாளில், இது சாங்கோபாங்க சுவாமிகளுக்கு மாறாகப் பெரியவொரு முறைப்பாட்டுக்குக் காரணமாயிற்று என்றும், அரசர் சுவாமிகளைக் காப்பாற்ற அரும் பாடு படவேண்டி வந்தது என்றும் பின்னால் காண்போம்.

## யாழ்ப்பாணத்தில் ஒரு வேதவிரோதப் புயல்

1717-ம் ஆண்டில் "ஒரு பூசையுடுப்புப் பெட்டி பதிதருக்குச் சேர்ந்த நாடுகளிலுள்ள ஒரு கத்தோலிக்கு வீட்டில் மறைத்து வைத்திருந்ததை கொம்பனியின் சேவகர் கண்டெடுத்து, அதைக் கைப்பற்றிக்கொண்டு யாழ்ப்பாணப் பட்டண நீதிச்சபைக்குச் சென்றார்கள். நீதிச்சபையார் அதைப் பிரசித்தமாய் எரித்துவிடக் கற்பித்தார்கள். உடுப்பு முதலியவைகள் எல்லாம் எரிந்தபோதிலும், பூசைப் புத்தகத்தையோ நெருப்புத் தீண்டவில்லை. இந்தச் சம்பவம் பதிதருடைய கண்களைத் திறந்து அவர்கள் மெய்யான வேதத்தை அறியப் பண்ணுவதற்குப் போதிய ஞான வெளிச்சத்தைக் கொடுக்கத் தக்கதாயிருந்தபோதிலும், அவர்களோ தங்கள் குருட்டாட்டத்தினால் உணர்ச்சியற்றுப்போய், அப்புத்தகத்தை எடுத்துத் துண்டு துண்டாய்க் கிழித்துவிட்டார்கள். இதன்பின் கத்தோலிக்கரைக் கொடூரமாய்த் துன்புறுத்தத் துவங்கி, யாழ்ப்பாணப் பட்டணக் கத்தோலிக்கரின் தலையான வித்தோரியானு தெ பறேஸ் என்பவர்பேரிலும் வேறு சங்கைபோந்த கத்தோலிக்கர் சிலர்பேரிலும் தங்கள் கோபச் சண்ட வேகத்தைச் செலுத்தத் தொடங்கினார்கள். தெ பறேஸ் என்பவர் குருமாருக்கு இல்லிடம் கொடுத்து, அவர்களைப் பாதுகாத்து எல்லா விதத்திலும் அவர்களுக்கு உதவிசெய்து வந்தவர்; நல்ல தனவந்தன். அதின் நிமித்தம் கொம்பனியாராலும் மிக மதிக்கப்பட்டு, இலங்கைக் கொம்பனியின் வியாபாரங்களுள் முதன்மை பெற்றதாகிய யானை வர்த்தகத்திலே ஒரு விதானையாக நியமிக்கப்பட்டிருந்தவர். இவரையும் மற்றவர்களையும் நீதிச் சபையின் முன் நிறுத்தி வாயில் வந்தபடி வைததோடு, இவர்களே குருமாரைக் கொண்டுவந்து உதவிகொடுத்து தங்களுடைய ஒல்லாந்த மதத்தின் வெள்ளைக்காரரிலும் கறுத்தவர்களிலும் சிலரைக் கத்தோலிக்கு வேதத்திற் சேரப்பண்

ணினவர்கள் என்று குற்றஞ் சாட்டினர்கள். இவர்களோ தாங்
கள் இறப்பிறமாதுக்காரரைத் திருப்புவதில் பலனில்லை என்
றும், தாங்கள் குருமாரைக் கொண்டு வந்ததானல் அப்படிக்
கொண்டுவந்தபோது கண்டுபிடித்தாற்தான் தங்களைத் தண்டிக்க
நியாயம் உண்டு என்றும் விடைகொடுத்தார்கள். அப்போது,
கொம்மாண்டோர், வித்தோறியானு தெ பறேஸ் லெயித்
தாமுடைய வீட்டைச் சோதிக்கும்படி சப்பித்தானுக்குக் கட்
டளையிட்டான். இப்படி அவர்கள் முன்னொரும்போதுஞ் செய்
யத் துணியாததினல், அவருடைய வீடு, இதுவரையில், குரு
மாருக்குச் சேமமான அடைக்கலமாயிருந்துவந்தது. அன்றி
யும் கத்தோலிக்காயிருந்த சில கோர்ப்பொறஸ் உத்தியோ
கத்தர்களையும் சேர்ஜன் உத்தியோகத்தர்களையும் அவ்விதமே
நீதிச் சபையின் முன்பாக வரித்து, முன்னவைபோன்ற
குற்றச் சாட்டுக்களையும் பிறவற்றையும் அவர்களிற் சுமத்தி
ஞர்கள். அவர்கள் மாறுத்தரமாக: தாங்கள் போர்த்துக்கேய
குருமாரால் (தியான சம்பிரதாயத்தாரை இப்படியே அங்கு
சொல்லி வருவார்கள்) அல்ல, தங்கள் சுய நாட்டிலேயே
ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் என்றும், தாங்கள்
தங்கள் விசுவாசத்தை வித்தோறியானு தெ பறேஸ் லெயித்
தாம் விதானையாரிடத்திலிருந்து அல்ல ஞானஸ்நானத்திற் பெற்
றுக்கொண்டார்கள் என்றும், அது தங்கள் இருதயத்தில் ஆழ
மாய்ப் பதிந்திருக்கிறது என்றும், என்ன சங்கைக்காகவாவது
வேறு சிலாக்கியத்துக்காகவாவது தாங்கள் அதை எப்போ
தாவது விடப்போவதில்லை என்றும் மொழிந்தார்கள். விளக்
கம் முழுதையும் நீதிச் சபைக்குத் தலையாயிருந்த கொம்மாண்
டோர் எழுதி கொழும்புக் கவணருக்கு அனுப்பினன். கவ
ணரோ காரியத்தை அவ்வளவில் நிறுத்தி வைக்கவும், கத்தோ
லிக்கரை உத்தியோகத்திலிருந்து நீக்காதிருக்கவும் கட்டளை
பண்ணினன். இவ்விதமே வித்தோறியானு தெ பறேசும் மற்
றவர்களும் இம்முறை தப்பிக்கொண்டார்கள்.” (1717-ம் ஆண்
டின் அறிக்கை)

## பதிதனய் வந்த ஒரு பரதவன்

இரண்டு வருஷம் பொறுத்து, மீண்டும் ஒரு கொடிய
வேத கலாபனை உண்டுபட்டது. அதெப்படியெனில், மன்
ஞரிலே அந்தோனியு லோப்பெஸ் எனும் ஒரு பரவ சாதி
யான் “ஏதோ உலக நன்மை அடைந்துகொள்ளும் அவாவினல்
தன்னையும் ஒரு பதிதன் என்று விளம்பரப் படுத்திக்கொண்டு”



சுவாமிமாரை ஒல்லாந்தரிடம் பிடித்துக்கொடுக்க முற்பட்டான்.
“பதிதருடைய நாடுகளுக்கு ஊடாக வந்து போய்க் கொண்டி
ருந்த குருமாரையும், அவர்கள் போடும் மறுவேஷங்களின்
மாதிரியையும், அவர்களைக் கூட்டிக்கொண்டு போவோர் அவர்
களுக்கு விடுதி கொடுப்போர் உதவி செய்வோரையும், இரக
சியத்திலே கொம்பனியின் உத்தியோகத்தராய் இருந்துவரும்
கத்தோலிக்கரையும் அவன் சொல்லிக் கொடுத்ததோடு, இது
வரையும் குருமார் பதிதருடைய பகுதிகளில் உட்படுவதற்குக்
கையாண்டிருந்த சூழ்ச்சங்களையெல்லாம் வெளிப்படுத்தி
விட்டான். தான் சொல்லியவைகளை உண்மைப்படுத்தும்
படியாக, அவன், தான் கத்தோலிக்கனய் இருந்தபடியால்,
தூத்துக்குடியிலே, தன்னிடம் சுவாமிமாருக்குக் கொடுக்கும்
படியாக ஒப்புவிக்கப்பட்ட ஒரு பெட்டியையும் அந்தப் பதித
ருக்குக் கையளித்தான். அதினுள்ளே கோவையிலிருந்து குரு
மாருக்கு அனுப்பியிருந்த சில உபகாரங்களும் வேறு
பொருட்களும் இருந்தன. உடனே அவர்கள் பாப்பரசருக்கும்
கத்தோலிக்கு திருச்சபைக்கும் எதிரான தூஷணங்கள் நிறைந்
தனவும், கத்தோலிக்குக் குருமாரை எவ்விதமாயாவது கூட்டிச்
செல்வோருடைய ஆதனங்களைப் பறிமுதலாக்கி அன்னேரை
மறியலிடுவோம் நாட்டைவிட்டோட்டுவோம் என்று பயமுறுத்
துவனவும், ஒரு குருவானவரை அல்லது அவருக்குச் சேர்ந்த
யாதொன்றைப் பிடித்துக்கொடுப்போருக்கு அல்லது தங்கள்
மதத்தில் உட்படுவோருக்கு உத்தியோகங்களை உயர்வுகளை
வாக்குப்பண்ணுவனவுமான சட்டங்களையும் விளம்பரங்களையும்
பிரசித்தப்படுத்தத் தொடங்கினர்கள். பின்னும் அவ்வவ்
விடங்களிலே கூடுதலான காவல் வைத்து, குருமார் அடிக்
கடி வருகிற பாதைகளும் கடவைகளும் என்று அந்தோனியு
லோப்பெஸ் எனும் துரோகி குறிப்பிட்ட இடங்களையெல்
லாம் அதிக சாக்கிரதையாய்த் தேடச் செய்தார்கள். முன்னே
கத்தோலிக்கருக்குச் சனுவாய் நின்ற உத்தியோகத்தர்களையும்
நீக்கி, வேறு பேரை நியமித்தார்கள். யாழ்ப்பாணப் பட்ட
ணத்தின் முக்கியமான கத்தோலிக்கரும் சகலராலும் நன்கு
அறியப்பட்டவருமான வித்தோறியானு பறேஸ் லெயித்தாம்
என்பவரை யானைப் பகுதியின் விதானை அல்லது பரிபாலகர்
எனும் அவருடைய உத்தியோகத்திலிருந்து நீக்கி, அவருக்கு
சேர்ஜன் எனும் உத்தியோகத்தைக் கொடுத்தார்கள். அதி
ஞல் அவரை உயர்ந்தோராலும் இழிந்தோராலும் சங்கிக்கப்

பட்ட ஒரு பிரபுப் பதவியிலிருந்து இறக்கி, முன்னே தமக்குக் கீழ்ப்பட்டோராயிருந்தோருக்கு இனி மரியாதைபண்ண வேண்டிய ஒரு நிலைக்கு வரச்செய்து அவரை அவமானப்படுத்த நினைத்தார்கள் போலும். லெயித்தாம், இப்படியே, தாம் அடைந்த நெருக்கிடையையும் பொருள் முடையையும் தம்முடைய உண்மைப் பத்தியினாலும் பொறுமையினாலும் மேற்கொண்டு, தமது நிலைபரத்தைத் தேவ திருவுளத்துக்கு மிகப் பணிந்து கைக்கொண்டாரே அன்றி, தமது விசுவாசத்தின் எந்தத் துறையிலேயாவது முந்திய பயபத்தியிலாவது எள்ளளவேனும் குறைந்தவராய்க் காணப்பட்டார் அல்ல.''

அப்பால், ஒல்லாந்தர், தங்கள் ஆட்சிக்கு உட்பட்ட இடங்களில் இருந்த பல சிறுக் கோவில்களையும் பிடுங்கி, அவைகளைப் பார்த்துவந்தோரைப் பிடித்து, அநேகருக்குக் குற்றம் அடித்தும் பலரை மறியலில் அடைத்தும் கலாபனை செய்தார்கள். அவர்களுள் "யோசேப் டியஸ் எனும் ஒரு உபதேசியார் வேதத்துக்காகக் கொடும் பாடுகளை அனுபவித்து மரித்தார்.'' இந்த நெருக்கிடைகளின் நிமித்தம் சாங்கோபாங்க சுவாமிகள் சிலகாலம் ஒல்லாந்த பிரதேசங்களுக்குச் செல்லமுடியாமல் இருந்தது. வேத கலாபனைப் புயல் ஒருவாறு தணிந்தவுடனே, "அவர் கொழும்பினும் யாழ்ப்பாணத்தினும் மீசாங்களை அதிக எதிரிடையின்றித் தரிசித்து, விசுவாசிகளுக்குச் சக்கிறமேந்துகளைப் பரிமாறியதோடு, அநேகரைத் திருச்சபையின் மடியில் சேர்க்கலுமானார். அக்கியானிகளும் பதிதருமான பலர் திருச்சபையில் உட்பட்டார்கள். அவர்களுட் சிலர் பிரதானமான மனிதர். கொழும்பிலே, அவர், ஆத்துமாக்களை இரட்சிப்பதிலே முயன்று வேலை செய்துகொண்டு மூன்றுமாதம் தங்கினார். அவர் அங்கு நிற்பதைப் பலரும் அறிந்திருந்த போதிலும், பதிதர் கொந்தளியாமல் விட்டது பெரும் ஆச்சரியம். அவர் மூன்றுமாதம் நின்று தமது வேலையை முடித்துக்கொண்டு திரும்பினபின்புதான், சட்டதிட்டங்களும் அவரை அகப்படுத்தக் காவல்களும் தொடங்கின. இதிலே ஒரு புதுமையும் இல்லை. ஏனெனில், தேவாதீனமானது அடியவர்களுக்குத் துன்புறுத்துதல்கள் நடக்க இடங்கொடுக்கும்போது அவர்கள் தங்கள் ஆத்துமத்துக்கு வேண்டிய ஞானப் போசனத்தை அடைந்துகொள்ளுவதற்கு உரிய வழிவகைகளையும் திறந்து வையாமற் போகாது.'' இந்தத் துன்புறுத்தலைத் தூண்டி நடப்பித்தவர்



களோ தண்டனைக்குத் தப்பிக்கொள்ளவில்லை. கவணரான ஈசாக் அகுஸ்துஸ் றும்ப் என்பவன் 1723-ம் ஆண்டு ஆனி 11-ந் திகதி சடுதியாகச் செத்தான். பிசுக்காலாகிய பறென்ற் வண்டெர் ஸ்வானும் அவன் மனைவியும் அந்த ஆண்டிலே அந்த மாதத்திலேதானே 9-ந் திகதி ஒரு அடிமையின் கையாற் கொலையுண்டார்கள். மிஷனறிமாருக்கு எதிராய் உக்கிரங்கொண்டு திரிந்த பேத்றுஸ் ஸின்ஜெயு எனும் பதித போதகனும் அந்நாட்களிலேயே இறந்தான்.

## தூத்துக்குடியில் திருவூழியம்

சாங்கோபாங்க சுவாமிகள் மாதோட்டத்தில் நிற்கும் போது, முத்துக்குளிக் கரைக்கு நேர்க் கரையிலுள்ளதாகிய தூத்துக்குடியில் நின்று சிலர் ஒரு தோணியில் வந்து, தங்களூரிலிருந்த யேசுசபைக் குருமாரைப் பதிதரும் சோனகரும் துன்புறுத்தித் துரத்திப் போட்டபடியால் தங்களுடையவர்கள் குருமாரின்றித் தவிக்கிறார்களென்றும், சுவாமிகள் அக்கரைக்கு எழுந்தருளி அவர்களுக்குச் சக்கிறமேந்துகளைக் கொடுக்கத் தயவுபண்ண வேணுமென்றும் மன்றாடினார்கள். சுவாமிகள் தூத்துக்குடிக்குப் போய், தேவ திரவிய அனுமானங்களை நிறைவேற்றியபின், அது தபசுகாலமாய் இருந்தபடியால், பரிசுத்தவாரத்துக்கு அங்கேயே தங்கி, எழுந்தேற்றத் திருநாள்மட்டும் நின்று, சனங்கள் ஆபத்தையும் பாராமல் விரும்பிக் கேட்டுக்கொண்டபடியே திருநாட்களை மேளங்கள் வாத்தியங்கள் வெடிகளோடு வெகு ஆடம்பரமாய் கொண்டாடினார். அங்குதானே கோவைத் தியானசம்பிரதாயத்தார் இலங்கை மிஷனறிமாருக்கு முந்திய வருஷம் அனுப்பியிருந்த ஒரு சாமான் பெட்டியும் புகையிலைச் சாடியும் தேடாக் கூறுய்க் கிடக்கக் கண்டு, இலங்கையிலே குருமார் வேறெங்கிருந்தாவது தங்களுக்குத் தேவையானவைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடாதென்றபடியால், இனிமேல் அவர்களுக்கு என்று வருகிற சாமான்களைக் கவனமாய் இலங்கைக்கு அனுப்பி வைக்கும்படி சிலரோடு ஒழுங்குபண்ணிக்கொண்டு திரும்பினார்.

## எட்டாம் அதிகாரம்

### கொலைக்குத் தப்பியமையும் குருமார் தலைவரானமையும்

இந்தநாட்களிலேயே சாங்கோபாங்க சுவாமிகள் கண்டியில் ஓர் அநியாயக் கொலைக்கு உள்ளாகப் பட்டார். அதெப்படியெனில், தலைமை அதிகாரியாயிருந்த பேதுரு கஸ்கோன் பிரலாபத்துக்குரிய விதமாய் மரிக்க நேர்ந்தது. இவர் அரச சேவகத்தில் முதலிடத்தைத் தாங்கி, அரசரால் மிக மதிக்கப்பட்டிருந்தபோதிலும், அரண்மனையில் அநேக எதிரிகள் உள்ளவரானார். அவர்களே இவரை ஈற்றில் விழுத்தாட்டுகிறவர்களுமாகி, இவர் அரசாணியோடு கொண்டாட்டமுள்ளவரென்ற குற்றச்சாட்டின்பேரால் இவரைச் சிறையிருத்தி வன்கொலை செய்வித்துப்போட்டார்கள். கஸ்கோன் பெரும் பொருள் ஈட்டி வைத்திருந்தாரென்று நம்பி, எதிரிகள் வீட்டைச் சோதித்தவிடத்து, அங்கே ஒன்றும் காணப்படவில்லை. ஆகவே, சாங்கோபாங்க சுவாமிகளை அரசன் முன்னாற் குற்றப்படுத்துவதற்கு இதுவே தருணமென்று அந்த வேதவிரோதிகள் உன்னி, அவரைப் பிடிக்க ஒரு சூழ்ச்சியைக் கண்டுபிடித்தார்கள். அதெப்படியெனில், சுவாமிகள் பல பொய் வேதங்களையும் கண்டித்து சத்தியவேத உண்மையை நிலைநாட்டுகிற ஒரு நூலை இயற்றியுள்ளவர் அல்லவா? அந்த நூல் பளபளப்பான சிங்களத்தில், மனதைக் கவருகிற வகையில் எழுதப்பட்டமையால், கற்றோர் பலர்மட்டுமல்ல நரேந்திரசிங்க ராசா தாமேயும் அதைப் பிரீதியோடு வாசித்திருந்தார். அந்த நூலிலே சுவாமிகள் புத்தசமயத்துக்கு மாறாக எழுதியிருக்கிறார் என்ற முறைப்பாடு பலமுறை அர்சர் செவிக்கு எட்டிய போதிலும், அவர் அதைக் கவனியாமல், எப்போதும் போலவே சுவாமிகளோடு அளவளாவி நடந்துகொண்டுவந்திருந்தார். இப்போதோ, அவருடைய விரோதிகள் கஸ்கோனின் சொத்தெல்லாம் சுவாமிகளிடத்திலேயே உண்டு என்றும், அவர் தேச சட்டத்தின்படியே அவைகளை அரச உத்தியோகத்தர்களுக்குக் கையளியாமல் மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறாரென்றும் முறைப்பட்டார்கள்.

அந்நாட்களிலே சுவாமிகள் கண்டியிலேயே நின்றபோதிலும், தமக்கு எதிராய் நடந்த சதியாலோசனைகளை அறியவில்லை. ஒருநாள், பின்னேரம், திடீரென்று அரசருடைய



படைகள் கோயிலை வளைந்துகொள்ள, மறுநாட் காலை அவர் மறியலாகி அரண்மனைக்குக் கொண்டு போகப்பட்டார். அங்கே, அவரை, அரசன் சமுகத்திலல்ல, அவரைக் குற்றஞ் சாட்டியவர்கள் சேர்ந்த ஒரு நீதாசனத்தின்முன் நிறுத்தி, கஸ்கோனுடைய திரவியங்களைப் பற்றியல்ல, அவர் எழுதிய நூலைப்பற்றியே கேள்வி கேட்கத் தொடங்கினார்கள். அவர், தாம் வேதசத்தியங்களைப் போதிப்பதற்காகத் தமது நூலைச் சிங்களத்திலே எழுதினது மெய்யென்றும், அவ்விதமே பல பாஷைகளிலும் எழுதப்பட்டிருக்கிறதென்றும், உண்மை வழியைப் போதிப்பது தமது கடமை என்றும், அந்தக் கடமையை நிறைவேற்றும் பொருட்டே அது எழுதப்பட்டதென்றும், யுத்திக்கு மாறான ஒன்றும் அதில் இல்லையென்றும், யுத்திக்கு ஒத்தவைகளை ஏற்றுக்கொள்ளச் சகல மனுஷருக்கும் கடனுண்டென்றும் விடையளித்தார். அன்றியும், மெய்யான ஈடேற்ற வழியைக் காண்பிப்பதிலே அரசருக்கு மாறான துரோகம் ஒன்றும் வாராது என்றும், அரசருக்குத்தானும் உண்மையை எடுத்துச் சொல்லுவதே நல்ல பிரசைகள்மேற் சுமந்த கடமை என்றும் உறுதியாக வாதாடினார். மந்திரிமார் இந்த மறுமொழியை அரண்மனையின் வேறொரு பாகத்திலிருந்த அரசருக்குச் சொல்லிவருகிறோம் என்று பாசாங்கு பண்ணிக்கொண்டு போய்விட, சூழ நின்றோர் அவருக்குச் சித்திர வேதனை செய்வதாகப் பயமுறுத்தி அவரை ஏசி வைதுகொண்டு நின்றார்கள். “சுவாமியார் அமரிக்கையாயும் மனங்குழம்பாமலுமிருக்க; மந்திரிமார் திரும்பி வந்து, பயமுறுத்துகிற பாவனையாய், அரசன் கேட்பதுபோல இன்னுஞ் சில கேட்டார்கள். சுவாமியார் தடையின்றி விடை சொன்னார். கடைசியாய், பேதுறு கஸ்கோன் உன்னிடத்தில் அடைக்கலமாய் விட்டிட்டுப்போன பொருள் முழுவதையும் என்ன செய்தாய் என்றார்கள். இதுதான் தமக்கு மாறாக அவர்கள் கொண்டுவர இருந்த ஒரே குற்றச்சாட்டு என்று சுவாமியார் அறிந்திருந்தபடியால், அதற்கு ஆயத்தமாய் வந்திருந்தார். ஆகவே, அரசர் நியமிக்கிற யாராவது போய் கோவிலைத் திறந்து அங்கே இறந்துபோன அதிகாரியினுடைய பொருள் ஏதும் உண்டோ என்று சோதனை பண்ணுவதற்கென்று கோயிற் திறவுகோல்களைக் கொடுத்துவிடக் கொண்டுவந்திருக்கிறேன் என்றார்.

"மந்திரிமார் இந்த மறுமொழியை அரசருக்கு அறிவிக்கப் போகிறோம் என்று சொல்லிப்போய், உடனே எவருங் காத்திராத ஒரு கட்டளையோடு வந்தார்கள். அதாவது, அவரை வெறும்மேலில் கசைகளால் அடித்து, பின் சங்கிலி மாட்டித் தலையைக் கொய்துவிடக் கட்டளையாயிற்று என்றார்கள்." இது சுவாமிகளுக்குக் கருதமுடியாத அதிசயமாய்த் தோன்றிற்று. எத்தனையோ வருஷக்காலமாக தம்மோடு அதிபழக்கமானவரும், தம்முடைய அந்த நூலையே விருப்போடு வாசித்திருந்தவரும், தாம் கஸ்கோனோடு எவ்வித கொண்டாட்டம் உடையவராயிருந்தார் என்றதை நன்றாய் அறிந்தவருமான நரேந்திர சிங்கர் இப்படிப்பட்ட ஒரு கட்டளையை அனுப்புவாரா என்று யோசிக்கலானார். ஆயினும், மரணம் வந்தாலும், அது தேவசித்தமானால், வரட்டும் என்று மனந்துணிந்து சுவாமிகள் பதற்றமின்றி யிருக்க, மந்திரிமாரோ பயமுறுத்திக் கொண்டு நின்றார்கள். மந்திரிமாருடைய தந்திரம் எல்லாம் இனித்தான் வெளியாக இருந்தது. அவர்கள் மீண்டும் ஒருக்கால் அரசரிடம் போய்வருவதுபோலக் காட்டி, இனி அவர் தமது கோவிலுக்குப் போகலாமென்று அரசர் கட்டளைபண்ணியதாகச் சொன்னார்கள். இவ்வாறே, சுவாமிகளை அரசர் முன்னே அபராதியாக்க அவர்கள் எடுத்துக்கொண்ட சூழ்ச்சிகள் பலியாமற் போயின. நரேந்திரசிங்க ராசா இந்தக் கபட நாடகத்திலே எதுவிதத்திலும் பங்கு பற்றியவராகத் தோன்றவில்லை. சுவாமிகளுக்கு எதிராக மந்திரிகள் கொண்டுவந்த குற்றச்சாட்டு முழுதும் அபாண்டமானது என்று அவர் அறிந்திருந்தபோதிலும், அவர்கள் சுவாமிகளைப் பிடித்து கேள்வி கேட்கத் தங்களுக்கு இடங்கொடுக்கவேணுமென்று அவரைப் பலவந்தப் படுத்தியிருந்தார்கள் என்றும், சுவாமிகளுக்கு அதினால் ஒரு கேடும் வரமாட்டாதென்ற நிச்சய உணர்வு அரசருக்கிருந்தபடியால் அப்படியே இடம்கொடுத்தார் என்றும் நினைக்கத்தக்கதாயிருக்கிறது. இத்தருணத்திலே அரசர் சுவாமிகளுக்குத் தம்மைக் காண்பியாதபடியால், இச்சம்பவத்தைப் பற்றி பின் எப்போதாவது பேசியவரல்ல. எப்போதும் போலவே அவருக்குச் சங்கை மரியாதை பண்ணியும், பலமுறை அவரைத் தமது சமுகத்துக்கு அழைத்து அரசியல் விஷயமாய் அவருடைய ஆலோசனையைக் கேட்டுக்கொண்டும் வந்தார்.



## இலங்கையில் சகல குருமாருக்கும் தலைவராகிறார்

1724-ம் ஆண்டு தைமாதம் 13-ந் திகதி யோசெப் தெ மெனேசெஸ் சுவாமியார், இலங்கையில் இருபத்தேழு வருஷம் உத்தமமான திருவூழியம் நடத்தியபின், மரித்தார். அவர் நெடுங்கால கஷ்டங்களால் நோயாளியாகி வயது முதிர்ந்திருந்த கடைசி நாட்களில் கோவைத் தியானசம்பிரதாய முதலாளிமார் அவரை அங்கு திரும்பிப்போய் இளைப்பாறும்படி அழைக்க, அவரோ "கர்த்தருடைய திராட்சத் தோட்டத்தில் வேலைசெய்யாமல்விட மனங்கொள்ளாமல், இலங்கையிலே தானே தமது சீவியநாட்கள் முடியும் வரையும் ஊழியம் பண்ணி மற்றக் குருமாருக்குப் புத்திமதி சொல்லி ஏவி நன்மாதிரிகை காட்டி அவர்களை ஊக்கித்துக்கொண்டிருக்க ஆசைப்பட்டார்." அவரே யோசேவாஸ் முனிவருடைய ஆதித் துணைவரும் கூட்டாளியுமாகி, அவருக்குப்பின் இலங்கைக் குருமார் தலைவரும் கொச்சி மேற்றிராணியாரின் பதிலாளியுமாய் விளங்கினார். அவருக்குப் பின் சாங்கோபாங்க சுவாமிகள் இரு உத்தியோகத்தையும் வகிக்கிறவரானார்.

சாங்கோபாங்க சுவாமிகள் தியானசம்பிரதாயிகளுக்குத் தலைவரும் விக்காரியு ஜெனறலுமானபோது, இலங்கையில், குருமாருடைய தொகை மிகக் குறைந்திருந்தது. மூன்று வருஷத்துள் ஐந்து குருமார் இறந்துபோனார்கள். அவர்களுள் யோசெப் தெ மெனேசெஸ் பேதுறு பெரும் எனும் இருவரும் யோசேவாஸ் முனிவர் நாட்தொட்டு நமது தீவில் உழைத்து, அவரது போக்கை முழுதாகப் பின்பற்றி இலங்கைத் திருச்சபைக்கு இணையில்லா நன்மைகள் செய்து, காலங்கண்டவர்களாய் இறந்தார்கள். பிரான்சிஸ்கு தெ யேசு, பசிலியு வறேத்து, முனிவருடைய சகோதரரின் மகனாகிய சின்ன யோசேவாஸ் எனும் மற்ற மூவரும் தங்கள் திருவூழியத்தின் பிரயாசத்தால் நோயுற்று இளம் வயதிலேயே இறைவனடி சேர்ந்தார்கள். பேதுறு சல்தாஞ்ஞாவும் யேசெப் கோமெசும் ஆகிய இரு மிஷனறிமாரும், அடுத்தடுத்து வந்த வருத்தத்தைச் சுகமாக்கிக்கொள்ளும் பொருட்டு, கோவைக்கு அனுப்பப்பட்டிருந்தார்கள். ஆகவே, இலங்கையில் சுவாமிகளைத் தவிர ஐந்து குருமாரே இருந்தார்கள். இங்கு நாளுக்குநாள் வளர்ந்துகொண்டிருந்த வேலைக்கோ இவர்கள் ஈடுசொல்ல மாட்டாதவர்களானார்கள்.

ஆதலால், புது மூப்புச் சுவாமியார் முதன்முதற் செய்தது என்னவெனில், குருமார் போதாதென்று கோவைக்கு அபயமிட்டதேயாம். இலங்கையிலே இன்னும் பல குருமார் வேலை செய்வது அவசியம் என்று அவர் முதலாளிமாருக்குத் தெளிவாய்க் காட்டியதோடு, தம்முடைய சகோதரராகிய சம்பிரதாயிகளது மனதையும் கவரத்தக்கதாக எழுதி: "அன்னோர் கர்த்தருக்கு ஊழியம் பண்ணுவதற்காக உலகத்தைக் கைநெகிழ்ந்து தங்களை முழுதும் பரித்தியாகஞ் செய்துகொண்டிருந்தமையால், அவர்கள் கர்த்தருடைய அன்பினாலேயே தூண்டப்பட்டு அவரது திராட்சத் தோட்டத்தில் வேலைசெய்ய மனமொருப்படவேண்டும் என்றும், இலங்கைத் தேவதாழ்ச்சி உத்தியானமோ வெகு செழிப்புள்ளதாயிருந்தும் அதிலே வேலைசெய்வோரோ கொஞ்சம்பேர் என்றும், அங்கே ஞான உணவை வாஞ்சிக்கிற ஆத்துமாக்கள் படுகிற ஞானப் பஞ்சமோ அதிகம் என்றும், அங்கே இன்னும் மீந்திருக்கிற குருமார் வேலைக் கஷ்டத்தாலும் நோயாலும் மெலிந்து மீசாங்களுக்குப் போய்வரமாட்டாமல் இருக்கிறார்கள் என்றும்" எடுத்து விபரித்தார். உடனே நாலு குருமாராவது வரவேண்டும் என்றும், அவர்கள் இந்தத் தீவில் வெகு சாக்கிரதையாய் நுழைய வேண்டும் என்றும், வருவோர் யார் என்று சத்துருக்கள் அறிந்து சிறைப்படுத்தாதபடிக்கு அவர்கள் ஒருமிக்க அல்ல இருவரிருவராய் வரவேண்டும் என்றும் மன்றாடினார். கோவையிலே இளைப்பாறப் போயிருந்த இரு குருமாரும் உட்பட, ஆறுபேர், சுவாமிகளின் மன்றாட்டுக்குச்செவிசாய்த்து, உடனே நால்வர் உதவியாட்கள் இலங்கைக்குப் புறப்படலானார்கள். இவர்களுள் பேதுறு தெ சல்தாஞ்ஞா எனும் முந்திய இலங்கைச் சுவாமியாரே மற்றவர்களை இட்டுக்கொண்டுவர முயன்றார். ஆயினும், அறுபது வயதுள்ளவராயிருந்த அவர் புறப்பட நியமித்திருந்த 1725-ம் ஆண்டு மாசிமாதத்தின் 12-ந் திகதிக்கு மூன்றுநாளின்முன் நோயுற்று வருந்தியமையால், பயணக்காரரோடு சேரமாட்டாமற்போக, இளைப்பாறப்போயிருந்த மற்றவரான யோசெப் கோமெஸ் என்பவர், தமியான் வலறியானு யோசேப் தெ வறியா எனும் மற்ற இருவருக்கும் தலையாய்ப் புறப்பட்டார். மூவரும் இங்கு சேமமாய் வந்து சேர்ந்தார்கள். ஆயினும், ஒன்பது வருஷம் மாத்திரம் தியானசம்பிரதாயியாயிருந்துள்ள வறியா எனும் மிக ஊக்கமுள்ள இளஞ்சுவாமியார், இலங்கைக்கு வந்து நாலுமாதமும் ஆகுமுன், புத்தளத்திலே சுவாதநோய்



கண்டு, சாங்கோபாங்க சுவாமிகள் கையால் ஈறுந்த தேவதிரவிய அனுமானங்களைப் பெற்று ஆவணிமாதம் 31-ந் திகதி மரித்தார். துணையாட்களின் இரண்டாம் கூட்டம் அந்த ஆண்டு மார்கழிமாதம் கோவையில் நின்று புறப்பட்டது. அக்கூட்டத்தில் வந்த குருமார் யாரெனில், யோவாம் தெ சா இஞ்ஞாசியு தெ மெஸ்குயித்தா எனும் இருவரும், அவர்களைக் கூட்டிக்கொண்டு வந்த சல்தாஞ்ஞா சுவாமியாருமாம். இவர் சற்றுச் சுகமானவுடனே, தமது தள்ளாப்பிராயத்தையும் பெலவீனத்தையும் பாராமல், இலங்கையில் மறுபடியும் திருவூழியம் நடத்த விரும்புகிறவரானார்.

## சாங்கோபாங்க சுவாமிகள் தலைமையைக் கைநெகிழ்ந்து விடுகிறார்

சல்தாஞ்ஞா சுவாமியார் வயதிலும் துறவறச் சீவியத்திலும் இலங்கை மிஷன் அனுபவத்திலும் தமக்கு மூத்தவர் என்றபடியால், சாங்கோபாங்க சுவாமிகள் தமது தலைமைக் குருப்பதவியையும் மேற்றிராணியாரின் பதிலாளி உத்தியோகத்தையும் அவர் கையிலே விட்டிட்டு, தாமோ வேதவிருத்தி வேலையில் அதிகமாய் உழைக்க விரும்பினார். இதற்கு வேண்டிய ஒழுங்கு செய்து முடிந்தவுடன், அவர் கண்டிக்கு மீண்டும்போய், பழையபடியே தெற்குப்பாகங்களை, அதாவது கண்டிராச்சியத்தின் மீசாங்களையும் மகா ஓயாவுக்குத் தெற்கேயுள்ள ஒல்லாந்த நாடுகளையும், பண்படுத்தத் தொடங்கினார். புது மூப்புச்சுவாமியாரான சல்தாஞ்ஞா ஏறக்குறைய முழுதும் கத்தோலிக்குப் பட்டணமாயிருந்த மாதோட்டத்தைத் தமது தலைத்தானம் ஆக்கினார். அது ஒல்லாந்த நாடுகளுக்குக் கீழ்ப்பட்டதேயானாலும் அவர்களது மன்னார்க் கோட்டைக்குச் சிறிது தூரத்திலிருந்தது. அன்றியும், "அந்தப் பட்டணம் எவ்வளவு பெரிதும் விசாலமுமானதெனில், அங்கே பதினாலாயிரம் ஆட்கள் வசித்தார்கள் எனலாம்." அதுவே இலங்கையிலே தமிழ் வழங்கிய வடபாகம் முழுதையும் விசாரணை பண்ணுவதற்கு நடுவிடமாகவும் ஆசனமாகவும் வந்தது.

## ஒன்பதாம் அதிகாரம்

## தென்பாகங்களில் இரட்டித்த வேலைகளும் எதிரிடைகளும்

இப்போது, சாங்கோபாங்க சுவாமிகள், தலைமைக் குருவானவர் தாங்கவேண்டிய சுமைப் பொறுப்பு இல்லாதவராய் மிஷன் வேலையில் முழுதும் ஈடுபட்டு நின்றார். 1725-ம் ஆண்டு ஐப்பசி 19-ந் திகதி இலங்கையின் ஒல்லாந்த கவணராகிய யொவானெஸ் ஏட்டென்பேர்க்கு சடுதியாய்த் தென்புலம் சேர, காலியின் கொம்மாண்டோரான யொவான் பாவுலுஷகென் என்பவனும் கொழும்பு அரசியற் சங்கத்தினரும் அரசைப் பரிபாலிப்போரானார்கள். இதனால் வேதகலாபனையிலே சிறிது தூக்கம் உண்டானதின் நிமித்தம், மிஷனறிமார் மனம்போல அங்கிங்கு போகத்தக்கவர்களானார்கள். சுவாமிகள் உடனே கொழும்புக்குச் சென்று, நகரியிலும் சுற்றுடல்களிலும் வெகு சித்தியோடு திருவூழியம் நடத்திக்கொண்டு வந்தார். அங்கு வேளாண்மை அதிகப்பட்டிருந்ததினால், தமக்குக் கீழ் வேலைசெய்துகொண்டு வந்த கிறிசோஸ்தொம் பெர்ணாண்டெஸ் தமியான் வலெறியானு எனும் இரு குருமாரையும் தமக்கு உதவியாக வரச்செய்து, முந்தியவரை கத்தோலிக்கர் அநேகர் வசித்த இடங்களாகிய கழுத்துறை பய்யாகலை பேருவலை எனும்ஊர்களுக்கும், குருமாரின் அருந்தலாலும் தலைத்தானத்திலிருந்து வெகு தூரத்தில் ஒல்லாந்தருடைய அரசாட்சிக்கு முற்றாகக் கீழ்ப்பட்டிருந்தமையாலும் வெகுநாட் குருமார் போகாமல் இருந்தவிடங்களாகிய வெந்தோட்டை காலி மாத்தறை எனும் ஊர்களுக்கும் அனுப்பினார். பேர்ணாண்டெஸ் சுவாமியார் அவ்வூர்களை விசாரணைபண்ணிக் கொழும்புக்கு மீண்டபோது, சாங்கோபாங்க சுவாமிகளுக்கும் அவரோடுநின்ற வலேறியானு சுவாமியாருக்கும் வெகு பிரயாசையான வேலைகள் இன்னும் இருந்தமையால், இவர்களோடு கூடித் திருவூழியம் செய்ய நியமிக்கப்பட்டார். மூன்று குருமாரும் முன்னொருபோதும் கிடையாத சுயாதீனத்தோடு ஆறு மாதம் வரையில் வேலைசெய்து அநேகரை மனந்திருப்பினார்கள். இவர்களுள் அதிகப்பற்றானோர் தற்காலம் நாம் பேர்கர் என்று சொல்லுகிறவர்களே. பேர்கர்மாருட் பலர் கத்தோலிக்கராயிருந்தார்கள். அரசினருக்காக கல்வீன்மதத்தில் நின்றவர்களுங்கூட சத்திய வேதத்தின்மட்டில் வெகு கவுரவமான எண்ணங்கொண்டிருந்ததினாலும், அவர்கள் குடும்பங்களில் புரு



ஷனோ பெண்சாதியோ கத்தோலிக்கராயிருந்து மற்றப் பகுதியையும் அவ்விதம் ஆக்கிப்போடப் பிரயாசப்பட்டு வந்ததினாலும் பல மனந்திரும்புதல்கள் உண்டாயின. சுவாமிமார் நீடித்து நின்றதினால், திவ்விய பூசைகாண்பதிலும் சக்கிறமேந்துகளைப் பெறுவதிலும் அசட்டையாயிருந்த பழங் கத்தோலிக்கர்கள் அதிக பயபத்தி உள்ளோராய் வரவும், ஒழுங்கீனமாய்ச் சீவித்தவர்கள் தங்கள் பிசகுகளைத் திருத்தித் தேவதிரவிய அனுமானங்களைப் பெறத் தகுதியுள்ளோர்கள் ஆகவும் தருணம் கிடைப்பதாயிற்று.

சாங்கோபாங்க சுவாமிகள், எதிரிடையில்லாமல் வேலைசெய்ய இடம்வாய்த்திருந்த இந்த நாட்களில், கொழும்பிலும் சுற்றுடல்களிலும் பல பத்திச்சபைகளையும் தாபிக்கலானார். ஒல்லாந்தர் காலத்திலே கொழும்பின் பற்பல சாதி மனுஷரும் நகரி என்று சொல்லப்பட்ட நடுவிடத்துக்கு வெளியே வெவ்வேறு கோட்டங்களில் வசிக்கவிடப்படுவார்கள். இவ்வித சாதிப் பிரிவும் தொழிற் பிரிவும் இருந்த அடையாளங்களை இன்றைக்கும், சோனகத்தெரு செட்டித்தெரு தட்டாதெரு கன்னாரத்தெரு கொம்பனித்தெரு ஆகிய இடப்பெயர்களிற் காண்கிறோம். சுவாமிகளும் ஒவ்வொரு பிரிவார் அல்லது சாதியார்மத்தியில் இருந்த சிறுக் கோவில்களில் பூசைகாண்போருக்கு, அந்தந்த பிரிவினரின் சாதியாரின் பெயரையே சபைகளுக்கு வைத்தார். இந்தச் சபைகள் சனிக்கிழமை மாலைதோறும் தங்கள் தங்கள் சிற்றாலயத்திலே கூடி, அந்தந்த இடத்திலுள்ளவர்களுக்கிணங்க போத்துக்கேய பாஷையிலோ சிங்களத்திலோ தமிழிலோ செபமாலை ஓதிப் பிரார்த்தனையும் சொல்லுவார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில், குருவானவர் இல்லாவிடில், விசுவாசிகள் எல்லோரும் அந்த ஆலயங்களில் சேர்ந்திருந்து பூசைத்தியானம் முதலிய செபங்களைச் செய்து, சாங்கோபாங்க சுவாமிகள்தாமே மூன்று பாஷையிலும் இயற்றி வைத்த சுவிசேஷ விரித்துரையையும் வாசிப்பார்கள். சுவிசேஷ விரித்துரை முதலிய புத்தகங்கள் ஆலயத்தின் மூப்பு அல்லது மொடுதாமிடம் இருக்கும். ஞாயிறு கடன் திருநாட்களிலே, உலகத்தின் எத்திசையிலாவது அவ்வேளை நடக்கும் பூசைப்பலியை உத்தேசித்துக்கொண்டு, அதைத் தியானித்துச் செபிக்கும் வழக்கத்தை சுவாமிகளே இலங்கையில் உண்டாக்கினார். மனோபாவனைப் பூசைத்தியானம் என்று அவர் எழுதித்தந்ததை இன்றைக்கும் பூசையில்லாத இடங்களிலே கிறீஸ்தவர்கள் வாசித்துப் பலனடைந்து வருகிறார்கள்.

## விமரிசைக் குறைவால் நேர்ந்த விபத்து

குருமார் கொழும்பு நகரில் நிற்பதைப்பற்றியும் கத்தோலிக்கர் தங்கள் வேத அனுசரிப்புகளைக் கண்டும் காணாமலும் நடத்திக்கொண்டு வருவதைப்பற்றியும் ஒல்லாந்தர் கவனியாமல் விட்டதுபோற் தோற்றியதினால், விசுவாசிகள் அதிகரித்த பத்தியோடு நடந்ததும் அன்றி, சில தடவை விமரிசைக் குறைவும் காட்டிவிட்டார்கள். எப்படியெனில் சிலர் சாங்கோபாங்க சுவாமிகளுடைய துணைக் குருமாரைப் பகல் நேரங்களிலும் வேதச் சடங்குகள் நிறைவேற்ற அழைப்பார்கள். மூப்புச் சுவாமியார் அப்படிச் செய்யப்படாது என்று கண்டிப்பாய் விலக்கியிருந்ததையும் பொருட் பண்ணினார்களில்லை. இவ்வாறே, சில விசுவாசிகளும் தமியான் வலேறியானு சுவாமியாரும் கட்டிக்கொண்ட ஒரு பிழையினால் மிஷன்வேலை திடீரென்று தடைப்படுவதாயிற்று. இந்தக் குருவானவர் புதிதாய் நம் தீவுக்கு வந்திருந்தவர்; ஒல்லாந்த நெருக்கிடையின் கடூரத்தைப்பற்றிய அனுபவம் இல்லாதவர். ஒருநாள் இரவு, புறக்கோட்டையிலிருந்த ஒரு பேர்கர் வீட்டில் இவர் பூசை வைக்கும்நேரம், திரளான அயற் கிறீஸ்தவர்கள் வந்து விட்டுவீதியில்லாத அந்த இல்லத்திலே நெருங்கியிருக்க, வீட்டு எசமான் ஒருபுசம் இருபுசமாகி நின்று, சுவாமியார் பிரசங்கம் செய்யவேண்டும் என்றும் தூண்டினான். நடு நிசியிலே, எங்கும் அமரிக்கையாயிருக்க, சுவாமியார் தமது குரலை அடக்கிப் பேச நினையாமல், ஊரத்தசத்தமாய்ப் போர்த்துக்கேய பாஷையிலே பொழிந்துவிட்டார். அடுத்த வீட்டுக்காரப் பதிதன் ஒருவன், சத்தங் கேட்டு நித்திரை விழித்தெழுந்து, தனது நித்திரையைக் குழப்பின கோபந் தூண்டிவிட, இன்னும் இரு பதிதரோடு புறப்பட்டு, பிரசங்கம் நடக்கும் வீட்டுக் கதவில் வந்து தட்டினான். கபடம் அறியாத யாரோ அதைத் திறந்துவிட, அவன் உள்ளே நுழைந்து, ஒரு குருவானவரே பிரசங்கஞ் செய்கிறார் என்றதை நிச்சயித்துக்கொண்டு, தன் கூட்டாளிகள் இருவரையும் காவலாயிருக்க விட்டிட்டு, ஓடிப்போய் சொனுதாதுமாரை அழைத்துக்கொண்டு வந்தான். கிறீஸ்தவர்கள், ஏதோ ஆபத்து வரப்போகிறது என்று தேவச் செயலாய் மணம் பிடித்துக்கொண்டு, உடனே குருவானவரைப் பின் கதவால் ஓடி ஒளிக்கச்செய்து, பீடத்தையும் கழற்றிப்போட்டு துரிதமாய்க் கலைந்து போய்விட்டார்கள். சேவகர்கள் நித்திரைத் தூக்கத்தோடு வந்து சேர்ந்தபோதோ, பூசை வைத்த அடை-



யாளத்தையாவது சட்டத்துக்கெதிராய் கத்தோலிக்கர் கூடியிருந்ததற்குச் சாட்சியையாவது காணமாட்டாமற் போனார்கள். ஆயினும், இந்தச் சம்பவத்தால் சிலகாலம் தூங்கிக்கொண்டிருந்த வேதகலாபனைச் செந்நாய்கள் விழித்துக்கொண்டன. “சேவகர்கள் இராவேளைகளில் தெருக்களெல்லாம் சுற்றி குருமாரைப் பிடிக்க எத்தனம் பண்ணவேண்டும்” என்று உடனே கட்டளை பிறப்பிக்கப்பட்டது. படவே, சுவாமிமார் மூவரும் வெவ்வேறு வழிகளால் சீத்தாவக்கைக்கு விலகிப்போய் அங்கிருந்து கண்டிநகரை அடைந்தார்கள்.

## ஒல்லாந்த கவணரின் துர்ஒழுக்கம்

கொழும்புக்கு புதிய கவணராய் வந்த வுயிஸ்ற்று என்பவன் மிருகத்தன்மையுள்ள ஒரு படுபாவி; ஒல்லாந்த கவணர்மார்களுள் எல்லாம் அதி துட்டன். தான் வரும்வரையில் கொழும்புக்கு கவணராய் வேலைபார்த்து வந்த காலிக் கொம்மாண்டோரை உத்தியோகத்தால் நீக்கியதே அவன் முதற் செய்த அலுவல்களுள் ஒன்று. தொடக்கத்திலே அவன் கத்தோலிக்கர் மட்டில் நல்லகுணங் காட்டிவந்தான். ஏனெனில், புத்தளத்திலே இருந்த குருமார் கண்டி இராசாவுடைய நாடுகளுக்கு ஊடாக யானை கொண்டுபோன அவனுடைய ஆட்களுக்கு ஒரு சனுவுபண்ணியிருந்தார்கள். அதெப்படியெனில், ஒல்லாந்தருடைய யானைகளைக் கொண்டுபோனவர்களைக் கண்டி அரசருடைய உத்தியோகத்தர்கள் புத்தளத்திலே தடுத்து: “அவ்வாறு செய்யத் தங்களுக்கு அரசருடைய உத்தரவு உண்டென்றும் அரசர் சுறுக்கிலே அவர்களுடைய தலைகளையும் கழற்றிப்போடுவார் என்றும்” சொல்ல, யானைகொண்டு போனவர்கள் பயந்து நடுங்கிக்கொண்டிருந்தார்கள். அத்தோடு அவர்கள் உணவுப் பொருட்களுமில்லாமல் வாடியதை அறிந்த குருமார், அவர்களுக்குப் போசன பதார்த்தங்கள் அனுப்பி ஆறுதல் சொல்லுவித்தார்கள். ஈற்றில், அன்னோர் விடுதலை அடைந்தபோது, எல்லோரும் சுவாமிமாருக்கு நன்றி கூற வந்ததும் அன்றி, இவர்கள் செய்த நன்றியைப்பற்றிக் கவணருக்கும் அறிவித்ததினால், கவணரும் குருமாருக்கு ஏதோ ஒரு விதத்தில் தனது கடப்பாட்டைக் காட்டிவைக்க விரும்புகிறவனானான். அதற்கு விரைவில் ஒரு நல்ல தருணம் வாய்த்தது. சில நாட்களுள், கிறிசோஸ்தோம் பெர்ணாண்டெஸ் சுவாமியார் இரகசியமாய் கொழும்பிற் போயிருந்தபோது, கல்வின்

மதப் போதகர்கள் அவரை வேட்டையாடக் கட்டளை பண்ண வேணும் என்று கவணரிடம் கேட்க, அவன் சொல்லியதாவது: நீங்களும் கத்தோலிக்கு குருமாரைக் கண்டுபாவித்து நாட்டுக்குள்ளே அங்கங்குபோய் அவர்களைப்போல ஏழை எளியவர்களுக்கு போதகம் பண்ணாமலிருப்பதென்ன? நீங்கள் பெண்சாதிமாரோடும் சகலவித சுகசுகிப்புகளோடும் சும்மா திரிவதென்ன? என்று நன்றாய் ஏசிவிட்டான்.

ஆயினும், கொஞ்சநாட் கழித்து, அந்தக் கவணர் தன்னைக் காக்கும் பொருட்டாக, கத்தோலிக்கரிலே பகை சாதிக்கத் தொடங்கினான். அதெப்படியெனில், இராணுவத்தாரை அவன் மிகக் கொடுமையாய் நடத்தியதின் நிமித்தம் தேசம் முழுதும் அவனுக்கு மாறாய்க் கொடுக்குக் கட்டிக்கொண்டு நின்றது. நிற்கவே, அவன் "தன்னைத்தான் நீதிபதியும் வழக்கெடுப்போனும் தண்டனை இடுவோனுமாக" ஏற்படுத்திக்கொண்டு, சகலரையும் விரோதித்து ஒடுக்கத் தொடங்கி, கத்தோலிக்கரிலேயே அதிகமாய்க் கைவைத்தான். பிரதான கத்தோலிக்கருள் ஏழெட்டுப்பேரைக் கொம்பனிக்கு எதிராய் ஏதோ துரோகஞ் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிற் பிடித்துத் தூக்குக்குடிக்கு ஏற்றிவிட்டான். இதினால் கொழும்புக் கத்தோலிக்கர் கெடிக்கலங்கியிருந்தார்கள். ஆகவே, அவர்கள் மத்தியிற் சென்ற பேர்ணாண்டெஸ் சுவாமியாருக்கும் இல்லிடங் கொடுக்க மறுத்துவிட்டார்கள். ஆதலால், இவரை சாங்கோபாங்க சுவாமிகள் காலிக்கு அனுப்பிவிட்டு, கண்டி அரசருக்கும் நியாயஞ் சொல்லிவைத்தார். ஏனெனில், சிறிது வைத்தியத்திலும் தேர்ந்திருந்த இச்சுவாமியாரை அரசர் தம்முடைய குடும்பத்துக்கு வரும் நோய்களுக்கு மருந்து செய்யும்படியாக அரண்மனையை விட்டு நெடுங்காலம் நீங்கியிருக்கப்படாது என்று கேட்டிருந்தார். இச் சுவாமியார் காலியிலே அலுவலைமுடித்து அங்குருங்கெட்டைக்குத் திரும்பியபின், சுவாமிகளே அரசர் கொடுத்த மெய்க்காவலரோடு கொழும்புக்குச் சென்று, அரசர் தம்மிலேமட்டும் நம்பிக்கை வைத்துப் பார்த்தனுப்பச் சொல்லி அனுப்பிய அலுவல்களை முடித்துவிட்டுத் தமது தேவ ஊழியத்தை நடப்பித்தார்.

"கொழும்பிலே, எல்லாரும் காத்திருந்ததற்கு மாறாக, அவர், யாதொரு தடையும் இன்றி, இலகுவாய் ஊழியம் செய்யத்தக்கதாயிற்று. அரசரின் அலுவல் முடிந்தவுடன் தாம் இன்னும் சிலகாலம் நின்றுவர விரும்புவதாக அரசருக்கு அறிவித்துவிட்டு, அப்பால் நீர்கொழும்புக்குப் போய், அங்கே வெகு சித்தியோடு வேலைசெய்கிறவரானார். இம்முறை நூறு குடும்பம் வரையிற் கொண்ட ஒரு கிராமம் முழுவதற்கும் வேத சத்தியங்களை நன்றாய்ப் பயிற்றி ஞானஸ்நானம் கொடுத்தார். இன்னும் சிலரைத் திருச்சபையின் மடியிற் சேர்க்கக்கூடியதாயிருந்தும், அவ்வேலையை வேறொரு தக்ககாலத்தில் செய்யப் பின்போட்டுவிட்டு, அரசருடைய நாடுகளுக்குட் சென்றார். அங்கு பித்திக்கல் கோறளையிலே தாம் கட்டுவித்த இரண்டு கோவில்களையும் ஒழுங்குபடுத்தினார். ஒன்று நீர்கொழும்புக்கு அணிமையில் ஆற்றுக்கப்பால் இருந்தது. மற்றது கள்ளச் சிலாவம் (கச்சிறாவ) எனும் இடத்திலாம். அங்கே நீர்கொழும்பிலும் பிறபகுதிகளிலும் இருந்து வந்த தொகையான சனங்கள் குடியேறி பெரிய கிராமமாய் வசித்திருந்தார்கள்."



## புத்த உன்னான்சை சத்தியவேதத்தில் சேருதல்

சாங்கோபாங்க சுவாமிகள் கொழும்பில் நின்ற நாட்களில் கண்டியிலிருந்து வெகு ஆடம்பரத்தோடு வந்த ஒரு புத்த உன்னான்சை, கவணரின் உத்தரவோடு மாத்தறைக்குச் சென்று கொழும்புக்கு மீண்டபோது, சிங்களக் கிறீஸ்தவர்களோடு புழங்கத் தொடங்கி, சுவாமிகளைப் பற்றியும் கேள்விப்படலானார். சுவாமிகள் சிங்களத்திலே புலமையுள்ளவரும் தர்க்கத்திலே நிபுணரும் என்று உன்னான்சை அறிந்து, அவரைக் கண்டு பேச ஆசைப்பட்டார். ஆகவே, சுவாமிகள் வேஷம் மாறிக்கொண்டு போய் அவரைக் கண்டு சம்பாஷித்தபோது, அவருடைய புத்தசமயம் மனுஷாது இருதயத்தைத் திருத்திப்படுத்தமாட்டாது என்று காட்டவே, உன்னான்சைக்கு, சத்தியவேதத்தை அறியவேண்டும் எனும் விருப்பம் கிளருவதாயிற்று. சுவாமிகள் நகரியை விட்டுப் புறப்பட்டபோது உன்னான்சையும் அவரோடு கூடிப்போய், மெல்ல மெல்ல மனந் தெளிந்து, வேதத்தில்சேர ஆசைகொண்டிருந்தபடியால், சுவாமிகள் அவரை வேதசத்தியங்களில் நன்றாய் தெளிவித்து மரிசலின் எனும் நாமதேயத்தோடு அவருக்கு ஞானஸ்நானமும் கொடுத்தார். ஆயினும், இதையிட்டுக் கண்டியிராச்சியத்திலே பெரும் கொந்தளிப்பு உண்டாகும் என்றும் அரசர் வெறுப்படைவார் என்றும் சுவாமிகள் பயப்படவேண்டியிருந்தது. முக்கியமான சில கண்டிக் கிராமங்களில் சில பிரபலமான ஊரதிகாரிகளும் அவர்களுக்குக் கீழ்ப்பட்டோரும் மனந்திரும்

பியதின் நிமித்தம், சுவாமிகள் கண்டியிலிருந்து புறப்பட்டவுடனே, ஏலவே கலவரம் ஏற்பட்டிருந்தமை அவருக்குத் தெரிந்திருந்தது. ஆகவே, மரிசலின் இலங்கையில் நிற்பது ஆபத்துக்கு ஏதுவாகும் என்று அவர் நினைந்தது போலவே மரிசலினும் நினைத்தார். இவர் இலங்கையை விட்டுப்போய் ஒரு கத்தோலிக்கு நாட்டில் வசிக்க விரும்பியபடியால், சுவாமிகள் இவரைக் கோவைக்கு அனுப்பி, மேற்றிராணியாருக்கும் தியான சம்பிரதாய முதலாளிக்கும் இவரைச் சிபாரிசு செய்துவிட்டார். மரிசலினுக்கு இடைவழியில் அம்மை கண்டும் குணமாக்கப்பட்டு, அற்புதச் சிலுவைச் சம்பிரதாய மடத்திற்போய்ச் சேர்ந்தார். அங்கு இவர் "எவரும் விரும்பத்தக்க விதமாய் நல்ல கத்தோலிக்கராகச் சீவித்து வந்தார்" என்று செய்தி வந்தது.

## புது எதிரிடைகள் முளைகட்டுதல்

1727-ம் ஆண்டில் குஸ்தோடியு தெ அண்டிராடேயும் யோசேப் பெறெயிருவும் எனும் இரு குருமார் இலங்கைக்கு வந்தார்கள். பிந்தியவர் சாங்கோபாங்க சுவாமிகளோடு கண்டியில் வேலைசெய்ய நியமிக்கப்பட்டார். இரு சுவாமிமார் புதிதாய் வந்தபோதிலும், இத்தீவில், குருமார் தொகை அதிகப்படவில்லை. ஏனெனில், அவ்வருஷமே அந்தோனியு தெ தவோரு சுவாமியார் மாதோட்டத்திலும், தமியான் வலேறியானு சுவாமியார் கண்டியிலும் பரமபதம் அடைந்துவிட்டார்கள். சாங்கோபாங்க சுவாமிகள், புதிதாய்த் தம்மோடு அமர்த்திக்கொண்ட சுவாமியார் ஒருவர் இருக்கும்போது, தமது ஓயாத பயணங்களும் அலைக்கழிவுகளும் குறைந்து தாம் ஆறியிருந்து எழுத்து வேலையில் அதிக நேரம் போக்கலாம் என்றிருந்தது வாய்க்காமற்போயிற்று. ஆயினும், கிறிசோஸ்தொம் பெர்ஞ்ஞண்டெஸ் சுவாமியார் தம்முடைய மூப்பரின் அடிச்சுவட்டிலே கொஞ்சமாகிலும் பின்பற்றி நடக்கத் தக்கவரானார். அவர் நாட்டின் பாஷைகளை போதியளவு கற்றுக்கொண்டு, மிஷன் வேலைகளில் அதிக உற்சாகமும் சுறுசுறுப்பும் காட்டியதோடு, நரேந்திரசிங்க ராசாவுக்குப் பிரியமுள்ளவராகவும் சிங்கள நூல்களில் விசேஷ விருப்புடையவராகவும் விளங்கினார். சாங்கோபாங்க சுவாமிகளுடைய நூல்களை அவர் திருப்பித்திருப்பிப் படித்து, அவைகளைக் கையினாற் பிரதிபண்ண நியமிக்கப்பட்ட எழுத்தாளர்களை மேற்பார்த்து அவர்கள் விடும் பிழைகளையும் திருத்தத்தக்கவரானார். சுவாமி



களுடைய நூல்களைப்பற்றிய மதிப்பு நாளொருவண்ணம் பொழுதொரு மேனியாய் வளர்ந்து கொண்டுவரவே, அச்சியந்திர உதவியில்லாதபடியால், வெகு செலவுபண்ணிக் கையெழுத்தாகவே பிரதிகளைப் பலுகச்செய்ய வேண்டியதாயிருந்தது என்றதை இங்கு நாம் அறியத்தகும். அந்நாட்களில் நரேந்திர சிங்கராசா அங்கிருங்கெட்டையை விட்டு கண்டிக்குத் திரும்பி வந்துவிடவே, கிறிசோஸ்தொம் சுவாமியாருக்கு அரண்மனையாரோடு வசிக்கும் அலுப்பு இல்லாமற்போய், சாங்கோபாங்க சுவாமிகளோடு கோயிலில் தங்கும் சிலாக்கியம் கிடைப்பதாயிற்று. இரு குருமாருக்கும், அரசர், முன்போலவே அன்பின் அடையாளங்களைக் காட்டிக்கொண்டு வருவார். நத்தாலுக்கும் உத்தானத் திருநாளுக்கும், அரசர், அரண்மனையிலிருந்து போதிய மெழுகுதிரி அனுப்புவார். ஆயினும் மிஷனறிமாரை எதிர்த்து வேலைசெய்த கட்சியோ வரவரப் பெலத்துக்கொண்டு வந்தமை சாங்கோபாங்க சுவாமிகளுக்குப் பயங்கரமாயிருந்தது. ஒல்லாந்தரும் அந்த எதிர்க்கட்சியைத் துணையாகக்கொண்டு, அரசர் குருமாருக்குப் பாதுகாவலாய் இராமற் பண்ணிப்போட முயன்று நின்றார்கள். அவர்கள் கண்டிக்குத் தூது அனுப்பும் போதெல்லாம் "அரசருடைய நாடுகளில் நிற்கும் குருமார் அவருடைய இராச்சியத்துக்கு ஆபத்து விளைவிப்பவர்கள் என்றும், அவர்கள் போத்துக்கேயருடைய வேவுகாரர் என்றும், ஆதலால் அவர்களை அரசர் துரத்திப்போட வேண்டும் என்றும் எடுத்துக்காட்டுவார்கள். அரசரோ ஒரு அஞ்ஞானி. அவர் ஆலோசனை செய்துகொண்டு ஏதாவது தீர்மானம் செய்கிறவரல்ல. அத்தீர்மானங்களுக்கு மேலே அபயமிடவும் வழியில்லை. எதிர்பேசி நியாயங்காட்டவும் இடமில்லை. ஆதலால் இவ்விஷயத்திலே பயப்படக் காரணமாகிறது."

சாங்கோபாங்க சுவாமிகள் ஒல்லாந்தருடைய வஞ்சகச் சூழ்ச்சிகளைப்பற்றி அரசரைத் தெளிவிக்கப் பலகாலும் முயன்று அவர் மனதை உண்மைக்குச் சார்பாக மாற்றிவிடுகிறவரானார். "கிறீஸ்தவர்களுக்கும் மிஷனறிமாருக்கும் மாறாக அஞ்ஞானக் குருக்களும் பிறரும் எழுப்பிய எத்தனையோ கார்மேகங்களை அவர் கலையச் செய்துவிட்டார். அரசரது தீர்ப்புக்கள் எப்போதும் கிறீஸ்தவர்களைச் செய பேரிகை முழக்கச் செய்ததினால், சத்துருக்கள் நாணமடைவோரும் பதிதர்கள் தங்கள் ஓட்டங்களைக் கைவிடுவோருமானார்கள். அரசருடைய அரண்மனையில் வசிக்கும் குருமார் துரோகிகளும் போத்துக்கேயரின் வேவு

காரரும் என்றும் இராச்சியத்தின் நிலையை அப்போத்துக்கேயருக்கு வெளியாக்கி அன்னோர் இத்தீவில் மறுபடியும் நுழைய வழி திறந்துவிடுவோர் என்றும் பதிதர் அரசருக்குத் தங்கள் அறிக்கைகளாலும் தூதுக்களாலும் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டுவந்த அபாண்டத்தை அழித்துவிடுவதிலே கொன்சால்வெஸ் சுவாமியார் விசேஷ சித்தியடைந்துகொண்டு வந்தார். அரசர் அந்த விரோதிகளுக்கு மறுமொழியாக: சுவாமிமாரையும் அவர்களுடைய இராச விசுவாசத்தையும் தாம் நன்றாய் அறிவோம் என்றும், அவர்கள் கிறீஸ்துவேதத்தை பரப்புவதையே தங்கள் ஏகநோக்கமாய்க் கொண்டவர்கள் என்றும், ஆதலால் அவர்களால் தமக்கு எவ்வித தீங்காவது விளையும் என்றல்ல, சமாதானமும் நல்வாழ்வும் உண்டாகும் என்றே நம்ப இடமுண்டு என்றும் எப்போதும் சொல்லி வருவார்."

## ஒரு கோயில் இடிபடல்

மிஷனறிமார் பயந்திருந்த தீங்கோ விரைவில் நேரிடுவதாயிற்று: சாங்கோபாங்க சுவாமிகள் ஒல்லாந்த நாடுகளிலே சோதனைக்கு கத்தோலிக்கு கிராமங்களை ஏற்படுத்திப் பார்த்தார். அதெப்படியெனில், சத்தியவேதத்திலே சார்புள்ள சனங்கள் ஓரிடத்திலே இருந்தால் அவர்கள் மத்தியிலே சில கத்தோலிக்கு குடும்பங்களைக் குடியேற்றிவைத்து, அவர்களை அடிக்கடி போய்ப்பார்த்து, அவர்களுட் தம்முடைய நூல்களைப் பரப்பியும் அவர்களோடு வேதத்தைப்பற்றிப் பேசியும் கொண்டுவர முழுக்கிராமமும் மனந்திரும்பிவிடும். வேறிடங்களில், அவர், ஒல்லாந்த அரசாட்சியுள் இருந்த கத்தோலிக்கர்களைக் கண்டியரசரின் ஆட்சிக்குள் போய் வசித்து தங்கள் வேதக்கடமைகளை நடப்பித்துக் கொண்டுவரப் பண்ணுவார். இவ்விதமான சில கிராமங்கள் மகா ஓயாவுக்கு வடக்கே உண்டாக்கப்பட்டன. பிற்றிகல் கோறளையிலுள்ள கச்சிறுவா எனும் கிராமம் அவைகளுள் ஒன்று. இது விரைவிலே விருத்தியாகி ஒரு கத்தோலிக்கு நடுவிடமாய் வந்ததினால், இங்கே ஒரு விசாலமான ஆலயம் நன்றாகக் கட்டியிருந்தது. இந்தக் குடியேற்றத்தை அயல்வாசிகளான புத்தர் கண்டு, இது சவி கொண்டு எழும்பாமற் தடுக்கத் தங்களால் ஆனபிரயாசமெல்லாம் பட்டார்கள். ஈற்றில், ஒல்லாந்தருடைய நடபடிகளைப் பின்பற்றியும், ஓர்வேளை கண்டியிலுள்ள விரோதிகளாற் தூண்டப்பட்டும் போலும், அவர்கள், திசாவை எனும் மேலுத்தி



யோகத்தனுக்கு மனுப்பண்ணி: "கத்தோலிக்கர் கட்டியிருப்பது கடற்கரையில் எழுப்பிய ஒரு கோட்டைபோல் இருக்கிறது என்று முறைப்பட்டார்கள். திசாவை இதையும் வேறு அபவாதங்களையும் கேட்டு, கோயிலைப் பார்த்துவரத் தன் சேவகர்களை அனுப்பினான். இது கத்தோலிக்கருக்கு திகிலும் ஆச்சரியமும் விளைப்பதாயிற்று."

சாங்கோபாங்க சுவாமிகள் இதைக் கேள்விப்பட்டவுடனே கண்டிக்குப் போய், நடக்கப்போகிற சம்பவத்தைப்பற்றி அரசருக்கு அறிவித்து, காரியத்தை உள்ளபடி எடுத்துக்காட்டினார். ஆயினும், எதிரிக் கட்சியார் அரசரை முந்திக் கண்டு கொண்டபடியால், சுவாமிகளுக்கு வழக்கமான சித்தி கிடையாமற் போயிற்று. சத்துருக்கள் சொல்லியதை அரசர் நம்பாவிட்டாலும், புத்த உன்னுன்சைமாரின் செல்வாக்கு அந்நாட்களில் அதிகப்பட்டிருந்ததினாலும் இது திசாவைகளின் அதிகாரத்தில் விடப்பட்ட ஒரு விஷயமாயிருந்தபடியாலும் சுவாமிகளுக்கு அணைவாகப் பேசமாட்டாமலிருந்தார். ஆயினும், கச்சிறுவாக் கோயில் இடிபடாமற் காப்பாற்றுவதற்கு ஒரு வழியை அரசர் மறைபொருளாகக் காட்டினார். அதாவது, அரசருடைய நாயக்க வமிச இனத்தவர்களுள் ஒருவர் அவருக்குப் பின் சிங்காசனம் வகிக்க இருந்தபடியால், அந்த அரசுரிமைக்காரனுக்கு ஒரு நல்ல சந்தோஷம் கொடுத்தால் காரியம் ஆகும் என்று விளங்கவைத்தார். சுவாமிகளிடத்திலோ பொருளில்லை ஆதலால், எதிரிகள் தங்கள் எண்ணப்படியெல்லாம் செய்ய இடங்கிடைத்தது. திசாவையின் கட்டளைப்படியே கோயில் இடிக்கப்பட்டது. அதினால் கிறீஸ்தவர்களுக்கு உண்டான துக்கம் சொல்லுந்தரமல்ல. சுவாமிகளோ அரசருடைய சொந்தக் கருத்து எப்படிப்பட்டது என்று அறிந்தவராகையால், வெள்ளவத்தை எனும் போளவத்தையிலே சில நாட்களுக்கெல்லாம் ஒரு புதுக் கத்தோலிக்கு குடியேற்றம் உண்டாக்கத் துணிந்தார். நாளடைவில் அது செழித்தோங்கி ஒரு முக்கியமான தலைத்தானமாயிற்று.

## அசையாத குருசுப்பிக்காசு

அந்நாட்களிலே கொழும்பு நகரிக்கு வெளியேயிருந்த ஒரு சிறுக் கோயிலில் ஒரு அதிசயம் நடந்தது. கொழும்புக்கு அணிமையில் வில்லிவீதிய (வெலிவிற்ற அல்லது வெலிவேரிய?) எனும் கிராமத்தில் சாங்கோபாங்க சுவாமிகளால் மனந்திரும்

பிய சில கிறீஸ்தவர்கள் வசித்தார்கள். குருவேட்டையாடிக்கொண்டிருந்த ஒல்லாந்த சொலுதாதுகள் அந்தக் கிராமத்திலே ஒரு குருவானவர் ஒளித்திருக்கிறதாகக் கேள்விப்பட்டு அவரைத்துரத்த வருகிறார்கள் என்று அறிந்த கிறீஸ்தவர்கள், பீடத்தைக் கழற்றி அதன்மேலிருந்த குருசுப்பிக்காசையும் எடுத்து மறைத்துவைக்கத் துரிதப்பட்டார்கள். ஆயின், அவர்கள் எவ்வளவு பிரயாசப்பட்டபோதிலும், அறையுண்ட சுரூபத்தை எடுக்க முடியாமற் போய்விட்டது. அது அடுத்தாரோடு ஒரே பலகைபோலச் சேர்ந்திருந்தது. அதன்மேல் வைத்திருந்த மேலாப்பும் அப்படியே ஒட்டிக்கொண்டிருந்தது. ஆதலால், அடுத்தாரை குருசுப்பிக்காசோடும் மேலாப்போடும் ஒருமிக்க மூடி மறைக்கவேண்டி நேர்ந்தது. இந்த அதிசயத்தைக் கண்டு, அக்கிறீஸ்தவர்கள், அந்நாட்களில் சீத்தாவக்கையில் நின்ற சுவாமிகளுக்கு இதை அறிவிக்க ஆள் அனுப்பினார்கள். சுவாமிகள் நம்பிக்கையுள்ள சிலரை அங்குபோய்ப் பார்க்க விட்டபோது, இவர்கள் குருசுப்பிக்காசும் பலகையும் ஒன்றிப்போய் ஒரு பலகைபோலிருக்கக் கண்டார்கள் என்று அந்நாட்களில் எழுதப்பட்ட வரலாறுகளிற் காண்கிறோம்.

## கவணர் செய்த அட்டூழியமும் கெட்டகேடும்

வுயிஸ்ற்று எனும் ஒல்லாந்த கவணர் இதற்கிடையில் தனது கொடுமையான ஒழுக்கத்தில் வரவர வேரூன்றிக்கொள்ளவே, சொலுதாதுமார் தன் உயிருக்குத் தீங்குசெய்ய ஆயத்தப்படுத்துகிறதை அறிந்து, தனது வீட்டுக்கு ஆயுதபாணிகளான சேவகரையும் துப்பாக்கிக்காரரையும் காவல் வைத்துக்கொண்டு, நகரியிலிருந்த ஐந்து கூட்டம் காவற் சொலுதாதுகளையும் வேறு இடங்களுக்குப் போக்கிவிட்டான். பின்பு, தனக்கு மாறாகச் சதியாலோசனை பண்ணினார்களென்று தான் சந்தேகப்பட்டவர்களை ஒவ்வொருவராய் நகரிக்கு வரச்செய்து, அன்னாரை மிருகத்தனமாய்க் கொல்லுவித்தான். அவர்கள் தொகை இருபத்தைந்துக்கு மேற்படும். அவர்களுள், சற்றேனும் குற்றமற்ற சில கத்தோலிக்கர்களும் இருந்தார்கள். நிரபராதிகளான இந்தக் கத்தோலிக்கரைக் கொன்ற செய்தி ஓர்வேளை வத்தாவியிலுள்ள மேலதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டால் தன்னில் பிழைவரும் என்று அஞ்சி, கொழும்பில் முக்கியஸ்தரான கத்தோலிக்கர்கள் "குருமாருடைய தூண்டுதலினால்" போத்துக்கேயருக்கு கோட்டையைப் பிடித்துக் கொடுக்கச் சதியாலோசனை செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை ஏற்படுத்தினான். அந்த முக்கிய மனுஷரில் ஒருவர் பெஞ்சமின் பெருளொற்றி என்பவர். "இவர் சாதியில் பிராஞ்சியரும் கொழும்பு நகர வாசிகளுள் அதிக பிரபலியமுள்ள ஒரு மேன்மகனுமாவர். இவருக்கு வெகு ஆஸ்திபாஸ்திகளும் குடும்பமும் இனசனமும் உண்டு. இவர் ஒரு கத்தோலிக்கர்மட்டுமல்ல, திருச்சபைக்கு ஒரு தம்பமாயும் விளங்கியவர். எப்படியெனில், இவர் கத்தோலிக்கருக்கு விரித்த கைகளோடு பலவிதமான உதவிகளையும் செய்வார். குருமாருக்கு இடக்கை வலக்கையாய் நின்று அவர்களைத் தமது இல்லத்தில் வைத்துப் பாதுகாப்பார். அவர்கள் கொழும்பில் மிஷன்வேலை செய்வதற்கு வேண்டிய தருமமும் கொடுத்து வழிவகைகளையும் காட்டிவிடுவார்." ஈனம் இரக்கம் அற்ற கவணர் இவரைப் பிடித்து, "இவருடைய எலும்புகளை முறித்து 'தசையைக் கிழித்து, தலையைக் கோடரியால் தறித்து, உடலைப் படலிற் போட்டு இழுத்துக்கொண்டு போகவும் சிரசை ஓர் கம்பத்திற் குற்றி நாட்டிவிடவும்" கட்டளைபண்ணினான். அந்தந்தோ! இந்த நிஷ்டூரமெல்லாம் போதாதென்றாற்போல, இவருடைய வீட்டையும் இடித்துத் தரைமட்டமாக்கி அது நின்ற இடத்திலே தன்னால் எழுதப்பட்ட ஒரு கல்வெட்டையும் ஒரு தூணிற் பொறித்து நாட்டிவைத்தான். அப்பால், யாழ்ப்பாணப் பட்டினத்தின் முதன்மையான கத்தோலிக்கரான வித்தோரியானு தெ பறேஸ் லெயித்தாமையும் பிடித்து அடைத்துக்கொண்டு, கண்டியரசனுக்கும் பிரதானிகளுக்கும் தூது அனுப்பி, "தான் கொழும்பிலே சதியாலோசனையின் கொப்புகளைத் தறித்துப் போட்டதாகவும், அடிமரமாகிய கத்தோலிக்கு குருமார் கண்டியிலே வெளிகொண்டு நிற்கிறார்கள் என்றும், அரசரும் பிரதானிகளும் வேரிலேதானே கோடரி போடவேணும் என்றும்" எழுதியிருந்தான்.

இது கண்டியிலே பெரும் அதிர்ச்சியை உண்டுபண்ணிற்று. சாங்கோபாங்க சுவாமிகள் அவ்வேளை சீத்தாவக்கையில் மிஷன் வேலை செய்துகொண்டு நின்றபடியால், கண்டியில் தனித்திருந்த யோசெப் பெறெயிறு சுவாமியார் பயப்படலானார். சுவாமிகள், இதை அறிந்து, உடனே கண்டியரசருக்கு காகிதம் எழுதி வுயிஸ்ற்றுவுடைய அந்தரங்க முகாந்திரங்களையும் செயல்களையும்பற்றி சகல விபரமும் கொடுத்து, தாம் விரைவிலே அரசர் சமுகம் போய் எல்லாம் விளங்கப்படுத்துவோம் என்றும் வாக்களித்தார். சுவாமிகளின் காகிதத்தினால் அரசர் மனம்மாறி, நகரியிலே செய்யப்பட்ட ஆயத்தங்களை

எல்லாம் நிறுத்திவைத்தார். கடற்கரையின் சில பாகங்களில் வைத்த காவல் மட்டும் சிறிது காலம் நிறுத்தப்படாமலிருந்தது. ஆயினும், குருமாருக்கு அரண்மனையிலேதானே விரோதிகள் இருந்தபடியால், "சுவாமிமார் தங்களுக்கு எப்போதும் உண்டான ஆபத்தை நன்றாய் அறிந்துகொண்டு, தாங்கள் இன்னும் சாவுக்குத் தப்பிக்கொண்டதில்லை என்று நினைத்தார்கள்."

வுயிஸ்ற்று தண்டனையடையாமற் போனதில்லை. வத்தாவியின் மேலரசினர் கொழும்புக்கு ஒரு புதுக் கவணரை அனுப்பி, முந்தின கொடுங்கோலனை விளங்கித் தீர்ப்பிடுவதற்குத் தங்களிடம் அழைத்தார்கள். விசாரணைபண்ணியபோது அவனிற் குற்றங்கண்டு, அவன் கொலைத் தண்டனைக்கு உட்படவும் அவனது உடலைத் துண்டாடி எரித்து சாம்பலைக் கடலில் வீசவும் கட்டளையாயிற்று. அநியாயமாய்க் கொலையுண்ட பெகுளொற்றியின் வீட்டை அரசினர் புதிதாய்க் கட்டிவைத்தார்கள் அதிலே

"அடாத்தால் எடுத்தது
நீதியால் கொடுத்தது"

என்ற பொருளுள்ள ஒரு கல்வெட்டும் அமைக்கப்பட்டது.

இந்தச் சண்டமாருதத்தை எல்லாம் தாங்கிக்கொண்டு திருவூழியம் நடத்திவந்த சாங்கோபாங்க சுவாமிகளைப்பற்றி அவரோடு மீசாம்பார்த்த ஒருவர் 1729-ம் ஆண்டில் பின்வருமாறு கோவைக்கு எழுதினார்:— "கொன்சால்வெஸ் சுவாமியாருடைய மகா வேதஅபிமானம் எவ்வளவிற் போகிறது என்றால், அவருக்கு இத் தீவு அடங்கலும் சத்தியவேதத்தைப் பரப்பிப்போடுவதற்கு வழிவகைகளைத் தேடுவதிலேயன்றி வேறொன்றிலும் கருத்தில்லை. அவர் பிரசங்கிப்பதினால் மாத்திரம் அல்ல, தமது எழுத்துக்களினாலும் மிஷன் ஊழியத்தை நடத்தி வருகிறார். ஓயாமல் புத்தகங்களை வாசித்துக்கொண்டிருக்கிறார். இதிலே அவர் இரவில் நித்திரையில்லாமல் வெகுநேரம் போக்கி, நாட்டின் பாஷைகளிலே நூல்களை உண்டாக்கி, அவைகள் மூலமாய் கிறீஸ்துவேத சத்தியங்களையும் பரமரகசியங்களையும் விளங்கப்படுத்தியும் பதிதருடைய தப்பறைகளையோ அஞ்ஞானிகளுடைய குருட்டுப் பத்திகளையோ இவை முதலானவைகளைக் கண்டித்தும் வருகிறார். இதனால் ஆத்துமாக்களுக்கு வெகு பலனைச் சம்பாதித்துக்கொள்ளுகிறார்."

# பத்தாம் அதிகாரம்

## மறுபடியும் தலைமை வகித்தலும் மனந்திரும்புதல்கள் மிகுத்தலும்

பேதுரு தெ சல்தாஞ்ஞா சுவாமியார் 1730-ம் ஆண்டு சித்திரை 28-ம் திகதி இறைவனடி சேர்ந்துவிட, சாங்கோபாங்க சுவாமிகள் மீண்டும் ஒருகால் இலங்கைத் தியானசம்பிரதாயத்தின் தலைவரும் கொச்சி மேற்றிராணியாரின் பதிலாளியுமானார். இந்த இரு உத்தியோகங்களையும் அவர் இனிச் சாகுந்தனையுமே தாங்கவிருந்தார். அப்போது அவருக்கு வயது ஐம்பத்துநாலு. சுவாமிகள் இரண்டாம் முறை தலைவராகத் தெரியப்பட்டதைப்பற்றி கொச்சி மேற்றிராணியாராகிய யேசுசபை டொம் பிராஞ்சிஸ்கு தெ வஸ்கொன்செலொஸ் ஆண்டவர் கோவைத் தலைவருக்கு எழுதியதாவது: "யாக்கோமே கொன்சால்வெஸ் சுவாமியாரை மிஷன் தலைவராக நியமித்ததிலே வெகு புத்தியாய் நடந்துகொண்டீர்கள் என்று எண்ணுகிறேன். ஏனெனில், அவருடைய வயதும் அனுபவமும் அவரைச் சகலரும் நன்கு மதிக்கச் செய்திருக்கின்றன. விசேஷமாய், அவருடைய சொந்த நற்குணங்களும் அவர் தேவ மகிமைக்காகக் காட்டிவரும் தளராத அபிமானமும் போற்றப்படத்தக்கன. சமீபகாலத்தில் அவர் எழுதிய ஒரு கடிதத்தில் அவருடைய பிரயாசைகளைப்பற்றி வாசித்து மிகவும் சந்தோஷம் அடைந்தேன். அந்த அன்புக்குரிய கத்தோலிக்கு சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்காகவும் முன்மாதிரிக்காகவும் அவர் எழுதியிருக்கிற பல நூல்களைப்பற்றியும், கர்த்தருடைய அந்தத் திராட்சத்தோட்டத்தில் நடைபெற்றுவரும் அரிய பெரிய காரியங்களைப்பற்றியும் அறிந்திருக்கிறேன்" என்று எழுதினார்.

உள்ளபடி, சாங்கோபாங்க சுவாமிகளே இலங்கை மிஷனை நடப்பிக்க எல்லாவிதத்திலும் தக்கவர் என்றதற்கும், அவர் மற்றக் குருமாருக்கு வழிகாட்டி ஆண்டவருடைய சுவிசேஷத்தை ஏற்றவிதமாய் இத் தீவில் பரப்புவதிலே அவர்களைச் சித்திகரமாய் உழைக்கப்பண்ணக் கூடியவர் என்றதற்கும் எள்ளளவேனும் சந்தேகம் இருக்கவில்லை. யோசே வாஸ் முனிவருடைய கூட்டாளிகளுள் அவரே இன்னும் சீவந்தராய் இருந்தவர் அல்லவா? முனிவர் தொடங்கிவிட்ட கத்தோலிக்கு புதுமலர்ச்சி சவிகொண்டு நடைபெறச் செய்வதில்

அவரே அதிகமாய் இருபத்தைந்து வருஷகாலம் உழைத்தவர் அல்லவா? இலங்கை முழுவதும் அவர் அறியாத பாகம் இல்லை. இங்குள்ள சகல சாதி சனங்களின் பழக்கவழக்கங்கள் தப்பெண்ணங்களெல்லாம் அவருக்குப் பழம்பாடம். பத்தியிற் போலக் கல்வியிலும் சிறந்தவராகையால், இத் தீவின் பாஷைகளாகிய சிங்களம் தமிழ் போத்துக்கேயம் எனும் மூன்றிலும் வேததர்க்கத்துக்காக நூல்கள் எழுதியிருந்தார். அவைகளால் விளைந்த நற்பலனை அவர் கண்டு, கல்வீனிய பதிதருக்கும் அறிவுறுத்தும்படியாக அவர்களுடைய ஒல்லாந்த பாஷையை அதி பிரயாசையோடு கற்றுக்கொண்டு, அதிலும் தர்க்க நூல்களெழுதிப் பரப்பினார். அத்தோடு மிஷனறிமாருக்கு உதவியாக, ஒழுக்ககாண்டத்திலே நிகழும் சந்தேகங்களுக்கு வெளிப்படை காட்டுகின்ற ஒரு நூலையும், போத்துக்கேய பாஷைச் சொற்களுக்கு தமிழும் சிங்களமும் கொண்ட ஒரு அகராதியையும் இயற்றியிருந்தார். இந்த அகராதியை ஒவ்வொரு குருவானவரும் படியெடுத்து வைத்துக்கொண்டார்கள். பதினெட்டாம் நூற்றாண்டில் இலங்கையிலே வழங்கிவந்து பின்பு வழக்கு ஒழிந்துபோன சில தமிழ், சிங்களச் சொற்களுக்கு இந்த அகராதி ஒரு நல்ல சாட்சியாயிருப்பது பாஷை ஆராய்ச்சியாளருக்குச் சுவை தருவதாயிருப்பதை நாம் இங்கு குறிக்கத்தகும்.

சாங்கோபாங்க சுவாமிகள் இலங்கை மிஷனை முன்னின்று நடத்துவதிலே நற்பயன் அடையச்செய்த துணைக்காரணங்களுக்குள்ளே அவர் நரேந்திரசிங்க ராசாவுடைய விசேஷ மதிப்பைப் பெற்றிருந்தமையும் ஒன்று. அரசர் சுவாமிகளோடு தமது சிறுவயதிலேயே அறிமுகப் பட்டுவிட்டார். வளரவளர அவர் இவர்பேரிற் கொண்ட விருப்பும் வளர்ந்துகொண்டு வந்தது. அவர் சுவாமிகள்மட்டிற் கொண்டிருந்த கண்ணியத்தைப் பற்றி கோவைக்கு ஒரு சுவாமியார் எழுதியனுப்பிய அறிக்கையொன்றிலே பின்வருமாறு சொல்லியிருக்கிறது: "கண்டியரசர் கர்வம் மிகுந்த ஒரு மன்னர். அவரது கர்வம் எவ்வளவுக்குச் செல்லுகிறது என்றால், தம்முடைய பிரசைகளோடு கலந்து பேசுவது தமது இராசமகத்துவத்துக்கு ஈனம் என்று எண்ணிக்கொள்ளுகிறார். குடிகளும் அவரை எவ்வளவு கனம் பண்ணுகின்றன எனில், அவர்களுக்கு அவர் பிரசித்தமாய்ப் பேட்டி கொடுக்கும் வேளைகளில் அவர் ஓர் திரைக்குப் பின்னாலேயே சிங்காசனத்தில் வீற்றிருப்பார். யாக்கோமே கொன்சால்வெஸ் சுவாமியாருக்கோ, இந்த இடம்ப ஆசாரம் ஒன்றும்



இல்லாமல் தனிப்பேட்டி கொடுத்து, உற்ற சிநேகிதனோடு போலச் சம்பாஷிப்பார். இன்னும் இவருக்கு அதிக சங்கையும் மதிப்பும் காட்டும்பொருட்டு, தமது கையெழுத்தும் இராச முத்திரையும் இட்ட கடிதங்களைத்தானும் இவருக்கு எழுதுவார். இராசவரியில் உள்ளவர்களுக்கே அல்லாமல் வேறு ஒருவருக்கும் அவர் இதுவரையில் இப்படி எழுதியதில்லை. ஒல்லாந்தக் கொம்பனியார் தமக்கு இராச தூது அனுப்பும் வேளைகளில், அரசர் அவர்களுக்கு எழுதும்போதும், தாமாக ஒருபோதும் கையெழுத்துப் போடுவதில்லை, தமது முத்திரையிடுவதுமில்லை. லிகிதர் மூலமாகவே அவைகள் எழுதி கையெழுத்திட்டு அனுப்பப்படும். இந்தச் சுவாமியாருக்கு மாத்திரம் தமது மதிப்பைக் காட்டி அவ்வித தயவைப்பண்ணுவார். இது ஒரு அபூருவமான தயவு என்றபடியால், அரசருடைய காகிதத்தைச் சுமந்துபோகும் அஞ்சற்காரன் அதை ஒரு பரிசுத்த பண்டம்போல ஆடம்பரமாய் ஊருக்கூராய்க் கொண்டு சென்று சுவாமியார் வசிக்கும் இடமாகிய புத்தளத்திற் சேர்ப்பான். இதெல்லாம் இலங்கையின் கர்வம்படைத்த எம்பிறதோர் சுவாமியாருக்குச் செய்கிற ஒப்பற்ற ஒரு சங்கை."

## புத்தளத்திற் குருமார் கூட்டம்

புது மூப்புச்சுவாமியார் புத்தளத்தில் வருஷாவருஷம் குருமார் கூடுகிற கூட்டத்திலே முதன்முதற் தமது உத்தியோக கடமைகளைப் பார்க்கலானார். இவரோடுகூட எட்டுக் குருமார் அங்கு போயிருந்தார்கள். அவர்கள் பெயர்கள் எவையெனில், கிறிசோஸ்தோம் வேர்னான்டெஸ் (இலங்கைக்கு வந்த ஆண்டு 1720) இஞ்ஞாசியு தெ மெஸ்குயித்தாவும் யோவாம் தெசாவும் (1725); குஸ்தோடியு தெ அந்திராதேயும் யோசேப் பெறெயிறாவும் (1727); விறாஸ் பெறெயிறாவும் அந்தோனி தெ பொன்சேக்காவும் யோசெப் பிக்கார்துவும் (1729) என்பவர்களாம். சாங்கோபாங்க சுவாமிகளின்கீழ் இந்த எட்டுக் குருமாரும் அந்நாட்களிலே இலங்கையின் மிஷனறிமாராய் உழைத்தவர்கள். சுவாமிகள் அவர்கள் முன்னிலையில் மிக முக்கியமான ஓர் ஆலோசனையைக் கொண்டுவந்தார். அது என்னவெனில், யோசே வாஸ் முனிவர், தமது குருத்துவ ஊழியங்களுக்காக கிறீஸ்தவர்களிடத்திலே ஒன்றும் வாங்காமல் விட்டதோடு, தம்முடைய கூட்டாளிகளும் அப்படியே செய்யவேண்டும் என்ற விருப்பத்தைக் காட்டியிருந்தார். குருமார், ஞானஸ்

நானம் விவாகச் சடங்கு பிரேதசேமச் சடங்கு இவைகளிலே கிறீஸ்தவர்களிடத்தில் தங்கள் சீவியத்துக்காக ஒவ்வொரு வேதனம் வாங்குவது முழுதும் நீதியான ஒரு முறை. "சுவிசேஷத்தைப் போதிக்கிறவர்கள் அதனாலே சீவிக்கவேண்டும்" என்பது கர்த்தருடைய திருப்போதகமுமேயாம். இப்படியே திருச்சபையில் எங்கும் எப்போதும் நடந்துவந்திருக்கிறது. இலங்கையிலோ, வேதகலாபனையினால், கிறீஸ்தவர்கள் மிக வறியவர்களாய்ப் போய்விட்டார்கள். கிறீஸ்தவர்கள் அல்லாதவர்களோ குருமாருடைய சீவியம் விசுவாசிகளிலே தங்கியிருப்பது எப்படியென்றதை விளங்கிக்கொள்ள மாட்டார்கள். இவர்களுக்குச் சரியான குருமாரில்லை; இவர்களுடைய சமய ஆசாரங்களை நடப்பிப்பவர்கள் பொதுவாய்ப் பிச்சையினாற் சீவிக்கிற துறவிகள் மாத்திரமே. இவர்களும், கத்தோலிக்கு திருச்சபையிலேயும் உள்ள வெறும் துறவிகளைப்போல, தேவதிரவிய அனுமானங்களைக் கொடுக்கும் தத்துவம் இல்லாதவர்களே. பிச்சை வாங்கிச் சீவிக்கிற குருமார் என்றதை இலங்கைப் பிறசமயிகள் மனதினாற் கருதவும் மாட்டார்கள். அத்தோடு, ஒல்லாந்தர் கத்தோலிக்கு குருமார் சீவனத்துக்காக மாரடிக்கிறவர்கள் என்று வம்பு அளந்துகொண்டிருந்தார்கள். ஆனதினாலேதான், முனிவர், இலங்கைக் குருமார் நீதியான திருச்சபை வரும்படிகளைத்தானும் பெற்றுக்கொள்ளாமல் தன்னயங் கருதாத ஊழியத்துக்கு முன்மாதிரி காட்டவேணும் என்று விரும்பினார். அவர்நாட்களில் சகல திருப் பணிவிடைகளும் முழுதும் இனாமாக நடத்தப்பட்டன. ஆயினும் இயல்புள்ள கிறீஸ்தவர்கள் தாங்களாய் மனங்கொண்டு கோயிலுக்கு அல்லது குருமாருக்கு ஏதாவது கொடுத்தால், முனிவர், கோயிற் தருமத்தைச் சேர்த்துவைத்துக் கோயிலுக்காகச் செலவுபண்ண அந்தந்தக் கோவிலுக்குச் சேர்ந்தவர்களில் ஒரு ஆளை நியமித்துவிடுவார். குருசம்ரட்சணைக்காகக் கொடுக்கும் தருமத்தையெல்லாம் மூப்புச் சுவாமியாரிடம் ஒப்படைத்துவிட, அவர் அதை மிஷனறிமாருடைய தேவைக்குத் தக்கபடி அவரவருக்குப் பகிருவார். மிஷனறிமாரையும் கோயில்களையும் தாபரிப்பதற்கு அதிகமான உதவியைக் கோவைப் பழங் கிறீஸ்தவர்களிடத்திலிருந்தே பெற்றுவருவார். பூசைத் தருமமோ வேறு ஒரு நிரையில் உள்ளது. திருச்சபைச் சட்டத்தின்படி, பூசைசொல்லும் குருவானவருக்கே அதற்காகக் கொடுத்த தருமம் உரியது. தியான சம்பிரதாயக் குருமார்



யாதொரு சன்னியாசச் சபையில் உட்பட்டவர்களல்ல; ஒரு தலைமைக் குருவானவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கப் பொருந்திக்கொண்டவர்கள். ஆனபோதிலும், திருச்சபை முறைப்படி அமைச்சல் வார்த்தைப்பாடு கொடுத்திராத மேற்றிராசனக் குருமாரேயாம். ஆதலால், எல்லா மேற்றிராசனக் குருமாரையும் போல அவர்களும் பூசைத் தருமத்தைப் பெற்றுத் தங்கள் இஷ்டப்படி உபயோகிக்கத் தக்கவர்கள். இனி, கொழும்பு நீர்கொழும்பு மாதோட்டம் யாழ்ப்பாணம் முதலான பெரிய நகரிகளில், கத்தோலிக்கர் மிகுந்த இடங்களில், பூசைத் தருமம் போதியளவு அடிக்கடி கிடைத்தபோதிலும், வறியவர்கள் குடியிருந்த தூர உள்நாடுகளில் அவ்வித தருமம் கிடைப்பது அருமையில் அருமை. அப்படிப்பட்ட இடங்களிலுள்ளோர், குருமாரைத் தாபரிப்பதற்கு மாறாக, தாங்களே இவர்களிடம் பலமுறை தருமத்துக்கு வருவார்கள். இவ்விதமே, பூசைத் தருமம் சொற்பமாய்ப் பெற்ற குருமாருக்கே தங்கள் மந்தைக்கு உதவிசெய்யவோ கோயில்களைக் கட்டவோ பயணச் செலவுகள் செய்யவோ வேலைகாரருடைய சம்பளங்கள் கொடுக்கவோ அதிக தேவை ஏற்பட்டிருந்தது என்று தம்முடைய சொந்த அனுபவத்திலேயே சுவாமிகள் அறிந்திருந்தார். குருமாருக்குள் பொருள் விஷயமாய் இருந்த இந்த ஏற்றத் தாழ்ச்சியை நீக்குவதற்காக ஆதிநாட்களிலே முனிவர் நடப்பித்த முறையை பூசைத் தரும விஷயமாயும் நடப்பிக்கவேண்டும் என்ற ஆலோசனையைச் சுவாமிகள் துணிவோடு தம்முடைய கூட்டாளிகளுக்கு எடுத்து ஓதினார். அவர்கள் யாவரும் இவ்விதம் செய்வார்களேயானால், ஆதித் திருச்சபையிலே யெருசலேம் கிறீஸ்தவர்களுள் நடந்தபடி இன்றும் நடப்பதாகும்; அதாவது அந்த விசுவாசிகளுள் "ஒருவனும் தனக்கு உள்ள எதையும் தன்னுடையது என்று சொல்லவில்லை, சகலமும் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது. அவனவனுடைய அவசியத்துக்குத்தக்கது ஒவ்வொருவனுக்கும் பகிர்ந்து கொடுக்கப்படும்" (அப். நடபடி 4: 32—35) என்று இப்படிச் சுவாமிகள் ஆலோசனை கூறினார்.

இந்த ஆலோசனையைக் குருமாரெல்லாம் ஏகமனதாய் ஏற்றுக்கொண்டதினால், இனிமேல் இலங்கையில் ஊழியஞ் செய்யும் தியான சம்பிரதாயிகள் சகலரும் "மிஷனறிமாருள் எவருக்காவது கிடைக்கும் எல்லாக் காணிக்கைகளையும் உதவிப் பொருள்களையும் பூசைத் தருமத்தையும்கூட" மிஷன்

முழுதுக்கும் தலைவராயுள்ளவரிடம் ஒப்பித்துவிட வேண்டும் என்றும், "அவர் ஒவ்வொருவருடையவும் தேவைக்கு ஏற்றபடி அவைகளை அவரவருக்குப் பகிர்ந்து கொடுப்பார்" என்றும் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. இந்த ஒழுங்கினால் இலங்கைக் குருமார் எல்லோரும் ஒரே நிரையில் வைக்கப்பட்டு, முன்னே மூப்புச் சுவாமியாருக்கு மிஷன் செலவுகளைப் பற்றி இருந்த பெருங்கவலையும் தீர்ந்தது. எளிய கிறீஸ்தவ பகுதிகளுக்கும், காலகதியிலே, சிறுச்சிறு கோவில்களைக் கட்டிக் கொடுப்பதற்கு ஏற்ற வழி திறந்துவிடப்பட்டது. இலங்கைத் தியானசம்பிரதாயிகளுள் ஒருவர் எழுதியபடி "இந்த அப்போஸ்தொலிக்கு முறைமை கர்த்தருக்கு எவ்வளவு பிரீதியாயிருந்ததென்றால், அவர் விரைவிலே இன்னும் மூன்று சம்பிரதாயிகள் இலங்கைக்குவர நல் ஏவுதல் அருளி இங்கு உள்ளோரின் கணக்கைப் பன்னிரண்டு ஆக்கியருளினார்." புதிதாய் வந்தவர்கள் யார் எனில், அந்தோனியு கோமெஸ், பிராஞ்சிஸ்கு கொன்சால்வெஸ் எனும் குருமாரும், கயித்தானு தெ கொஸ்தா எனும் துணைச் சோதரருமாம்.

## "யேசுக்கிறீஸ்துவைத் துதிக்க"

மேலும், இந்நாட்களிலே மிஷனறிமார் "அஞ்ஞானிகளின் கீழ் இருந்த நாடுகளிலும் ஒல்லாந்தருக்குக் கீழ்ப்பட்ட பிரதேசங்களிலும் சமாதானத்தைச் சுகிப்பது தேவசித்தமாயிற்று. கத்தோலிக்கர் தேசப்பிரட்டமும் பட்டினியும் மற்றும் உண்டான பல துன்பங்களும் படவேண்டியிருந்த மாரிகாலம் போய்விட்டது." (1730—31-ம் ஆண்டின் அறிக்கை.) ஆகையால், சாங்கோபாங்க சுவாமிகள் "யேசுக்கிறீஸ்துவைத் துதிக்க, ஆமேன்" என்று சொல்லி கிறீஸ்தவர்கள் ஒருவரை ஒருவர் வாழ்த்தும் பத்தியுள்ள வழக்கத்தை இலங்கையில் ஏற்படுத்தலானார். தென் இந்தியாவில் றொபேட் டி நொபிலி எனும் தத்துவபோதக சுவாமியார் காலந்தொட்டே இருந்த இவ்வழக்கம் முதன்முதல் கொழும்பிலே பதிதர்கள் மத்தியிலே கொண்டு வரப்பட்டது. அங்கே, ஒல்லாந்தம் போத்துக்கேயம் சிங்களம் தமிழ் எனும் பாஷைகளைப் பேசும் கத்தோலிக்கர் எல்லாம் ஒருவரை ஒருவர் கிறீஸ்தவ முறைப்படி தத்தம் பாஷையிலே வாழ்த்தக் காண்பது உத்தம முன்மாதிரிகையாக விளங்கியது. "சகல சாதிசனங்களும் சருவேசுரனை மகிமைப்படுத்துவார்கள்" என்ற வாக்கியம் இப்படியே இலங்கையிலும் நிறை



வேறுவதாயிற்று. இன்றைக்கும் இத்தீவிலே தற்கால நாகரீகத்தினால் பழுதடையாத சனங்கள் குருமாரைக் காணும்போது: "சுவாமீ, யேசுக்கிறீஸ்துவைத் துதிக்க" என்று சொல்லி வாழ்த்துகிறார்கள். மாதோட்டத்திலே கோயில் ஆராதனை முடிந்தவுடன் எல்லோரும் இந்த வாழ்த்தைச் சொல்லும் வழக்கம் அங்கங்கே இன்னமும் உண்டு. குடும்பங்களிலும் விசேஷ தருணங்களிலே "யேசுக்கிறீஸ்துவைத் துதிக்க" என்று சொல்லி இளையோர் முதியோரை வணங்குகிறதைக் கண்டிருக்கிறோம்.

இலங்கையில் அக்காலத்துக் கிறீஸ்தவர்கள் குருமாருக்குக் காட்டிவந்த வணக்கத்தை ஒரு பிறதேச குருவானவர் பாராட்டி எழுதி வைத்திருக்கிறார். அவர் கொழும்புத் துறைமுகத்தில் வந்து கரைபிடித்த ஒரு கப்பலில் நின்று, இறங்கிய ஒரு அர்ச். தோமினிக்கு சபைச் சுவாமியார். அவர் நடபடியான உடையோடு நகரிக்கு வந்து தாம் ஒரு குருவானவர் என்றதைச் சில கத்தோலிக்கருக்கு வெளிப்படுத்தியபோது கொழும்பிலே ஒரு தியானசம்பிரதாயக் குருவானவரும் சக்கிறமேந்துகளைக் கொடுத்துக்கொண்டு நிற்கிறார் என்றும், அவரை அன்றைக்கு ஒரு ஒல்லாந்தக் கத்தோலிக்கர் வீட்டிலே காணலாம் என்றும் அறிந்தார். தோமினிக்குசபைச் சுவாமியார் அந்த வீட்டுக்குச் சென்றவிடத்தில், வீட்டெசமான், அவரையும் சாப்பாட்டுக்கு நின்றுபோக அழைத்தார். அசனவேளை மேசையிலே இரண்டு பேருக்கு மாத்திரம் ஆயத்தம் பண்ணியிருக்கக் கண்டு அவர் ஆச்சரியப்பட்டார். அதுமட்டுமல்ல, வீட்டெசமானான துரையும் அம்மாளும் சப்பாத்தில்லாமல் குருமாரிருவருக்கும் மேசையூழியக்காரராய் நின்றார்கள். வீட்டிலிருந்த வேறு விருந்தாளர்களும் இவர்களுமோ நாட்டின் அதிமுக்கியமான மனுஷரோடுகூடச் சமனுக்குப் பந்தியில் உட்காரும் வழக்கமுள்ளவர்கள். மிஷனறிச் சுவாமியார் வீட்டைவிட்டுப் புறப்பட்டபோது, அங்கிருந்தவர்கள் எல்லோரும் முழந்தாளிட்டு அவரிடம் ஆசீர்வாதம் கேட்டார்கள். இவ்விதமான ஒழுக்கத்தைப்பற்றி தோமினிச் சபைக் குருவானவர் மிஷனறிச் சுவாமியாரைக் கேட்டபோது, அவர், அன்று நடந்தது ஒரு புது முறைமையல்ல என்றும், அப்படியே இலங்கை மிஷன் முழுதிலும் நடக்கிறது என்றும், அந்த வழக்கத்தை கிறீஸ்தவர்கள் தாங்களே, தங்களுக்கு வேதப் பணிவிடை செய்யும் பொருட்டாக எத்தனையோ ஆபத்துக்குள்ளாகி வரு

கிற குருமார்பேரில் உள்ள அன்பு மரியாதையினால், ஏற்படுத்தி வைத்தார்கள் என்றும் விடையளித்தார். உள்ளபடி புத்த தாயகக்காரன் எவனாவது ஒரு உன்னான்சையோடு சரிவர உட்கார்ந்து சாப்பிட நினையான் என்றும், இலங்கை மகா முதலியார் தாமும் கவணர் சமுகத்தில் சப்பாத்தோடு போகாரென்றும், அவர் கவணரைத் தமது வீட்டுக்கு அழைக்கும்போது அவரோடு மேசையெடுக்க உட்காராமல் அவரது கதிரைக்குப்பின்னால் நின்று மேசையூழியம் செய்வார் என்றும் எடுத்துச் சொன்னார். பின்னும் தியானசம்பிரதாயச் சுவாமியார் தோமினிக்குச் சபைக் குருவானவருக்குச் சொல்லுவார்: "அம்மட்டல்ல, வீடுகளிலும் கோயில்களிலும், வரும்போதும் போகும்போதும் மாத்திரமல்ல, எல்லா இடங்களிலும், வெளியே சந்திக்கும்போதும், கிறீஸ்தவர்கள் தங்கள் பாதங்களை முத்தஞ்செய்கிறதாகிய ஒறுத்தலை மிஷனறிமார் சகிக்க வேண்டியிருக்கிறது" என்றார். எங்கள் மீட்பராகிய சருவேசுரனில் வைத்த விசுவாசம் பொருந்திய அன்புதான் அவர்களுடைய பதிலாளிகளாய் வருவோருக்கு இவ்வித ஆசார மரியாதையைக் காண்பிக்க அந்த ஆதிக் கிறீஸ்தவர்களைத் தூண்டியது என்றதை நாம் இங்கு குறிக்கத்தகும்.

## சாங்கோபாங்க சுவாமிகளுடைய வேதநூல்கள்

இந்நாட்களிலே சுவாமியாருடைய நூல்களை வாசிப்போரது தொகை அதிகப்பட்டிருந்ததினால் தேவையான பிரதிகளை எழுதிக்கொடுக்க முடியாமலிருந்தது. 1742-ம் ஆண்டில் இலங்கை மிஷனுக்குச் சுற்றுவிசாரணையாளராய் வந்த மடுத்தீனு சவியேர் சுவாமியார் சொல்லியபடி: "இலங்கையில் அந்நாளில் அதிகப்பற்றானவர்கள்—சிங்களவரும் தமிழரும்—எழுத்தறிந்திருந்தார்கள்" என்று தோற்றுகிறது. "பெரும்பாலான ஆடவர்களும் பெண்களும், குலத்திலே பிறந்த உயர்ந்தோர் மட்டுமல்ல நடபடியான ஆட்கள் தாமேயும் எழுத வாசிக்கக் கூடியவர்கள். இதினாலேதான் அநேக அவிசுவாசிகள் கொன்சால்வெஸ் சுவாமியாருடைய நூல்களிலே தங்கள் மனந்திரும்புதலுக்கு ஏற்ற பலகாரியங்களைப் படித்துக்கொள்ளுகிறார்கள்." ஆதலால் "சுவாமியார் தமது நூல்களைத் தமிழிற் திருப்பித் தரவேணும் என்று தமிழ்பேசும் கத்தோலிக்கர் ஆவலோடு கேட்டுக்கொண்டார்கள். அவரும் அப்படிச் செய்துகொடுக்கச் சந்தோஷமாய்ச் சம்மதித்தார். சுவாமியார் ஒரு பாஷை



யிற் செய்த ஏறக்குறைய ஒவ்வொருநூலும் அவராலேதானே மற்றப்பாஷையில் திருப்பப்பட்டது. சரியாய்ச் சொல்லுகில், இவைகள் வெறும் மொழிபெயர்ப்புக்கள் அல்ல, ஒருபாஷையில் எழுதிய நூலின் விஷயத்தை மற்றதில் அந்த மொழியின் சுய தன்மைக்கு ஏற்கவேறுவகையாய் எழுதுவார். அதினால் அவைகள் மொழிபெயர்ப்புக்கள் போலக் காணப்படா." 1720-ம் ஆண்டில் "யாழ்ப்பாணத்தாருடைய உபயோகத்துக்காக மாத்திரம் இருநூறு பிரதிகள் வெகு செலவுசெய்து எழுதிக் கொடுக்கப்பட்டன." பிரதிபண்ணுவதற்கு பழகிய எழுத்தாளர் வேண்டும் ஆனதினால், செலவு அதிகமாயிற்று. சுவாமிகளுக்குக் கீழே பல எழுத்தாளர் "ஓயாமல் எழுதிக் கொண்டிருப்பார்கள்." "சுவாமியார், தாம் போகும் இடமெல்லாம், இரண்டு அல்லது ஒரு எழுத்தாளனையாவது கூட்டிக்கொண்டு போகாமல் விடார். பிரசங்கம் செய்வதிலும் சக்கிறமேந்துகளைக் கொடுப்பதிலும் செல்லும் நேரம்போக, மீதியான நேரத்தை வாசிப்பதிலோ எழுதுவதிலோ போக்குவார். சாப்பிட உட்கார்ந்திருக்கும்போதும், அருகிலே ஒரு எழுத்தாளனை வைத்துக்கொண்டு, தாம் உண்ணுகிறதிற் செலுத்துகிற கவனத்திலும் அதிகமான அவதானத்தோடு சொல்லி எழுதுவிப்பார். தமது கடைசி நாட்களாகிய வயோதிகப் பிராயத்தில், கொஞ்சமாய் நித்திரை செய்கிறவராகவே, இரவும் பகலும் ஓயாமல் வாசித்து எழுதிக்கொண்டோ எழுத்தாளர்களுக்குச் சொல்லி எழுதுவித்துக்கொண்டோ இருப்பார்." (டொ றேகு எழுதிய சரித்திரம்)

"கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் கத்தோலிக்கர்கள் கிறீஸ்துநாதருடைய திருப்பாடுகளைப்பற்றி ஏதாவது எழுதித் தரக் கேட்க, அவர் எவ்வித தொந்தரவையும் பாராமல் வசன நடையில் மாத்திரமல்ல, செய்யுள் நடையிலும் ஒன்று எழுதிக் கொடுத்தார்." சிங்களத்தில் வசனநூல் 1728-ம் ஆண்டு வரையில் இயற்றியது தமிழில் வியாகுல பிரசங்கம் அல்லது "பசாம்" என்று சொல்லப்படுவது 1730-ம் ஆண்டில் எழுதியது. அது பரிசுத்த வாரத்திலும், விசேஷமாய், பெரிய வெள்ளிக்கிழமையும் படிக்கப்படும். செய்யுள்நூல் சிங்களத்தில் "பசாம் பொத்த" (திருப்பாடுகளின் புத்தகம்) எனப்படுவது. இதைத் தமிழிலும் பாடினாரோ அறியோம். இதற்கு முன் வேதகாவ்ய என்று ஒரு சரித்திர காவியம் பாடியிருந்தார். "பாட்டுநடையை எல்லோரும் சரியாக விளங்கிக்கொள்

ளக்கூடாது. ஆகையால், வெகு தூர இடங்களிலுமிருந்து பலரை மாதோட்டத்திலே கூடிவரச் செய்து, அங்கே அவர்களுக்கு அதைத் தமக்கு இயல்பான உற்சாகத்தோடும் தெளிவாகவும் விளங்கப்படுத்தினார். எல்லோரும் மிகத் திருத்தியடைந்தார்கள்.'' அவர்களுட் சிலர் "சுவாமியார் அஞ்ஞானச் செய்யுள்களிற் தேர்ந்த பிறசமயிகளும் பிராமணரும் உள்ள இடங்களுக்கும் போய், அவர்களுக்குத் தமது புராணத்தைப் படித்துக் காட்டினால், அவர்களும் வேதத்திற் சேருவார்கள் என்றும், இப்படியே பலவிடங்களிலே அவருடைய முந்திய நூல்களை வாசித்துள்ளவர்கள் அவைகளிலடங்கிய நியாயமுறையின் பெலத்தால் மனந்திரும்பியிருக்கிறார்களென்றும் சொல்லிச் சுவாமியாரை மன்றாடுவோருமானார்கள். அந்த நூல்களைப் பற்றி கோடிக்கரையில் செய்தி பரம்பினபோது, அவைகளைப் பிரதிசெய்துகொண்டுபோக, அங்கிருந்து அநேக கிறீஸ்தவர்கள் இலங்கைக்கு வந்தார்கள்.''

## மாத்தறையில் மனந்திரும்புதல்கள்

1732-ம் ஆண்டு சுவாமிகளுடைய நெடுங்கால ஆசையொன்று நிறைவேறத் தேவசித்தமாயிற்று. அவர் எழுதியதாவது: "சிங்களச் சாதியாரோடு நான் அறிமுகப்பட்ட நாட்தொட்டு, மாத்தறையிலுள்ளவர்களுக்கு சுவிசேஷத்தைப் போதிக்கவேணும் என்ற தணியாத ஆசை எனக்கு இருந்து வந்தது. ஏனெனில், இவர்கள் கல்வியிற் சிறந்தவர்கள் என்றும் புத்தவழிபாட்டிலே முதன்மையானவர்கள் என்றும் தங்களைப் பாராட்டிக் கொள்ளுகிறவர்கள். இவர்களை மனந்திருப்பிப்போட்டால் கண்டிவரையும் உள்ள ஏனையோரைத் திருப்புவது இலேசாகிவிடும். இதற்காக இவர்களுடைய 'பண' புத்தகங்களைப்போல உயர்ந்த நடையிலே பலநூல்களை எழுதினேன். அந்த நூல்களை இவர்களுக்கு வாசிக்கக்கொடுக்கவோ இதுவரையில் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை, இந்த வருஷந்தான் சருவேசுரன் இவர்களுக்கு ஞானவெளிச்சத்தைக் கட்டளையிடச் சித்தமானார்'' என்கிறார். அதெப்படியெனில், அந்த ஆண்டு மார்கழி 2-ந் திகதி யாக்கோப் கிறீஸ்தியன் பியேலாத் எனும் ஒரு விசேஷ ஒல்லாந்த உத்தியோகத்தன் தங்களுடைய நகரிகள் கோட்டைகளைப் பார்வையிட இலங்கைக்கு வந்திருந்தான். அவனுக்கு நல்வரவு கூறக் கொழும்பிற் கூடிவந்த சிங்களத் தலையாரிமாருள் மாத்தறை முதலிமாரும் இருந்



தார்கள். "இந்த முதலிமார் கொன்சால்வெஸ் சுவாமியார் குருசீஷ சம்வாத அல்லது தர்க்க உருவமாய் எழுதிய சில நூல்கள் கத்தோலிக்கர்கள் கையில் இருக்கக்கண்டு, அவைகள் தங்களுக்கு வினோதமாய்த் தோன்றியபடியால் வாங்கி வாசித்தார்கள். சிறிதுநேரம் வாசிக்கவே, தாங்கள் கொழும்பிலே பார்க்க என்று வந்த பல அலுவல்களிலே அவர்கள் மனம் செல்லவில்லை. அந்த நூல்களில் உயர்ந்த செவ்விய நடையிலே பேசப்பட்ட மேலானகாரியங்களும், அவைகளின் அலங்காரமும், அவைகள் எடுத்து நிரைத்த நியாயங்களின் உறுதியும் முதலிமாரின் மனத்தைக் கொள்ளை கொண்டுவிட்டன. எங்கள் திருவேதத்தின் உண்மைகளைப்பற்றி மேலான மதிப்பும் தங்கள் மதத்தின் தப்பறைகளிலே வெறுப்பும் கொண்டார்கள். விசுவாசத்தின் விடியற்காலம் அவர்களுக்கு உதிக்கத் தொடங்கியது. தாங்கள் வாசித்த நூல்களிலே அடங்கிய திவ்விய வசனங்களை உருசிபார்த்துக் கொண்டவுடனே, அந்தத் திவ்வியமான சலங்களின் ஊற்றுமட்டும் போகவிரும்பி, அவ்விதமான உத்தம நூல்களை எழுதியவரைக்காண ஆசைப்பட்டார்கள். அவைகள் ஒரு கத்தோலிக்கு குருவானவரால் இயற்றப்பட்டவை என்று அறியவந்தபோது அவரைக் கண்டுபோக வேண்டுமென்று ஆவலோடு கேட்டுக்கொண்டார்கள்.

"கொழும்புக் கத்தோலிக்கர்களால் உடனே சுவாமியாருக்குச் செய்தி அனுப்பப்பட்டது. அவ்வேளை அவர் சீத்தாவக்கையிலே கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தைப் பயிரேற்றுவதிலே முயன்றுகொண்டிருந்தார். தமக்கு அனுப்பப்பட்ட செய்தி தமது சீவியகாலத்தில் சம்பவித்தவைகளுள் எல்லாம் அதிக பாக்கியமானதும் தமது செபங்களுக்குக் கிடைத்த ஒரு மறுமொழியும் என்று அவர் எண்ணிக்கொண்டு தாமதமில்லாமலும் யோசனைபண்ணாமலும் கொழும்புக்குப் புறப்பட்டு, முதலிமார் மாத்தறைக்கு மீள ஆயத்தம்செய்துகொண்டு நிற்கும் அதே தருணத்தில் வந்து சேர்ந்தார். அவர்களோ, தங்கள் அலுவல் முடிந்தபின் கொழும்பிலே சுவாமியாரோடு பேசுவதற்கென்றுமட்டும் தங்குவது ஆபத்துக்கிடமாகும் என்று நினைத்து, சுவாமியார் தங்களோடு மாத்தறைக்குப் போனால் அங்கே அவருடைய வார்த்தைகளுக்கு ஆறுதலாய்ச் செவிகொடுத்து தங்கள் மனத்தையும் அவருக்குத் தாராளமாய்த் திறக்கலாம் என்று சொல்லி அவரை அங்குபோக வேணுமென்று மன்றாடினார்கள். கொன்சால்வெஸ் சுவாமியார்

தாம் நெடுநாட் காத்திருந்த நற்தருணம் இதுவே என்று கண்டு, அவர்களுடைய அழைப்புக்குச் சம்மதித்து மாத்தறைக்குச் செல்லும் நெடும் பயணத்திற் கையிட்டார்."

அங்கே அவர் கிறீஸ்துநாதருடைய சுவிசேஷத்தை எவ்வளவு துலாம்பரமாக விபரித்தார் என்றால், அவர் விதைத்த தேவவாக்கியமானது நல்ல நிலத்தில் விழுந்து ஒன்றுக்கு நூறுமடங்கு பலன் கொடுப்பதாயிற்று. மாத்தறை நகரியிலும் வெளியேயுமாக, அந்த மாகாணத்தில் அவர் வெகு தொகையானோரை மனந்திருப்பினார். மனந்திரும்பியோரை உணர்த்தும்படியாக "மாத்தற பிரத்யக்ஷய" அதாவது, மாத்தறைக்கு ஞான உணர்ச்சி எனும் ஒரு நூலை இயற்றிக் கொடுத்தார். அது பென்னம் பெரும் பயனை விளைத்தது.

"புதிதாய் மனந் திரும்பியோரின் பயபத்தியும் வேதகாரியங்களை அதிக நன்றாய் அறிந்துகொள்ள வேணும் என்ற ஆசையும் பெரிதாயிருந்தபடியால் தங்களுக்கு சுவாமியாருடைய நூல்களின் பிரதிகள் வேண்டும் என்று கேட்டார்கள். அவைகளைப் படியெடுப்பதற்கு தொகையான எழுத்தாளர்களைப் பிடிக்கவேண்டி நேர்ந்தது. இவர்களுக்குச் சம்பளங் கொடுக்க அவரிடம் வழியில்லாதபோதிலும், சருவேசுரனிடத்தில் மட்டுக்கடங்காத நம்பிக்கை வைத்திருந்தார். ஏனெனில், சருவேசுரன் தம்முடைய சுவிசேஷ போதகர்களுக்கு எப்போதும் ஒத்தாசையாகிறார் என்றதை அனுபவத்தில் அறிந்திருந்தார்." அப்பகுதியில் மனந்திரும்பியோரின் கிராமங்கள் பலவாயிருந்ததினாலும், அவர்கள் எல்லோரும் வேதகாரியங்களில் நன்றாய்ப் பயிற்றப்பட்டிருந்ததினாலும், சுவாமிகள் அவர்களுக்கு அங்கங்கே ஏழு சிறுக் கோயில்களை உண்டாக்கிக் கொடுத்தார். இப்படியே மாத்தறையானது குருமாருக்கு நல்ல வேலைக்கு இடங்கொடுத்த ஒரு முக்கியமான மீசாமாயிற்று.

## ஒரு குருவானவர் ஒல்லாந்தரால் பிடிபடல்

சாங்கோபாங்க சுவாமிகள் மாத்தறையிலிருந்து கொழும்புக்கு மீளும் வழியில் கத்தோலிக்குக் கிராமங்களைத் தரிசித்து சக்கிறமேந்துகளைப் பரிமாறிக்கொண்டு வந்தார். பலவிடங்களில், ஒல்லாந்தருக்குக் கீழ் வேலையாயிருந்த அநேக சட்டம்பிமாரையும் தலைமைக்காரரையும் மனந்திருப்புகிறவரும் ஆனார். ஆனால், அந்நாட்களில் மிஷனறிமாருக்கு ஒரு விபத்து நேரிடுவதாயிற்று. சொற்பகாலத்துக்கு முன் மாத்திரம் இலங்கைக்கு



வந்திருந்தவரான பிராஞ்சீஸ்கு கொன்சால்வெஸ் எனும் சுவாமியார் சக்கிறமேந்துகளைக் கொடுத்துவரும்படி தென்பாகங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கையில், ஒல்லாந்த போதகனான யோகன் உவில்லெல்மு மறீனுவும் பள்ளிக்கூட முதலாளியான ஊபேட் ஒகொர்வாட்டும் அவரை 1734-ம் ஆண்டு பங்குனி 9-ந் திகதி பிடித்துப்போட்டார்கள். மாத்தறையிலே கத்தோலிக்கு குருமார் அடைந்துகொண்டுவந்த சித்தியைப்பற்றி ஒல்லாந்தர் கேள்விப்படாமலிரார்கள் ஆதலால், ஒரு குருவானவரையாவது கைப்பற்றிப்போடக் காத்துக்கொண்டிருந்தார்கள் என்று தோற்றுகிறது. ஆகவே, பிராஞ்சீஸ்கு கொன்சால்வெஸ் சுவாமியாரைக் கைதியாக்கி காலிக்குக் கொண்டுபோய்ச் சிறையில் அடைத்துவைத்தார்கள்.

சாங்கோபாங்க சுவாமிகள் இதைப்பற்றி நரேந்திர சிங்க ராசருக்கு அறிவித்ததாகத் தோன்றுகிறது. ஏனெனில், அரசரும் மாளிகையாரும் மறியற்பட்ட சுவாமியாரை மீட்க வெகு பாடு பட்டதாக ஒல்லாந்த சாதனங்களால் அறிகிறோம். பியெலாற்று என்பவன் "கண்டிக்கு அனுப்பியிருந்த அரச தூதர்களான தானியேல் அகிறீன் கப்பித்தானிடமும் மாட்டின் வேயியெர் எனும் டிஸ்பென்சர் இடமும் கண்டி அரண்மனையின் முக்கியஸ்தர்கள் அதற்காக மிகவும் நெருக்கிக் கேட்டார்கள்" என்றும், "இந் நாட்களில் இந்த (ஆனி) மாதத் தொடக்கத்தில் பாப்பிய குருவுக்காகப் பரிந்து பேசிய ஓலையொன்று கண்டி அரண்மனையின் தலையாரியிடத்திலும் முக்கிய மனிதரிடத்திலும் நின்று வந்தது" என்றும் அவைகளில் வாசிக்கிறோம். இந்த வேண்டுகோள்களை ஒல்லாந்தர் கவனியாமல் விட்டபடியால், ஆனி 11-ந் திகதி கண்டி அரசரது தூதர்களான "சியம்பலகமுவே கபட மொகத்தலாவும் தொறெனெகம முகாந்திரமும்" கொழும்புக்கு வந்து "தாங்கள் கவணரிடத்திலே பிராஞ்சீஸ்கு கொன்சால்வெஸ் எனும் குருவை விடுதலையாக்கிவிடக் கேட்கும்படி, எம்பரதோராகிய இராச மகத்துவமும் விசேஷவிதமாய் அறியத்தக்கதாக, அரண்மனையார் தங்களைத் தூண்டியிருக்கிறார்கள்" என்றார்கள்.

கவணர் அந்த வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. ஆயினும் தன் மேலதிகாரிகள் அரசரைக் கனம் பண்ணவேணும் என்று கட்டளை பண்ணியிருந்ததினால், அதுவிஷயத்தை தனது ஆலோசனைச் சங்கத்துக்கு முன்னாற் கொண்டுவருவதே உத்தமம் என்று எண்ணினான். ஆகவே, 1734-ம் ஆண்டு ஆனி 23-ந்

திகதி கூடிய "சங்கத்தில் சர்வ அங்கீகாரமாய்த் தீர்மானிக்கப்பட்டது என்னவானால், முன் சொல்லிய பாப்பியனையும் அவன் இரு வேலைக்காரரையும் இந்த ஒரு முறைக்கு விடுதலையாக்கி அவனை இப்போதிருக்கிறபடியே காவலோடு காலியிலிருந்து களுத்துறைக்குக் கொண்டுவந்து, தலைநகரிக்குச் சில மணித்தியாலப் பயணத்துக்கப்பால் விட்டிருந்து, குச்சு வழிகளால் அன்வெல்லாவுக்கு நேரே கொண்டுபோய், அங்கிருந்து சீத்தாவக்கைக்கு ஊடாக மலைநாட்டுக்குக் கூட்டிப் போய் இராசாவுடைய உத்தியோகர்களுக்குக் கையளிக்க வேண்டும். அளிக்கும்போது, கண்டியில் சர்வ பௌமிய மகத்துவருடைய நாமத்தால், அரண்மனையார் பல முறைகேட்டுக் கொண்டதின் பேரில் இம்முறைக்கு அவனை தண்டனையில்லாமல் விடுதலையாக்கினது என்றும், இனி எப்போதாகிலும், அவனாவது அல்லது அவன் கூட்டாளிகளாவது கொம்பனியாருடைய ஆதீனமான நாடுகளில் தங்கள் துர்ப் போதகத்தைப் பரப்புகிறவர்களாய்க் காணப்பட்டால், அவர்கள் பிடிபடும்போது நாட்டின் சட்டங்களின்படியும் அறிவிப்புகளின்படியும் கடினமான தண்டனை தப்பாமல் இடப்படும் என்றும் வெளிப்படையாய் அச்சுறுத்திவிடவேண்டும்" என்பதாம் (ஒல்லாந்தசாசனங்கள்).

சுவாமியாரை அவ்விதமே கொண்டுபோய், கண்டியிலிருந்து வந்திருந்த இரு இராசதூதர்களிடமும் ஒப்பித்தார்கள். இவர்கள் அவரை "ஆர்ப்பரிக்கிற துருப்புகள் பின்தொடர சங்கைவெகுமானங்களோடு கண்டிக்கு அழைத்துச் சென்றார்கள்." இவ்வாறே, கொழும்பு அரசியல் ஆலோசனைச் சங்கத்தின் கர்வம் மிகுத்த ஒல்லாந்தர் காத்திருந்ததற்கு மாறாக அவர்கள் சிறைவைத்த ஒரு கத்தோலிக்கு குருவானவர் கண்டியரசரின் கேள்விப்படி விடுதலையானமை "ஒல்லாந்த போதகர்களை வெட்கப்பண்ணி, சனங்கள் குருமார்பேரில் அதிக கண்ணியமான எண்ணங் கொள்ளவும் குருமார் தாங்களே பதிதருடைய ஆட்சிக்குள் கூடுதலான துணிவோடு உட்படச்செய்யவும் பண்ணிற்று."

# பதினோராம் அதிகாரம்

## சாங்கோபாங்க சுவாமிகளின் சமாதான முயற்சிகள்

இந்தக் காலத்தில் சுவாமிகள் கத்தோலிக்கர் தங்களுடைய மனச் சாட்சிச் சுதந்திரத்தை ஒருவாறு உரித்தாடி வெற்றிகொள்ளப் பண்ணப் பிரயாசப்பட்டுவந்தார். கத்தோலிக்கர் தங்கள் குழந்தைகளை ஒல்லாந்த பள்ளிகளிலே ஞானஸ்நானம் கொடுப்பிக்கப் பண்ணுவதற்காக, அந்தப்பள்ளிகளில் ஞானஸ்நானம் பெற்ற அத்தாட்சிச் சீட்டுக் கொண்டுவருவோர் மாத்திரமே கோடுகளிலே ஆதன பாதன உரிமை வழக்கு ஆடலாம் என்று சட்டம் பிறப்பித்திருந்தார்கள். 1704-ம் ஆண்டில் யோசெவாஸ் முனிவர் இந்தக் கொடிய சட்டத்தை எதிர்க்கக் கத்தோலிக்கரைத் தூண்டியிருந்தார். 1707-ம் ஆண்டில் கத்தோலிக்கர் தங்களுடைய கோவிலில் கொடுத்த ஞானஸ்நானங்களை அரசினர் அங்கீகரிக்க வேண்டும் என்று, மனுவல்தெ மிறாந்தா சுவாமியாரின் ஏவுதலால், மனுப்பேசத் துவங்கினார்கள். கொழும்பில் மீன் தொழிலாளர் அந்த இளக்காரத்துக்காகப் போராடினார்கள். பிறரும் அவர்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றியதுண்டு. இது முன்னிலும் அதிக துன்புறுத்தலை எழுப்பிவிட்டபோதிலும், ஒல்லாந்த அரசினர் தங்கள் கட்டளையை மீறுவோரைக் கண்டும் காணாதோர்போல் இருக்க நேர்ந்தது. விவாகத்துக்குக் கவண்மேந்து உத்தரவுச் சீட்டு எடுப்பதற்கும் ஞானஸ்நான அத்தாட்சிச் சீட்டு வேண்டியிருந்தது. இதைக் குருமார் தங்கள் ஞானஸ்நானப் புத்தகங்களிலிருந்து எழுதிக்கொடுக்கும் வழக்கத்தை சாங்கோபாங்க சுவாமிகள் சற்றுச் சற்றாகக் கொண்டுவர, அரசினரும் இச்சீட்டுகளை விவாக உத்தரவுச் சீட்டுகளுக்கு ஆதாரமாக ஏற்றுக்கொள்ளத் தொடங்கினார்கள். ஆயின், 1732-ம் ஆண்டிலே குருமார் கையால்வந்த அவ்விதமான அறுநூறு ஞானஸ்நானச் சீட்டுகளை அரசினர் ஏற்றுக்கொண்டார்கள் என்று பியெலாற்று எனும் தத்துவகாரன் கண்டபோது திகிலடிபட்டான். அவன் இதைப்பற்றி மேலும் விசாரணை செய்தபோது, கொழும்பில் மாத்திரம் அதற்கு முந்திய மூன்று வருஷங்களுக்குள்ளே மூவாயிரத்துக்கு மேற்பட்ட கத்தோலிக்கு ஞானஸ்நான அத்தாட்சிச் சீட்டுகளை ஒல்லாந்த அரசு ஏற்றுக்கொண்டது என்று அறிந்து, இன்னும் அதிகமாய்க் கெடிக்கலங்கினான். இதினால், வெளியாங்கமாய்க் கத்தோலிக்கு சமயத்தை அனுசரிப்போர்

Nallur Swami Gnanapragasar Library
OBLATE FATHERS
"THODARBAHAM"
657/1, HOSPITAL ROAD, JAFFNA

தொகை மிகவும் அதிகப்படும் என்று அவன் அஞ்சி, இனிமேல், உத்தியோகத்தர், கத்தோலிக்கு குருமார் கொடுக்கும் அத்தாட்சிச் சீட்டுக்களை ஏற்றுக்கொள்ளப்படாதென்று கண்டிப்பான இரக்கமற்ற ஒரு கட்டளையைப் பண்ணினதோடு, குருமாரை கொம்பனிக்குக் காட்டிக் கொடுப்போருக்கு ஐம்பது இறைசாலும் நல்ல உத்தியோகங்களும் தருகிறோம் என்றும் வாக்குப் பண்ணினான். அன்றியும், "உரோமானு கத்தோலிக்கு மார்க்கத்திலே மறைவாய் நிற்போருக்கும் உரோமானு கத்தோலிக்கு குருமாரைக் கொண்டு குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பிப்போருக்கும்" மாறாக ஒரு அறிக்கையையும் வெளிப்படுத்தினான் (பியெலாற்றுவின் ஞாபகக்குறிப்புகள்). இதனால் உண்டான ஆகப் பெரிய தீங்கு என்னவெனில், கத்தோலிக்கராய்வர விரும்பியோருக்கு இது ஒரு தடையாயிற்றே அல்லாமல் ஏலவே கத்தோலிக்கராய் இருந்தவர்களை இது அசைக்கவில்லை. குருமாரும் முன்போல ஞானஸ்நானச் சீட்டுகளை எழுதிக் கொடுத்து வந்தார்கள்.

## கம்மலைச்சூழ கன ஞானஸ்நானங்கள்

1733-ம் ஆண்டில், சாங்கோபாங்க சுவாமிகளுடைய மனங் குளிர, கம்மலைச்சூழ்ந்த இடங்களில் திரளான சனங்கள் திருச்சபையிற் சேர்ந்தார்கள். அவர்கள் "கத்தோலிக்கரான தங்கள் ஊரவர்களின் முன்மாதிரியினால் தூண்டப்பட்டு" தாங்கள் நெடுங்காலமாய்ச் சத்திய திருச்சபையிலே கவர்ச்சியுள்ளவர்களாய் இருந்தோம் என்றும், இவ்வருஷம் கம்மலிலே தாங்கள் கண்ட பரிசுத்தவாரத் திருச்சடங்குகளால் மிகவும் மனந் தேர்ந்து ஈற்றில் திருச்சபையில் சேர்ந்துகொள்ளத் தீர்மானித்தோம் என்றும் சொன்னார்கள். சுவாமிகள் அவர்களுடைய உத்தமமான மனப் பக்குவத்தைக் கண்டு எங்கள் திருவேதத்தின் பரம ரகசியங்களை அவர்களுக்கு நன்றாய் உணர்த்தியபின் ஞானஸ்நானம் கொடுத்தார். ஞானஸ்நான ஆயத்தக்காரருட் சிலர் அத்திருச்சடங்குக்கு முன் பிசாசு ஆவேசம் ஏறினவர்களாகக் காணப்பட்டபோதிலும், "அன்னோர் மேல் புதுப்பிறப்பை அருளும் தண்ணீர் வார்க்கப்பட்டவுடனே பிசாசு அவர்களை விட்டு முற்றாகப் போய்விட்டது. இந்தச் செய்தி எங்கும் பரந்து, இதுதானே ஒரு மகாபலிப்புள்ள பிரசங்கமாயிற்று. எப்படியெனில், இதினால் வேறு அநேகர் விசுவாச வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ளுவோர் ஆனார்கள்". ஆகவே, மறுபடியும் உபதேசங்களும் ஞானஸ்நானங்களும் நடக்கலாயின.

005684



## அரசியல் சடுத்தங்களைச் சமன்பண்ணுகிறார்

பியெலாற்று கொழும்பைவிட்டுப் போய்விட்டபின், கண்டி அரண்மனைக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிற் சில சச்சரவுகள் உண்டாயின. எப்படியெனில், ஒல்லாந்தருக்குக் கீழ் கறுவா உரிப்போர் கூலிக் குழப்பஞ் செய்துகொண்டு, கண்டிராச்சியத்துக்கு உட்பட்ட ஏழு கோறளையில் போய் நின்று வாதாடினார்கள். அப்படியே மூன்று கோறளையில், காலியில், மாத்தறையில் இருந்தோரும் செய்தார்கள். அப்பால் சல்பிட்டி, ஏவகம், ஈன, பஸ்டும் கோறளைகளின் சனங்களும் குழப்பஞ்செய்யவே கொழும்பு நகர ஆலோசனைச் சங்கம் இவர்களுடைய முறைப்பாடுகளுக்குச் செவி சாய்க்கவேண்டி நேர்ந்தது. சிறிது காலத்துக்குள் ஈன, சல்பிட்டி கோறளைகளிலுள்ளோர் 'இதில் எவ்வளவு தூரம் போனார்களென்றால் அவர்கள் "தங்கள் நாடுகளைக் கண்டியரசர் தமது பாதுகாப்பின்கீழ் வைத்துக்கொண்டார்; ஆதலால் தாங்கள் இனி ஒல்லாந்தர் கொம்பனிக்குச் சேர்மானம் உள்ளவர்களல்ல" என்று ஒரு அறிக்கை ஓலையும் வெளியிட்டார்கள். இந்த இயக்கம், தென்பக்கத்திலே காலியிலும், கங்கபொட கந்தெபொட் வெலிக்கம் கோறளைகளிலும் கூடப் பரந்தது. ஒல்லாந்தர் ஊர்க்கலகத்தைப் போர்மூலமாய் அடக்க எத்தனித்தபோது, கண்டியரசருடைய திசாவை ஒருவன் மல்வானவிலும் அட்டனகலவிலும் இருந்த ஒல்லாந்த கோட்டைகளைப் பெரும்படையோடு தாக்கினான். ஆதலால், ஒல்லாந்தர் அரசரைச் சாந்தி பண்ணுவதற்காக அரண்மனையாருக்கு உபகாரங்களும் கொடுத்துக் கண்டிக்கு அரச தூது அனுப்பினார்கள்.

அரசருடைய இனத்தவர்களான நாயக்கர்கள் அவரைப் பிரித்தானிய கிழக்கிந்திய கொம்பனியாரை உதவிக்கு அழைப்பதற்கு உடன்படச் செய்யப்பார்த்தார்கள். வேறு சிலர் ஒல்லாந்தரை இலங்கையை விட்டோட்டுவதற்கு உபபலமாக பிராஞ்சியரை அல்லது தேனியரை அல்லது போத்துக்கேயரைத் தானும் கூப்பிடச் சொன்னார்கள். அரசர் தம்முடைய ஆலோசனைக்காரர் சொன்னவைகளில் திருத்திப்படாமல், சாங்கோபாங்க சுவாமிகளை அழைப்பித்து, அவரிடம் ஆலோசனை கேட்டார். சுவாமிகள் அவர் ஒல்லாந்தருடைய கேள்விக்குச் சம்மதிப்பதே நன்று என்றும், பிற இராச்சியங்கள் வாக்குப் பண்ணுகிற வியாபாரச் சுகங்களைக் கவனியாமல் விடுவதற்குப் போதிய நியாயம் உண்டு என்றும் காட்டினார். அப்பால், போத்துக்கேயருடைய உதவியை நம்பியிருக்கலாமோ என்று அரசர்

கேட்க, சுவாமிகள் அவர்களுடைய வல்லமை மிகக் குன்றிப் போயிருந்தபடியால் அவர்களிடம் இந்த உதவியை நம்பியிருக்கப்படாது என்று வெளிதிறந்து உரைத்தார். கத்தோலிக்கு மிஷனறிமாருக்குச் சார்பாயிருக்கக்கூடிய ஒரு தேசத்தோடு உறவுகொள்ளுவதற்கு அவர் சனுவாய் இராததைப்பற்றி அரசர் அதிசயப்பட்டபோது, சுவாமிகள் மறுமொழியாக: "ஐயனே, மிஷனறிமாருக்கு எது நல்லது என்றல்ல, தங்கள் மகத்துவத்துக்கும் நாட்டுக்கும் எது அதிகம் நல்லது என்றே கேட்டீர்கள்" என்றார் எனச் சொல்லியிருக்கிறது. கள்ளமாய் வாசனைச் சரக்கில் வியாபாரஞ் செய்ததற்காக விதிக்கப்பட்ட கொலைத்தண்டனைக்கு ஒளித்து கண்டியில் ஓடி அடைக்கலம் புகுந்தயான் பெல்லோ என்னும் பேர்களைத் தங்களுக்குக் கையளிக்கும்படி, ஒல்லாந்தர் கேட்டிருந்ததைப்பற்றி இராச மகத்துவர் சுவாமிகளுடைய அபிப்பிராயத்தை வினாவ, அவர் ஒரு சிறு குற்றத்துக்காக இட்ட பெருந் தண்டனைக்கு அஞ்சித் தஞ்சமென்று ஓடிவந்த ஒரு ஏழையைக் கைவிடுவது ஒரு மன்னவருக்கு அழகல்ல என்றார். "அரசர் இந்த ஆலோசனையைக் கேட்டு மனமகிழ்ந்து, வரக்கூடிய எவ்வித ஆபத்தையும் பாராமல், அதின்படியே செய்தார். தம்மிடம் வந்த ஒல்லாந்த அரச தூதர்களையும் வழக்கமான நட்பின் அடையாளங்களோடே வரவேற்றார்."

## துன்புறுத்தலிலே சற்றுத் தூக்கம்

பரோன் குஸ்தாவ் வில்லெம் வான் இம்மோவ் என்பவன் 1736-ம் ஆண்டில் கவனராய் வந்தபோது, சாங்கோபாங்க சுவாமிகள் தங்களுக்கும் அரசருக்கும் நடுப்போக்கியதைப் பற்றி கேள்விப்பட்டு, அவரோடு உரையாடவிரும்பி, அவருக்கு மூன்று தரம் எழுதி: "அவர் கொழும்புநகரிக்கும் கோட்டைக்கும் வருவதற்குத் தான் மெய்க்காப்பு அனுப்பிவைப்பதாகவும், அவர் கொடுத்த நல்லாலோசனைக்காக நன்றிபாராட்டி அரசரோடு பார்க்கவேண்டிய வேறு சில அலுவல்களைப்பற்றியும் அவருடன் ஆலோசிப்பதற்காக கோட்டையிலே அவரை எதிர்பார்த்துக் கொண்டு அவரை வரவேற்க விரித்தகைகளுடன் இருப்பதாகவும்" சொல்லியிருந்தான். சுவாமிகள் தமது வழக்கமான சிங்கள மறு வேஷத்தோடு கொழும்புக்கு வந்து கவனரோடு நெடுநேரம் பேசியதோடு, பின்னும் பலமுறை அவனிடம் போய்க் கொண்டிருந்தார். இதன் பயனாக "வருஷமுடிவிலே எல்லாம் அமரிக்கையாய்த் தோன்றிற்று. கண்டி



அரண்மனை நட்பான மனப்பாங்கு காட்டுவதாயிற்று. 1738-இல் ஒரு ஒல்லாந்த அரசதூதன் விலையேறப்பெற்ற உபகாரங்களோடு கண்டிக்கு அனுப்பப்பட்டபோது அவனுக்கு மனமார்ந்த வரவேற்பு நடந்ததும் அன்றி, அரசர் நோயுற்றிருந்தும், அவனுக்கு பேட்டி கொடுத்தார்", வேதகலாபனையும் சிறிதுவேளை நிறுத்தப்பட்டது. "அதினால் கத்தோலிக்கர் சுவாமிமாருடன் நடமாடவும் குருமார் எள்ளளவேனும் சங்கட்டமில்லாமல் பதிதருடைய நாடுகளில் உட்படவும் கூடியதாயிற்று."

## நரேந்திரசிங்க அரசரின் மரணம்

கண்டியரசருடைய இறுதிகாலம் முடுகிக் கொண்டுவந்தது. மிஷனறிமார் தங்களுக்கு எவ்வளவோ கருணைகாட்டிக் கொண்டுவந்தவர் மனந்திரும்பும்படியாக மன்றாடிவந்தார்கள். அவர் மனந்திரும்புவார் என்று சிலர் நம்புவோருமானார்கள். நரேந்திர சிங்கரும் தம்முடைய ஆபத்துவேளைகளில் தியான சம்பிரதாயிகளையே நாடுவார். "கற்பிட்டியிலே ஆகாயத்திற் சில உற்பாதங்கள் காணப்பட்டதை அரசர் கேள்விப்பட்டபோது, சாங்கோபாங்க சுவாமிகளைத் தம்மண்டையில் அழைத்து, அந்த அடையாளங்களால் என்ன குறிக்கப்பட்டுள்ளது என்று கேட்க, சுவாமிகள் தாம் சருவேசுரனுடைய இரகசியங்களைக் கண்டு பிடிக்கத்தக்கவரல்ல என்று உள்ளதைச் சொன்னார். அரசர், பின்பு, கிறீஸ்துவேதத்தைப் பற்றிச் சில கேட்டார். சுவாமிகளுடைய நூல்களில் ஒன்றாகிய "தேவநீதி விசர்ஜனய" விலே சொல்லப்பட்ட விஷயங்களாகிய உலகமுடிவையும் கிறீஸ்து நாதர் நடுக்கேட்க எழுந்தருளுவதையும் பற்றி விசேஷமாய் அறிய விரும்பினார். இத்தருணத்திலும் வேறு பல தருணங்களிலும், அரசர், தமது நாட்டிலுள்ள சமயத்தில் தமக்கு உள்ள வெறுப்பையும் சத்திய வேதத்தில் கொண்ட சார்பையும் தெளிவாக வெளிப்படுத்தினார். கண்டி இராசாத்தியான டோனா கத்தரீனாவுடைய பிள்ளைகளுக்கு உவாத்தியாராய் ஒன்பது வருஷம் கண்டி அரண்மனையில் வசித்திருந்த பிராயர் பிறஞ்சீஸ்கு நெகிரும் எனும் பிராஞ்சீஸ்கு சபை விசாரணையாளர் எழுதிவைத்த ஒரு ஓலையை அரசர் சுவாமிகளுக்குக் கையளித்தார். அதிலே திவ்விய ஸ்நானம் பெற்றுக்கொண்ட இலங்கை அரசருடையவும் இராசகுமாரருடையவும் நாமங்கள் குறித்திருந்தது. நரேந்திரசிங்கருடைய வேண்டுகோளின்படி சுவாமிகள் அதற்கு ஒரு சிங்கள மொழிபெயர்ப்புச் செய்து கொடுக்க அதை அவர் தமது இராச பொக்கிஷச் சாலையில்

சேமமாக வைப்பித்தார். அரசர் பலமுறையும் "எங்கள் முன்னோரது சமயத்தில் நிலைத்தோமில்லையே என்று தனித்தும் பிரசித்தமாயும் சொல்லிவருவார்" (1733—1740-இன் அறிக்கை.)

அவர் வியாதியாய்க்கிடந்த போது, ஆசிநீர் கொண்டுவரும்படி செய்தது மாத்திரமன்றி, தமது சுகத்துக்காகக் கண்டியிலுள்ள மாதா கோவிலில் மெழுகுதிரி கொளுத்தும்படியும் கேட்டார். 1739-ம் ஆண்டு வைகாசி 13-ந் திகதி அவர் மரித்த வேளையிலோ சாங்கோபாங்க சுவாமிகள் கண்டியில் இல்லாமற் போனது துர் அதிஷ்டம். அவ்வேளை கண்டியிலிருந்த ஒரே குருவானவரான குஸ்தோடியு தெ அந்திராதே சுவாமியார் அரசருக்காக ஒன்றும் செய்ய முடியாமலிருந்தது. "ஏனெனில், அதற்கென்று அழைக்கப்பட்டு இராசசமுகத்தில் விடப்பட்டாலொழிய, எவரும் கண்டி மன்னர் முன் போய்ப் பேச ஒண்ணாது. இந்தச் சிலாக்கியம் அரண்மனையாருக்கும் அருமையாய்த் தான் கிடைக்கும். எங்கள் குருமாருக்குள் ஆசாரத்துக்குரிய யோசேவாசுக்கும், இஞ்ஞாசியு தெ அல்மெயிதா சுவாமியாருக்கும் அவ்வேளை கொழும்பில் நின்ற கொன்சால்வெஸ் சுவாமியாருக்குமே கொடுக்கப்பட்டது." (மேற்படி அறிக்கை)

நரேந்திரசிங்க அரசருக்குப் பின், இராணியாருடைய சகோதரரான ஒரு மதுரை நாயக்கர் அரசரானார். அவர் அதற்கு முன்னும் அரசுரிமைக்காரராய் மதித்து குமார அஸ்தான என்று அழைக்கப்பட்டு வந்தவர், முடிசூடியபின் சிறீ விஜய ராஜசிங்க எனும் பெயரைத் தரித்தார். அவர் பிறப்பினாலும் வளர்ப்பினாலும் இந்து சமயத்தவராய் இருந்தபோதிலும், சிங்காசனம் ஏறியபின், தம்முடைய பிரசைகளின் சமயத்தையே கைக்கொள்ளவேண்டியது என்று அறிந்திருந்தார். சாங்கோபாங்க சுவாமிகளோடு அவர் நல்ல பழக்கமானவர். அவருக்கே சுவாமிகள் "புத்துமூல" எனும் தமது நூலொன்றை அர்ப்பணஞ்செய்ய அதை அவர் சந்தோஷத்தோடும் பிரீதியோடும் வாசித்திருந்தவர். கத்தோலிக்கர் பேரில் அவருக்கு மிகு பற்றுதல் இருந்தபோதிலும், அரசியல் நியாயங்களுக்காக அன்னோரோடு சாவதானமாய் நடந்து கொள்ள வேண்டியவரானார். ஏனெனில், கிறீஸ்தவர்களுக்கு எதிர்க்கட்சியானது சாங்கோபாங்கரது மரணத்தின் பின் விரைவிலே பெலங்கொண்டு திருச்சபையைத் துன்பப்படுத்தப் போகிறதை அவர் ஊகித்துக் கொள்ளத்தக்கதாயிருந்தது. உள்ளபடி, நரேந்திரசிங்கர்



அரண்மனையிலிருந்து துரத்திவிட்ட வெலிவிற்ற சமங்கற எனும் சமயத் தலைவன், அவர் மரணத்தின்பின் சமீபகாலத்திலே, அரண்மனையிலும் புகுந்து கொண்டு அதிகாரத்திலும் மிகுந்து வந்தான். தொடக்கத்தில் புது அரசர் அவனை அடக்கி நடக்கத்தக்கதாயிருந்தது. அவனோ எப்போதும் "எங்கள் மிஷனறிமாருக்கும் கிறீஸ்துவேதத்துக்கும் சத்துரு. வேதத்துக்கு எதிராய் அவன் பலமுறை சூழ்ச்சிகள் பண்ணியும், இறந்துபோன மன்னவர் எங்கள் மிஷனறிமாரில் வைத்த மதிப்பின் நிமித்தம், ஒன்றும் செய்யமாட்டாமற் போனான். இப்போது, அவன், புது அரசரோடு ஒரு கை பார்க்கத் தருணம் வாய்த்தது என்று எண்ணி, அவர் முன்னிலையில் மிஷனுக்கு மாறாகப் பல அபவாதங்களை எடுத்து வைத்துக்கட்ட, அவரோ, பலர் சொல்லுகிறபடி, விமரிசையும் உதாரமுமுள்ள ஒரு சமர்த்தராயும் அரசியலுக்குத்தக்கவராயும் விளங்குகிறபடியால், அவனுடைய பொய்களையும் ஆவலாதிகளையும் தாம் நம்பாததை வெளியே காட்டாமலே அவனைப் பேசிக்கொண்டிருக்க விடுவார்."

கொழும்பில் நின்ற சாங்கோபாங்க சுவாமிகள் புது அரசருக்குப் "பலவிதமான நூதன பொருட்களும் கொழும்பிலே வெகு கவனத்தோடு பெருஞ்செலவு செய்து பக்குவமாய் அடுக்குப்பண்ணிய பலகாரங்களும் சந்திப்பாக அனுப்பினார். இவ்வித கொடைகள் காலஞ்சென்ற அரசருக்கும் இப்போது அரசராய் வந்த இராசகுமாரருக்குத் தானும் முன்னர் முன்னர் கொடுத்த வேளைகளில் உவந்து ஏற்கப்பட்டிருந்தபடியால், இம்முறையும் யோசனையின்றி சந்திப்பு அனுப்பலானார். அதற்குப்பதிலாக அரசர், ஒவ்வொன்றும் 195 றெயிஸ் விலையுள்ள பெருந்தொகையான பகொடி என்னும் பொன் நாணயங்களை அவருக்கு அனுப்புவித்தார். சுவாமிகள் அப்பணத்தை ஏற்றுக்கொள்ள வெகு விநயமாய் மறுத்து, மிஷனறிமார் இலங்கையிலே சருவேசுரனுக்கும் அரசருக்கும் ஐம்பது வருஷம் வரையில் ஊழியஞ்செய்து அரசருடைய பிரசைகளின் நன்மைக்காகப் பாடுபட்டார்களே அன்றி, எப்போதாவது கொஞ்சமேனும் பணத்தின் மேல் ஆசைகொண்டதில்லை என்றார். அரசர் அதற்கு மாறுத்தரமாய்: அப்பணம் யாதொரு சம்பளம்போல் அல்ல, சுவாமியார் கையால் ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்காகக் கொடுக்கப்பட்டது என்று சொல்லியனுப்பினார். ஆதலால், மூப்புச் சுவாமியார் அப்பெருந் தொகையை மிஷனறிமார் கை

யில் பிரித்துக் கொடுத்து, அதை இராசா அனுப்பினார் என்று சொல்லி அவர் பேரால் ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கச் செய்தார்" (1733—1740-இன் அறிக்கை.)

"அரசர் முடிசூடியபின்பு கொன்சால்வெஸ் சுவாமியார் தமது உபசாரங்களை ஒப்புக்கொடுக்க மாளிகைக்குப் போன போது, அரசர் மட்டுமல்ல அவர் சகோதரியான இராணியும் கூட அவரை, மாளிகையிலே, அரண்மனையின் பிரதானிகளுடையவும் சங்கத்தார் அல்லது கனேஸ் என்றழைக்கப்படும் அரசனுடைய சமயகுரவர்களுடையவும முன்னிலையில், வெகு சங்கை மரியாதையோடு வரவேற்றார்கள். அவ்வேளை சுவாமியார் கடலுக்கப்பாலிருந்து வந்த சில நூதனசாமான்களைக் கையுறையாய்க் கொடுக்க அவைகளைச் சந்தோஷத்தோடு பெற்றுக் கொண்டு, அவரை இனிமேலில்லையென்ற நம்பிக்கைக்குரிய ஒருவராக நடப்பித்தார்கள். சுவாமியார் செலவு பெற்றுக்கொண்டு போகையில், அரசர் முழு இராச்சியத்துக்கும் மகா பிரதி காவலனான தம்முடைய முதலதிகாரியை அனுப்பி சுவாமியார் ஏதாவது சனுவு பெற்றுக்கொள்ள மனதாயிருக்கிறாரோ, என்று கேட்பித்தார். அதற்கு இவர், தாம் அரசருடைய தயவின்கீழே வாழுவது ஒன்றே போதும் என்றும், தமக்கு யாதொரு உலக நன்மைகளும் வேண்டாம் என்றும் விடை பகர்ந்தார். அதிகாரி இதை அரசருக்குத் தெரிவித்து, தானும் ஒன்றைக்கூட்டி, சுவாமிமார் தங்கள் சுயநலத்தைத் தேடுவதில்லை என்றான். அரசரோ இந்த மறுமொழியைக் கேட்டு மனமகிழ்ந்து, சுவாமியார் வெள்ளியைப் பொன்னை விரும்பாதபடியால், தாம் அவருக்கு அவர் வேறெதிலும் மேலாக மதித்த ஒன்றை, அதாவது அந்த இராச்சியத்திலே அவர் விரும்பிய இடங்களிலே எல்லாம் கோயில்களைக் கட்டி ஓட்டால் வேயும் உத்தரவை அளிக்கிறோம் என்று சொல்லுவித்தார். ஓட்டால் வேய்தலானது அந்த இராச்சியத்தில் வழக்கமான ஒன்றல்ல. அவ்வாறு செய்ய எப்படிப்பட்ட பெரியவனுக்கும் உத்தரவு கிடையாது. எங்கள் கோயில்களுக்கே கிடைத்தது." (1741-ம் ஆண்டின் அறிக்கை).

# பன்னிரண்டாம் அதிகாரம்

## கடைசி நோயும் திரு மரணமும்

சாங்கோபாங்க சுவாமிகள் அறுபத்தாறு வயதிலே மரிக்கக் காரணமாய் வந்த கடும் காய்ச்சலானது அவருக்கு 1741-ம் ஆண்டுக் கடைசியிலே கண்டது. பலமாதங்களாய், அவர், பெலவீனத்தினால் மீசாங்களை வழக்கம் போலத் தரிசிக்கவும் பிரசங்கஞ் செய்யவும் மனந்திரும்புவோருக்கு அறிவு சொல்லவும் இயலாதவராய் வந்துவிட்டார். தமது நோய் ஆபத்துக்குரியதென்று உணர்ந்து, தாம் உண்டாக்கிய போளவத்தை (வெள்ளவத்தை) எனும் கிராமத்திலே ஒதுங்கினார். இதுதான் அவர் திருமேனி புதைக்கப்பட்ட இடம்; இருநூறு வருஷக்காலமாய் இலங்கைக் கத்தோலிக்கர் அவருடைய் ஞாபகத்தைக் காப்பாற்றுவதற்கு ஏதுவாய் வந்த தலம். அவர் நோயுற்றிருக்கிறார் என்று கோவைத் தியானசம்பிரதாயத்தார் கேள்விப்பட்டபோது, ஆலோசனைச் சங்கங் கூட்டி, அவருடைய ஆளுகையின்கீழே திருச்சபை அடைந்துகொண்ட முன்னேற்றத்தைப்பற்றி ஒரு அறிக்கை எழுதுவதற்கும், அவர் அத்தனை சித்தியோடு கையாண்ட முறைகளைப் பிற்காலத்திலும் நடப்பிப்பதற்குச் செய்யவேண்டியவைகளைப் பார்த்து அறிவிப்பதற்குமாக ஒரு சுற்று விசாரணைக் குருவானவரை அனுப்பத் தீர்மானித்தார்கள். இந்த உத்தியோகத்துக்கு நியமிக்கப்பட்டவரான மடுத்தீனு சவியேர் சுவாமியார் சாங்கோபாங்க சுவாமிகள் கண்மூடுவதற்குச் சில தினங்களின் முன் மாத்திரம் போளவத்தையில் வந்து சேர்ந்தார். ஆகவே, சுவாமிகள் மரணத்துக்கு முந்தியநாள் வரையுந்தானும் தமது உத்தியோகத்தோடிருந்தார். மிஷன் முயற்சிகளிலே பங்குபற்ற முடியாதவர், அதை இருந்தவிடத்தில்நின்றே பரிபாலிக்கும் வேலையொன்று போக, மிஞ்சிய நேரமெல்லாம் தம்முடைய பரம குருவானவர் சமுகத்துக்கு ஏகுவதற்குச் செய்யவேண்டிய ஆயத்தத்தைச் செய்வதிற் போக்கினார். வருத்தமாய்க் கிடந்து கொண்டும் தமது எழுத்தாளர்களுக்குச் சொல்லி எழுதுவிக்கும் வழக்கத்தை அவர் விடாதிருந்தது அவரது போக்கைக் காட்டுகின்றது.

### போளவத்தைக் கோயில்

சுவாமிகளிடம் இருந்த பிற்கால நோக்கினாலேதான், போளவத்தைக் குடியிருப்பு உண்டாவதாயிற்று. ஒல்

லாந்தருடைய ஆளுகைக்கு அப்பாலும், அவ்வாளுகைக்குள் வசிக்கிற கத்தோலிக்கர்கள் இலேசாய் வந்துபோகக்கூடியதுமான ஒரு இடத்தில், கத்தோலிக்கு தலைத்தானம் ஒன்றை உண்டாக்க வேண்டுமென்று அவர் நெடுநாள் தேடிக்கொண்டிருந்தார். ஒல்லாந்த நகரிகளில், இரவிலே, மிகு இரகசியமாய், ஒவ்வொரு தடவையில் ஒவ்வொரு சிறு கூட்டத்துக்காக மாத்திரம் திவ்விய பூசை வைக்கக் கூடியதாயிருந்தது. சக்கிறமேந்துகளையும் இரவிலே சுறுக்குச் சுறுக்காய் நிறைவேற்றவேண்டியிருந்தமை குருமாருக்கும் விசுவாசிகளுக்கும் பெரும் வசதியீனத்தை உண்டுபண்ணுவதாயிற்று. ஒரு குருவானவர் தமது ஞான உதவிகளைத் தேடி வருவோருக்கு வேண்டியவைகளையெல்லாம் செய்துகொண்டு ஒரே இடத்தில் நெடுநாள் தங்க முடியாது. ஆகையாலேதான் கிறீஸ்தவர்கள் பெரிய திருநாட்களிலேயாவது அச்சமில்லாமல் கூடித் தங்கள் வேதக் கடமைகளை ஆறியமர்ந்து நிறைவேற்றுவதற்கும், திருச்சபையின் சடங்காசாரங்களை, பாடற்பூசை பாடகர் கூட்டம் சுற்றுப்பிரகாரங்கள் பிரசங்கங்கள் பாசுக்காட்சிகளோடு சட்டவட்டமாய் நடப்பிப்பதற்கும் ஒரு பொதுவான இடம் இருக்கவேண்டுமென்று சாங்கோபாங்க சுவாமிகள் ஆசித்துக்கொண்டு வந்தார். இதற்கு முன் இப்படிப்பட்ட இடங்களை கண்டிராச்சியத்திலே, புத்தளத்திலே, வன்னியிலே, இன்னும் இடைக்கிடை மாதோட்டத்திலே மட்டும் தேடிக்கொள்ளத் தக்கதாயிருந்தது. இந்தப் பொதுத் தலங்களோ நீர்கொழும்பில், கொழும்பில், தெற்கிலுள்ள நகரிகளில் வசிப்போருக்கு வெகு தூரத்திலிருந்தன. ஆதலால், சுவாமிகள் அரசருடைய நாட்டிலேயுள்ளதும் முன் பழுதாய்ப் போன கச்சிறுவாவுக்கு அதிகதூரப்படாததுமான போளவத்தையையே ஒரு கத்தோலிக்கு குடியேற்றத்துக்கு ஏற்ற தலமாகத் தெரிந்தெடுக்கலானார்.

கச்சிறுவா அழிந்தது அரசராலல்ல அவருடைய குறும் புத்தியுள்ள ஊழியர்களாலேதான் என்று சுவாமிகள் அறிந்துகொண்டவராகவே, போளவத்தையில் தமது எடுப்பைப் பயமின்றி கொண்டுநடத்தினார். கோயிலைப் பெருப்பித்து, அங்கு நத்தால்தினத்திலும் விசேஷமாய் உத்தானத் திருநாளிலும் கூடிவரத் தொடங்கிய ஆண் பெண்களுக்கெல்லாம் இடந்தரத் தக்க விசாலமுள்ளதாக்கினார். அறை வீட்டையும் அதில் இளைப்பாறவோ ஞான ஒடுக்கஞ் செய்யவோ வருஷாந்தக் கூட்டம் வைக்கவோ வருகிற மிஷனறிமாருக்குப் போதிய வசதி



அளிக்கத்தக்கதாக அகட்டிக்கட்டினார். விசுவாசிகள் பரிசுத்தவாரத்துக்கு நீர்கொழும்பு கொழும்பில் நின்று மாத்திரமல்ல, களுத்துறையிலிருந்தும் அப்பால் காலியிலிருந்தும் மாத்தறையிலிருந்துதானும் வந்து, பொதுவாய், குருத்தோலை ஞாயிறு தொடக்கம் உத்தானத் திருநாள் மட்டும் நின்றுபோக மனதாயிருந்தமையால், அவர்கள் தங்குவதற்கு கிடுகால் வேய்ந்த வேளைக்குத்தக்க கொட்டில்களும் புழங்குவதற்கு சட்டி பானை முதலியவைகளும் ஆயத்தமாக்கப்பட்டன. உத்தானத்திருநாளன்று போளவத்தை ஒரு பெரிய யாத்திரை நகரியாகி, கத்தோலிக்கு பயபத்தி விளங்குகிற காட்சிகளை அளிப்பதாகும். அன்று திருச்சபைச் சடங்குகள் எல்லா ஆடம்பரங்களோடும் நடக்கும். நாள்முழுதும் வீடுகளெல்லாம் சுவாமிகளாலே இயற்றப்பட்ட அழகிய கீர்த்தனங்களின் இராகங்களால் ஒலித்துக் கொண்டிருக்கும். “சனங்களேயும் பாட்டுக்களை உண்டாக்கி மாறிமாறிப்பாடுவார்கள்”. கொழும்பிலும் வேறிடங்களிலுமிருந்து சீமாட்டிகள் பிடில்களும் மண்டொலின்களும் கொண்டுவந்து வைத்திருந்து, பாடுவோருக்குத் துணைச்செய்வதோடு “போத்துக் கேயத்திலே இரக்கமுள்ள பல்லவிகளையும் இசைப்பார்கள்.”

மிஷன் தலைத்தானத்தை போளவத்தையில் மாற்றிவைத்தது சாங்கோபாங்க சுவாமிகளின்கீழ் திருச்சபை அடைந்துகொண்ட வளர்ச்சிக்கு ஒரு அடையாளமாயிற்று. ஆசாரத்துக்குரிய யோசே வாஸ் முனிவர், தமது காலத்திற் சிங்கள அரசருடைய தலைநகரிதான் துன்புறுத்தப்பட்ட குருமார் சேமமாய்த் தங்கத்தக்க இடமென்று உணர்ந்தபடியால், கண்டியைத் தலைத்தானமாக்கினார். அவருக்குப் பின் வந்த யோசெப் தெமெனேசெஸ் சுவாமியார் புத்தளத்தைத் தமது உத்தியோக இருப்பிடமாக்க நேர்ந்தது எப்படியெனில், மிஷனறிமார் தொகை அதிகரித்ததோடு அதுதான் குருமாரும் விசுவாசிகளும் இலேசாய்ப் போய் ஒன்று கூடுவதற்கு ஏற்றதாகத் தோன்றிற்று. மூன்றும் மூப்புச்சுவாமியாரான பேதுறு தெ சல்தாஞ்ஞா தமது வயதையும் பெலவீனத்தையும் பற்றித் தூர இடங்களுக்கு அப்போஸ்தோலிக்குப் பயணங்கள் பண்ண இயலாமலிருந்தவர், மாதோட்டத்திலுள்ள பெருந் தொகையான கிறீஸ்தவர்களைத் தமது பொறுப்பில் வைத்துக்கொண்டு அதையே தமது தலைத்தானமாக்கினார். சாங்கோபாங்க சுவாமிகளோ, முதல் கண்டியிலும் பிறகு புத்தளத்திலும் வசித்தவர், கடைசியிலே சகல மிஷ

னறிமாரோடும் புழங்கத்தக்கவராய் இருப்பதற்காக போளவத்தையைத் தமது வாசஸ்தானமாக்கினார்.

## தந்தத்தாற் செய்த தேவதாயார் சுரூபம்

போளவத்தையில் உண்டான புதிய குடியிருப்பை கண்டியரசர் அறியாதிருந்தவர் அல்ல. சிறீ விசய ராசசிங்கர் அதைத் தாம் அங்கீகரித்துக் கொண்டதற்கு ஓர் பக்ஷம் நிறைந்த அடையாளமாக, அதற்கு "திவ்விய குழந்தையைக் கரத்தேந்திய செபமாலைமாதாவின் தந்தச் சுரூபம்" ஒன்றை அனுப்பிவைத்தார். அது கண்டியிலே பண்ணிய சித்திரவேலை என்று வெளிப்படத் தோன்றியது. அது வந்துசேரும் தினம் நாடெங்கும் அறிவிக்கப்படவே, அவ்வேளை நடக்கப்போகிற மகா சுற்றுப்பிரகாரத்தைத் தரிசிக்கும்படியாக எல்லாத் திசைகளிலிருந்தும் கத்தோலிக்கரும் அல்லாதோருமான சனங்கள் கும்பல் கும்பலாய் வந்து கூடினார்கள். கண்டி நகரியிலிருந்து போளவத்தைக்குத் திருச்சுரூபத்தைக் கொண்டு போவதற்கு மோத்தே பாஸ்குவால் எனும் அரண்மனை உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். இவர் போத்துக்கேயர் மரபிலுள்ளவர்; அரசரின் கீழ் ஒரு கண்ணியமான பதவியில் இருந்தவர். கண்டியதிகாரிகளின் அலங்காரமான உடையை அணிந்து இவர் வர, இவருக்குப் பின்னே கண்டிப் பெரசெராக்களிற் போல ஆடல் பாடற்காரரும் வந்தார்கள். போளவத்தைக் கத்தோலிக்கு கிறீஸ்தவர்கள் அரைக் காதவழிதூரம் போய் திருச்சுரூபத்தை எதிர்கொள்ளும்படியாக விசித்திரமாய் அலங்கரித்த ஒரு சரோலைக் கூட்டோடு வரிசையாய்ப் பவனி சென்றார்கள். சுற்றுப்பிரகாரம் மீண்டபொழுது சுப்பிளிசும் காப்பையும் அணிந்த ஒரு குருவானவர் கோயில் வாசலிலே நின்று திருச்சுரூபத்தை வாங்கி ஏந்திக்கொண்டு, கத்தோலிக்கருள் முக்கியரான சிலர் பிடித்துக்கொண்டு நின்ற மேலாப்பின் கீழ் அதைக் கொண்டுசென்று, பீடத்துக்கு மேலே பின்புறத்தில் அதற்கென்று ஆயத்தப்படுத்தியிருந்த மாடத்தில் எழுந்தருளுவித்தார். தேவ தாயார் பத்தியை அதிகமாக்கும்படிக்கு ஒரு பத்திச்சபை உடனே தாபிக்கப் பட்டது. இது விரைவிலே அநேக அங்கத்தவர்களைக் கொண்டதாகி வேறிடங்களுக்கும் பரந்தது. இலங்கையின் பிரதான கத்தோலிக்கர்கள் எல்லாம் இதற்கு பேர்கொடுத்துச் சேர்ந்து இதற்குரிய விசேஷ உடையை அணிந்துகொள்வதிலே மகிமை பாராட்டலானார்கள் "கொழும்பின் சீமாட்டிகள் அந்த உடையை அணிந்து கொண்டு ஆலயத் திருச் சடங்குகளுக்குப்



போவது பெரிய சிலாக்கியம் என்று மதிக்கிறார்கள். ஊர்ச் சனங்கள் மட்டுமல்ல ஐரோப்பியர்களும் முக்கியமான பிரபுக்களும் கோயிலுக்குள் வரும்போது சப்பாத்துகளைக் கழற்றி வெளியே விட்டு விடுகிறார்கள்" (1741-ம் ஆண்டு அறிக்கை)

சாங்கோபாங்க சுவாமிகள் மூப்புக்குருவாகக் கடைசியாய்ச் செய்தவைகளுள் ஒன்று எட்டாம் சாந்தப்ப பாப்பாண்டவர் 1734-ம் ஆண்டு ஆவணி 24 இலும் 1739 வைகாசி 30 இலும் தமிழ் நாட்டுக் கிரியைகளைப் பற்றி விடுத்த முத்திரை நிருபங்களை இலங்கையிற் பிரசித்தப்படுத்தியதாம். தமிழ் நாட்டுக் கிரியைகள் என்றவை என்னவென்றால், தென் இந்தியாவிலே மனந்திரும்பியவர்கள் சாவீட்டின் பின் ஸ்நானம் பண்ணுதலைப் போன்ற வேதத்தைச் சாராத சில நாட்டு வழக்கங்களைப் பழையபடி கைக்கொள்ளக் குருமார் விட்டிருந்தார்கள்; அவைகள் எல்லாம் உள்ளபடி ஆட்சேபத்துக்கு உரியவைகளல்லாவிடினும் சிலர் ஒரு தவறான விளக்கத்தினால் அவைகளை முற்றாகக் கண்டித்து எழுதியதின் பேரால் உரோமாபுரியும் அவைகளை அக்காலம் விலக்கியிருந்தது. இலங்கையில் இந்த "தமிழ்நாட்டுக் கிரியைகள்" நடைபெறாதபோதிலும், கிழக்குச் சீமைகளின் திருச்சபையில் எல்லாம் ஒருவிதமாய் நடைபெறும்படிக்கு இங்கும் அந்த முத்திரை நிருபங்கள் பிரசித்தஞ் செய்யப்பட்டு குருமார் எல்லாரும் அதிற் சொல்லப்பட்ட சத்தியத்தைச் செய்தார்கள். அவர்கள் சத்தியஞ்செய்து கைச்சாத்திட்ட பத்திரம் யேசு சபையைச் சேர்ந்த அந்தோனி தெஸ்தொறி சுவாமியாரால் உரோமாபுரிக்கு அனுப்பப்பட்டது. அனுப்பியவர் இலங்கைத் தியானசம்பிரதாயிகள் "பரிசுத்த ஸ்தானத்திலும் வேதப்பரப்புதற் சபையிலும் மிக அன்பு பூண்டவர்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## சுவாமிகளின் பாக்கியமான மரணம்

இலங்கை மிஷனைச் சுற்றி விசாரணைசெய்ய மடுத்தீனு சவியேர் சுவாமியார் வந்தார் என்றோம். அவர் கொழும்பில் வந்து இறங்கியது 1742 சித்திரை மாதத்தில். அவரோடு கூட பேர்ணடனு மொன்றேய் என்னும் குருவானவர் லிகிதராய் வந்தார். இவர் முன் இலங்கை மிஷனறிமாருள் ஒருவராயிருந்து சுகத்தாழ்வின் நிமித்தம் கோவைக்குச் சென்றிருந்தவர். சுற்று விசாரணைச் சுவாமியார், முதல் கொழும்பிலுள்ள சிறுக் கோயில்களைப் பார்த்துக் கொண்டு சிலகாலம் கழித்தபின், ஆடித் தொ

டக்கத்தில் போளவத்தையிற் சேர்ந்தார். அவ்வேளை சாங்கோபாங்க சுவாமிகள் பாயும் படுக்கையுமாயிருந்தவர், விசாரணைச் சுவாமியாருக்கு ஆசாரஞ் செய்யும்படிக்கு படுக்கையை விட்டெழுந்து, தம்மாலியன்றளவில் அடக்க ஒடுக்கமாய் நின்று, அவரை வரவேற்றுக் கொண்டு கோயிலுக்குச் சென்று தேடேயும் எனும் தோத்திரப்பாடலைத் துவக்கிவிட்டார். அங்கே தமது இரு உத்தியோகங்களையும் கைவிட்டிட்டுப் படுக்கைக்கு மீண்டார். அதுதான் அவர் பிரசித்தமாய் வெளியே காணப்பட்ட கடைசித் தருணம். அதன்பின் வருத்தம் மிஞ்சிவிட்டது. கடைசித் தேவதிரவிய அனுமானங்களைத் தமக்குத் தரும்படி கேட்டு அவைகளை அத்தியந்த பத்தியோடு பெற்றுக்கொண்டு, மிஷன் வேலையைப் பற்றிய சகல கவலைகளையும் ஒதுக்கி விட்டு, தம்மைப்படைத்தவரோடு உருக்கமான சம்பாஷணைகள் செய்துகொண்டு முடிவு நேரத்துக்கு ஆயத்தஞ் செய்யலானார்.

சுவாமிகள் ஆடி 17-ந் திகதி இரவு பதினொருமணிக்கு, கடைசி மட்டும் அறிவோடிருந்து, மரணநித்திரையானார். சுற்று விசாரணையாளரும் இன்னும் ஐந்து குருமாரும் மரணப்படுக்கையடியிலிருக்க, தங்கள் “பெரிய சுவாமி” உயிர் பிரியப் போகிறார் என்று அறிந்த சனங்களும் திரளாய் வந்து கூடியிருந்தார்கள். இறந்தவருடைய திரு உடல் குருப்பிரசாதிகளுடைய திரு உடுப்புகள் அணிவித்து, முன்னரே ஆயத்தப்படுத்தியிருந்த சவப்பெட்டியில் அடக்கி, கோயிலிலே கொண்டு போய்க் கணக்கில்லா மெழுகுதிரி வெளிச்சங்களின் நடுவே ஓர் அழகிய பாடையிலே ஏற்றி, வந்திருந்தோரெல்லாம் “பெரியசுவாமியாரை” வந்திக்கும்படியாக வைக்கப்பட்டது. அவர் மரித்த செய்தி கேட்டுப் பலவிடங்களிலும் நின்று வந்து குவிந்து கொண்டிருந்த எண்ணில்லாத விசுவாசிகளின் பொருட்டு 19-ந் திகதி வரைக்கும் திருத்தேகம் பூச்சியமாய் எழுந்தருளுவித்து வைத்து, பின் கோயிலினுள்ளேயே அடக்கஞ்செய்யப்பட்டது. சுவாமிகளோடு உதவியாளரும் கூட்டாளியுமாயிருந்தவரான குஸ்தோடியு தெ அந்திராதே சுவாமியார் மனதையருட்டும் வண்ணமாய் பிரேதசேமப் பிரசங்கஞ் செய்தார். “நான் பயிரை நாட்டினேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினார், சருவேசுரனே பலனளித்தார்” என்று அர்ச். சின்னப்பர் வசனித்த வேதவாக்கியத்தை பீடிகையாய்க் கொண்டு சாங்கோபாங்க சுவாமிகளின் பிரிவால் இலங்கைத் திருச்சபையடைந்த பெரும் நஷ்டத்தை அவர் எவ்வளவு உருக்கமாய் விபரித்தார் என்றால், கேட்டிருந்த சனசமூ



கம் முழுதும் விம்மி விம்மி அழத் தொடங்கவே பிரசங்கியாரும் பேசமுடியாமல் திக்குமுக்காடுகிறவரானார். அவர் சொல்லியவைகளுள் ஒன்று என்னவானால், “சுவாமிகளுடைய நூல்களை வாசித்ததினால் மாத்திரம் பதினாயிரம் பேருக்குமேல் சத்தியவேதத்திற் சேர்ந்தார்கள். இவர்களுள் பலர் படிப்பிலும் உலக மகிமைகளிலும் மேற்பட்டவர்கள்” என்றார்.

பிரேத சேமத்துக்குப்பின், அநேக மாதங்களாய், இலங்கையின் பல பல கிராமங்களிலுமிருந்து ஒவ்வொரு தொகை ஆட்கள் மற்றவர்களுக்குத் தானபதிகளாக அவர் கல்லறையைத் தரிசிக்க வருவார்கள். வந்து, தானதருமங்களைச் செய்தும், அவர் ஆத்தும இளைப்பாற்றிக்காகப் பூசை வைப்பித்தும் போவார்கள். கொழும்பில் அவர் இளைப்பாற்றிக்காகப் பெருந்தொகையான வறியவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. அநேக கத்தோலிக்கு கிராமங்கள் யோசேவாஸ் முனிவருக்குப்பின் இலங்கைத் திருச்சபையிலே விசேஷம் பெற்ற திருவுருவாய் விளங்கிய “பெரிய சுவாமியா”ரின் பிரிவால் நொந்து புலம்பி அழுதன.

## சுவாமிகளின் தோற்றமும் போலிவும்

தோற்றத்திலேதானும் சுவாமிகள் ஒரு விசேஷமான ஆளாய்க் காணப்பட்டார். உயரத்தில் நெடுவலும் அவயவங்களில் செவ்வையான அமைப்பு உள்ளவரும் இறுகி ஒசட்டையான தேகம்படைத்தவருமாகவே, அவர் அரும்பாடுகளையும் படத்தக்க திடகாத்திரங் கொண்டவரானார். அவருடைய வெண்மை பொருந்திய மேனியும், விரும்பத்தக்கதாய் மகத்துவம் சொலிப்பதாய் விளங்கிய முகமும் அவரை ஒரு விசேஷ மனிதராய்க் காட்டிக்கொண்டிருந்தன. முன்னே, தியான சம்பிரதாயிகளின் மடத்திலே வெளிப்படாமலிருந்து மௌனத்திலும் புத்தகங்களோடும் பொழுது போக்கி வந்த மிருதுவான ஒரு வாலிபரை, இலங்கையின் மிஷனறிவேலையானது ஓயாமல் பயணம் பண்ணிக்கொண்டு எவ்வித ஆபத்துகளுக்கும் அஞ்சாமல் எவ்வித எதிரிடையாலும் தடைப்படாமல் வீர ஆவேசத்தோடு உழைக்கும் சுவிசேஷப்போர்வீரன் ஆக்கிவிட்டது. இவர் தங்களோடு இருக்கிறார் என்ற ஒன்றுதானும் துன்புறுத்தப்பட்ட இலங்கைக் கிறீஸ்தவர்களுக்கெல்லாம் தைரியத்தை ஊட்டி விடப் போதியதாயிற்று. இலங்கையிலே திருச்சபை அடைந்திருந்த தாழ்வான நிலை அவருக்குத் துணிவை உண்

டாக்கி, பேச்சிலும் கிரியையிலும் அவர் அஞ்சா நெஞ்சராய் நிற்கப்பண்ணிவிட்டது. அவர் தேவாதீனத்தில் முழு நம்பிக்கை வைத்துக் கொண்டு, எடுத்தது கைவிடாமல் முயன்று, வேதத்தின் நன்மைக்கு இது அவசியம் என்று கண்டு எதைத் தொடங்கினாரோ அதை முடியுமட்டும் நடைபெறச் செய்கிறவரானார். கத்தோலிக்கருக்கு ஆபத்து நேர்ந்தபோது, அவர், வேத கலாபனையின் ஆகப்பெரிய நெருக்கிடைக்குள்ளேதானும், ஒல்லாந்த நகரிகளில் உட்படவும் கண்டி இராச்சியத்தின் வேத விரோதத் தலையாரிகளின் கோப ஆவேசத்துக்கு எதிர்நிற்கவும் பின்வாங்காதிருந்தார்.

இலங்கையில் வழங்கிய பாஷைகளில் அவர் அடைந்துகொண்ட பூரண புலமையினால் கண்டியரசரோடு பேசப்போனால் என்ன, ஒல்லாந்த கவணரோடு உரையாட நேரிட்டால் என்ன, படிப்பில்லாத ஒரு பட்டிக்காட்டானோடோ கல்வியறிவிற்சிறந்த ஒரு முதலியாரோடோ கலந்துபேசினாலென்ன—அவரவருக்குரியபடி சம்பாஷிக்கத் தக்கவராயிருந்ததோடு, ஆடிய தர்க்கங்களிலெல்லாம் வெற்றியுடன் வெளிப்படக் கூடியவருமானார். வேதத்தைத் துன்புறுத்திய மனுஷரைப்பற்றி அவர் கவனியாதது போலவே, உயிருக்குத் தீங்குசெய்ய வந்த காட்டு மிருகங்களைப்பற்றியும் பறுவாய் பண்ணாதிருந்தார். அவருடைய வேத அபிமானத்துக்கு ஒரு அளவில்லை. ஆட்களைப் பற்றியும் சம்பவங்களைப்பற்றியும் அவர் தவறில்லாமல் தீர்மானஞ் செய்துகொள்ளுவார். கிறீஸ்து நாதருடைய திருச் சுவிசேஷத்தை நமது தீவில் பரப்புவதற்கு வாய்க்கும் தருணம் ஒன்றையும் விடாமல் பயன்படுத்திக் கொள்ளுவார். யோசேவாஸ் முனிவர் தமது பரிசுத்ததனத்தினாலும் தாழ்ச்சியினாலும் அனைவரின் மனத்தையும் கவர்ந்து கொண்டதுபோல, சாங்கோபாங்க சுவாமிகள் தமது கல்வியினாலும் அஞ்சாநெஞ்சினாலும் அனைவரின் மதிப்பையும் கவர்ந்துகொண்டார். முந்தியவர் நமது தீவில் கிறீஸ்தவ பிறர் சினேகத்துக்கு இணையில்லா முன்மாதிரியைக் காண்பித்தார். பிந்தியவர் கிறீஸ்தவ போதகத்தின் உண்மையை சகலருக்கும் முன்பாக நிலைநாட்டினார். இவ்வாறே, கிறீஸ்துநாதரின் சுவிசேஷத்தை ஒவ்வோர் விதத்தில் நடந்து காட்டிய இருவருடையவும் சீவியகாலத்திற் போல, கத்தோலிக்கு திருவேதமானது எக்காலத்திலாவது பிரசமயிகளால் மதிக்கப்பட்டதில்லை.



## நேரத்தை வீண்போக்காத நிபுணர்

சாங்கோபாங்க சுவாமிகள் சகலத்திற்கும் மேலாக வீண்நேரம்போக்க அறியாத ஒரு முயற்சியாளராய் விளங்கினார். தமது அறையில் அவர் ஓயாமல் வாசித்தும் எழுதியுங்கொண்டோ, உபதேசித்துக்கொண்டோ, தம்முடைய எழுத்தாளர்களுக்குச் சொல்லி எழுதுவித்துக்கொண்டோ அன்றிச் சும்மா இரார். இவ்வாறு கிரமமாய்ச் சொல்லி எழுதுவித்துக் கொண்டிருந்த பழக்கமானது அவரிடத்தில் நன்றாக வேரூன்றி, வேண்டிய சொற்களை உடனே தெரிந்தெடுப்பதிலும் அவைகளை வசனங்களில் அமைப்பதிலும் அவருக்கு நற்பயிற்சியைக் கொடுத்திருந்ததாகவே, அவர் பேசும்போதும், யாதோர் ஆயத்தமுமின்றி ஒரு விஷயத்தைப்பற்றித் தர்க்கமிடவேண்டிய வேளைகளிற்தானும் ஒரு புத்தகத்திலிருந்து வாசிப்பது போல நல்ல வசனக்கட்டோடு பேசுவார். ஆயினும், ஆட்களுக்குத் தக்கபடி பாஷையை வேறுபடுத்தும் வன்மையினால், இடம்பமான பேச்சை எப்போதும் தவிர்த்துக்கொள்ளுவார். தமது ஞாபகம் என்னும் பண்டகசாலையிலிருந்து வேதவாக்கியங்களையும் சுத்தவாளர்களுடைய சரித்திர வரலாறுகளையும் தருணத்துக்குத் தக்கபடி மேற்கோள் எடுத்துக்காட்டுவார். இலங்கைத் தீவின் சுயபாஷைகளிலுள்ள நூல்களையெல்லாம் வாசித்து அறிந்தவராகவே, தம்முடைய எண்ணங்களை யாவரும் தெளிந்துகொள்ளத்தக்க விதமாய் பழமொழிகளோடும் உவமைகளோடும் அழகாக வெளிப்படுத்துவார். அவர் எழுதிய நாற்பத்திரண்டு நூல்களையும் அவருடைய சகோதரரான தியான சம்பிரதாயிகள் "அவர் தங்கள் கூட்டத்திலே இருந்த நாற்பத்திரண்டு வருஷங்களிலும் விளங்கச்செய்த புண்ணிய சீவியத்துக்கும் கல்வித்திறமைக்கும் ஒரு அழியாத ஞாபகம்" என்று சொல்லிப்போற்றுவார்கள். அவர் தம்முடைய ஓயாத பிரயாணங்களுக்குள்ளேயும் மிஷன் வேலைகளின் நடுவேயும் எவ்வளவு சிக்கனமாய்த் தமது நேரத்தை உபயோகித்தார் என்றதை இவைகள் நமக்கு அத்தாட்சிப்படுத்துகின்றன. பயணம் பண்ணும்போதும் தமது நேரத்தை எள்ளளவேனும் வீண்போக்கார். வழியில் யாரையாவது சந்தித்தால், அந்த வழிப்போக்கனோடு மிக மரியாதையாய்ச் சம்பாஷியாமல் விடார். அவனும் இவரைத் தற்செயலாய்தான் சந்தித்த அதிட்டத்தை ஒருபோதும் மறந்துவிடக்கூடாமலிருக்கும். எப்படியெனில், ஆத்துமாக்களின் நன்மையிலேயே அவர் எப்போதும் கண்ணாயிருந்தபடியால், செகமீட்பராகிய எங்கள் கர்த்தரையும்

அவருடைய திருவேதத்தையும் பற்றியே அதிகமாய் எவரோடும் பேசுவார். வழிப்போக்கன் கத்தோலிக்கனானால், அவனோடு வேதகாரியங்களைக் கதையோடு கதையாய்க் கொண்டுவந்து, அவன் மனந்திரும்பி மனஸ்தாபப்படச் செய்து போடுவார். பலமுறையும் அன்னவன் தம்மைவிட்டுப் பிரியுமுன் அவனுடைய பாவசங்கீர்த்தனத்தையும் கேட்டு விடுவார். வழிப்போக்கன் பிறசமயியானால், சற்றுச் சற்றாகக் கதையை வேதகாரியங்களிலே திருப்பி அவனுக்குத் தம்மாலியன்ற நன்மைசெய்யத் தேடுவார். அவன் சத்தியவேதத்தின் உண்மையை முற்றாகக் கண்டுபிடியாவிட்டாலும், அதன் பிரதானமான உண்மைகள் அவன் மனதிலே பட்டு, பிற்காலம் முளைக்கத்தக்க விதைபோல் விழுந்திருக்கும். சுவாமிகள் பொதுவாய், பயணநேரமெல்லாம், தம்முடைய புதுக்கிறீஸ்தவர்களை வேதத்தில் உறுதியாக்குவதிலேயே செலவழிப்பார். இதற்காகச் சிலரைத் தம்மோடு கூட்டிவைத்து வழிநடக்கும்போது அவர்களுக்கு வேதகாரியங்களைச் சொல்லிக் கொடுத்துக்கொண்டு போவார்.

## அற்புதமான தேவபாதுகாப்பு

ஒருமுறை அவர், அளம்பிலுக்குப் போம்வழியில், ஒரு ஞானஸ்நான ஆயத்தகாரனுக்கு உபதேசித்துக் கொண்டு செல்லுகையில் பயணக்கூட்டம், இருண்டபின் காட்டுக்குள் அகப்படாதபடிக்கு, கரையோரமாய் வழிநடந்தது. இடையில் சருகுகள் நிறைந்து தண்ணீர் அதிகம் தெரியாமற் கிடந்த ஒரு சிற்றாறு குறுக்கிட்டது. முன்நடந்துபோன சுவாமிகள், ஆயத்தக்காரன் சற்றுப்பின்னேவர, தண்ணீருள் இறங்கினார். கொஞ்சத்துக்குள்ளே சருகுகள் என்று தாம் மிதித்தது ஒரு முதலை என்று கண்டுகொண்டு, தாம் அப்படியே நிற்க, ஆகப்பின்னே வந்த மற்றவர்கள் ஆற்றைக்கடந்து வழிபோகச்செய்தார். எல்லோரும் போனபின் அவர் காலையெடுக்கவே, முதலை வாலைச் சுழற்றிக்கொண்டு அப்பால் நகர்ந்து போயிற்று. பின்னே நின்ற ஆயத்தக்காரன் இதைக்கண்டு திடுக்கிட்டதுமல்லாமல், அன்று தன்னைத்தப்பவைத்த சருவேசுரனுக்கு ஓயாமல் தோத்திரம் பண்ணிக்கொண்டிருந்தான்.

இவ்விதமான செய்திகள் சுவாமிகளுடைய சீவியகாலத்திலே அநேகமுறை நடந்தன. காட்டுமிருகங்களினின்று அவர் தப்பிக்கொண்டதைப்பற்றி பல அதிசயமான சங்கதிகள் சொல்



லப்பட்டு வந்தன. பயணக்காரர் கூட்டத்தின் தலைப்பிலே அவர் நடந்துகொண்டு, வேதபோதகஞ் செய்வதிலே முழுதும் மெய்மறந்திருக்கும்போது, அருகில் அண்டையில் நடப்பதொன்றையும் கவனியாமலிருந்ததினால், துஷ்டமிருகங்கள் எதிர்ப்படுவதையும் நோக்காமலிருப்பார். ஒரு முறை, அவர் பள்ளங்கண்டலிலிருந்து புத்தளத்துக்குப் போகும் வழியில், நடுக்காட்டிலே, குழுப்பற்றிய ஒரு காட்டெருமை அதிவேகமாய் வழிப்போக்கரைத் தாக்கிற்று. அது வருவதைத் தூரத்திற் கண்ட அவர் கூட்டாளிகளெல்லாம் அவரை எச்சரித்துக் குளறிக்கொண்டு பின்வாங்கி ஓடினார்கள். சுவாமிகள், தமது செபப்புத்தகத்தை ஆறுதலாய் வாசித்துக்கொண்டு போனவர், ஏறெடுத்துப் பார்க்கையில், வனமிருகம் தம்மை முடுகி வந்துவிட்டதைக் கண்டார். ஆனால் என்ன அதிசயம்! தாக்கவந்த துஷ்டவிலங்கு உடனே அவருக்கு முன்னாலே விழுந்து செத்துப்போயிற்று. இந்தப் பெரிய ஆச்சரியத்தைக் கண்டவர்களும் கேட்டவர்களும் மிருகத்தின் பிணத்துக்குக் கிட்டப்போகவும் பயந்து நின்றார்கள். அதின் எலும்புகள் அவ்விடத்திலேயே கிடந்து சருவேசுரன் தம்முடைய அடியவருக்காகச் செய்தருளிய புதுமைக்குப் பல வருஷங்களாய் அத்தாட்சி காட்டிக்கொண்டிருந்தன. வேறொரு நாள், குட்டியீன்ற ஒரு காட்டுப்பன்றி சுவாமிகளுக்குக் குறுக்கே போய் மீண்டும் குட்டியைத் தூக்கிக்கொண்டு முன்னாலே சென்றது. ஈன்ற காட்டுப் பன்றிகளுடைய மூர்க்கத்தை நன்றாய் அறிந்தவர்களான அவருடைய கூட்டாளிகள் இதைக்கண்டு பிரமித்து நின்றார்கள்.

அந்நாட்களிலே கத்தோலிக்குக் குருமார் துட்ட செந்துக்களின் மேலே கொண்டிருந்த வல்லமையைக் கிறீஸ்தவர்கள் மாத்திரம் அறிந்திருந்தவர்கள் அல்ல. வன்னியிலே ஒரு அஞ்ஞானிக்கு நாகபாம்பு கடித்து, அவன் ஊரிலே வழக்கமான குருட்டுப்பத்தியோடு கூடிய மருந்தெல்லாம் செய்வித்தும், தப்பமாட்டாமற் கிடந்தான். அந்தப்பக்கங்களிலுள்ள கத்தோலிக்கர் இவ்விதமான ஆபத்து வேளைகளில் தங்கள் குருமாரிடம் போவதை அறிந்திருந்த அவனுடைய இனத்தவர்கள், அவனை ஒரு பழம் வண்டிற்கட்டையில் ஏற்றி, சாங்கோபாங்க சுவாமிகள் அவ்வேளை இருந்த ஒரு கோவிலுக்குக் கொண்டு வந்தார்கள். அது ஒரு பின்னேரம். சுவாமிகள் கிறீஸ்தவர்களோடு கூடப் பிரார்த்தனை சொல்லிக்கொண்டிருந்தார். நோயாளியைக் கொண்டுவந்தவர்கள் அவனை அவருடைய பாதத்தடியில்

வளர்த்திவிட்டு, சுவாமிகள் அவனைப் பிழைக்கச்செய்தால் அவனும் அவன் குடும்பம் முழுதும் சத்தியவேதத்தில் சேர ஆயத்தமாயிருப்பதாக வாக்குக்கொடுத்தார்கள். அவர் அவனுக்காக வெகு ஊக்கத்தோடு செபம்பண்ணி ஆசிநீர் தெளிக்கவே, இறந்தவன்போலக் கிடந்தவன் முழுதும் குணப்பட்டு எழும்பினான். பின்பு அவனும் பெண்சாதியும் பிள்ளைகளும் அவனுடைய ஒரு சகோதரனும் பெற்றோரும் ஞானஸ்நானத்துக்கு நன்றாய் ஆயத்தம் செய்து சத்தியமறையிற் சேர்ந்துகொண்டார்கள்.

சாங்கோபாங்க சுவாமிகளுக்கு ஆசிநீரே எல்லா நோய்களுக்கும் கைகண்ட மருந்தாயிருந்தது. இதைச் சகலரும் அறிந்திருந்தபடியாலேதான், நரேந்திரசிங்கராசா தமது மரணப்படுக்கையிலிருக்கும்போதும் தம்மை வருத்திய ஒரு கடும் குத்துக்காக கண்டிக்கோயிலுக்கு ஆளனுப்பி ஆசிநீர் கேட்டுவாங்கினார் என்று கண்டோம். ஒரு முறை, காலிக்கோவிலின் பெலிசேந்தி மூப்புவுடைய மனைவியும் உயர்குலத்தவளுமாகிய சீமாட்டி சுவாமிகளிடம் வந்து, தனக்கிருந்த நோயொன்று நாட்டு வைத்தியர்கள் எவராலும் குணப்படாதபடியால் தனக்காக அவர் வேண்டிக்கொள்ளவேணுமென்று விண்ணப்பம் செய்தாள். சுவாமிகள் அவளை ஆசீர்வதித்து ஆசிநீரைக் குடிக்கக் கொடுக்க, அவள் உடனே பூரண சுகமடைந்து தன் வீட்டுக்குத் திரும்பினாள். பதிதமதப் பெண்ணொருத்திக்கு ஒரு கண்ணிலே பூப்போட்டு வளர்ந்து கண்கெட்டுப்போயிருந்தது. இவள் திருச்சபையிற் சேர ஆயத்தம்பண்ணி, சுவாமிகள் கையால் சந்தேக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டாள். திருச்சடங்கு முடிந்தவுடனே அவர் அவளது குருட்டுக் கண்ணிலே ஆசிநீரை விட, அது உடனே ஒளிபெற்று முழுப்பார்வையையும் அடைந்துகொண்டது. சுவாமிகள் தாமே எழுதிய கடிதமொன்றில் வேறு ஒரு ஆச்சரியமான சுகப்பாட்டை அறிவித்தார். அதாவது, அவர் ஒரு ஊருக்குப்போயிருந்தபோது அவ்வூர்க்கோயிலின் அண்ணாவி (மன்றாடி) வயிற்றுளைவால் வருந்திக்கொண்டிருந்தபடியால் அவருக்கு அவசியமான உதவியொன்றும் செய்யமுடியாமலிருந்தான். அவர் அவனுக்கு ஆசிநீர் குடிக்கக் கொடுக்க, அவன் உடனே முழுதும் சுகப்பட்டு அவரோடு கூட ஆட்களைத்தேடிப் பார்க்கப் புறப்பட்டான். அவனுக்கு இது பெரிய ஆனந்தமும் சுவாமிகளுடைய முயற்சிக்குப் பேருதவியுமாயிற்று.



## சுவாமிகளுடைய சுத்தமான சீவியத்தின் நினைவு


சாங்கோபாங்க சுவாமிகளின் திருமரணத்தையடுத்து செபஸ்தியாம் டொ றேகு என்னும் குருவானவர் கோவையிலிருந்துகொண்டு எழுதிய அவரது சரித்திரச் சுருக்கத்திலே பின்வருமாறு வரைகிறார்: “அந்த விஸ்தீரணமான (இலங்கைத்) தீவின் பல பாகங்களிலும் அவரால் நடந்த மனந்திரும்புதல்களையும், அவர் கத்தோலிக்கு வேதத்திற் சேர்த்த வெகு தொகையான பல சாதிப்பட்ட பதிதர்கள் அஞ்ஞானிகள் மகமதியரையும், அவர் ஓட்டித்துரத்திய பிசாசுகளையும், அவர் அளித்த அற்புத ஆரோக்கியங்களையும், அவர் தேவ உதவியால் காட்டு மிருகங்களுக்குத் தப்பி யாதொரு மோசமுமின்றி அடைந்த மீட்சிகளையும், வேதவிசுவாசத்தின் நிமித்தமாய் அவருக்கு உண்டான ஆபத்துக்களையும், பதித அரசாட்சியாருடைய கொடிய தண்டனைகளுக்கும் கலாபனைக்கும் அஞ்சாமல் அவர் கிறீஸ்தவர்களை ஊக்கப்படுத்துவதற்காக ஒல்லாந்த பட்டணங்களிற் செய்த போக்கு வரவுகளையும், அவர் கட்டியெழுப்பிய கோவில்கள் சிற்றாலயங்களையும், தாபித்த பத்திச்சபைகளையும், மிஷனறிமாருள் அவர் நாட்டிவைத்த பொது அனுசரிப்புகளையும், பல பாஷைகளிலும் அவர் இயற்றிய நூல்களையும், எழுத்தாளர்களைக் கொண்டு தமது நூல்களைப் பிரதிபண்ணுவிப்பதில் அவர் செய்த செலவையும் விரித்து எழுதவேண்டுமானால் இந்தச் சுருக்கமான வரலாற்றிலும் பார்க்க எத்தனையோ பெரிய ஒரு சரித்திரம் எழுதவேண்டிவரும்” என்கிறார். டொ றேகு அப்படிப்பட்ட ஒரு விரிவான சரித்திரத்தை எழுதிவையாமற்போனது நமது துர் அதிட்டமே.

அந்தக்காலத்துக் கத்தோலிக்கரோ சுவாமிகளுடைய சுத்தமான சீவியத்தைப் பற்றியும் அரும்பாடுகளைப்பற்றியும், குறிப்பாய், அவர் எழுதித்தந்த நூல்களைப்பற்றியும் நன்றாய் அறிந்து அவர் புகழைப் பாராட்டிக் கொண்டு வந்தார்கள். அவருடைய ஞாபகம் தலைமுறை தலைமுறையாய் நெடுங்காலம் நிலைத்துவந்தது. அவர் மரணித்து இருபத்தைந்து வருஷம் சென்றபின்னும், அதாவது அறுபது வருஷம் வரையில் சமாதானமாய்க் கண்டியரசர்களின் பாதுகாவலில் வாழ்ந்து வந்த கத்தோலிக்கு குருமார் அங்கிருந்து துரத்தப்பட்டு போளவத்தைக் கோவிலும் 1746-ம் ஆண்டில் இடிபட்ட பின்னும், கத்தோலிக்கர் சுவாமிகளது கல்லறையைத் தரிசித்து மெழுகுதிரி கொளுத்தி அதிலிருந்து கோயில் மருந்தாக மண் கிள்ளிக்கொண்டு போகும் வழக்கம்


இருந்ததென்று வாசிக்கிறோம். குருமார் கண்டிராச்சியத்தில் நின்று துரத்தப்பட்டது எப்படியெனில், அங்கு புத்தருடைய கட்சி பெலமடையவே இந்திய நாயக்க வமிசத்தவரான சிறீ விஜயராசசிங்க எனும் புதிய அரசர், தாம் புத்த உன்னான்சைகளுக்கு இசைவாக நடவாவிடில் சிங்கள அரசைக் கொண்டு நடத்தமுடியாது என்ற பயத்தினால் அவர்களுடைய எண்ணப்படி, தமது கருத்துக்கு மாறாகவே, குருமாரைத் துரத்த வேண்டியவரானார். அப்பால், வேதவிரோதிகள் போளவத்தைக் கோயிலையும் இடித்து ஓடுகளை எடுத்துக்கொண்டு, பீடங்களைத் தகர்த்து, சுரூபங்களை உடைத்தோ எரித்தோ பாழாக்கிவிட்டார்கள். சிறீவிஜயர் தாமே அனுப்பியிருந்த செபமாலைமாதாவின் தந்தச் சுரூபம் மாத்திரம் அனுசாரப்படுத்தாமல் சுவாமிகளுடைய சில ஏடுகளோடு கண்டிக்குக் கொண்டுபோகப்பட்டது. அடுத்த வருஷம் ஆவணி 11 இல் சிறீவிஜயர் காத்திராப்பிரகாரம் நடுவயதில் மாணித்ததும் வேறு அநேக விபத்துகள் கண்டிராச்சியத்துக்கு நேர்ந்ததும் கத்தோலிக்கருக்குச் செய்த அநியாயத்துக்காக வந்த தேவ பழி என்று பலர் எண்ணினார்கள். புது அரசரான கீர்த்தி சிறீயும் அப்படியே எண்ணிப் போளவத்தையிலிருந்து எடுத்த திருச்சுரூபத்தையும் ஏடுகளையும் திரும்பக் கொடுத்துப் போடவேணும் என்று கட்டளைபண்ணியதும் அன்றி, சுரூபத்தை தமது நாடுகளினூடாக ஆசாரத்தோடு "பெரகரை" யாகக் கொண்டுபோவதற்கு உத்தரவும் அளித்தார்.

## போளவத்தைக் கோயில் புதிதாய் எழும்புதல்


1762 முதல் 1765 வரையும் ஒல்லாந்தருக்கும் கண்டிராச்சியத்துக்கும் இடையில் போர்மூண்டிருந்தது. ஒல்லாந்தர் கண்டி அரசருக்கெதிராக கத்தோலிக்கருடைய உதவியைப் பெற்றுக்கொள்ளும்பொருட்டு இவர்களுக்கு சிறிதளவு மார்க்க சுயாதீனம் கொடுப்போரானார்கள். அதினால் கத்தோலிக்கு குருமார் ஒல்லாந்த நாடுகளில் வசிக்கவும் கோயில் கட்டவும் உத்தரவு கிடைத்தது. அந்நாட்பிடித்துத் தான் நம்முடைய கோயில்களிற் பலவும் கோயிற் பதிவுப்புத்தகங்களும் வந்திருக்கின்றன. 1766-ம் ஆண்டு மாசி மாதம் 14-ந் திகதி இரு அரசுக்குமிடையில் சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டபோது போளவத்தையிருந்த கரை துறைப்பகுதி ஒல்லாந்தருக்குக் கையளிக்கப்பட்டதினால், அப்போது ஒல்லாந்தருடைய சனுவைப் பெற்றிருந்த குருமார் அங்கு அழிந்துகிடந்த கோயிலைப் புதி



போளவத்தைக் கோயில்



சாங்கோபாங்கசுவாமிகளின் குருசு



சாங்கோபாங்க சுவாமிகளின் கல்வெட்டு

தாய்க் கட்டக்கூடியதாயிற்று. அந்நாட்களில், கயித்தானு நேரி எனும் தியான சம்பிரதாயக் குருவானவர் அங்குபோனபோது, பழைய கோவிலின் தூண்கள் சில நிற்கிறதையும் சாங்கோபாங்க சுவாமிகளின் கல்லறை என்றும் போலச் சங்கிக்கப்பட்டு வருகிறதையும் கண்டு, கோயிலை மீண்டும் கட்டியெழுப்பும்படி சனங்களைத் தூண்டிவிட்டார். தம்பறவில்லை எனும் இடத்தில் வசித்த ஒல்லாந்த அரச உத்தியோகத்தன், அதற்கு உத்தரவு கொடுத்ததுமல்லாமல், கோயில் வேலைக்கு உதவிசெய்யத் தன் வேலைகாரரையும் அனுப்பினான். போளவத்தைக் கிறீஸ்தவர்கள் தளராத ஊக்கத்தோடு வேலைசெய்து புதுக்கோயிலை 1767-ம் ஆண்டில் முடித்தார்கள். கோயிலினுள்ளேயே இருந்த கல்லறையை இன்றைக்கும் ஒரு கல்வெட்டு குறித்துக்காட்டிக்கொண்டிருக்கிறது. அக்கல்லறை இற்றைக்குச் சில வருஷங்களின் முன் திறக்கப்பட்டபோது சாங்கோபாங்க சுவாமிகளுடைய திரு என்புகளோடு அவர் அணிந்திருந்த ஒரு குருசும் காணப்பட்டது. இக்குருசு இப்போது வெளியே எடுத்துப் பூச்சியமாய் வைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைத் திருச்சபையின் முக்கியமான மூலைக்கற்களுள் ஒன்றான யாக்கோமே கொன்சால்வெஸ் எனும் சாங்கோபாங்க சுவாமிகளின் கல்லறை மேலிருக்கும் கல்வெட்டையும் அவர் தரித்த குருசையும் படத்திற்காண்க.

# அனுபந்தம்

## சாங்கோபாங்க சுவாமிகள் இயற்றிய நூல்கள்

### I தமிழிலும் சிங்களத்திலும் எழுதியவை

1. **கிறீஸ்தியானி ஆலயம்**—தற்காலத்துச் செபப்புத்தகங்களெல்லாவற்றுக்கும் தோற்றுவாயாயுள்ள பல செபங்கள் பிரார்த்தனைகளின் களஞ்சியம். சின்ன உத்தரம் பெரிய உத்தரம் முதலிய அறிவுறுத்தும் பாகங்களும் பூசைத்தியானங்களும் சேர்ந்தது. அச்சிடப்படவில்லை. சிங்களத்தில் இது **கிறீஸ்தியானி பள்ளிய** என்ற பெயர்கொண்டு அச்சிடப்பட்டது.

2. **தேவ அருள்வேத புராணம்**, அல்லது புராந்திம பச்சிம காண்டம்—இது பழைய புதிய ஏற்பாட்டுச் சரித்திரம். இந்தியாவில் 1880-ம் ஆண்டிலும் 1914-ம் ஆண்டிலும் அச்சிடப்பட்டது. சிங்களத்தில் **தேவ வேத புராணய.**

3. **சத்திய வேதாகம சங்க்ஷேபம்**—கேள்வி மறுமொழி ரூபமான பழைய புதிய ஏற்பாட்டுச் சரித்திரம். சென்னையில் 1875-ம் ஆண்டு வெளிப்பட்டது. நல்லூர், சுவாமி. ஞானப்பிரகாசரின் பரிபூரணவஸ்து உலக உற்பத்தி எனும் துண்டுப் புத்தகங்களுக்கு அத்திவாரமானது. சிங்களத்தில் **தேவ வேத ஸங்க்ஷேபய.**

4. **சுவிசேஷ விரித்துரை**— இன்றைக்கும் ஞாயிறு கடன்திருநாட்களிலே கோயிலில் வாசிக்கப்படுவது. முதற் பதிப்பு கொழும்பில் 1848; இந்திய பதிப்பு 1871; யாழ்ப்பாணப் பதிப்புக்கள் 1891, 1902, 1931. சிங்களத்தில் இதற்கு **சுவிசேஷ விஸாதனய** என்று பெயர்.

5. **வியாகுல பிரசங்கம்**—இது பசாம் என்றும் சொல்லப்படும். முதற்பதிப்பு கொழும்பில் 1844; சென்னைப் பதிப்பு 1871; யாழ்ப்பாணப் பதிப்புகள் 1895, 1911, 1916, 1931; அச்சுவேலிப் பதிப்பு 1901; மறுபதிப்பு 1940. சிங்களத்தில் **துக் ப்றுப்தி ப்றஸங்கய.**

6. **தர்ம உத்தியானம்**—பல அர்ச்சியசிட்டர்களுடைய சரித்திரம். கையெழுத்தில் மாத்திரம் உள்ளது. சிங்களத்தில் **தர்மோத்யானய.**

7. **அற்புதவரலாறு**—சத்தியவேத உண்மைகளை அத்தாட்சிப்படுத்திய பல ஆச்சரியமான சம்பவங்கள். கையெழுத்தில் உள்ளது. சிங்களம் **ப்றதிஹார்யவல்ய.**



8. **ஞான உணர்ச்சி**—மனிதனுடைய கதி, பாவத்தின் அவலட்சணம் முதலிய ஞான விஷயங்களைப் பல உவமைகளினால் வற்புறுத்திக்காட்டுவது. கொழும்பில் 1844-ம் ஆண்டு பதித்தது. இதை வீரமாமுனிவருடைய நூல் என்று தவறாக எண்ணி ஞான உணர்த்துதல் எனும் பெயரோடு இந்தியாவில் பலபதிப்புகள் வெளியிட்டார்கள். தெலுங்கு பாஷையிலும் மொழிபெயர்க்கப்பட்டது. சிங்களத்தில் இது **ஞானாஞ்ஜனய.**

9. **சுகிர்த தர்ப்பணம்**—புண்ணியங்களின் உத்தம சாயலைக் காட்டும் நூல். முதற்பதிப்பு யாழ்ப்பாணம் 1914. சிங்களத்தில் **ஸாக்றுத தர்ப்பணய.**

10. **சுகிர்த குறள்**—பரலோக சம்பந்த மொழி ஐம்பதும் பூலோக சம்பந்தமொழி ஐம்பதுமாக சிறுச் சிறுச் சுலோகம் போல வசனநடையில் உள்ளது. முதற் பதிப்பு கொழும்பில் (வியாகுல பிரசங்கம் ஞான உணர்ச்சி என்பவைகளோடு கூட) 1844. இரண்டாம் பதிப்பு யாழ்ப்பாணம். சிங்களத்தில் **தர்ம ஸஞ்ஞாவ.**

### II தமிழில் மாத்திரம் எழுதியவை

1. **வாத்தியாரும் குடியானவனும் தர்க்கித்துக்கொண்ட தர்க்கம்**—இது கல்வீன் மதப் புறோட்டெஸ்தாந்தருடைய தவறுகளைக் கண்டிப்பது. முதற் பதிப்பு அச்சுவேலி 1923.

2. **நவதர்க்கம்—3. மூசல்மன் வேதம்—4. கடவுள் நிர்ணயம்—5. நாலு வேதம்**—இவைகள் பிரதி கைக்கெட்டவில்லை.

6. **சிந்துப் பிரார்த்தனை** முதலிய கீர்த்தனங்கள். சிந்துப் பிரார்த்தனை செபப்புத்தகங்களில் அச்சிட்டிருந்த போதிலும் கீர்த்தனங்களைத் தேடி அச்சிடுவது அரிதாய்ப் போய்விட்டது.

### III சிங்களத்தில் மாத்திரம் எழுதியவை

1. **தேவநீதிவிஸர்ஜனய**—தனித்தீர்வையைப் பற்றி நாடக உருவமாய் வசனத்திலெழுதியது.

2. **அஞ்ஞான அவுஷதய**—பிற சமயிகளுடைய தவறுகளைக் காட்டும் நூல். இதை செபஸ்தியாம் பெறேயிரு எனும் தியானசம்பிரதாயச் சுவாமியார் தமிழில் அஞ்ஞான அவுஷதம்

எனும் பெயரோடு மொழிபெயர்த்தார். இதன் ஓர் பாகம் "சத்தியவேதபாதுகாவலனில்" வெளிவந்தது.

3. புத்த பண ப்ரத்யக்ஷய—இதுதான் மாத்தறப்ரத்ய க்ஷய என்றும் அழைக்கப்பட்டதுபோலும் (96-ம் பக். காண்க.)

4. புத்துழல—இது கண்டியரசுரிமையாளனுக்காக எழுதப்பட்டது. (66-ம் பக். காண்க.)

5. பேதகாறயங்கே தர்க்கய—(53-ம் பக். காண்க.)

6. வேதகாவ்ய — இது தேவ வேத புராணய எனும் பெரும் சரித்திரத்தை கீர்த்தனரூபமாக்கியது என்ப (93-ம் பக். காண்க.)

7. மங்கல் கீத்திய—இது தமிழில் சுவாமிகள் செய்த 16-ம் இலக்கக் கீர்த்தனங்களைப் போன்றது.

8. ஆனந்தக் களிப்புவ—இது தர்மஸஞ்ஞாவ (மேலே 10-ம் இலக்கம்) வோடு சேர்த்து அச்சிடப்பட்டது.

## IV அகராதிகள்

தேவ அருள்வேத புராணம் சுவிசேஷ விரித்துரை முதலிய தமிழும் சிங்களமுமான நூல்களுக்கு ஒவ்வொரு அரும்பத அகராதி சேர்த்ததோடு மிஷனறிமார் தமிழும் சிங்களமும் படித்துக் கொள்வதற்கு உதவியாக போர்த்துக்கேய—தமிழ்-சிங்கள அகராதியொன்றை இயற்றினர். இதன் இருபிரதிகள் கையெழுத்தில் இன்று கைக்கெட்டியிருக்கின்றன. இதைவிட ஒரு சிங்கள—போர்த்துக்கேய அகராதியும் போர்த்துக்கேய—சிங்கள அகராதியும் தமிழ்ச் சொற்றொடர்கள் அகராதியும் செய்தார் என்று சொல்லப்படுகிறது.

## V போர்த்துக்கேயத்தில் எழுதியவை

1. கத்தோலிக்கு உரோமான் திருச்சபையின் உண்மை.
2. சுவிசேஷக் குறிப்புகள்.
3. மீசாமில் மனச்சாட்சிச் சந்தேகங்களுக்கு விடை.
4. கல்வீனின் தப்பறைகளைக் கண்டிக்கும் சுருக்கமான தர்க்கம்.

## VI ஒல்லாந்த பாஷையில் எழுதியது

1. கல்வீன் மதத்தவர்களின் கண்டனை.

St. Joseph's Catholic Press, Jaffna 140-42